# மலேயா முதல் கனடா வரை

ஏ. கே. செட்டியார்



டென்பசார் கோயில் கோபுரவாயில்



பெரம்பானன் கோயில்களில் ஒன்று

# மலேயா முதல் கானடா வரை

ஏ. கே. செட்டியார்

குமரி மலர் காரியாலயம்
ஆழ்வார்ப்பேட்டை :: சென்னை-18

முதல் பதிப்பு — மன்மத — சித்திரை
(ஏப்ரல் - 1955)

U8-1
N55

... ARCHIVES LIBRARY ... MADRAS
108096

விலை ரூபாய் ஐந்து

குமரி மலர் அச்சகம், சென்னை - 18

# பதிப்புரை

பதினைந்து ஆண்டுகளுக்கு முன், இந் நூலாசிரியரின் 'உலகம் சுற்றும் தமிழன்' என்ற பிரயாண நூல் வெளிவந்தது. தமிழ்ப் பெருமக்கள் தந்த ஆதரவால், அந்த நூலின் ஆறு பதிப்புக்கள் இதுவரை வெளிவந்துள்ளன.

இந் நூலாசிரியரின் இதர பிரயாண நூல்களையும் பிரயாணக் கட்டுரைகளையும் தமிழன்பர்கள் பெரிதும் ரசித்திருக்கிறார்கள்.

இந்நூலாசிரியர் மீண்டும் வெளிநாடுகளில் ஏறக் குறைய நாற்பது மாதங்கள் பிரயாணம் செய்திருக்கிறார். இவரது புதிய பிரயாண அனுபவங்களையெல்லாம் நான்கு புத்தகங்களாக வெளியிடத் திட்டமிட்டிருக்கிறோம். முதல் புத்தகமே இது; மற்ற மூன்றும் விரைவில் வெளிவரும்.

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையின் வாழ்த்துக் கவிகளை இந் நூலில் சேர்த்துக்கொள்ள அனுமதி தந்த ஸ்ரீ கே. குமாரசாமிப் பிள்ளைக்கும், சுவாமி ருத்ராநந்தரின் படத்தைத் தந்து உதவிய 'கல்கி' அதிபர் ஸ்ரீ. டி. சதாசிவத்துக்கும் எங்கள் நன்றி.

இந் நூலில் காணப்பெறும் குறைகள் அனைத்தும் எம்மைச் சாரும். கொள்ளக்கூடிய நல்லவை இருப்பின், அவையனைத்தையும் தமிழ்ப் பெருமக்களுக்கு அன்புக் காணிக்கையாகச் சமர்ப்பிக்கிறோம்.

பதிப்பாளர்

# நன்றி

ஆண்டவன் பேரருளே இந்தப் பிரயாணத்தைக் கூட்டுவித்தது.

சுவாமி ருத்ரானந்தர் பேரன்புடன் பிரயாணத்தைத் தொடங்கி வைத்தார்.

இதற்கு உறுதுணையாக இருந்தார் நண்பர் பழமலை.

அருமை நண்பர்களான பிரதாப் – கிருஷ்ணகுமார் சகோதரர்களின் விருந்தினனாக, திருப்பூரில் நான்கு மாதம் தங்கினேன். அன்பும் பண்பும் நிறைந்த இந்த அன்பர்களது உபசரிப்பாலும், இவர்கள் இல்லத்தின் பசுமையும் அமைதியும் கூடிய சூழ்நிலையாலுமே, புதிய பிரயாணப் புத்தகங்களை எழுதுவது சாத்தியமாயிற்று.

புத்தகங்களின் ஒரு சில பகுதிகளை நண்பர்கள் சிலருக்குப் படித்துக் காட்டினேன். இவர்களுடைய கருத்துக்களும், ஆலோசனைகளும் பெரிதும் உதவியாக இருந்தன.

இவர்கள் அனைவருக்கும் நன்றி.

உலகத்தின் பல நாடுகளில் பிரயாணம் செய்த பொழுது, ஜாதி, மதம், நிறம், தேசம், மொழி என்ற பேதங்கள் இல்லாமல், மனிதனை மனிதனாக மதித்து, அன்போடு உபசரித்து, அரிய உதவிகள் புரிந்த எண்ணற்ற அன்பர்களுக்கு நன்றி.

எல்லாவற்றிற்கும் மேலாக, ஆண்டவனின் அருளுக்கு நன்றி.

சென்னை
14-4-55

ஏ. கே. செட்டியார்

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | முன்னுரை | .... | 1 |
| 2. | மலேயா | .... | 18 |
| 3. | இந்தோனேஷ்யா | .... | 26 |
| 4. | பாலித்தீவு | .... | 53 |
| 5. | ஜோக்ஜகர்தா | .... | 78 |
| 6. | கல் சொல்லும் கதை | .... | 85 |
| 7. | சுமத்ரா | .... | 99 |
| 8. | ஆஸ்திரேலியா | .... | 107 |
| 9. | பிஜித்தீவு | .... | 127 |
| 10. | கானடா | ... | 200 |




# முன்னுரை

முதன் முதலாக உலகச் சுற்றுப் பிரயாணத்திலிருந்து திரும்பும்பொழுது, கொழும்புத் துறைமுகம் வந்து சேர்ந்தேன். அதற்கு முந்திய நாள் இரவு, கப்பலின் மேல் தளத்தில் உலாவிக்கொண்டிருந்தேன். பிரயாணத்தில் கண்ட அற்புதக் காட்சிகள் மனக்கண் முன் தோன்றி மறைந்தன. அவற்றை யெல்லாம் நினைத்தபொழுது, பெருமகிழ்ச்சி உண்டாயிற்று. அதோடு உலகப் பிரயாணம் செய்தோம் என்ற கர்வமும் உண்டாயிற்று.

சகோதரப் பிரயாணிகளில் ஒருவரான ஐரோப்பியர் என்னிடம் விடைபெறுவதற்காக வந்தார். அடக்கமும் அமைதியும் நிறைந்த அவர், அன்புடன் விடைபெற்றார். பிரயாணத்தினால் ஏற்படும் அனுகூலங்களையும், தொடர்ந்து பிரயாணம் செய்ய வேண்டிய அவசியத்தைக் குறித்தும் கூறினார். அவர் மூன்று முறை உலகப் பிரயாணம் செய்திருக்கிறார். ஆப்பிரிக்காவில் மட்டும் எல்லாத் துறைமுகங்களுக்கும் பல முறை சென்றிருக்கிறார். அவர் இவ்வாறு கூறியதும் எனது கர்வம் அடங்கியது. இது பதினாறு ஆண்டுகளுக்கு முன்.

இரண்டாவது முறை, காந்திபடிகள் சம்பந்தமான பிலிம்களைச் சேகரிப்பதற்காகப் பிரயாணம் செய்தேன். தென்னாப்பிரிக்கா சேர்ந்ததும், இரண்டாவது உலக யுத்தம் ஆரம்பமாகிவிட்டது. உயிருக்குப் பயந்து விழுந்தடித்துக் கொண்டு தாய்நாடு சேர்ந்தேன். எனவே இம்முறை எத்தகைய கர்வமும் உண்டாக இடமில்லாமல் போய் விட்டது.

மூன்ருவது பிரயாணத்தில், லண்டனிலிருந்து சூசான் என்னும் கப்பலில் திரும்பி வந்தேன். எனது வகுப்பில் பிரயாணம் செய்தோர் சுமார் ஐநூறுபேர். அதில் பாதிக்கு மேல் இந்தியர். இவர்கள் எல்லோரும், வெளிநாடுகளில் கல்வி கற்ருே, அல்லது பிரயாணம் செய்தோ, தாய்நாடு திரும்புகிறவர்கள். இவர்களில் சிலர், நீண்ட நாளாகப் பல நாடுகளில் பிரயாணம் செய்யும்படி எனக்குக் கிடைத்த வசதியைக் குறித்துப் பாராட்டினர். சிலர் பொருமை கொண்டனர். கப்பல் பம்பாய் சேர்ந்ததும் எல்லா இந்தியர்களும் இறங்கிவிட்டனர். ஆனல் நான் மட்டும் அதே கப்பலில் கொழும்பு வழியாக மலேயா சென்றேன்.

கொழும்புத் துறைமுகத்தை அடைவதற்கு முந்திய நாள் இரவு, பதினறு ஆண்டுகளுக்கு முன், கொழும்புவுக்கு வந்தபொழுது தோன்றிய எண்ணங்கள் மீண்டும் நினைவுக்கு வந்தன. "மூன்று முறை உலகப் பிரயாணம் செய்துவிட்டோம். வெளி நாடுகளுக்குச் சென்று வந்தவர்களே நமது பிரயாணத்தைப் பாராட்டுகின்றனர். மூன்று முறை பிரயாணம் செய்வது, சுலபமாக யாரும் சாதிக்க முடியாத காரியங்களில் ஒன்று. எனவே இதைக் குறித்து ஓரளவு கர்வம் கொள்வது நியாயந்தானே? இதில் தவறில்லையல்லவா?" என்று யோசித்தபடியே, இரவுச் சாப்பாட்டுக்குச் சென்றேன்.

எனது சாப்பாட்டு மேஜையில் நான் மட்டும்தான். மற்ற நண்பர்கள் எல்லாம் பம்பாய் துறைமுகத்தில் இறங்கிவிட்டார்கள். சாப்பிடும்பொழுது, எனக்குப் பரிமாறிய கோவா இந்தியரான வேலைக்காரரைப் பார்த்து, மிகவும் அலட்சியமாக, அவர் எந்தெந்த ஊர்களுக்குப் பிரயாணம் செய்திருக்கிருர் என்று கேட்டேன். அவர் மிகவும் அடக்கத்துடனும், மரியாதையுடனும் பதில் அளித்தார். அந்தப் பதிலிலிருந்து, நான் சென்ற எல்லா நாடுகளுக்கும் அவர் சென்றிருக்கிருர் என்றும், நான் செல்லாத சில நாடுகளுக்கும் அவர் சென்றிருக்கிருர் என்றும் அறிந்தேன். இந்த முறை, எனக்குப் பரிமாறிய வேலைக்காரர் மூலமாகவே ஆண்டவன் எனது கர்வத்தை அடக்கினர்.



* * * *

காலஞ் சென்ற மகாகனம் வி. எஸ். சீனிவாச சாஸ்திரியாரை, பதினறு ஆண்டுகளுக்கு முன் சந்தித்துப் பேசும் பாக்கியம் கிடைத்தது. அப்பொழுது சாஸ்திரியார் சென்னையில், மைலாப்பூரில் தங்கியிருந்தார். அழைத்துச் சென்ற நண்பர் என்னை அறிமுகப்படுத்தினர்.

"எதற்காக வந்தீர்கள்?" என்ருர் சாஸ்திரியார்.

"காந்தியடிகளைப் பற்றி ஒரு பிலிம் தயாரிக்கிருேம்" என்றேன்.

"சாதகமாகவா? பாதகமாகவா?" என்ருர்.

"சாதகமாகத்தான்" என்றேன்.

"அப்படியானல் உட்காருங்கள்" என்ருர் சாஸ்திரியார்.

தென்னப்பிரிக்கா செல்ல உத்தேசித்திருப்பதையும், அதற்கு அவருடைய ஆதரவு வேண்டுமென்றும் கூறினேன்.

அவர் காட்டிய அன்பையும் உற்சாகத்தையும் ஒரு போதும் மறக்க முடியாது.

முதலாவதாக, தென்னப்பிரிக்கா இந்தியர் நிலை குறித்தும், அவர்களுக்குள் எத்தனை பிளவுகள் என்பதையும் எத்தனை தலைவர்கள் என்பதையும் கூறினர். இந்தியர்

எந்த நாட்டுக்குச் சென்றாலும் பிளவுபட்டு நிற்பது துரதிர்ஷ்டமானது என்றார்.

கடைசியாக அவர் கூறிய புத்திமதியின் சாரம்:—

"தென்னாப்பிரிக்கா இந்தியர்களுக்குள் பல பிளவுகள் உண்டு. கட்சிச் சண்டைகளைக் காதில் போட்டுக்கொள்ளக் கூடாது. ஒரு கட்சியினர் மற்ற கட்சியினரைக் குறித்து ஏளனமாகப் பேசுவார்கள். ஒருவர் சொல்வதை மற்றொருவருக்குச் சொல்லக்கூடாது. யார் சாப்பிடக் கூப்பிட்டாலும் சம்மதிக்க வேண்டும். அனைவரிடமும் அன்பாகவும் நல்ல முறையிலும் பழக வேண்டும். நீங்கள் செல்லும் விஷயத்தில் ஒருவருக்கும் அபிப்பிராய பேதமிராது. அனைவருடைய ஒத்துழைப்பையும் பெற்று வெற்றியுடன் வரவேண்டும்."

அப்பெரியாரின் புத்திமதியும் ஆசியும் எனக்குப் பேருதவியாக இருந்தன. அவருடைய புத்திமதிப்படி நடக்க முயன்றேன்.

இந்தியர் குடியேறியுள்ள நாடுகளில், மோரிஷஸ் தவிர அநேகமாக எல்லா நாடுகளுக்கும் செல்லும் சந்தர்ப்பம் கிடைத்தது. சென்ற இடங்களில் சில மாதங்கள் தங்கி, பலருடைய அன்பையும் ஆதரவையும் பெறும் பாக்கியம் கிடைத்தது. ஒவ்வொரு நாட்டிலும், பிளவு பட்டிருக்கும் இந்திய சமூகத்தினரிடையே பழக நேர்ந்த பொழுது, உறுதுணையாக நின்றது, சாஸ்திரியார் கூறிய அரிய புத்திமதியே யாகும்.

* * * *

ஒருவர் தன்னை யாத்திரிகன் என்று கூறிக்கொள்ள வேண்டுமானால், குறைந்தது பத்து லட்சம் மைல் பிரயாணம் செய்ய வேண்டுமாம். என்னை ஒரு யாத்திரிகன் என்று கூறிக்கொள்ள எனக்குப் பெரிதும் ஆசை. ஆனால் அவ்வாறு நான் கூறிக்கொள்வதற்கு இன்னும் பிரயாணம் செய்ய வேண்டிய தூரம் குறைந்தது ஏழு லட்சம் மைல்!



* * * *

பிரயாணத்தில் வாசகர்களை உடனழைத்துச் செல்ல ஆசை. ஆனால் இப்புத்தகத்தைப் படிக்கும்போது, இது பிரயாணமா அல்லது சுயசரித்திரமா என்ற சந்தேகம் வாசகர்களுக்கு ஏற்படலாம். 'நான்' என்ற உணர்ச்சியை என்னால் இயன்ற மட்டும் மறைத்து எழுதியிருக்கிறேன்.

ஆனால் ஒன்று. வாசகர்களுக்கு ஆச்சரியத்தை விளைவிப்பதற்காக உண்மையைத் தியாகம் செய்யவில்லை; மறைக்க விரும்பவில்லை.

* * * *

பிரயாணத்துக்குப் பாஸ்போர்ட்டும் பணவசதியும் எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு முக்கியமானது, பிரயாணம் செய்யவேண்டும் என்ற ஆர்வமும், விரிந்த உள்ளமும்.

* * * *

சிலர் நமது நாட்டில் காண்பதெல்லாம் மட்டரகம்—குறைபாடு உள்ளவை என்று கூறுகிறார்கள். சிலர் நமது நாட்டில் காணப் பெறுபவை எல்லாம் உயர்வு—நமது நாட்டில் உள்ளன மட்டும்தான் உயர்ந்தவை என்றும் கூறுகிறார்கள். இவர்கள் இருவரும் நமது நாட்டுக்கு ஒரே மாதிரியான தீங்குதான் இழைக்கிறார்கள்.

* * * *

தமிழ் நாட்டில் பிரபலமான பிரசங்கி ஒருவரிடம் பிஜித்தீவுகளைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தேன். "தீவு கன்னா கடல்லே மெதக்குமோ" என்று பாவனையோடு அவர் கேட்டார்.

தமிழ்ப் பத்திராதிபர் ஒருவர் 'சாண்ட்விச்' என்றால் என்னவென்று கேட்டார்.

தீவுகள் கடலில் மிதக்கிறதா இல்லையா என்பது எனக்குத் தெரியாது.

ஆனால் *'சாண்ட் விச்' வரலாற்றைப்பற்றி ஆதார பூர்வமாகக் கேட்ட விபரத்தை எழுதியிருக்கிறேன்.

*　　*　　*　　*

இந்தப் புத்தகத்தில், பிரயாண விவரங்களையும் மற்றும் சில விவரங்களையும் சிறிது விளக்கி எழுதியிருக்கிறேன். நமது நாட்டில் பிரயாணம் செய்தோர் பலர். அவர்கள் இதைப் படிக்கும்பொழுது, அளவுக்கு அதிகமாக விளக்கி எழுதியிருப்பதாகக் கருதக் கூடும். சாதாரணமாகத் தெரிந்த பல விஷயங்களை விளக்கமாகப் படிப்பது சங்கடமாகவும் இருக்கலாம். ஆனால் பிரயாணம் செய்யாத மக்களைப் பிரதானமாய் மனத்தில் வைத்துக் கொண்டே இப்புத்தகம் எழுதப் பெற்றதாகும்.

இப்புத்தகத்துக்கு, எதிர் பாராமலேயே ஒரு சிறப்புரை கிடைத்தது. இந்தச் சிறப்புரையை நல்கியவர் செல்வாக்குள்ள தலைவரோ, பிரபலமான மந்திரியோ, சர்வ கலாசாலை உப அத்யட்சரோ அல்ல; தமிழ்நாட்டு கிராமமொன்றில் இருக்கும் சாதாரண பள்ளிக்கூட ஆசிரியர்.

அந்த ஆசிரியருடன் ஓரிடத்தில் ஒன்றாகத் தங்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. நான் பிரயாணம் செய்திருக்கிறேன் என்ற விஷயம் ஆசிரியருக்குத் தெரியாது. எனவே இந்தப் புத்தகத்தில் ஒரு சிறு பகுதியை அவரிடம் படித்துக்

* 'அமெரிக்க நாட்டில்' என்னும் புத்தகத்தில்,



காட்டினேன். இது பிரிட்டிஷ் கயானாவில் *திருவாரூர் முத்துசாமிப் பிள்ளையைச் சந்தித்த வரலாறு.

அந்த ஆசிரியர், "சார், இந்தக் கட்டுரை நன்றாக இருக்கிறது. ஒவ்வொரு வார்த்தையும் சுலபமாகப் புரிகிறது. பருப்பு மசியல் என்று எழுதியிருக்கிறீர்கள். எங்கள் ஊரிலும் கத்தரிக்காய் மசியல் உண்டு. இடையே சில ஆங்கில வார்த்தைகள் வருகின்றன. அதனால்தான் உங்கள் கட்டுரை சுலபமாக விளங்குகிறது. நேரில் சென்று பார்த்துவந்ததைப்போல அவ்வளவு நன்றாகக் கற்பனை செய்து எழுதியிருக்கிறீர்கள்" என்றார். இதைவிட வேறு என்ன சிறப்புரை வேண்டும்!

*　　*　　*　　*

சரியான தமிழ் வார்த்தைகள் அகப்படாமல் தவிக்கும் பொழுது, பலருக்கு விளங்கும் ஆங்கிலச் சொற்களையே உபயோகித்திருக்கிறேன்.

ஒரு முறை கோயமுத்தூர் ஜில்லாவில் ஒரு கிராமத்திலுள்ள பள்ளிக்கூடத்துக்குச் சென்றேன். பஸ் ஓடும் சாலையிலிருந்து பள்ளிக்கூடத்துக்கு அரை மைல் தூரம் ஒற்றையடிப் பாதை வழியே உள்ளே செல்ல வேண்டும். சிறிது தூரம் சென்றதும் வழி தெரியவில்லை. கிராமத்துப் பெண் ஒருத்தி எதிரே வந்தாள். அவளிடம் "அம்மா, பள்ளிக்கூடம் எவ்வளவு தூரம்? எந்த வழி செல்ல வேண்டும்?" என்றேன்.

நாகரிகமாக உடையணியாத அந்தக் கிராமத்துப் பெண், நான் செல்ல வேண்டிய வழியைக் காட்டினாள். தூரத்தைச் சொல்லும்போது, 'கூப்பிடு தூரம்' என்று சொல்லிக் கூப்பிட முடியாத தூரத்தை அவள் எனக்குச்

* 'கரிபியன் கடலும் கயானாவும்' என்னும் புத்தகத்தில்.

சொல்லவில்லை; கச்சிதமாக, "இரண்டு பர்லாங் தூரம்" என்றாள்.

'ஸ்டுடியோ' 'பிலிம்' போன்ற பலருக்கும் புரியும் வார்த்தைகளை இப் புத்தகத்தில் காணலாம். வெளிநாட்டுப் பிரயாணத்தைப் பற்றி எழுதும்பொழுது, பல ஆங்கில வார்த்தைகள் உபயோகிக்க நேருகின்றன. உதாரணமாக, 'சாண்ட்விச்', 'காக்டைல் பார்ட்டி', 'டெலிவிஷன்' முதலியன.

'ஈருருளி', 'துவிச்சக்கர வண்டி' போன்ற வார்த்தைகளை உபயோகிக்காமல், 'சைக்கிள்' என்றே எழுதியிருக்கிறேன். இம்மாதிரி எழுதும்படி உற்சாக மளித்த பெரியார் இருவர். அவர்கள் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையும், பேராசிரியர் கி. சுவாமிநாதனும் ஆவர்.

* * * *

ஹோட்டல் என்ற வார்த்தை தமிழருக்குத் தெரியும். ஆனால் மேலை நாடுகளிலே ஹோட்டல் என்று சொல்வதற்கும், நமது நாட்டில் அந்த வார்த்தையை வழங்குவதற்கும் அதிக வித்தியாச மிருக்கிறது.

மேலை நாடுகளில், ஹோட்டல் என்பதற்கு தங்குமிடம் அல்லது விடுதி எனப் பொருள். இந்த ஹோட்டல்களில், பெரும்பாலானவற்றில் உணவு வசதி உண்டு. சில ஹோட்டல்களில் தங்கினால் கட்டாயமாகச் சாப்பிட வேண்டும்; சாப்பாட்டுக்குள்ள தொகையையும் சேர்த்தே வசூலித்து விடுவார்கள்.

மேலை நாட்டு முறையைத் தழுவிய ஹோட்டல்கள் சிலவற்றை நமது நாட்டில் பெரிய நகரங்களில் காணலாம்.



நம் நாட்டில் சாதாரணமாக, ஹோட்டல் என்றால் பெரும்பாலும் காபி ஹோட்டல் அல்லது சாப்பாடு ஹோட்டலையே குறிப்பிடுகிறோம்.

இந்தப் புத்தகத்தில் மேலை நாட்டுப் பாணியிலுள்ள ஹோட்டல்களை 'ஹோட்டல்' என்றே எழுதியிருக்கிறேன்.

சாப்பாடு ஹோட்டலை உணவுச் சாலை என்றும், காபி ஹோட்டலைச் சிற்றுண்டிச்சாலை என்றும் எழுதியிருக்கிறேன்.

* * * *

நமது நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்குச் சென்று வருவோர் எண்ணிக்கை அதிகமாகி வருகிறது. இது மிகவும் மகிழ்ச்சியைத் தருவதாகும். ஆனால் வெளிநாடு சென்று வருகிறவர்கள், தாங்கள் ஒரு தனி 'ஜாதி'யாக இந்த நாட்டில் அமைந்து விடுகிறார்களோ என்று சந்தேகிக்க வேண்டியிருக்கிறது. பழைய 'ஜாதி' முறைகளை ஒழிப்பதற்காகப் பாடுபடும் நாம், இந்தப் புதிய 'ஜாதி' வளராமல் தடுக்க வேண்டியது அவசியமாகும்.

வெளிநாட்டுக்குச் செல்வதாலேயே ஒருவர் உயர்ந்தவராகவோ அல்லது அறிஞராகவோ ஆகிவிடமாட்டார். வெளிநாடுகளுக்குச் செல்வதால் அறிவு வளரும்; ஆனால் அந்த வளர்ச்சி, செல்லுகிறவருடைய மனப் பக்குவத்தையும் பொறுத்தது. அன்றியும், பிரயாணத்தில் எதை விரும்புகிறோமோ, அதைத்தான் பார்க்கிறோம்.

வெளிநாடு சென்றால், அனுபவம் உண்டாகும் என்பது உண்மை. ஆனால், அது நல்ல விதமாகவும் அமையலாம்; வேறுவிதமாகவும் அமையலாம். "குளிக்கப் போய்ச் சேற்றைப் பூசிக்கொள்வார்" இல்லையா?

வெளிநாடுகளில் சில மாணவர்களும், யாத்திரிகர்களும் வசிக்கின்ற விதத்தை நேரில் பார்த்திருக்கிறேன். பல

முறை அதே மாதிரி வசித்தும் இருக்கிறேன். லண்டனிலே இவ்வளவு 'மோசமான வசதிகள்' இருக்கின்றன என்றால் நீங்கள் நம்பக்கூட மாட்டீர்கள். இவ்வளவு 'வசதி'களை அனுபவித்த இவர்களில் சிலர், தாய்நாடு திரும்பியதும், தங்கள் லண்டன் வாழ்க்கையைப் பற்றிப் பெருமையடித்துக் கொள்வதும், தங்களை உயர்ந்தவர்கள் என்று கருதுவதும், வெளிநாடு செல்லாத தங்களுடைய தாய் நாட்டினரை இழிவாக மதிப்பதும் அறியாமையேயாகும்.

வெளிநாடு சென்று வந்த இந்தியர்களை—அவர்கள் எவ்வளவு மேதைகளானாலும் — நம் நாட்டில் மனதாரப் பாராட்டுவோர் மிகக் குறைவு. பணக்காரர்களான யாத்திரிகர்கள் சிலர் தாங்கள் வெளிநாட்டிலிருந்து திரும்பி வந்ததும், தங்கள் செலவிலேயே தங்களைப் பாராட்டிக் கொள்கிறார்கள். இந்த வசதி எல்லோருக்கும் கிடைப்பதில்லை; சிலர் விரும்புவதுமில்லை.

வெளிநாடு சென்றவர்கள்மீது, வெளிநாடு செல்லாதவர்கள் பலருக்கு ஒருவித அசூயை இருப்பதை நாம் பார்க்கின்றோம். இதற்கு அடிப்படையான காரணம், தங்களுக்கு அந்தச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லையே என்ற பொறாமைதான். வெளிநாடு செல்வதற்கு, வெளிநாடு சென்று வந்தவர்களைக் காட்டிலும் தங்களுக்கு அதிகமான தகுதியிருக்கிறது என்பது பலர் கருத்து. சில சமயங்களில் சொந்தச் சகோதரர்களும், நெருங்கிய உறவினர்களும், நண்பர்களில் பலருங்கூட, இந்தப் பொறாமையிலிருந்து தப்புவதில்லை.

வெளிநாடு செல்லாதவர்களில் பலர், வெளிநாடு சென்றவர்களைப் பொதுவாக விரும்புவதில்லையானாலும், தங்களை அறியாமலேயே, அவர்கள்மீது ஒருவித 'மதிப்பு'



வைக்கிறார்கள். இல்லையானால், சில வருஷங்களுக்கு முன் வரை, லண்டன் சென்றுவந்த சிலர், தங்கள் கடிதங்களில் England Returned (சீமை சென்று திரும்பியவர்) என்று அச்சடித்துக் கொண்டிருக்கமாட்டார்கள் அல்லவா? பிறர் மதிப்புத்தானே இதற்குக் காரணம்!

சில வருஷங்களுக்கு முன்னே, நமது நாட்டில் ஒரு முறை ரயிலில் பிரயாணம் செய்தபொழுது, ரயிலில் அமைக்கப் பெற்றிருந்த இந்திய உணவுச் சாலையில் காபி சாப்பிட்டேன். என்னெதிரே திடகாத்திரரான ஒருவர் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார். அவர் எதற்கு எடுத்தாலும் லண்டனைப் பற்றியேதான் பேசுவார். லண்டனுக்குப் போய் வந்த எனக்கே அது எரிச்சலாக இருந்தது என்றால், லண்டன் போகாதவர்களுக்கு எவ்வளவு வெறுப்பாக இருந்திருக்கும்?

"தாங்கள் லண்டனுக்குப் போயிருக்கிறீர்களா?" என்றேன்.

"எனக்குத் தெரியாத லண்டனா சார்?" என்றார்.

"எப்பொழுது சென்றீர்கள்? படிப்பதற்காகச் சென்றீர்களா?" என்றேன்.

"இல்லை சார், நம்ம சர் சி. பி. ராமஸ்வாமி ஐயரவாள் இருக்காளோ இல்லியோ, அவாகூட 'குக்கா' (சமையற்காரனாக) போனேன்" என்றார்.

நான் சந்தித்த வெளிநாடு சென்றுவந்த 'அறிஞர்'களில் இவரும் ஒருவர்!

வெளிநாடு செல்லாத ஒரே காரணத்தாலேயே தங்களை 'அறிஞர்' என்று கருதும் சிலரையும் சந்தித்திருக்கிறேன்!

நமது நாட்டிலிருந்து வெளிநாடு செல்லுவோரின் எண்ணிக்கையும் அறிவும் பெருகும் பொழுது, இந்தப் புது 'ஜாதி' தானே மறைந்துவிடும் என்று நம்புகிறேன்.

*　　　*　　　*　　　*

ஒரு நாட்டைப் பற்றிச் சொல்லும்பொழுது அந்த நாட்டின் இயற்கை வளத்தையும், அந்த நாட்டு மக்களையும் அவர்கள் பண்பாட்டையும் நாம் குறிப்பிடுகிறோம்.

யாத்திரிகர்களில் இரண்டுவகை உண்டு. ஊர் சுற்றிப் பார்ப்பவர் ஒரு வகை. பிற நாட்டு மக்களை அறிந்து கொள்ள விரும்புபவர் மற்றொரு வகை.

ஊர் சுற்றிப் பார்ப்பவர் பெரும்பாலோர், தோளிலே காமிராவைத் தொங்கப் போட்டுக்கொண்டு செல்வார்கள். கண்டதை யெல்லாம் படம் பிடிப்பார்கள். இவர்களுக்கும் மற்றவர்களுக்கும் இடையே இவர்களுடைய காமிரா குறுக்கே நிற்கும். இந்த மாதிரி ஊர் சுற்றிப் பார்ப்பவர்களுக்கு ஆண்டவன் அதிகமான பணத்தையும் அதிகமான நேரத்தையும் கொடுத்துவிட்டார் என்று சிலர் கருதுவார்கள். இந்த ஊர் சுற்றிப் பார்ப்பவர்களிடம் சாமான்களை அதிகமான விலைக்கு விற்பது தவறு அல்ல என்பது சில நாடுகளில் உள்ள வியாபாரிகளின் நம்பிக்கை.

ஆனால் ஒரு நாட்டு மக்களை அறிந்துகொள்வது எளிதல்ல. சில சமயங்களில் மொழி தெரியாத குறையும், அவர்களுடைய பழக்க வழக்கங்களைத் தெரிந்து கொள்ளாத குறையும் இடையூறாக நிற்கும். அன்றியும் ஒரு வேலையுடனோ அல்லது ஏதாவது ஒரு குறிக்கோளுடனோ ஒரு நாட்டுக்குச் சென்று சில காலம் தங்கினால்தான் அந் நாட்டு மக்களுடன் கலந்து உறவாடி, அவர்களுடைய பிரச்னைகளையும், அவற்றை அவர்கள் சமாளிக்கும் விதத்தையும் நாம் ஓர் அளவு தெரிந்து கொள்ள முடியும்.



உருவத்தைப் படம் பிடிப்பது சுலபம்; சிறிது அனுபவம் இருந்தால் போதும். ஆனால் உள்ளத்தைப் படம் பிடிப்பது மிகக் கடினம்.

அந்நிய நாட்டிலே, முன்பின் தெரியாத ஒருவர், நம்முடன் எவ்வாறு உள்ளத்தைத் திறந்து பேசுவார்? நாம் ஒருவருடன் சில காலம் பழகி, நம்மிடம் அவருக்கு ஒரு நம்பிக்கை ஏற்பட்டால்தான், தமது மனத்தில் உள்ள எண்ணங்களைக் கொஞ்சம் கொஞ்சமாகச் சொல்லுவார். முதலாவது சந்திப்பிலேயே, உணர்ச்சியின் வசப்பட்டு,தங்கள் மனத்தில் உள்ளவற்றை அப்படியே கொட்டிவிடுபவர் வெகு சிலரேயாகும்.

நாம் அந்நிய நாட்டினராய் இருப்பதில் ஒருவித நன்மையும் உண்டு. சிலர் தங்கள் மனத்தில் இருப்பவற்றை வெளியே சொல்ல முடியாமல் துடித்துக் கொண்டிருப்பார்கள். உள் நாட்டிலுள்ளவர்களிடம் கூற அச்சம். அப்படிக் கூறினால் ஒரு வேளை அவர்கள் அதனைத் தங்களுக்கே பாதகமாக உபயோகித்தால் என்ன செய்வது என்ற பயம். அந்நியர்களைப் பொறுத்தவரை அந்தப் பயம் கிடையாது. ஏனென்றால் அந்நியர்கள் சில மாதங்களில் சொந்த ஊருக்குத் திரும்பிவிடுவார்கள். அன்றியும் அவர்களால் ஒரு தீங்கும் நேராது. இந்த எண்ணத்துடன் பயமின்றி நம்மிடம் தங்கள் உள்ளக்கிடக்கைகளை வெளியிடுவார்கள்.

ஏதோ மூன்று அல்லது நான்கு பேரைச் சந்தித்துப் பேசிவிட்டு, ஒரு நாட்டைப் பற்றிப் பொதுவாக அபிப்பிராயம் கூறுவது மிகவும் தவறு.

"ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் பார்த்தால் போதும்" என்பார்கள். இது சோற்றைப் பொறுத்த

வரை சரியாக இருக்கலாம்; ஆனால் ஒரு நாட்டைப் பொறுத்த வரை இது சரியல்ல.

சிலர், 'எனது அனுபவத்தில்' என்று எழுதுகிறார்கள். ஆனால் 'அனுபவத்தின் தன்மையை' விளக்கிக் கூறுவதில்லை. அவ்வாறு விளக்கிக் கூறினால் தானே இவர்களுடைய அனுபவத்தின் தன்மையை நாம் அறிந்து ஏற்க முடியும்.

தமிழ் நாட்டின் தலைவர் ஒருவர், தம் நண்பருடன் சில ஆண்டுகளுக்கு முன் பாரிஸ் நகரம் சென்றார். அங்குள்ள பிரபலமான 'எப்பெல்' கோபுரத்தின் முன் நின்று படம் பிடித்துக் கொண்டார். உடனே நண்பரைப் பார்த்து, "பாரிஸ் முடிந்தது; புறப்படுங்கள் அடுத்த நாட்டுக்கு" என்றாராம். ஊர் பார்க்கக்கூட இவருக்கு ஆசை இல்லை. வெளிநாடு சென்றதாகப் பத்திரிகைகளில் படம் பிரசுரிப்பதும், அதன் காரணமாக மக்களிடையே தமக்கு ஏற்படும் மதிப்பும்தான் இவருடைய லட்சியம்.

சிலர் பிரயாணம் செய்யும்பொழுது ஏதாவது ஒரு நாட்டில் தங்கள் பணப் பையைப் பறிகொடுத்து விடுவார்கள். பறிகொடுத்த பணத்துக்குத் தக்க அளவு அவர்களுடைய ஆத்திரம் அதிகமாகும். அந்த நாட்டு மக்கள் அனைவரையும் அவர்கள் திருடர்களாகவே மதிப்பார்கள்; அவ்வாறே சொல்லுவார்கள். இது சரியல்ல; ஒவ்வொரு நாட்டிலும் நல்லவர்களும் கெட்டவர்களும் கலந்தே இருக்கிறார்கள். நமது பணப்பையைப் பறிகொடுத்தது நமது அஜாக்கிரதையே யாகும்.

சிலர் ஒரு நாட்டுக்குச் செல்லுமுன், தங்கள் அரசியல் கொள்கைக்கேற்ப,அந்த நாட்டைப் பற்றிச் சாதகமாகவோ அல்லது பாதகமாகவோ முன்கூட்டியே ஒரு முடிவுக்கு வந்துவிடுவார்கள். பிரயாணம் முடிந்தபின், தாங்கள் முன்கூட்டியே செய்த முடிவுக்குச் சாதகமாகவுள்ள 'தங்கள் அனுபவங்களை'யும், 'பிறர் அனுபவங்களை'யும் ஒன்று சேர்த்து உருவாக்குவார்கள். இவர்களில் சிலர், இதற்கு 'கண், காது, மூக்கு' வைத்து ஜோடிப்பதும் உண்டு. சிலர் தாம் கண்ட விஷயங்களை—தங்களுக்குச் சாதகமானவற்றை மட்டும்—உண்மையாகவே எழுதினாலும் கூட அது ஒருதலைப்பட்சமானது. ஒருதலைப்பட்சம் நியாயமாகாது. நியாயமில்லாத எதுவும் உண்மையாக மாட்டாது.



எந்தத் தனி நாட்டின் அரசாங்கத்தின் உதவியையோ, அல்லது அரசாங்கங்கள் மறைமுகமாக நடத்துகிற ஸ்தாபனங்களின் உதவியையோ எவ்வகையிலும் நான் பெற்றதில்லை.

காந்தியடிகளின் அன்பு வழியிலும் பண்டித நேருவின் நேர்மையான நடுநிலைமைக் கொள்கையிலும் எனக்கு நம்பிக்கை உண்டு.

காந்தியடிகளின் படத்துக்காகப் பல நாடுகளில் பல ஆண்டு சுற்றுப்பிரயாணம் செய்ததன் காரணமாக, ஜாதி மத, நிற பேதமில்லாமல், பல நாடுகளில் வசிக்கும் சிலருடைய உள்ளங்களில் நல்லிடம் பெறும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. இதன் பயனாக எல்லோரையும் சமமாகக் கருத வேண்டும் என்ற ஆர்வம், என்னுள்ளத்தில் வேரூன்றி வருகிறது.

எல்லோரையும் சமமாக மதித்து, எவரையும் இழிவுபடுத்தும் நோக்கமில்லாமல், விருப்பு வெறுப்பின்றி, நியாயமற்ற கட்டுப்பாடுகளுக்கு ஆளாகாமல், மூன்று ஆண்டுகளுக்கு மேல் பிரயாணம் செய்ய நேர்ந்த அரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, இப் புத்தகத்தை எழுத முயற்சித்திருக்கிறேன்.

இப் புத்தகத்தில், பலருடைய சம்பாஷணைகளை அப்படியே எழுதியிருக்கிறேன். இதில் ஒன்றுகூட கற்பனைச் சம்பாஷணை அல்ல. அனைத்தும் நான் அவ்வப்போது குறித்துக் கொண்டவையும் அல்ல. ஒரு சில சம்பாஷணைகளை மட்டும்தான் குறித்து வைத்திருந்தேன்.

இதற்கு முக்கிய காரணம் இரண்டு. முதலாவது, நாம் பேசும்பொழுது, சம்பாஷணையைக் குறித்துக்கொண்டால், நம்முடன் பேசுபவர் மனம்விட்டுப் பேசமாட்டார். பேசி முடிந்த பிறகு வீட்டுக்கு வந்து குறித்துக் கொள்ளலாம். ஆனால் இது சம்பாஷணையின் தன்மையைப் பொறுத்தது. அரசியல் சம்பாஷணைகளை நாம் குறித்து வைத்துக்கொண்டால், சில நாடுகளில் அந்நாட்டு அரசாங்கத்தாரால் நமக்குத் தொந்தரவு உண்டாகும்.

இரண்டாவது, பிரயாணத்துக்குப் பிறகு, எந்த நிகழ்ச்சிகள் ஞாபகத்தில் இருக்கின்றனவோ அவைதான் பிரசுரிக்கத் தகுந்தவை என்று கருதினேன்.

ஆண்டவனையும், எனது ஞாபக சக்தியையும் நம்பியே, இந்தச் சம்பாஷணைகளையெல்லாம் குறித்திருக்கிறேன். வார்த்தைகளில் சிறிது வித்தியாசமிருக்கலாம். ஆனால் கருத்தில் வித்தியாசமில்லை என்று உறுதியாகக் கூறுவேன். சிறிது சந்தேகமானவற்றை எழுதாமலே விட்டுவிட்டேன்.

உலக சரித்திரம் என்றுமில்லாத முறையில் விரைவாக மாறிவரும் இந்நாளில், இம்மாதிரிப் புத்தகங்கள் எழுதுவது சிரமமான காரியமேயாகும். இப் புத்தகத்தில் உள்ளதெல்லாம் உண்மையென்று கொள்ள வேண்டாம். எனக்குக் காணப்பட்ட காட்சிகளே ஆகும். ஒவ்வொருவரும் உண்மையைத் தத்தமக்குத் தெரிந்தவாறு



உணருகின்றனர். உண்மையை வரையறுத்துக் கூறுவது கடினம். கடவுள் ஒருவரே உண்மை!

சில நாட்களுக்கு முன், நண்பர் ஒருவரின் வீட்டில் தங்கியிருந்தபொழுது, நாலரை வயதுச் சிறுவனுடன் விளையாடிக் கொண்டிருந்தேன். அந்தச் சிறுவனைக் குளிப்பாட்டி, சலவைச் சட்டை அணிவித்திருந்தார்கள். அவன் விளையாடும் பொழுது, "தம்பி, மண்ணில் விளையாடாதே, உனது புதுச்சட்டை அழுக்காகிவிடும்" என்றேன்.

அதற்கு அந்தச் சிறுவன், என்னைப் புன்முறுவலுடன் பார்த்து, "செட்டியார், இது புதுச்சட்டையல்ல; நல்ல சட்டை" என்றான்.

அந்தச் சிறுவன் இவ்வாறு கூறியதால், எனக்கு நேர்ந்த அவமானத்தைக் குறித்து நான் கவலைகொள்ளவில்லை. ஏனென்றால் அவனையும் என்னையும் தவிர இந்த விஷயம் வேறு ஒருவருக்கும் தெரியாது.

கள்ளமற்ற குழந்தை உள்ளம் ஆகையால், புதுச்சட்டைக்கும், நல்ல (சலவைச்) சட்டைக்கும் உள்ள வித்தியாசம் தெரியாத எனது அறியாமையைக் குறித்து, அந்த இனிய சிறுவன், என்னைக் கொஞ்சங்கூட ஏளனமாகக் கருதவேயில்லை!

அதே மனப்பான்மையுடன், இப் புத்தகத்தில் உள்ள தவறுகளையும், குறைகளையும், வாசகர்கள் எனக்கு எடுத்துக் காட்டித் திருத்த வேண்டுமென்பதே எனது பணிவான வேண்டுகோள்.

# மலேயா

கேள்வி:– எவ்வளவு நாள் இந்த நாட்டில் தங்கப் போகிறீர்கள்?

பதில்:– இரண்டு மாதம்.

கேள்வி:– அதற்கு வேண்டிய வசதி இருக்கிறதா?

பதில்:– ஆம்.

பினாங்குத் துறைமுகத்தில், கப்பலை விட்டு இறங்கு முன், குடியேற்றப் பதிவு அதிகாரி இந்தக் கேள்விகளைக் கேட்டார்.

என்னிடமிருந்த பணம் பதினைந்து ரூபாய் தான்!

* * * *

பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு மலேயா சென்றேன். இந்த இடைக்காலத்தில் இரண்டாவது மகா யுத்தம்; எவ்வளவோ மாறுதல்கள்!

ஆனால் மாறாதவை சில.

மலேயாவில் இருக்கும் இந்தியரின், சிறப்பாகத் தமிழரின் விருந்தோம்பும் அரிய குணம் சிறிதும் மாறவே இல்லை.

மலேயாவில் ஆண்டுக்குப் பன்னிரண்டு மாதங்களிலும் குதிரைப் பந்தயம் உண்டு. இதிலும் மாற்றமில்லை.

மலேயாவில் வாழும் இந்தியர் பிற சமூகத்துடன் கலவாமல் தனித்தே வாழ்ந்தனர். இந்தத் தனித்து வாழும் தன்மையிலும் மாற்றம் எதுவுமில்லை!



ஆனால் மாற்றங்கள் பல.

மனிதனை மனிதன் இழுத்த ரிக்ஷா வண்டிகள் மறைந்து விட்டன! எங்கு பார்த்தாலும் சைக்கிள் ரிக்ஷாக்கள்.

புது டில்லியில் நடைபெற்ற ஆசிய நல்லுறவு மகா நாட்டில் கலந்து கொண்ட மலேயா நாட்டு அம்மையார் ஒருவர், "அரசியலைப் பொறுத்த வரை எங்கள் நாட்டில் ஆணும் பெண்ணும் சமம். இருவருக்கும் ஓட்டுரிமை இல்லை" என்றார். அந்த நிலை இப்பொழுது மாறிவிட்டது. மலேயா நாட்டில் முதலாவது தேர்தல் நடைபெற்றது.

யுத்தத்துக்குப் பிறகு ஆங்கிலேயரிடமிருந்த பயமும் மதிப்பும் குறைந்து விட்டன.

ஜோகூருக்கு அருகில் ஒரு ரப்பர் தோட்டம். அங்குள்ள காரியாலயத்தில் இருந்த குமஸ்தாவிடம், தொழிலாளி ஒருவர் ஏதோ வேலையாகச் சென்றார். தொழிலாளி தலையில் தொப்பி வைத்திருந்தார். அந்தத் தோட்டத்து நிர்வாகியாகிய ஆங்கிலேயர் தொழிலாளி தொப்பியை எடுக்காமல் வருவதைப் பார்த்து விட்டார். "தொப்பியை எடு" என்று பல முறை கோபத்துடன் உரக்கக் கத்தினார். தொழிலாளி ஒன்றும் லட்சியம் செய்ய வில்லை. தமது வேலையை முடித்துக் கொண்டு திரும்பி விட்டார்.

இந்த ஆங்கிலேயர், யுத்தத்துக்குப் பிறகு முதன் முறையாக மலேயா வந்திருக்கிறார். ஒரு வெள்ளைக்காரரைக் கண்டு, ஒரு கறுப்புக் *'கூலி' தொப்பியை எடுத்து

*யுத்தத்துக்குப் பிறகு, மலேயாவில், 'கூலி' என்ற வார்த்தையை உபயோகிக்கக் கூடாது. அதற்குப் பதிலாக 'தொழிலாளி' என்றே குறிப்பிட வேண்டுமென்பது அந்த நாட்டின் புதிய சட்டம்.

மரியாதை செய்யாமல் இருந்தால் அதை அவர் எவ்வாறு சகிப்பார்? அவர், குமஸ்தாவிடம் சென்று, "யுத்தத்துக்குப் பிறகு இந்த நாட்டில் அநேக மாறுதல் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது" என்றார். அதற்கு அந்தக் குமஸ்தா, "ஆம், எல்லாம் மாறிவிட்டன—தங்களைத் தவிர" என்றார்.

இந்த நிகழ்ச்சியை சிங்கப்பூரில் ஒருவர் கூறினார்.

* * * *

புத்தகம் எழுதுவதில் உண்டாகும் கஷ்டங்கள் தெரியுமே தவிர, புத்தகம் எழுதியதால் உண்டாகும் கஷ்டங்கள் எனக்குத் தெரியாது. 'ஜப்பான்' புத்தகம் எழுதியதற்காக மலேயாவில் யுத்தகாலத்தில் தங்கியிருந்த தமிழர் சிலர் சண்டைக்கு வந்து விட்டார்கள். "ஜப்பான்காரன் நல்லவன் என்று உங்கள் புத்தகத்தில் எழுதியிருக்கிறீர்கள்; அவன் எப்பொழுது வருவான் என்று ஆவலாக இருந்தோம். ஆனால் அந்த ஜப்பான்காரன் செய்த கொடுமை சொல்லி முடியாது" என்றார்கள். மலேயா நாட்டில் எங்கு போனாலும் இதே 'வரவேற்புத்'தான்! அவர்கள் சொல்லிய கொடுமைகள் பழங்கதைகளாகி விட்டன.

* * * *

"ஜப்பான்காரன் மிகவும் கொடுமையானவன். முதன் முதலில் குரங்குப் படை வந்தது. யாராவது அவர்கள் உத்தரவை மீறினால், தலையை வெட்டி முச்சந்தியில் வைத்துவிடுவார்கள். ஊரெல்லாம் ஒரே நடுக்கம்.

"ஜப்பான்காரருக்குத் தேங்காய் வேண்டுமானால், மரத்தில் ஏறிப் பறிக்க மாட்டார்கள். மரத்தை அடியோடு வெட்டி, பின்னர்தான் தேங்காயைப் பறிப்பார்கள்.

"ஒரு வீட்டில் ஒரு முதலாளி படுத்திருந்தார். வேலைக்காரன் அவர் உடம்பைப்பிடித்துவிட்டுக் கொண்டிருந்தான்.



வீதியின் வழியே போன ஜப்பான்காரன் ஒருவன் இதைப் பார்த்து விட்டான். இவன் வீட்டின் உள்ளே சென்று வேலைக்காரனைப் படுக்கச் சொல்லி, முதலாளியை அவன் உடம்பைப் பிடித்து விடச் சொன்னான்.

"ஒரு வீட்டில் நான்கு பேர் சீட்டாடிக் கொண்டிருந்தனர். வழியே சென்ற ஜப்பானிய பட்டாளத்தான் இதைப் பார்த்தான். 'சோம்பேறித் தனமாகப் பொழுது போக்குகிறீர்களா' என்று சொல்லி, அத்தனை பேருக்கும் ஆளுக்கு ஒரு மண் வெட்டியைக் கொடுத்து மண் வெட்டச் சொன்னான்"

மேற் கண்ட நிகழ்ச்சிகளைப் பலர் என்னிடம் கூறினர்.

ஜப்பானியரின் நாணயத்தைப் பற்றி, டெலுக் கான்சனில் உள்ள ஓர் அன்பர் பின் வருமாறு கூறினார்:—

"யுத்த காலம். வீட்டின் முன்னால் மணல் மூட்டைகளை அடுக்கியிருந்தோம். ஒரு நாள் மாலை நேரத்தில் உள்ளே இருந்து கணக்கு எழுதிக் கொண்டிருந்தோம். ஒரு ஜப்பானிய பட்டாளத்தான் வீட்டுக்கு முன்னால் முன்னும் பின்னும் நடந்து கொண்டிருந்தான். உள்ளே வந்தான். உட்காரச் சொன்னோம். ரிங்கி வேண்டுமென்றான். (மலேயா நாட்டுப் பணம் டாலர். இதனைச் சிலர் ரிங்கி என்று சொல்வதும் உண்டு) எவ்வளவு என்று கேட்டோம். ஐந்து விரலைக் காட்டினான். ஐந்தா ஐம்பதா என்று தெரியவில்லை. எவ்வளவு கேட்டாலும் கொடுத்திருப்போம். குமஸ்தாவிடம் 'ஐந்து ரிங்கி கொடு, அதிகமாகக் கேட்டால் அப்புறம் கொடுக்கலாம்' என்றேன். குமஸ்தா கொடுத்த ஐந்து ரிங்கியை வாங்கிக் கொண்டு அவன் போய் விட்டான்.

"சுமார் இரண்டு வருஷம் கழிந்தது. ஒரு ஜப்பான்காரர்—அதிகாரி எங்கள் வீட்டுக்கு வந்தார். உட்காரச் சொன்னோம். அவர் குமஸ்தாவிடம் ஐந்து ரிங்கியைக் கொடுத்தார். எங்களுக்கு ஒன்றும் புரிய வில்லை. 'நம்மிடம் முன்னே ஒருவன் ஐந்து ரிங்கி வாங்கிக் கொண்டு போனான் அல்லவா? இவனைப் பார்க்க அவனைப் போலத் தெரிகிறது' என்றார் குமஸ்தா. அவனே தான் இவன். தான் பர்மாவுக்குச் சென்று திரும்பியதாகவும், அதிகாரியாக உயர்வு பெற்றிருப்பதாகவும் ஜப்பான்காரன் கூறினான். ஐந்து ரிங்கி வேண்டாம் என்று கூறினோம். கட்டாயப் படுத்தி வாங்கிக்கொள்ளச் சொன்னான்.

"அது முதல் எங்களுடன் அவன் மிகவும் சிநேகம். அடிக்கடி வீட்டுக்கு வந்து நன்றாகப் பழகுவான். சமையற்காரன் பேரைச் சொல்லிக் கூப்பிட்டு, தோசை சாப்பிடுவான். யுத்த காலத்தில் சர்க்கரை கிடைப்பது அபூர்வம். யாரோ ஒரு கடைக்காரனை அதட்டி, அவனிடம் சர்க்கரை வாங்கி வந்து எங்களுக்குக் கொடுப்பான். ஜப்பான்காரனிலும் நல்லவன் இருக்கிறான்"

* * * *

யுத்த காலத்தில் மலேயாவில் இந்தியரின் உயிரையும் உடைமையையும் பாதுகாத்தவர் நேதாஜி.

யுத்தத்துக்குப் பிறகு, 'பயங்கர வாதிகள்' (பெரும்பாலானவர் சீனர்) இந்தியர்களைத் தாக்காமல் இருந்ததற்கு முக்கிய காரணங்களில் ஒன்று, நேரு அரசாங்கத்தின் நடுநிலைமைக் கொள்கை.

* * * *

மலேயாவின் உயிர் நாடி ரப்பரும், ஈயமும். இவைகளின் விலை, சரித்திரம் காணாத அளவு உயர்ந்தது. தோட்டங்களிலே 'பயங்கரவாதி'களின் பயம். இவர்களுக்கு—



அல்லது இவர்கள் இயக்கத்துக்கு, ரப்பர் பாலில் பங்கு கொடுக்க வேண்டும். இல்லையேல் தோட்டமே பாழ். இந்த 'பயங்கரவாதி'களுக்குப் பங்கு கொடுப்பதாகத் தெரிந்தால், அரசாங்கம் மிகக் கடுமையான நடவடிக்கை எடுத்துக் கொள்ளும்.

ஒரு புறம் 'பயங்கரவாதி'களின் பயம்; மறுபுறம் அரசாங்கத்தின் கடுமையான சட்டத்தின் பயம். இந்த இரண்டு பயத்துக்குமிடையே பெரும் புதையல்!

மலேயாவில் உள்ள அத்தனை தோட்டக்காரரும், ஆங்கிலேயத் தோட்டக்காரர் உள்பட, தோட்டத்திலுள்ள 'பயங்கரவாதி'களுக்கு மறைமுகமாகப் பங்கு கொடுத்ததாகக் கேள்விப்பட்டேன். தோட்டத் தொழிலாளர், ரப்பர் பாலில் ஒரு பகுதி தங்கள் சொந்தத்துக்குத் திருட்டுத்தனமாக எடுத்துக் கொண்டதாகவும் கூறினார்கள். இதைத் தடுக்க தோட்ட முதலாளிக்குச் சக்தியில்லை. தோட்டங்களுக்குச் சொந்தக்காரர்கள் பெரும்பாலும் செல்லுவதில்லை. 'பயங்கரவாதி'கள் தங்களைப் பிடித்து வைத்துக் கொண்டு பெரும் பணம் கேட்டால் என்ன செய்வது என்ற பயம்.

இம்மாதிரி ஒரு பகுதி கிடைத்த ரப்பரின் வருமானமே கனவிலும் கருதாத அளவு உயர்ந்து இருந்தது. "இந்த விலை இன்னும் கொஞ்ச நாள் நீடித்தால், இந்தியாவில் எங்கள் வீடுகளுக்கு எல்லாம் தங்கத்தால் செய்த கதவு மாட்டி விடுவோம்" என்றார் ஒருவர்.

"காமதேனு, கற்பக விருட்சம் என்று படித்திருக்கிறோம். காமதேனுவை நாம் பார்த்ததில்லை. ஆனால் கற்பக விருட்சம் என்பது இந்த ரப்பர் மரம் தான்" என்றார் மற்றொருவர். செல்வம் கொழித்தது!

இந்தியாவில், முக்கியமாகத் தமிழ் நாட்டில், யுத்தத்துக்குப் பிறகு பொருளாதாரக் கஷ்டம் ஆரம்பமாயிற்று. தமிழ் நாட்டில் படிப்பவர் எண்ணிக்கை அதிகமாயிற்று; ஆனால் புத்தகம் வாங்கப் பணமில்லை. மலேயா நாட்டில் பணம் நிறைய இருந்தது; ஆனால் அவர்களுக்குப் படிக்க நேரமில்லை. படிப்பவர்களுக்குத்தான் புத்தகம் விற்பது என்றால் வியாபாரம் ஆகாது. எனவே மலேயாவுக்குப் புத்தகம் விற்கச் சென்றேன்.

மலேயாவிலிருந்து இந்தோனேஷ்யா செல்ல விரும்பினேன். அப்பொழுது இந்தோனேஷ்யாவில், டாக்டர் ப. சுப்பராயன் நமது அரசாங்கப் பிரதிநிதியாகப் பணியாற்றினர். அவர் பல முறை அன்புடன் கடிதம் எழுதினர்; அத்தனையும் தமிழில்!

இந்தோனேஷ்யா செல்ல 'விஸா' கிடைப்பது மிகவும் கஷ்டம். பலர் மாதக் கணக்காக இந்த 'விஸா' வாங்குவதற்காகக் காத்திருக்கிறார்கள் என்று அறிந்தேன்.

'மாப்பிள்ளைச் செட்டியார்' சிங்கப்பூரில் முக்கியமான இந்தியத் தலைவர்களில் ஒருவர். இவர் பெயர், வயி. சண்முகம் செட்டியார். சிங்கப்பூர் தீவின் சமாதான நீதிபதிகளுள் (J. P.) இவர் ஒருவர். ஏழை, பணக்காரர் என்ற வித்தியாசமில்லாமல், எல்லோரையும் சமமாக மதித்து உதவி செய்யும் அருங்குணம் வாய்ந்தவர். தான் அவர்களுக்கு இவர் என்னை அறிமுகப் படுத்தினர்.

தான் என்பது சீனப் பெயர் அல்ல. நல்ல தமிழ்ப் பெயரின் கடைசிப் பகுதி. இவருடைய முழுப் பெயர் திருவேங்கடத்தான் என்பது. அப்பொழுது இந்திய அரசாங்கத்தின் பிரதிநிதியாக வேலை பார்த்தார். இவர் செய்த உதவிகள் பல.



இந்தோனேஷ்ய அரசாங்கப் பிரதிநிதிக்கு டெலிபோன் செய்து, எனக்கு ஒரு கடிதமும் கொடுத்தார்.

இருபத்து நான்கு மணி நேரத்தில் 'விஸா' கிடைத்தது!

'விஸா'வுக்காக அதிகப் பணம் வாங்கும் நாடுகளில் இந்தோனேஷ்யாவும் ஒன்று. அது மட்டுமல்ல; 120 டாலர் (180 ரூபாய்) அவர்களிடம் ஈடுதொகை கட்ட வேண்டும். முப்பது நாளைக்குள் நாம் அந்த நாட்டைவிட்டுத் திரும்பினால், அந்தப் பணம் நமக்குத் திரும்பி வரும். இல்லையேல் அது அந்த அரசாங்கத்தைச் சேரும்.

மலேயா நாட்டில் இரண்டு மாதம் தங்கிய பின்னர், ஓபீர் என்ற நல்ல டச்சுக் கப்பலில் ஜாவாவுக்குப் பயணமானேன்.

# இந்தோனேஷ்யா

சிங்கப்பூரிலிருந்து ஜாவாவின் துறைமுகமான தஞ்சம் பிரியாக் சேருவதற்கு, நாற்பது மணி நேரம் கப்பலில் பிரயாணம் செய்தேன். நூற்றுக்கணக்கான பிரயாணிகள். பெரும்பாலோர் இந்தோனேஷ்யர்களே ஆவர். சுமத்ராவில் உள்ள பெல்வான் டில்லியிலிருந்து, ஜாவா செல்லும் வழியில், இக் கப்பல் சிங்கப்பூரில் சில மணிநேரம் தங்குவது வழக்கம்.

கப்பலில் எனது அறையில் இருந்த ஒரே பிரயாணி, ஒரு டச்சுக்காரர். இவர் கிறிஸ்துவ மதப்பிரசாரகர் என அறிந்தேன்; கப்பல் துறைமுகத்தை அடைந்ததும், இந்த டச்சுக்காரர் என்னைப் பார்த்து "நீங்கள் முதலில் செல்லுங்கள். தாழ் போட்டுக்கொண்டு இந்த அறையிலேயே சிறிது நேரம் தங்கப் போகிறேன்" என்றார்.

"எதற்காக இம்மாதிரி செய்கிறீர்கள்? நீங்களும் இங்கே இறங்க வேண்டியவர் தானே?" என்றேன்.

"ஆம். ஆனால் இந்த இந்தோனேஷ்ய குடியேற்றப் பதிவு அதிகாரிகளும் சுங்க அதிகாரிகளும் டச்சுக்காரரை அலட்சியமாகவும், மிகவும் கடுமையாகவும் நடத்துவார்கள். எல்லோருக்கும் கடைசியாக நான் வெளியே வந்தால், அந்தச் சமயம் இந்த அதிகாரிகள் களைத்துப்போய் இருப்பார்கள். அப்பொழுது அதிகமாகத் தொந்தரவு செய்யமாட்டார்கள்" என்றார் டச்சுக்காரர்.

கப்பலை விட்டுக் கடைசியாக இறங்கியவர் இந்த டச்சுக்காரர்தான். இவர் வெளியே வந்த பின்னர், என்னிடம்



தனிமையில் மெதுவாக, "நல்ல வேளையாகக் கடவுள் தான் என்னைக் காப்பாற்றினார். என்னிடம் ஆயிரக்கணக்கான இந்தோனேஷ்ய ரூபாய் நோட்டுக்கள் இருக்கின்றன. இவற்றை சிங்கப்பூரில் வாங்கினேன். சிங்கப்பூரில் வாங்கினால் நியாயமாகக் கிடைக்க வேண்டிய தொகைக்கு ஆறு மடங்கு அதிகமாகத் தருவார்கள்" என்றார்.

என் பெட்டியிலிருந்த சில தமிழ்ப் புத்தகங்களை மட்டும் சுங்க அதிகாரிகள் எடுத்து வைத்துக்கொண்டார்கள். இப்புத்தகங்கள், ஒருவேளை கம்யூனிஸ்ட் பிரசாரப் புத்தகங்களாக இருக்குமோ என்று அவர்கள் சந்தேகப்பட்டதே இதற்குக் காரணம். இவை அந்த மாதிரியான புத்தகங்கள் அல்ல வென்று, இந்திய அரசாங்கப் பிரதிநிதியாக இருந்த டாக்டர் சுப்பராயனிடம் ஒரு கடிதம் வாங்கிச் சென்ற பின்னரே, சுங்க அதிகாரிகள் புத்தகங்களைத் திருப்பிக் கொடுத்தனர்.

துறைமுகத்துக்கும் ஜாகர்தாவுக்கும், நல்ல சாலையும், இரட்டை ரயில் பாதையும் அமைத்திருக்கிறார்கள்.

ஜாகர்தாதான் இந்தோனேஷ்யாவின் தலைநகரம்.

ஆசியாவுக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் இடையே உள்ள சமுத்திரத்தில், சுமார் மூவாயிரம் மைல் நீளத்துக்குள்ளாக வியாபித்திருக்கும் தீவுக் கூட்டத்துக்கு இந்தோனேஷ்யா என்று பெயர்.

சுதந்திர இந்தோனேஷ்யக் குடியரசில், ஜாவா, சுமத்ரா, காலிமாண்டான் (போர்னியோ) ஸுலாவேஸ் (செலிபஸ்) ஆகிய நான்கு பெரிய தீவுகளும், பாலி மதுரா, லொம்பக், சும்பா, டிமோர் போன்ற பதினைந்

சிறிய தீவுகளும், ஆயிரக்கணக்கான குட்டித் தீவுகளும் அடங்கியிருக்கின்றன.

சுமார் ஏழுரை லட்சம் சதுர மைல் நிலப்பரப்புள்ள இந்த நாட்டின் ஜனத் தொகை ஏழுரைக் கோடி. இதில் ஜாவாவில் மட்டும் ஐந்து கோடி. இருபது லட்சத்துக்கு மேல் ஜனத்தொகையுள்ள தலைநகரமான ஜாகர்தா, ஜாவாத்தீவில் இருக்கிறது.

ஜாகர்தா நகரின் முக்கியமான பல வீதிகளின் மத்தியில் வாய்க்கால் ஓடுகிறது. வாய்க்காலின் இருபுறமும் வீதிகள்.

வாய்க்கால் பெரிது. நன்ருகக் கட்டியிருக்கிருர்கள். வாய்க்காலின் இரு புறத்திலுமுள்ள வீதிகளின் மொத்த அகலத்தைவிட, வாய்க்காலின் அகலம் அதிகமாக இருக்கலாம். வாய்க்காலில் ஓடிக்கொண்டிருக்கும் தண்ணீர் சுத்தமானதல்ல. என்ருலும், நூற்றுக்கணக்கான இந்தோனேஷ்ய ஆண்களும் பெண்களும் அதில் குளிப்பதையும், துணிகளைச் சுத்தம் செய்வதையும் காணலாம்.

வாய்க்காலின் இரு புறமுமுள்ள வீதிகளில் ஓடும் வண்டி வாகனங்கள் பலவிதம். டிராம் வண்டிகள், பஸ், மோட்டார், சைக்கிள், பேச்சா முதலியவற்றைப் பார்க்கலாம். பேச்சா என்பது சைக்கிள் ரிக்ஷா.

ஜாகர்தாவில் பல இந்திய வியாபாரிகள் இருக்கிருர்கள். இவர்களில் பெரும்பாலோர் துணி வியாபாரம் செய்யும் சிந்திகள். குஜராத்திகள், பஞ்சாபிகள் சிலரும் உண்டு. அன்பர் பி. கே. ராமனும், அவர் சகோதரர் நாராயணனும் பாலக்காட்டைச் சேர்ந்தவர்கள். பல ஆண்டுகளாக இந்தோனேஷ்யாவில் வசிக்கிருர்கள். இந்தியாவிலிருந்து — சிறப்பாகத் தென்னுட்டிலிருந்து யார் சென்ருலும், இந்தச் சகோதரர்கள் அன்புடன் உதவி



செய்கிருர்கள். இவர்களுடைய வீடு ஒரு சத்திரம் மாதிரி. எந்தச் சமயத்திலும் அன்புடன் சைவ உணவு அளித்து உபசரிப்பார்கள்.

இவர்களுடைய வியாபார நிலையத்தில் ஸ்ரீ ரங்கநாதனைச் சந்தித்தேன். இவர் சென்னையிலுள்ள ஒரு வியாபாரி. இந்தோனேஷ்ய அரசாங்கத்துடன் வியாபாரம் செய்வதற்காக வந்திருந்தார். தங்குவதற்கு இடமில்லாமல் நான் தவிப்பதைப் பார்த்து, தாம் தங்கியிருந்த ஹோட்டலில் ஏற்பாடு செய்வதாக அழைத்துச் சென்ருர். ஹோட்டலில் இடம் கிடைக்கவில்லை. என்றபோதிலும், தமது கட்டிலை எனக்குக் கொடுத்துவிட்டு, தரையில் மெத்தையை விரித்துப் படுத்துக் கொண்டார்.

ஸ்ரீ ரங்கநாதன் மூலம், ஜாகர்தாவிலுள்ள சில தமிழர்களைச் சந்தித்தேன். இவர்கள் எல்லோரும் தஞ்சை ஜில்லாவைச் சேர்ந்தவர்கள். பல வருஷங்களாக இங்கேயே இருக்கிருர்கள். இவர்கள் செய்யும் முடிவெட்டும் தொழிலில் நல்ல வருமானம். இவர்களில் ஒருவர், யுத்தத்துக்கு முன் ஏழு கடைகள் வைத்திருந்ததாகவும், ஒரு டச்சுக்காரியை மணந்திருந்ததாகவும், அவள் இறந்துபோகவே ஓர் இந்தோனேஷ்யப் பெண்ணை மணந்திருப்பதாகவும் கூறினுர். மற்றும் ஒரு தமிழர், தமது புது வீட்டுக் கிரகப்பிரவேசத்துக்கு வரும்படி கேட்டுக் கொண்டார்.

டாக்டர் ப. சுப்பராயனின் தூண்டுதலாலும் உதவியாலுமே இந் நாட்டில் சௌகரியமாகப் பிரயாணம் செய்தேன். உள் நாட்டு நிலைமை குழப்பமாக இருந்ததால், டாக்டர் சுப்பராயனின் யோசனைப்படி, இந் நாட்டில் விமானத்திலேயே பிரயாணம் செய்தேன்.

ஜாகர்தாவில் உள்ள நல்ல வீடுகளில் ஒன்றை இந்திய அரசாங்கப் பிரதிநிதிக்குக் கொடுத்திருந்தார்கள். வீட்டின் முன்னே, இந்தியாவின் மூவர்ணக் கொடி பறந்தது.

ஒரு நாள் சுப்பராயன் தம்பதிகள் வீட்டுக்குப் பகல் விருந்துக்குச் சென்றேன். இன்னும் சில இந்தியர்களும் அன்று விருந்துக்கு வந்தனர். எங்களுக்கு முதன் முதலாகப் பரிமாறியது இட்லி. பிறகுதான் சாதம். வெளிநாடு செல்லும்போதுதான் இட்லியின் அருமை நமக்குத் தெரிகிறது.

சாப்பிடுமிடத்தில் ஒரு பெரிய மின்சார விசிறி இருந்தது. இம்மாதிரி ஒரு விசிறியைப் பார்ப்பது இந்தோனேஷ்யாவில் அபூர்வம். இந்திய அரசாங்கப் பிரதிநிதி என்பதற்காக இவ்வீட்டில் இந்த விசேஷ ஏற்பாடு.

"இங்குதான் இந்தோனேஷ்யர் யாருமில்லையே, நாம் விசிறியை உபயோகிக்கலாமே?" என்றார் ஸ்ரீமதி சுப்பராயன்.

இந்தோனேஷ்யர்களுக்கு மின்சார விசிறி என்றால் பிடிக்காது. இவர்களுக்கு டச்சுக்காரர்மீது எவ்வளவு வெறுப்போ, அவ்வளவு வெறுப்பு இந்த மின்சார விசிறியின் மீதும்.

ஜாகர்தாவில் பிரபலமான புதிய பெரிய திரைப்படக் காட்சிசாலை ஒன்றுக்குச் சென்றேன். அங்கு ஆயிரம் பேருக்கு மேல் சௌகரியமாக உட்கார வசதி உண்டு. ஆனால் ஒரு விசிறிகூடக் கிடையாது!

ஜாகர்தாவில் முக்கியமாகப் பார்க்கவேண்டிய இடங்களுள் பொருட்காட்சிசாலை ஒன்று. அங்கு சென்றால் அது பொருட்காட்சி சாலையா, அல்லது ஓர் இந்துக் கோயிலா என்ற ஐயம் உண்டாகலாம். இந்துமதக் கடவுள்களின் கற்சிலைகளும், செம்பு விக்கிரகங்களும் இங்கு நூற்றுக் கணக்கில் இருக்கின்றன. இத்தகைய விக்கிரகங்களின் சேமிப்பு, உலகில் வேறு எந்தப் பொருட்காட்சிசாலையிலும் இராது என்று கூறுவது மிகையாகாது.



ஜாகர்தாவுக்கு முப்பத்தைந்து மைல் தூரத்தில் போகர் என்னும் நகரம் இருக்கிறது. இங்கே 275 ஏகரா விஸ்தீரணமுள்ள இடத்தில், அருமையான தோட்டம் அமைத்திருக்கிறார்கள். இத் தோட்டத்தில் பல விதமான மரங்களையும் செடிகளையும் காணலாம். இவைகளின் எண்ணிக்கையும் விதங்களும் மிக அதிகம். ஆதலால் இத்தோட்டம், தாவர வர்க்க ஆராய்ச்சியாளரிடையே உலகப் பிரசித்தி பெற்றிருக்கிறது.

இத் தோட்டத்தின் நடுவே கம்பீரமான அரண்மனை ஒன்று இருக்கிறது. ஒரு காலத்தில் டச்சு கவர்னர் ஜெனரல் குடியிருந்த இவ்வரண்மனை, தற்பொழுது இந்தோனேஷ்ய ஜனாதிபதியின் அரண்மனையாக மாறிவிட்டது.

1945-ஆம் ஆண்டில் இந்தோனேஷ்யா ஒரு சுதந்திரக் குடியரசு நாடாகிவிட்டது. அதுமுதல் இதன் ஜனாதிபதியாக இருப்பவர் டாக்டர் சுகர்ணோ.

இந்தோனேஷ்யாவை, டச்சு கிழக்கிந்தியத் தீவுகள் என்று முன்னர் அழைத்து வந்தார்கள். 1942-ல் ஜப்பானியர் கைப்பற்றுகிறவரையில், இந்நாடு சுமார் முன்னூற்றைம்பது ஆண்டுகள் டச்சுக்காரரின் ஏகாதிபத்தியத்தில் இருந்தது.

டச்சு ஏகாதிபத்தியத்தில், இந்தோனேஷ்யா பட்ட கஷ்டங்கள் அதிகம். அரசியலில் எந்த விதமான முன்னேற்றமும் அடையவில்லை. பொறுப்புள்ள எல்லா அரசாங்க உத்தியோகங்களும் டச்சுக்காரர்களுக்கே. இந்தோனேஷ்யர்களுக்கு, சாதாரணச் சில்லரை உத்தியோகங்கள்தான்.

இந்தோனேஷ்யர்களிலே சிலர் ஹாலந்து சென்று, உயர்தரக் கல்வி கற்றுத் தேர்ச்சி பெற்றனர். இவர்களை

முன்னுக்கு வரவிடாமல் செய்துவிட்டது டச்சு அரசாங்கம்.

1928-ஆம் ஆண்டு முதலே இந்நாட்டில் தேசீய இயக்கம் ஆரம்பமாயிற்று. டாக்டர் சுகர்ணோ, முகமது ஹாட்டா, சுல்தான் ஷரீர் போன்ற தேசீயத் தலைவர்களை எல்லாம், டச்சு அரசாங்கம் கைது செய்து, பல ஆண்டுகள் கண்காணாத தீவுகளிலே சிறைப்படுத்தி வைத்தது.

யுத்த காலத்தில் இந்நாட்டைக் கைப்பற்றிய ஜப்பானியர், இத் தேசீயத் தலைவர்களை விடுதலை செய்தனர். டாக்டர் சுகர்ணோவும் முகமது ஹாட்டாவும் ஜப்பானியருடன் சேர்ந்து கொண்டனர். ஜப்பானியருடன் நல்லுறவாக இருப்பதன் மூலமாகவே, டச்சுக்காரர் ஆதிக்கத்தை அடியோடு ஒழிக்க முடியுமென்றும், சுதந்திர இந்தோனேஷ்யாவை உருவாக்குவதில் ஆசிய நாடு என்ற முறையில் ஜப்பான் உதவி புரியுமென்றும் இத் தலைவர்கள் நம்பினர். ஆனால் சோஷலிஸ்ட் தலைவரான சுல்தான் ஷரீர் மட்டும் ஜப்பானியருடன் எந்த விதத்திலும் ஒத்துழைக்க மறுத்துவிட்டார்.

1945-ஆம் ஆண்டு ஆகஸ்டு பதினைந்தில், ஜப்பானியர் சரண் அடைந்தனர். ஆனால் இந்தோனேஷ்யாவில் இச் செய்தியை வெளியிடவில்லை. தேசீயத் தலைவர்கள் எல்லாம், ஜப்பான் சரண் அடைந்த விவரத்தை ஆகஸ்டு பதினைந்தாம் தேதியே, வெளிநாட்டு வானொலி நிலையங்களின் ஒலிபரப்பின் மூலம் ரகசியமாகக் கேட்டனர். முக்கியமான தலைவர்கள் ஒன்று கூடி ஆலோசித்தனர். ஆகஸ்டு 17-ந் தேதி காலையில் டாக்டர் சுகர்ணோவைத் தலைவராகக் கொண்ட சுதந்திர இந்தோனேஷ்யக் குடியரசு ஸ்தாபிக்கப் பெற்றது. ஜாகர்தா வானொலி நிலையத்து ஊழியர்கள் ஜப்பானியரையும் பொருட்படுத்தாமல் சுதந்திர



இந்தோனேஷ்யக் குடியரசின் தோற்றத்தை, வானொலியில் உலகத்தாருக்குப் பிரகடனம் செய்தனர். ஆகஸ்டு மாதம் 17-ந் தேதிதான், இந்தோனேஷ்யாவிலுள்ள ஜப்பானிய சேனாதிபதி, ஜப்பானின் தோல்வியைப் பகிரங்கமாகக் கூறினர். அப்பொழுது அவர் கண்களில் நீர் தாரை தாரையாக வடிந்தது.

ஜப்பான் வல்லரசு சரண் அடைந்தது! ஆனால் வெற்றி கொண்ட வீரர்கள் எங்கே? கண்ணுக்குத் தெரியாத விரோதிகளிடம் ஒரு வல்லரசு சரண் அடைந்தது அதிசயமல்லவா!

ஜப்பானில் மட்டும் அல்ல; ஜப்பான் வசம் இருந்த எல்லா நாடுகளிலும் இதே மாதிரிதான். இந்தோனேஷ்யாவில் அப்பொழுது இரண்டரை லட்சம் ஜப்பானியத் துருப்புக்கள் இருந்தன. எண்ணற்ற ஆயுதங்களும், பீரங்கிகளும், விமானங்களும் இவர்களிடம் இருந்தன. இவ்வளவு பலம் வாய்ந்த சேனை, கண்ணிற் படாத எதிரியிடம் சரண் அடைந்த செய்தியைக் கேட்ட மாத்திரத்திலேயே செயலற்றுப் போய்விட்டது.

இந்தச் சூழ்நிலையில் தான், சுதந்திர இந்தோனேஷ்யக் குடியரசு தோன்றியது.

தெருவெல்லாம் சுதந்திர முழக்கம். ஊரெல்லாம் சுதந்திர முழக்கம். நாடெல்லாம் சுதந்திர முழக்கம். எங்கு பார்த்தாலும் சிவப்பும் வெள்ளையும் உள்ள சுதந்திர இந்தோனேஷ்யக் கொடி பறந்தது. எங்கு பார்த்தாலும் உற்சாகம். ஆனால் சட்டமும் அமைதியும் தளர்ந்தது.

இந்தோனேஷ்யாவில் லட்சக்கணக்கான வெள்ளைக்காரர்கள்—குறிப்பாக டச்சுக்காரர்கள்—யுத்தக் கைதிகளாகச் சிறைப்படுத்தப்பட்டிருந்தனர். நேச தேசங்களின்

இந்தோனேஷ்யர்களிடையே டச்சுக்காரர் மீது ஏற்பட்டிருக்கும் வெறுப்பு மிக அதிகம் என்றும், முதன் முதலாக டச்சுத் துருப்புக்களை அனுப்பாமல் பிரிட்டிஷ் துருப்புக்களை அனுப்புவதே உசிதம் என்றும் இந்த அதிகாரிகள் மவுண்ட்பாட்டனுக்குத் தெரிவித்தனர்.

செப்டம்பர் 16-ந் தேதி கம்பர்லாண்டு என்னும் நேச தேசக் கப்பல் முதன் முதலாக ஜாவாவுக்கு வந்தது. அதில் வந்த நேச தேசக் கமிஷனின் பிரதிநிதி, இந்தோனேஷ்யாவில் சரணடைந்த ஜப்பானிய சேனாதிபதியை அழைத்து, மவுண்ட்பாட்டனின் உத்தரவைக் கூறினார்.

ஜப்பானியர் தாங்கள் இருக்கும் பகுதிகளில் அமைதியை நிலைநாட்ட வேண்டும் என்பதும், அவசியமானால் ஆயுத பலத்தை உபயோகிக்கலாம் என்பதுமே உத்தரவு.

நேச தேசங்களின் ராணுவத் தலைவரின் கண்காணிப்பில் வந்த விடுதலை பெற்ற பிரதேசங்கள் மிகப் பரவலாகவும், ஒன்றுக்கொன்று வெகு தூரத்திலும் இருந்தபடியால், ஆங்காங்குள்ள நிலைமைக்கு ஏற்றவாறு அமைதிக்கும் மக்கள் நலனுக்குமான திட்டங்கள் வகுக்க, ஒவ்வொரு பகுதிக்கும் போதிய அளவு ராணுவமும் தளவாடங்களும் அனுப்ப இயலவில்லை.

ஆகவே அந்தந்தப் பகுதிகளிலிருந்த ஜப்பானிய படைகளையே கூடியவரை பயன்படுத்திக் கொள்ளவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

யுத்தக் கைதிகளாக நடத்தப்பெற வேண்டிய ஜப்பானியத் துருப்புக்களுக்கு, அமைதியை ஆயுத பலத்தின் மூலம் நிலைநாட்டும் பொறுப்பு அளிக்கப் பெற்றது!

மவுண்ட்பாட்டனின் உத்தரவுக்கு ஜப்பானியர் சிலர் கீழ்ப்படிந்தனர். சிலர் அசிரத்தையாக இருந்தனர். சிலர் இந்தோனேஷ்யர்களுக்குத் தங்களுடைய ஆயுதங்களைக் கொடுத்து உதவினர். சில இடங்களில் இந்தோனேஷ்யர் ஜப்பானியர்களைத் தாக்கி, அவர்களிடமிருந்த ஆயுதங்களைக் கைப்பற்றினர்.



இம்மாதிரி கைப்பற்றிய ஆயுதங்கள் நாடெங்கும் பரவின. இவர்களில் பெரும்பாலோர் தேசீய உணர்ச்சி நிறைந்த இளைஞர்கள். இவர்களைக் கொண்டுதான் சுதந்திர இந்தோனேஷ்யாவின் ராணுவம் உருவாயிற்று.

செப்டம்பர் 29-ந் தேதி, நேச தேசத் துருப்புக்கள் லெப்டினண்ட் ஜெனரல் சர். பிலிப்ஸ் கிறிஸ்டிஸனைத் தளபதியாகக்கொண்டு ஜாவாவில் வந்திறங்கின.

ஜாவாவுக்கு வருமுன் பிலிப்ஸ் கிறிஸ்டிஸன் சிங்கப்பூரில் ஒரு வானொலிப் பிரசங்கம் செய்தார். அதில் யுத்தக் கைதிகளைப் பாதுகாத்து அவர்களை வெளியேற்றுவதும், ஜப்பானியத் துருப்புக்களை நிராயுதபாணிகளாக்கி அவர்களைத் திருப்பியனுப்புவதுமே தமது முக்கிய நோக்கம் என்றும், இவைகளை நிறைவேற்றுவதற்கு வேண்டிய அளவு அமைதியையும் சட்டத்தையும் நிலைநிறுத்துவது தமது கடமை என்றும் விளக்கமாகக் கூறினார். அன்றியும் இந்தோனேஷ்யாவின் உள்நாட்டு விவகாரத்தில் நேச தேசங்கள் தலையிட விரும்பவில்லையென்றும், ஆனால் டச்சு அதிகாரிகளையும், செல்வாக்குள்ள இந்தோனேஷ்யத் தலைவர்களையும் ஒன்று கூட்டி அவர்களையே எதிர்காலத்தை முடிவு செய்ய விட்டுவிடுவதாகவும் கூறினார்.

ஜப்பான் சரணடைந்த பிறகு, விடுதலை பெற்ற நாடுகளை, அவை எந்தெந்த நாட்டின் ஆதிக்கத்துக்குட்பட்டிருந்தனவோ, அவற்றிடம், நேச தேசங்களின் படைத் தலைவர் திரும்பவும் ஒப்படைத்துவிடுவார் என்று டச்சு ஏகாதிபத்தியம் எதிர்பார்த்தது.

ஆனால், உலக அபிப்பிராயத்துக்கு விரோதமான எந்தக் காரியத்தையும் தாம் இந்தோனேஷ்யாவில் செய்ய முடியாது என்று லார்டு மவுண்ட்பாட்டன் கூறினார்.

இவை இந்தோனேஷ்யக் குடியரசுக்குச் சாதகமானவை.

1945 ஆகஸ்டு 17-ந் தேதி முதல் 1945 செப்டம்பர் 29-ந் தேதிக்குள்ளாக, இந்த ஆறுவார காலத்தில், சுதந்திர இந்தோனேஷ்யக் குடியரசு உறுதியாக வேரூன்றிவிட்டது. ஜாகர்தாவில் உள்ள குழப்பமான நிலைமையைக் கருதி சுதந்திரக் குடியரசின் அரசாங்கக் காரியாலயம் உள்நாட்டிலுள்ள ஜோக்ஜகர்தாவுக்கு மாற்றப் பெற்றது.

ஆனால், இந்தோனேஷ்யாவில் அமைதியை நிலைநிறுத்த, நேச தேசத்தினர் மூன்று பிரிவு இந்தியத் துருப்புக்களை முதலில் கொண்டுவந்தனர்.

அப்பொழுது இந்தியா சுதந்திரமடையவில்லை. ஆனாலும் இந்திய சட்டசபையில் காங்கிரஸ் அங்கத்தினர்கள் இதனைக் கடுமையாக ஆட்சேபித்தனர். ஆசியாவிலுள்ள எந்த ஒரு நாட்டிலும், குறிப்பாக கிழக்கு நாடுகளில், சுதந்திர இயக்கங்களை அடக்க இந்தியத் துருப்புக்களைப் பயன் படுத்துவதற்கு, இந்தியாவில் பொதுஜன ஆதரவு ஒருபோதும் கிடைக்காது என்று பிரிட்டிஷ் அரசாங்கம் அஞ்சியது. ஆகவே, ஆறு மாதத்துக்குள் இந்தியத் துருப்புக்களைத் திருப்பியனுப்பிவிட்டது.

இழந்துபோன நாட்டைத் திரும்பப் பெறுவதற்காக, டச்சு ஏகாதிபத்தியம் டாக்டர் வான் மூக்கை, கவர்னர் ஜெனரலாக ஜாவாவுக்கு அனுப்பியது. டாக்டர் வான் மூக் அக்டோபர் முதல் வாரம் ஜாகர்தா சேர்ந்தார்.

டாக்டர் வான் மூக் இந்தோனேஷ்யாவில் பிறந்த டச்சுக்காரர். நல்ல அறிஞர். இந்தோனேஷ்யக் கலையிலும்



பண்பாட்டிலும் ஈடுபாடுள்ளவர். ஆனால் யுத்த காலத்தில் ஏற்பட்ட மகத்தான மாறுதலை அவர் சரிவர உணர்ந்து கொள்ளவில்லை.

ஜாகர்தாவில் அவர் இறங்கியதும் பல மாறுதல்களைக் கண்டார். முதலாவது, தலைநகரத்தின் பெயரே மாறிவிட்டது. டச்சுக்காரர் இதனை பட்டாவியா என்று அழைத்து வந்தனர்.

ஜாகர்தாவில், கவர்னர் ஜெனரல் மாளிகைக்குள் அவர் நுழைந்ததும், அவருடைய பெட்டி சாமான்களை, இந்தோனேஷ்ய வேலையாட்கள் தூக்கிவர மறுத்துவிட்டனர் என்றும், அவரே தமது சாமான்களைத் தூக்கிச் சென்றார் என்றும் கூறப்படுகிறது.

ஊருக்குள் மோட்டாரில் பிரயாணம் செய்தபொழுது, வீதிகளில் உள்ள சுவர்களில் பல வாக்கியங்கள் எழுதப் பெற்றிருப்பதை டாக்டர் வான் மூக் பார்த்தார். அவை என்னவென்று தமது காரியதரிசியைக் கேட்டாராம். அவைகளில் ஒன்றை அந்தக் காரியதரிசி மொழிபெயர்த்துக் கூறினாராம். அந்த வாக்கியம், "வான்மூக்குக்குச் சாவு" என்பது. டச்சுக்காரர் மீது இந்தோனேஷ்யருக்குள்ள வெறுப்பை இவை காட்டின.

யுத்தத்தின்போது, ஜப்பானியர் பெர்ல் ஹார்பரில் குண்டு வீசியதும், சிங்கப்பூரைக் கைப்பற்றியதும், சயாம்—பர்மா ரயில்பாதையில் வெள்ளைக்காரர்களைக் கூலிவேலை பார்க்கும்படி செய்ததும், ஆசியநாட்டு மக்களிடையே பெரிய விழிப்பை உண்டாக்கியது. ஆசிய நாட்டினர், மேலை நாட்டினருக்கு எந்தவிதத்திலும் குறைந்தவர்கள் அல்ல என்பதையும், சந்தர்ப்பம் வாய்த்தால் ஆசிய நாட்டினர், மேலை நாட்டினரைப் போரிலேயே முறியடிக்க முடியும் என்பதையும் ஜப்பானியர் காட்டிவிட்டனர். இதன்

காரணமாக, ஆசியாவில் வெள்ளைக்காரரிடமிருந்த அச்சமும் மதிப்பும் அடியோடு போய்விட்டன.

சொந்த நாட்டிலேயே ஜெர்மானியர்களால் கொடுமைப் படுத்தப்பெற்று, பின்னர் சுதந்திரத்தைப் பெற்ற டச்சுக்காரர், இந்தோனேஷ்யாவை மீண்டும் ஆயுத பலத்தால் அடக்கியாள நினைத்தது விவேகமற்றதே யாகும்.

சுதந்திர இந்தோனேஷ்யக் குடியரசுப் பிரகடனம் செய்த மூன்று மாதத்தில், சுல்தான் ஷரீரைப்பிரதமராகக் கொண்ட மந்திரிசபை அமைக்கப் பெற்றது.

சுதந்திரக் குடியரசு அரசாங்கம் வேரூன்றிவிட்ட போதிலும், நாடு முழுதும் குடியரசு ஆட்சியின் கீழ் வரவில்லை. நாட்டின் பெரும் பகுதி நேச தேசத் துருப்புக்களின் கண்காணிப்பிலேயே இருந்து வந்தது. இந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்தி, டச்சு ஏகாதிபத்தியம் தனது ஆட்சியை மீண்டும் ஆயுத பலத்தைக் கொண்டு ஏற்படுத்த முயன்று வந்தது.

மந்திரிசபை அமைத்த சில நாளில், பிலிப்ஸ் கிறிஸ்டிஸன் தலைமையில் ஒரு மகாநாடு நடைபெற்றது. பிரிட்டிஷ் பிரதிநிதி நால்வரும், டாக்டர் வான் மூக் உள்பட டச்சுப் பிரதிநிதி நால்வரும், சுல்தான் ஷரீர் உள்பட இந்தோனேஷ்யப் பிரதிநிதி நால்வரும் மகாநாட்டில் கலந்து கொண்டனர். மகாநாடு ஒரு முடிவுக்கும் வரவில்லை.

டாக்டர் வான் மூக் ஹாலந்துக்குப் பயணமானார். அங்கு மந்திரி சபையுடன் என்ன செய்வதென்று கலந்து ஆலோசித்தார்.

குடியரசுத் தலைவர் டாக்டர் சுகர்ணோ ஜாவாவின் பல பகுதிகளில் சுற்றுப்பிரயாணம் செய்தார். உலகத்திலுள்ள சிறந்த பேச்சாளரில் ஒருவர் டாக்டர் சுகர்ணோ.



எங்கு சென்றாலும் அமோகமான வரவேற்பு. இந்தப் பிரயாணத்தினால் மக்களிடையே இவருடைய அபரிமிதமான செல்வாக்குப் புலனாயிற்று.

1945 டிசம்பரில், இந்தோனேஷ்யாவின் அரசியல் அமைப்பைக் குடியரசு அரசாங்கம் வெளியிட்டது. இது பெரும்பாலும் அமெரிக்க அரசியல் அமைப்பு பாணியிலேயே இருந்தது.

காமன்வெல்த் அமைத்து, சிறிது காலத்துக்குப் பிறகு, இந்தோனேஷ்யாவைச் சம பங்காளியாகப் பாவிப்பதென்று டச்சு அரசாங்கம் புதுப் பிரேரணையைக் கொண்டு வந்தது. 'சிறிது காலம்' என்பது எப்பொழுது என்று தெளிவுபடுத்தப் பெறாததால், இதனைக் கண்டு இந்தோனேஷ்யர் எள்ளி நகையாடினர்.

"எங்கள் சொந்த முயற்சியால் சுதந்திரம் பெற்ற நாங்கள், எதற்காக மீண்டும் அந்நியர் ஆட்சியின் கீழ் குடியேற்ற நாடாக மாறவேண்டும்?" என்றார் முகமது ஹாட்டா.

1946 பிப்ரவரியில் டாக்டர் வான் மூக் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்த வந்தார். "இந்தோனேஷ்ய சுதந்திரத்தை முதலில் அங்கீகரித்தால்தான் பிறகு எந்த விதமான பேச்சுவார்த்தைகளும் சாத்தியமாகும்" என்று கூறினார் பிரதம மந்திரி சுல்தான் ஷரீர்.

1946 அக்டோபருக்குள் ஐம்பத்தையாயிரம் டச்சுத் துருப்புக்கள் இந்தோனேஷ்யாவுக்குள் வந்து சேர்ந்தன.

1947 மார்ச் மாதம் லிங்காஜதி என்ற இடத்தில் டச்சு அரசாங்கமும் இந்தோனேஷ்யக் குடியரசும் ஒரு நகல் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. இந்தோனேஷ்யாவின் சில தீவுகளை—சுதந்திர இந்தோனேஷ்யாவுடன் இன்னும்

சேராத சில தீவுகளை—தனித்தனி நாடுகளாக (State) அமைத்து இந்தோனேஷ்ய சமஷ்டியை ஏற்படுத்த வேண்டும் என்பது டச்சுக்காரரின் நோக்கம். ஒப்பந்தம் இரு சாராருக்கும் திருப்தி யளிக்கவில்லை. பரஸ்பரம் நம்பிக்கையும் இல்லை.

இந்தோனேஷ்ய ஜனத்தொகை ஏழுகோடியில் ஐந்து கோடி ஜாவாவில் இருந்தனர். இவர்கள் டாக்டர் சுகர்ணோவைப் பின்பற்றினர். மற்ற தீவுகளிலும் சுதந்திர இயக்கம் உண்டு. ஆனால் அங்கே தேசத் துரோகிகளும் கருங்காலிகளும் அதிகம். இந்தக் கருங்காலிகளைக் கொண்டு பல நாடுகளை உண்டாக்கி, அவற்றில் சுதந்திர இந்தோனேஷ்யா ஒரு நாடு என்று கூறி, சுதந்திர இந்தோனேஷ்யக் குடியரசைப் பலவீனப் படுத்தி, நாளடைவில் தகர்ப்பதே டச்சு ஏகாதிபத்தியத்தின் நோக்கம்.

1947 மார்ச் மாதம் டில்லியில் நடைபெற்ற ஆசிய நல்லுறவு மகாநாட்டுக்கு சுல்தான் ஷரீர் வந்திருந்தார். சுதந்திர இந்தோனேஷ்யாவை இந்தியா அங்கீகரித்தது. மத்திய கிழக்கு நாடுகள் உள்பட, பல நாடுகள் சுதந்திர இந்தோனேஷ்யாவை அங்கீகரித்தன.

1947 ஜுன் மாதத்தில் இந்தோனேஷ்யாவில் உள்ள டச்சுத் துருப்புக்களின் தொகை தொண்ணூற்றைன்பது ஆயிரமாக உயர்ந்தது.

டச்சு ஏகாதிபத்தியம், இந்தோனேஷ்யக் குடியரசின் மீது பல குற்றங்களைச் சாட்டி, அதன் காரணமாக இந்தோனேஷ்யக் குடியரசைத் தங்களுடைய ஆயுத பலத்தால் தகர்த்தெறிய முற்பட்டது.

டச்சு ஏகாதிபத்தியத்தின் இந்த அநீதமான தாக்குதல் உலகத்தின் கவனத்தை ஈர்த்தது.



இந்தியப் பிரதம மந்திரி பண்டித நேரு இதனை வன்மையாகக் கண்டித்தார்.

பிரிட்டிஷ் பார்லிமெண்டில் அந்நிய நாட்டு மந்திரி பெவின், டச்சு அரசாங்கத்தின் செய்கையைக் குறித்துப் பெரிதும் வருத்தம் தெரிவித்தார்.

ஆஸ்திரேலியாவில், பல பாதிரிகள் டச்சு அரசாங்கத்தின் செய்கையைக் கண்டித்து அறிக்கைகள் வெளியிட்டார்கள். சிட்னியில் உள்ள துறைமுகத் தொழிலாளர் சங்கம், டச்சு அரசாங்கம் இந்தோனேஷ்யாவில் தொடர்ந்து யுத்தம் செய்தால் டச்சுக் கப்பல்களைப் பகிஷ்கரிப்பதாகக் கூறியது.

இலங்கை, தனது துறைமுகத்திலும் விமான நிலையத்திலும் டச்சுக் கப்பல்களையும் விமானங்களையும் அனுமதிக்க மறுத்து விட்டது. இந்தியாவும் பாகிஸ்தானும் இவ்வாறே செய்தன.

அமெரிக்காவும், சோவியத் ருஷ்யாவும் டச்சு அரசாங்கத்தின் செய்கையைக் கண்டித்தன.

ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புக் கவுன்சிலில் இந்த விவகாரம் வந்தது. அமெரிக்காவின் மத்தியஸ்தத்தைத் தம்முடைய அரசாங்கம் ஏற்றுக் கொள்வதாக டச்சுப் பிரதிநிதி கூறினர். சுதந்திர இந்தோனேஷ்யாவுக்கு இது ஒரு நல்ல வெற்றி!

1947 ஆகஸ்ட் 4-ந் தேதி இருபுறத்துச் சண்டைகளும் நின்றன.

மத்தியஸ்தர்கள் யார்? சுதந்திரக் குடியரசு தனக்காக அங்கம் வகிக்க ஆஸ்திரேலியாவைக் கேட்டுக்கொண்டது. ஹாலந்து தனது பக்கத்து நாடான பெல்ஜியத்தைத் தேர்ந்தெடுத்தது. சுதந்திரக் குடியரசும், ஹாலந்தும் இந்தக்

குழுவிற்கு அமெரிக்காவின் தலைமையை விரும்பின. இதற்கு நல்லுறவுக்குழு (Good Offices Committee) என்று பெயர்.

1948 ஜனவரி 8-ந் தேதி இந்தக் குழுவினர் ஜாவாவுக்கு வந்து இரு தரத்தாரையும் அழைத்தனர். எந்த இடத்தில் கூடுவது என்பதிலேயே இரு தரத்தாருக்கும் உடன்பாடு ஏற்படவில்லை. ஜாவாத் துறைமுகத்தில் நின்ற (Renville) ரென்வில் என்ற அமெரிக்கக் கப்பலில் கூடினர்.

ஜனவரி 17-ந் தேதி ஒப்பந்தம் கையெழுத்தாயிற்று. டச்சு அரசாங்கம் ஜெயித்த இடமெல்லாம் டச்சு வசமிருக்கும். இது குடியரசுக்கு ஒரு தோல்வி.

இந்த லிங்காஜதி, ரென்வில் ஒப்பந்தங்கள் எப்படியிருந்த போதிலும், ஓர் இந்தோனேஷ்ய சமஷ்டியை உண்டாக்கவே டச்சுப் பார்லிமெண்டு விரும்பியது.

இந்தோனேஷ்யக் குடியரசுப்பகுதிகளில் கம்யூனிஸ்டுக் கிளர்ச்சி ஒன்று தோன்றியது. குடியரசு அரசாங்கம் அதனைத் திறமையாக அடக்கிவிட்டது.

ஆனாலும், ஜோக்ஜகர்தா பகுதிகளில் அதி தீவிரவாதிகளும், கம்யூனிஸ்டுகளும் அடங்காமல் இருந்தார்கள் என்ற சாக்கைச் சொல்லி, ஐக்கிய நாடுகள் கமிஷனின் தீர்மானத்தையும் மதியாமல், டச்சுத் துருப்புக்கள் ஜோக்ஜகர்தாவில் சகல ஆயுதங்களுடனும் இறங்கி, ஜனாதிபதி டாக்டர் சுகர்ணோ, சுல்தான் ஷரீர் முதலியவர்களைக் கைது செய்து சுமத்ராவிலும், ஹாட்டாவையும் சிலரையும் கைது செய்து பங்கா என்ற தீவிலும் சிறையில் வைத்துவிட்டனர். இது 1948 டிசம்பர் கடைசியில் நிகழ்ந்தது.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புக் கவுன்சில் மீண்டும் கூடியது. மத்தியஸ்தக் குழுவின் தலைவரான அமெரிக்கர்



அச்சமயம் அமெரிக்காவில் இருந்தார். அமெரிக்கா, சீனா, கியூபா, நார்வே முதலிய நாடுகள் ஒன்றாகச் சேர்ந்து கொண்டுவந்த தீர்மானம் பாதுகாப்புக் கவுன்சிலில் நிறைவேறியது. தீர்மானத்தின்படி (1) சண்டையை உடனே நிறுத்த வேண்டும், (2) குடியரசு அரசாங்கத்தினிடம் ஜோக்ஜகர்தாவைத் திருப்பிக் கொடுத்து விடவேண்டும், (3) டச்சு அரசாங்கம் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும், (4) 1950 ஜூலை முதல் தேதிக்குள் இந்தோனேஷ்ய சமஷ்டிக்கு அதிகாரம் மாறவேண்டும்.

பாதுகாப்புக் கவுன்சில் கூடியிருந்த அதே சமயத்தில் இந்தியப் பிரதமர் பண்டித ஜவாஹர்லால் நேரு, ஆசிய நாடுகளின் பிரதிநிதிகளைக் கொண்ட இந்தோனேஷ்ய மகா நாட்டை டில்லியில் கூட்டினார். இம் மகாநாடு பாதுகாப்புக் கவுன்சிலுக்கு வலியுறுத்திக் கூறிய ஆலோசனைகள்:

(1) குடியரசு அரசாங்கத்தினிடம் ஜோக்ஜகர்தாவைத் திருப்பிக் கொடுத்தல், (2) வெளிநாட்டு விவகாரத்திலும் சுதந்திரமுள்ள இடைக்கால அரசாங்கம் அமைத்தல், (3) எல்லா டச்சுத் துருப்புக்களும் இந்தோனேஷ்யாவை விட்டு வெளியேறுதல், (4) 1950 ஜனவரி முதல் தேதிக்குள் இந்தோனேஷ்ய சமஷ்டிக்குப் பூரண அதிகாரத்தை மாற்றுதல்.

உலகம் முழுதும் தங்களுக்கு விரோதமாயிருப்பதை டச்சு ஏகாதிபத்தியம் இப்பொழுதுதான் உணர்ந்தது.

நாட்டின் கௌரவத்துக்குப் பங்கம் ஏற்படாமலிருக்க டச்சுப் பிரதம மந்திரியே ஜாகர்தாவுக்கு வந்தார். சுல்தான் ஷரீர் போன்ற தேசியத் தலைவர்கள் விடுதலை செய்யப் பெற்றனர். ஆனால் டாக்டர் சுகர்ணோவை, சுமத்ராவிலிருந்து கொண்டுவந்து முகமது ஹாட்டாவோடு

பங்காத் தீவிலேயே சிறை வைத்தனர். பேச்சு வார்த்தை நடத்துவதற்காக, டச்சுப் பிரதிநிதிகளும், குடியரசுப் பிரதிநிதிகளும், பல அந்நிய நாட்டு நிருபர்களும் பங்காவுக்குச் சென்றனர். உலகமே பங்காவில் நடப்பதைக் கவனித்தது. பின்னர் தலைவர்கள் விடுதலையானார்கள்.

1949 ஆகஸ்டில் ஹாலந்தில் வட்டமேஜை மகாநாடு நடைபெற்றது. குடியரசின் பிரதிநிதிகளுக்குத் தலைவர் முகமது ஹாட்டா. டச்சுக்காரர் சிருஷ்டித்த பதினாறு நாடுகளின் பிரதிநிதிகள் சுமார் எழுபது பேர்.

மகாநாடு இரண்டு மாதத்துக்கு மேல் நடைபெற்றது. பெரும்பாலான விஷயங்களில் ஒற்றுமை ஏற்பட்டது. நியூ கினியைத் தாங்கள் விட்டுக்கொடுக்க முடியாது என்று டச்சு அரசாங்கம் பிடிவாதம் செய்தது. இந்த விஷயம் பின்னால் தீர்த்துக்கொள்வதாக ஒத்தி வைக்கப்பெற்றது.

மகாநாட்டில் தீர்மானிக்கப் பெற்றவை:

1949 டிசம்பர் 31-க்குள் டச்சு அரசாங்கம் இந்தோனேஷ்ய சமஷ்டிக்குப் பூரண அதிகாரத்தையும் நிபந்தனை இன்றி மாற்றிவிடுவது.

இந்தோனேஷ்ய சமஷ்டி என்பது சுதந்திர இந்தோனேஷ்யக் குடியரசும் மற்ற பதினாறு நாடுகளும்.

இந்த இந்தோனேஷ்ய சமஷ்டி, டச்சு நாடுகளோடு ஐக்கியமாகச் சேர்ந்திருக்கும். டச்சு அரசி இந்த ஐக்கியத்திற்குப் பெயரளவில் தலைவியாக இருப்பார்.

டச்சு அரசாங்கத்தின் இந்தோனேஷ்ய உள் நாட்டுப் பழைய கடன்களைச் சுதந்திர இந்தோனேஷ்ய அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும்.



1945-லிருந்து 1949 வரை இந்தோனேஷ்யாவில் தங்கிய டச்சுத் துருப்புக்களின் செலவை, டச்சு அரசாங்கமே ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இந்தோனேஷ்யாவில் உள்ள எண்பத்தையாயிரம் டச்சுத் துருப்புக்கள் விரைவில் வெளியேற வேண்டும். டச்சுச் சேனையில் உள்ள நாற்பத்தையாயிரம் இந்தோனேஷ்யரும், சுதந்திர இந்தோனேஷ்யாவின் சேனையில் நாளடைவில் சேர்த்துக்கொள்ளப் பெறுவர்.

இந்தோனேஷ்யாவில் ஏற்கனவே உத்தியோகம் பார்க்கும் டச்சுக்காரர், தொடர்ந்து இரண்டு ஆண்டுகள் அந் நாட்டில் தங்கியிருக்க அனுமதிக்கப் பெறுவர். சுதந்திர அரசாங்கத்துக்கு அவர்கள் விரோதமாக இருப்பதாகத் தெரிந்தால் அவர்களை வெளியேற்றிவிடலாம்.

சில நிபந்தனைகளின் பேரில் சூரபாயாவிலுள்ள கப்பல் தளத்தை டச்சுக் கடற்படை அதிகாரிகள் நிர்வகித்து, இந்தோனேஷ்யர்களுக்குப் பயிற்சி அளிப்பர்.

டச்சுக்காரர், இதர அந்நியர் சொத்துக்களையும் வியாபாரங்களையும் சுதந்திர அரசாங்கம் பாதுகாக்கும்.

ஹாலந்துக்கும், இந்தோனேஷ்யாவுக்கும் கலாசாரத் தொடர்பு நீடிக்கும்.

மகாநாடு வெற்றிகரமாக முடிந்தது. பதினாறு நாடுகளின் அங்கத்தினர்களும், குடியரசின் அங்கத்தினர்களுடன் சேர்ந்து இந்தோனேஷ்யாவின் தேசீய கீதமான 'இந்தோனேஷ்ய ராயா' பாடினார்கள்.

மகாநாட்டின் இறுதியில் இந்தோனேஷ்ய சமஷ்டி அரசியல் சட்டம் தயாராக இருந்தது. அனைவரும் கையெழுத்திட்டனர். இதனை ஜனநாயக சட்டம் என்று டச்சு அரசாங்கம் அங்கீகரித்தது.

1949 டிசம்பர் 27-ந் தேதி டச்சு அரசாங்கம் அதிகாரத்தை யெல்லாம், இந்தோனேஷ்ய சமஷ்டிக்கு மாற்றியது. டாக்டர் சுகர்ணோ மீண்டும் தலைவர் ஆனார். முகமது ஹாட்டா மீண்டும் பிரதம மந்திரியானார். வெள்ளையும் சிவப்பும் உள்ள இந்தோனேஷ்யாவின் தேசியக்கொடி, ஜாகர்தாவில் பழைய டச்சு கவர்னர்-ஜெனரல் மாளிகையில் பறந்தது.

1950 ஆகஸ்டு 15-ந் தேதி, டச்சு அரசியைத் தலைவியாகக் கொண்ட டச்சு நாடுகள் ஐக்கியத்திலிருந்து இந்தோனேஷ்ய சமஷ்டி விலகி, பூரண சுதந்திரமுள்ள இந்தோனேஷ்யக் குடியரசாகப் பிரகடனம் செய்தது.

இந்தோனேஷ்யாவுக்கும் ஹாலந்துக்கும் இடையே உள்ள முக்கியமான விஷயங்களில் ஒன்று நியூகினி.

இத் தீவு, ஆஸ்திரேலியாவுக்கு அருகில் இருக்கிறது. அதன் மேற்குப் பகுதி ஹாலந்து வசமும், கிழக்குப் பகுதி ஆஸ்திரேலியா வசமும், இருக்கின்றன.

இந்தோனேஷ்யர் இத் தீவை 'இரியான்' என்று அழைக்கின்றனர்.

> சரியோ தவறோ
> இரியான் எங்களுடையது

என்பது போன்ற பெரிய பாவட்டாக்களை இந்தோனேஷ்யாவில் கண்டேன்.

"நியூகினி மக்கள் இந்தோனேஷ்ய இனத்தைச் சேர்ந்தவர் அல்லர்; பாப்புவான் என்ற இனத்தைச் சேர்ந்தவர். ஆகையால் கொடுக்க முடியாது" என்கிறது ஹாலந்து.

இந்தோனேஷ்யா அரசியல் சுதந்திரம் பெற்றுவிட்ட போதிலும், இன்னும் பொருளாதார சுதந்திரம் பெறவில்லை.



இன்றும்கூட, இந்தோனேஷ்யாவிலுள்ள பல தோட்டங்கள் டச்சுக்காரருக்குச் சொந்தம். இந்தோனேஷ்ய அரசாங்கத்தின் மொத்த வருமானத்தில், நூற்றுக்கு நாற்பத்தேழு இந்தோனேஷ்யாவிலுள்ள டச்சுக்காரரிடமிருந்தும் மற்ற அந்நியர்களிடமிருந்தும் கிடைக்கிறது.

டச்சுக்காரருக்கு அடுத்தபடியாக பொருளாதாரத்தில் செல்வாக்குள்ளவர் சீனர். இந்தோனேஷ்யாவில் இருபது லட்சம் சீனர் வசிக்கின்றனர். பெரும்பாலும் வியாபாரத்தில் ஈடுபட்டவர்கள். ஜாகர்தாவில் வெளியாகும் ஒன்பது தினசரிப் பத்திரிகைகளில், நான்கு இந்தோனேஷ்ய மொழியிலும், மூன்று டச்சு மொழியிலும், இரண்டு சீன மொழியிலும் வெளியாகின்றன. இதிலிருந்து சீனரின் செல்வாக்கை ஓரளவு உணரலாம்.

இந்தோனேஷ்யா சுதந்திரமடைந்து பத்து ஆண்டுகளாகிவிட்டன. ஆனால் இன்னும் பொதுத் தேர்தல் நடைபெறவில்லை. சுதந்திரப் பிரகடனம் செய்த பின்னரும் கூட, ஐந்தாண்டு போராடியதுதான் இத் தாமதத்துக்கு முக்கிய காரணம். விரைவில் பொதுத் தேர்தல் நடத்த அரசாங்கம் முயற்சி செய்து வருகிறது.

இந்தப் புதிய குடியரசு அனுபவித்த கஷ்டங்களைப் பார்க்கும்பொழுது, இவர்களின் சாதனையைப் பாராட்டத்தான் வேண்டும்.

இந்தோனேஷ்யாவுக்குப் பிரகாசமான எதிர்காலமுண்டு. இந்தோனேஷ்யர் அருமையான மக்கள்; பரந்த நோக்கமுடையவர்கள். இந் நாட்டில் 'தாருல் இஸ்லாம்' என்ற மதவெறி கொண்ட சிறு கூட்டத்தினரை அடக்க அரசாங்கம் முயற்சித்து வருகிறது.

இந்தியாவின் மீதும் நேருவின் மீதும், இந்தோனேஷ்ய மக்களுக்கும் அரசாங்கத்துக்கும் மிகப் பிரியம். சிலர் நேருவை 'பாப்பா நேரு' என்றும் அழைக்கின்றனர். நேரு இந்தோனேஷ்யா சென்றபோது பிரமாதமாக வரவேற்றனர்.




இந்தோனேஷ்யாவின் அரசாங்க கேடயச் சின்னம் கருடன். இந்தோனேஷ்ய இலக்கியத்திலும் மக்களிடத்திலும் பிரபலமானது கருடன். இப் பறவையைச் சக்தியின் சின்னமாகக் கருதுகிறார்கள்.

கேடயத்தில் உள்ள வாசகம் 'பின்னகே துன் ஹ்கால் ஐகா'; அதாவது 'வேற்றுமையில் ஒற்றுமை'.

இந்தோனேஷ்யரின் கொள்கைகளான பஞ்ச சீலத்தை இவர்களின் அரசாங்கச் சின்னம் காட்டுகிறது.

மத்தியில் உள்ள தங்க நட்சத்திரம் தெய்வத்தின் மீதுள்ள நம்பிக்கையை உணர்த்துகிறது.



எருமையின் தலை, சாதாரண மக்களிடம் அதிகாரம் இருப்பதைக் குறிப்பிடுகிறது. ஆலமரம் தேசிய விழிப்பைக் காட்டுகிறது.

சங்கிலியில் வட்டவடிவமான கண்ணிகள் பெண் இனத்தையும், சதுரக் கண்ணிகள் ஆண் இனத்தையும் குறிப்பிடுகின்றன. இடையறாது விளங்குகிற அச்சங்கிலி, தலைமுறை தலைமுறையாக வருகிற மனித பரம்பரையைக் குறிப்பிடுகிறது.

அரிசி, பஞ்சு இவை உணவையும் உடையையும் குறிப்பிடுகின்றன; அதாவது மக்களின் க்ஷேம நலத்தை, சமூக நீதியைக் குறிப்பிடுகின்றன.

### இந்நோனேஷ்ய தேசீய கீதம்

இக்தோனேஷ்யா டானா அயிர்க்கு
டானா தும்பா தராக்கு
திசானலா ஆகு பெர்திரி
ஜாடி பாண்டு இபுக்கு
இக்தோனேஷ்யா கெபாங்ஸனக்கு
பங்ஸே தண்டானா அயிர்க்கு
மாலா கிடா பெர்ஸெரு!
இந்நோனேஷ்யா பெர்சாட்டு!
ஹிதுபுலா டனக்கு
ஹிதுப்லா நக்ரிக்கு
பங்ஸாக்கு ராயட்கரு ஸெமு அன்யா
டங்குன்லா ஜீவன்யா
பங்குன்வா பதான்யா
உந்துக் இக்தோனேஷ்யா ராயா

**கோஷம்**

இக்தோனேஷ்யா ராயா, மெர்டேக்கா, மெர்டேக்கா
டனக்கு, நெக்ரிக்கு, யாங் குச்சின்டா
இந்நோனேஷ்யா ராயா, மெர்டேக்கா, மெர்டேக்கா
ஹிதுப்லா இந்தோனேஷ்யா ராயா

(மொழிபெயர்ப்பு)

இந்தோனேஷ்யா என் தாய் நாடு
அது நான் பிறந்த நாடு
அதைக் காத்து நிற்கிறேன் நானிதோ.
இந்தோனேஷ்யாவுக்கே பிரஜை நான்
இந்தோனேஷ்யாவே என் வீடும் நாடும்
நாமெல்லாரும் ஒன்று கூடியே
ஐக்கிய இந்தோனேஷ்யாவென்று கோஷிப்போம்
நீடு வாழ்க நம் தாய்நாடு
நீடு வாழ்க நம் ஜன்ம பூமி-நம் தேசம்
ஆன்மாவும் அத்தனேயும் விழிப்புறுக
புகழ்மிக்க இந்தோனேஷ்யாவுக்காக.

கோஷம்

இந்தோனேஷ்யா ராயா,
பெருமையுற்றாய், சுதந்திரம் பெற்றாய்
எங்கள் தாயகமே எங்கள் பிறப்பிடமே
எங்கள் அன்பின் உறைவிடமே
இந்தோனேஷ்யா ராயா, புகழ்மிக்காய்
நீ ஒளி மிக்காய்
நீடு வாழ்க எம் மஹா இந்தோனேஷ்யா.

[கீதமும், மொழிபெயர்ப்பும் சென்னையிலுள்ள இந்திய அரசாங்க செய்தி ஸ்தாபனம் உதவியவை.]

வாழ்க சுதந்திர இந்தோனேஷ்யா!

---

# பாலித்தீவு

திடீரென்று விமானத்தில் இடம் கிடைத்து யாத்திரிகர் ஒருவர் அழகான பாலித் தீவுக்குப் போய்ச் சேர்ந்தால், அவருக்கு எப்படி இருக்கும்? அந்த நிலை தான் எனக்கு ஏற்பட்டது.

இந்தோனேஷ்யப் பிரயாணத்தில், பாலித் தீவு செல்வதற்காகத் திட்டம் தயாரித்துத் தேதியும் குறிப்பிட்டிருந்தேன். ஜாகர்தாவில், கருடா விமானக் கம்பெனிக்கு ஏற்கெனவே செய்திருந்த ஏற்பாட்டின்படி, பிரயாணச் சீட்டு வாங்குவதற்காகச் சென்றேன். ஏதோ சிறு தவறு நேர்ந்ததால், குறிப்பிட்டிருந்த தேதிக்குப் பிரயாணச் சீட்டு கிடைக்கவில்லை. "நாளைக் காலை நீங்கள் ஏன் பாலிக்குப் போகக் கூடாது? இடம் இருக்கிறது" என்றார் கம்பெனி அதிகாரி. உடனே சம்மதித்தேன்.

விமானம், மறு நாள் காலை ஐந்தேகால் மணிக்குப் புறப்படுவதால், காலை நாலேகால் மணிக்கு விமான நிலையத்தில் இருக்க வேண்டும். நான் தங்கியிருந்த இடத்துக்கு அடுத்த கட்டிடம்தான் விமானக் கம்பெனி. ஆனால் விமான நிலையம் சுமார் இரண்டரை மைல். அதிகாலையில் விமானக் கம்பெனிக்குச் சென்றால், அங்கிருந்து அவர்களுடைய பஸ்ஸில் அழைத்துச் செல்வார்கள் என்று எண்ணியிருந்தேன். ஆனால் கம்பெனியில் விசாரித்ததில், வெளிநாடுகளுக்குச் செல்லும் பிரயாணிகளுக்குத்தான் இந்த வசதி உண்டு என்றும், உள்நாட்டில் விமானப் பிரயாணம் செய்வோர் விமான நிலையத்துக்குச் செல்லத் தாங்களே ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும் என்றும்

கூறினர். ஒவ்வொரு நாளும், இருபத்து நாலாயிரம் பேருக்குக் குறையாமல் உள் நாட்டில் விமானப் பிரயாணம் செய்கிறார்கள் என்றும் அறிந்தேன்.

அப்பொழுது ஜாகர்தாவில் இரவு பன்னிரண்டு மணி முதல், காலை நான்கு மணி வரை ஊரடங்குச் சட்டம். நாலேகால் மணிக்கு விமான நிலையத்திலிருக்க வேண்டும். அந்நேரத்துக்கு வாடகை மோட்டார் கிடைப்பதும் நிச்சயமில்லை. எனது கஷ்ட நிலைமையை அறிந்த இந்திய நண்பர் ஒருவர், காலையில் மோட்டார் அனுப்பி உதவி செய்தார்.

இந்தோனேஷ்யாவில், உள் நாட்டிலேயே பிரயாணம் செய்தாலும், சுங்கச் சோதனையிலிருந்து தப்ப முடியாது. சுங்க இலாகா பரிசோதனை செய்வதெல்லாம், பிரயாணிகளின் மூட்டைகளில் துப்பாக்கி ஏதேனும் இருக்கிறதா என்று பார்ப்பதற்குத்தான். ஜப்பானியர் சரண் அடைந்த பின்னர், ஒரு கோடிக்கு மேற்பட்ட துப்பாக்கிகள் இந்தோனேஷ்யர் கைக்கு வந்தன. டச்சுக்காரரை எதிர்த்து நாடு முழுதும் இந்தோனேஷ்யர் 'கொரில்லா' யுத்தம் புரிந்தனர். நாடு சுதந்திரமடைந்த பின்னரும் கூட, சிலர் தங்கள் துப்பாக்கிகளைத் தங்கள் அரசாங்கத்தாரிடம் சேர்ப்பிக்க மறந்து விட்டனர்!

குறிப்பிட்ட நேரத்தில் விமானம் கிளம்பிற்று. பிரயாணிகள் சுமார் இருபது பேர். வசதியான ஆசனம் கிடையாது. சென்னையிலிருந்த டிராம் வண்டி மாதிரி, எதிர் எதிரே உட்கார்ந்து கொண்டோம். அது சாமான் ஏற்றிச் செல்லுகிற விமானமாம். எங்களையும் சாமான்களாகப் பாவித்து ஏற்றிச் சென்றார்கள்! ஆனால் திரும்பும் பொழுது வாய்த்த விமானம் அருமையானது.

காலை எட்டரை மணிக்கு சூரபாயா சென்றோம். வழியில் அருமையான காட்சிகள். மலைச் சரிவுகளில், படிப்படியாக அமைத்து அதிலே பயிரிட்டிருந்தது மிகவும் அற்புதமான காட்சியாக இருந்தது.



ஒரு நாட்டின் வளப்பத்தை, பூகோளப் புத்தகத்திலிருந்து தெரிந்து கொள்வதைவிட, விமானத்திலிருந்து பார்த்துத் தெரிந்து கொள்வதுதான் சிறந்த வழி. ஆனால் விமானத்தில் ஏறியதுமே அநேகர் உறங்க ஆரம்பித்து விடுகின்றனர்.

சூரபாயா, இந்தோனேஷ்யாவில் பிரபலமான நகரம். இது பெரிய துறைமுகம். பெயர் பெற்ற வியாபார ஸ்தலம். அது மட்டுமல்ல; இங்குதான் டச்சுக்காரர்களுக்கும் இந்தோனேஷ்யருக்கும் கடுமையான போராட்டம் நடைபெற்றது. அப்பொழுது சூரபாயாவில் அமைதிக் குறைவு என்றும், போதிய பாதுகாப்பு இல்லையென்றும் கேள்விப்பட்டேன். போக்கிரிகளும் திருடர்களும் இந்த ஊரில் அதிகம் என்றும் சொன்னார்கள். வீதியில் மோட்டாரை நிறுத்தி விட்டுச் சென்றால், அதிலுள்ள சாமான்களைத் திருடமாட்டார்களாம்; மோட்டாரையே திருடி விடுவார்களாம். அந்தக் காலத்தில் இந்தோனேஷ்யாவில் மாதம் ஒன்றுக்கு சுமார் நூற்றைம்பது மோட்டார்கள் திருட்டுப் போவதாகக் கேள்விப்பட்டேன்.

சூரபாயாவிலிருந்து பாலித்தீவு நூற்றிருபது மைல். விமானப் பிரயாணம் ஒரு மணி நேரம். ஜாவாவுக்கும் பாலிக்கும் இடையே உள்ள கடல் ஒரு மைல் தான். ஆனால் இந்த ஒரு மைல் தூரந்தான் பாலித்தீவிலுள்ள பதினைந்து லட்சம் மக்களை, மதமாற்றத்திலிருந்து காப்பாற்றியது.

பதினைந்தாம் நூற்றாண்டு வரையில் ஜாவா, பாலி உள்பட இந்தோனேஷ்யாவை இந்து அரசர்கள் ஆண்டு

வந்தனர். மக்களில் சிலர் முஸ்லிம்களாகி, பிறரையும் கட்டாயப் படுத்தி முஸ்லிம் மதத்தைத் தழுவச் செய்த துடன், இந்து மன்னர்களையும் வென்றனர். இந்தக் கொடுமைகளைத் தாங்க முடியாமல், ஜாவாவில் உள்ள பல இந்துக் குடும்பங்கள் பாலிக்கு ஓடி, தஞ்சமடைந்தன. பாலிக்கும் ஜாவாவுக்கும் உள்ள தொடர்பு விட்டுப் போயிற்று. பாலித்தீவு, சில சிற்றரசர்களின் ஆட்சியில் சுதந்திரமாய் இருந்தது. இந்தோனேஷ்யாவின் மொத்த ஜனத்தொகையில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் முஸ்லிம்கள். பாலித்தீவின் ஜனத்தொகை பதினைந்து லட்சத்தில், ஒரு சிலரைத் தவிர அனைவரும் இந்துக்கள்.

சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன், இந்த அழகான தீவு, டச்சுக்காரர் கைக்கு வந்தது. இரண்டாவது உலக யுத்தத்தில் டச்சு ராணுவம் தப்பி ஓடியதும், இத்தீவை ஜப்பானியர் கைப்பற்றினர். ஜப்பான் சரணடைந்த பின், சுதேச சிற்றரசர்கள் ஆட்சியின் கீழ் வந்தது. தற்பொழுது எட்டு சிற்றரசர் ஒன்று சேர்ந்து, தீவு பூராவுக்கும் 'திவான் ராஜா ராஜா' என்ற நிர்வாக சபையை ஏற்படுத்தியிருக்கின்றனர். இச் சபைக்கு ஆலோசனை கூறுவதற்குப் பிரதிநிதிகளை மக்களே தேர்ந்தெடுக்கிறார்கள்.

இரண்டாயிரம் சதுர மைல் விஸ்தீரணமுள்ள பாலித் தீவின் தலை நகரம் டென்பசார்.

பாலித் தீவில் ரயில் கிடையாது. மோட்டார் செல்லக் கூடிய சாலை சுமார் 300 மைல் நீளம் இருக்கும். இரண்டு துறைமுகங்கள் உண்டு. ஒரே ஒரு சிறிய விமான நிலையம், டென்பசாருக்கு அருகில் இருக்கிறது.

டென்பசாரில் முக்கியமானது பாலி ஹோட்டல். இது உலகப் பிரசித்தி பெற்றது. உலகில் உள்ள மிக அருமையான ஹோட்டல்களில் இதுவும் ஒன்று. இந்த



ஹோட்டல், நகரின் மத்தியில் விசாலமான தோட்டத்தில் அழகாக அமைக்கப் பெற்றிருக்கிறது. மாடி கிடையாது. நூறு அறைகளுக்கு மேல் இருக்கின்றன. இந்த ஹோட்டலுக்கு எதிரே ஓர் அழகிய மண்டபம். அதில் ஒரு புறத்தில் நடனமேடை, விருந்தினர் உட்காருவதற்கு வசதியான ஆசனங்கள், மின்சார வசதிகள் எல்லாம் உண்டு. வாரத்துக்கு ஒரு முறை அல்லது இரு முறை, இங்கு நாட்டியம் நடைபெறும். விருந்தினர் அனைவரும் இலவசமாகக் கண்டு களிக்கலாம். ஹோட்டலில் தங்கும் அனைவரும் விருந்தினர்.

இந்த ஹோட்டல், ஒரு டச்சுக் கம்பெனியாருக்குச் சொந்தம். இப்பொழுதும் அவர்களே இதனை நடத்துகிறார்கள். இந்த ஹோட்டலின் நிர்வாகியான டச்சுக்காரர், தம்முடைய காரியாலய அறைக்குள் என்னை அழைத்துச் சென்றார். அவருடைய மேஜையில் மரத்தால் செய்த உருவம் ஒன்று இருந்தது. "இது இந்த ஊரில் செய்தது. அழகாக இருக்கிறதல்லவா?" என்று கேட்டார் அந்த டச்சுக்காரர். நல்ல வேலைப் பாடுடன் கூடிய அந்த உருவம், காந்தியடிகளின் திருவுருவமே யாகும்.

ஹோட்டல் குமஸ்தாவிடம் சென்று என்னுடைய பெயரைப் பதிவு செய்து கொண்டேன். உடனே அவர், அருகிலுள்ள இந்தோனேஷ்ய ராணுவக் காரியாலயத்துக்குச் சென்று ஓர் அனுமதிச் சீட்டு வாங்கி வரும்படி கூறினார். அப்பொழுது பாலித்தீவில், உள்நாட்டுக் குழப்பம் சிறிது இருந்தது. எனவே பாலித் தீவுக்கு வரும் அந்நியர் ஒவ்வொருவரும், அவர்கள் வந்து சேர்ந்த இரண்டு மணி நேரத்துக்குள்ளாக அருகிலுள்ள ராணுவக் காரியாலயத்திற்கு நேரில் சென்று, அனுமதிச் சீட்டுப் பெற வேண்டும்.

அவ்வாறே அருகிலிருந்த ராணுவக் காரியாலயத்துக்குச் சென்றேன். அன்று விமானத்தில் என்னுடன் வந்த பிரயாணிகள் சிலரும் அங்கிருந்தனர். ராணுவ அதிகாரி ஓர் இந்தோனேஷ்யர். அவர் வெள்ளைக்காரர்களை வேண்டுமென்றே சிறிது அலட்சியமாக நடத்தியதாக எனக்குத் தோன்றியது. ஆனால், அந்த அதிகாரி என்னுடைய இந்திய பாஸ்போர்ட்டைப் பார்த்ததும் மிக அன்பாகவும் மரியாதையாகவும் நடந்து கொண்டார்.

ஹோட்டலுக்குச் சென்று, உணவுக்குப் பின் சிறிது ஓய்வு எடுத்துக் கொண்டேன். அப்பொழுது ஒரு வேலையாள் வந்து, "தங்களைப் பார்க்க இரண்டு பேர் வந்திருக்கிறார்கள்" என்றார். என்னால் நம்ப முடியவில்லை. 'பாலித்தீவில் யார் நம்மைப் பார்க்க வரப்போகிறார்கள்!' என்று யோசித்துக் கொண்டே, எனது அறையிலிருந்து வெளியில் வந்தேன். இரண்டு முஸ்லிம் இளைஞர்கள் நின்று கொண்டிருந்தனர்.

அவர்களில் ஒருவர் தமது பெயரைச் சொல்லி, "இவ்வூர் இந்தியர் சங்கத்திற்குத் தலைவனாக இருக்கிறேன். இந்தியர் யாராவது இங்கு வந்திருக்கிறார்களா என்று அடிக்கடி ஹோட்டல் குமஸ்தாவிடம் கேட்டுத் தெரிந்து கொள்வேன். இப்பொழுதுதான் உங்கள் பெயரைப் பார்த்தேன். உடனே வரவேற்பதற்காக வந்தேன். நாங்கள் எல்லாம் இந்தியர்கள்தான். பாகிஸ்தான் என்ற பிரிவு இங்கு கிடையாது" என்றார்.

அவருடன் வந்த அவருடைய நண்பர், பாலியில் பிறந்தவர். இருவரும் தமிழர்; வியாபாரிகள். இவர்களுடைய முன்னோர் தமிழ் நாட்டிலிருந்து குடியேறியவர்கள்.

அன்று மாலையில் இந்த நண்பர் வீட்டுக்கு அழைத்துச் சென்று, சிற்றுண்டி கொடுத்துஉபசரித்தார்.



பிறகு அவருடைய வியாபார ஸ்தலத்துக்கு அழைத்துச் சென்று, அவர் சகோதரரை அறிமுகப்படுத்தினார்.

"நாங்கள் இரண்டு கணக்கு வைத்திருக்கிறோம். ஒன்று பெரிய கணக்கு; மற்றொன்று சின்னக் கணக்கு" என்றார் நண்பர்.

"எதற்காக இரண்டு கணக்கு?" என்று கேட்டேன்.

அவர் சிரித்துக் கொண்டே, "சின்னக் கணக்கு என்பது தினச் சிட்டை; இதை இந்தோனேஷ்ய மொழியில் எழுதுகிறோம். பெரிய கணக்கு என்பது பேரேடு; இதைத் தமிழிலேயே எழுதுகிறோம். முன்னோர்களின் பழக்கத்தை விட்டு விடக் கூடாது என்பதற்காகவே தமிழில் பெரிய கணக்கு எழுதுகிறோம்" என்றார்.

இன்னும் இரண்டு முஸ்லிம் நண்பர்கள் எங்களுடன் சேர்ந்தனர். எல்லோரும் சேர்ந்து எனக்கு ஊர் சுற்றிக் காட்ட விரும்பினார்கள். ஊர் சிறிய ஊர்தான். மாலை நேரம். எல்லோரும் நடந்து சென்றோம். பாலித்தீவிலே, அன்பர்களுடன் தமிழிலே பேசிக் கொண்டு நடந்து சென்றது மிக உற்சாகத்தையும் மகிழ்ச்சியையும் தந்தது. அந்த ஊரில் உள்ள இரண்டு திரைப்படக் காட்சிசாலைகளைக் காட்டினார்கள். ஒன்றின் பெயர் விஷ்ணு தியேட்டர். மற்றொன்று ஹாலிவுட் தியேட்டர்.

மறு நாள் காலை, டென்பசாரிலுள்ள பொருட்காட்சிசாலைக்கு (மியூசியம்) சென்றேன். சிறிய கட்டிடம்தான்; ஆனால் மிக அருமையான காட்சிப் பொருள்கள்.

பொருட்காட்சிசாலைக்குள் செல்லுமுன், முதன் முதலாக அங்குள்ள விருந்தினர் புத்தகத்தில் கையெழுத்திட வேண்டும். அப் புத்தகத்தில் எத்தனை விதமான கையெழுத்துக்கள்! எத்தனை நாட்டு மக்கள்! இவற்றிலே,

சென்ற ஆண்டு பாலிக்கு விஜயம் செய்த தலைவர் ஜவாஹர்லால் நேரு, ஸ்ரீமதி இந்திரா காந்தி ஆகியோரின் கையெழுத்துக்களைப் பொருட்காட்சி சாலையின் அதிகாரி மிகப் பெருமையுடன் காட்டினார்.

பாலித்தீவு பழம் பெருமை வாய்ந்தது. சுமார் ஆயிரத்து ஐநூறு ஆண்டுகளுக்கு முன்னரே, பாலி அரசர்கள், சீனாவுக்குத் தங்கள் தூதர்களை அனுப்பி, சீனச் சக்கரவர்த்தியிடம் பௌத்த மதம் தோன்றியிருக்கும் விஷயத்தை அறிவித்தார்கள் என்று ஒரு சீனச் சரித்திர ஆசிரியர் கூறியிருக்கிறார்.

பாலியின் நாகரிகம் இந்து நாகரிகமேயாகும். ஆனால் ஐந்து அல்லது ஆறு நூற்றாண்டுகளாக, பாலிக்கும் இந்தியாவுக்கும் தொடர்பு விட்டுப்போயிற்று. ஐந்தாறு நூற்றாண்டுகளுக்கு முன், இந்து மதமும் நாகரிகமும் எவ்வாறு இருந்தது என்பதைப் பார்க்க வேண்டுமானால், பாலிக்குச் செல்ல வேண்டும்.

பழைய மன்னர்களும், ராணுவ வீரர்களும் உபயோகித்த பல விதமான போர்வாள்கள், வரிசையாக வைத்திருப்பதைப் பொருட்காட்சியில் பார்க்கலாம்.

பல நூற்றாண்டுகளாக உபயோகித்து வந்த வெற்றிலைப் பெட்டி, மரவை, அலமாரி போன்ற மரச் சாமான்கள், பாக்கு வெட்டி, பாக்கு உரல், பித்தளைப் பாத்திரங்கள் முதலியவற்றை அங்கே காணலாம்.

வெற்றிலைப் பெட்டிகளில் எத்தனை விதம்! எத்தனை விதமான வர்ணம்! ராமாயண பாரதக் கதைகளை எல்லாம் படமாகத் தீட்டியிருக்கிறார்கள் இவற்றில்.

பாக்கு வெட்டியில் எத்தனை விதம்! பாக்கு வெட்டித் தலைப்பு முனை இருக்கிறதல்லவா, அவை ஒவ்வொன்றும் ஒவ்வோர் உருவம்! உருவம் என்றால் கரடி, புலி, சிங்கத்தின் உருவம் அல்ல; அர்ச்சுனன், கிருஷ்ணன் ஆகிய அழகிய உருவங்கள். மதமும் கலையும் எவ்வாறு வாழ்க்கையோடு ஒன்றியிருந்தன என்பதற்கு இப் பாக்கு வெட்டிகளே உதாரணம்.



அலமாரி ஓர் ஆள் உயரம் இருக்கும். அதற்கு இரண்டு கதவுகள் சாதாரணமாக உண்டு. ஒவ்வொரு கதவின் உட்புறத்திலும், கிருஷ்ணன், அர்ச்சுனன் முதலிய உருவங்கள் பெரிய அளவில் வர்ணங்களால் தீட்டப்பெற்றுள்ளன.

மர வேலைப்பாடும், வெள்ளிச் சாமான்களில் சித்திர வேலைப்பாடும், பாலி மக்களின் கலைத்திறனுக்குச் சான்று.

ஏராளமான வர்ண ஓவியங்கள், கண் கொள்ளாக் காட்சியாக விளங்குகின்றன.

எவ்வளவு ஓலைச் சுவடிகள்! எல்லாம் பனையோலைதான். சுவடியில் எல்லாம் அகலமான ஏடுகள். ஓர் ஏட்டில் பாட்டு—மறு ஏட்டில் சித்திரம். எழுத்தாணியால் வரையப்பெற்ற அந்தச் சித்திரக் கோடுகளுக்கு, ஒரு விதமான சிவப்பு வர்ணம் தீட்டியிருக்கிறார்கள். ஆதலால் அச் சித்திரங்கள் பளிச்சென்று எடுப்பாகத் தெரிகின்றன. பாடல்களின் எழுத்து தேவநாகரி போலத்தோன்றுகிறது. இதற்குக் காவி மொழி என்று பெயர். இதில் பத்தில் ஒன்பது வார்த்தை வடமொழி. பண்டிதர்களுக்கும் புரோகிதர்களுக்கும்தான் இந்த மொழி தெரியும். முக்கியமான சடங்குகளின் போதும், கவிதைகள், இதிகாசங்கள் எழுதும்போதும் இந்த மொழியை உபயோகிப்பார்கள்.

இது தவிர, பாலியில் இன்னும் மூன்று மொழிகள் இருக்கின்றன. ஜாதிப் பிரிவினை பாலித் தீவில் உண்டு. ஒருவருக்கு ஒருவர் பேசிக்கொள்ளும் மொழி, அவர்களுடைய ஜாதியின் அந்தஸ்தைப் பொறுத்தது.

உயர்ந்த ஜாதியினர் தாழ்ந்த ஜாதியினரிடம் பேசும் பொழுது தாழ்வான மொழியிலும், தாழ்ந்த ஜாதியினர் உயர்ந்த ஜாதியினரிடம் பேசும்பொழுது உயர்ந்த மொழியிலும் பேசுவது வழக்கம்.

உயர்ந்த மொழி, தாழ்ந்த மொழி என்பது, ஒரே மொழியின் இரண்டு விதமான பேச்சுக்கள் (dialects) அல்ல. உயர்ந்த மொழியும் தாழ்ந்த மொழியும் வெவ்வேறு தனி மொழிகள். ஒன்றுக்கொன்று சம்பந்தம் கிடையாது. வெவ்வேறு எழுத்து; வெவ்வேறு சொல்!

ஆனால் ஒருவரைப் பார்த்தவுடனே, அவர் எந்த ஜாதியைச் சேர்ந்தவர் என்று தெரிவதற்கு ஜாதி அடையாளம் ஒன்றுமில்லை. எனவே அடக்கம் நிறைந்த இந்த பாலி மக்கள், உயர்வும் தாழ்வும் இல்லாத மத்திம மொழி ஒன்றையும் வகுத்திருக்கிறார்கள்.

இந்த, காவி, உயர்ந்த, மத்திம, தாழ்ந்த நான்கு பாலி மொழிகளும் தவிர, இத் தீவிலுள்ள ஐந்தாவது மொழி இந்தோனேஷ்யாவின் தேசீய மொழியான மலாய் மொழி. இளைஞர்கள் இந்தத் தேசீய மொழியை ஆர்வத்துடன் கற்கின்றனர். இது பாலியை விடச் சுலபமானது. ஜாதிக்கு ஏற்றபடி பேசும் சங்கடமும் இதில் இல்லை. இந்த ஐந்து மொழியும் தெரிந்தவர்களை பாலியில் காண்பது அபூர்வமல்ல!

டச்சு மொழியும், ஆங்கில மொழியும் அறிந்த பாலிக்காரர் சிலர் இருக்கிறார்கள்.

பாலித் தீவில், சீனர் சிலரும், அராபியர் சிலரும் வசிக்கிறார்கள்.

உலகத்திலுள்ள வேறு மொழிகளைக் கேட்க வேண்டுமானால், பாலி ஹோட்டலுக்குச் செல்ல வேண்டும். பாலித்



தீவுக்கு யாத்திரிகர் வராத நாளே இல்லை யெனலாம். பெரும்பாலான யாத்திரிகர் அமெரிக்கர். சில சமயங்களில் தனி விமானத்திலேயே கூட்டம் கூட்டமாக வருவார்கள்.

பாலித்தீவில் நல்ல வாடகை மோட்டார்கள் இருக்கின்றன. பெரும்பாலானவை அமெரிக்காவில் செய்யப்பெற்றவை. வாடகை மோட்டாரின் கட்டணம் மிக அதிகமானது. இரண்டு அல்லது மூன்று நாள் அத் தீவைச் சுற்றிப் பார்த்தால், வாடகைமட்டும் முன்னூறு ரூபாய்க்கு மேலாகும். மோட்டார் ஓட்டுபவருக்கு இனும் வேறு கொடுக்க வேண்டும். ஆகையால், யாத்திரிகர் நான்கு அல்லது ஐந்துபேர் கூட்டுச் சேர்ந்து ஒரு மோட்டாரை வாடகைக்கு அமர்த்திக் கொண்டு, செலவை ஈவித்துக் கொள்வார்கள்.

அமெரிக்க யாத்திரிகர் பண பலம் உள்ளவர்கள். அவர்கள் கூட்டுச்சேர விரும்பமாட்டார்கள். அப்படிக் கூட்டுச் சேர்ந்தாலும் அமெரிக்கர்களையே அவர்கள் விரும்புவார்கள். அமெரிக்க யாத்திரிகர், ஐரோப்பியரை, குறிப்பாக டச்சுக்காரரை அலட்சியமாகவே கருதினார்கள். அன்றியும் அமெரிக்கருடன் யாத்திரை செய்வது கஷ்டம். பாலித்தீவு முழுவதையும் நொடிப் பொழுதில் பார்க்க அவர்கள் விரும்புவார்கள்.

பாலி ஹோட்டலில் அப்பொழுது இந்திய யாத்திரிகர் வேறு யாருமில்லை. ஒரு ஸ்வீடிஷ்காரர் மாதக் கணக்காக அங்கே தங்கி ஓய்வெடுத்துக் கொள்வதாகக் கூறினார்.

உயரமான டச்சுக்காரர் ஒருவரை அங்கு கண்டேன். அவரிடம் சென்று, பாலித்தீவைப் பார்ப்பதற்கு வாடகை மோட்டாருக்குக் கூட்டு சேர விருப்பமா என்று கேட்டேன்.

அதற்கு அவர், "நாளைக் காலையில் நான் கிந்தாமணி செல்ல எண்ணியுள்ளேன். அதற்கு மறு நாள் சிங்கராஜா

சென்று மூன்றாவது நாள் இங்கு திரும்புவேன். தாங்கள் விரும்பினால் என்னுடன் வரலாம். மகிழ்ச்சியுடன் அழைத்துச் செல்வேன்" என்றார்.

செலவில் பாதியை ஏற்றுக் கொள்வதாக அவரிடம் கூறினேன். அதற்கு அவர், "நான் சூரபாயாவிலிருக்கும் ஒரு டச்சு வியாபாரக் கம்பெனியின் பிரதிநிதி. கம்பெனி வேலையாகவே சிங்கராஜா செல்லுகிறேன். எனவே உங்களுக்கு எந்த விதமான செலவும் கிடையாது. என்னுடன் துணைக்கு வந்தால் பெரிதும் மகிழ்வேன்" என்றார்.

அவருடைய அன்புக்கு நன்றி செலுத்தினேன்.

மீண்டும் அவர், "நான் பல ஆண்டுகளாக சூரபாயாவிலிருந்தும், இதுவரை பாலிக்கு வந்ததில்லை. இதுதான் முதல் தடவை. இந்தத் தீவைப் பற்றி எனக்கொன்றும் தெரியாது. நீங்கள் எந்த வழியாகச் செல்லவேண்டுமென்று விரும்புகிறீர்களோ அவ்வழியே செல்லுவோம்" என்றார்.

இந்த டச்சுக்காரரின் பெயர் ஓட்டோவெங்கர். இவருடைய மனைவியும் குழந்தையும் ஹாலந்தில் வசிக்கிறார்கள். இவருக்கு வயது நாற்பத்தைந்து இருக்கலாம். உயரம் ஆறடி இருக்கும். நன்றாக ஆங்கிலம் பேசினார். யுத்தத்தின்போது, ஜப்பானியரின் யுத்தக் கைதியாக இந்தோனேஷ்யாவில் மூன்றரை ஆண்டுகள் இருந்தார்.

மறு நாள் அதிகாலையில் பிரயாணமானோம். பாலியில் வீட்டுக்கொரு கோயில்; ஊருக்கு ஒரு கோயில்; நாட்டுக்கு ஒரு கோயில். எங்கு பார்த்தாலும் கோயில் மயம்தான். கோயில் என்றால் தஞ்சாவூர், மதுரைக் கோயில் மாதிரி என்று நினைக்க வேண்டாம். கோயில்கள் சிறியவை. கலையழகு இருப்பினும் பாலியின் கோபுரங்கள் எல்லாம் எளிமையானவை. பாலியில் பிரதானமான தெய்வம்





நடனமாடும் பாலிச் சிறுமியர்



கோயில்வாயிலில் பாலிப்பெண்கள்



சிவன். சிவனுக்குத்தான் பதினொரு அடுக்குள்ள கோபுரம். பிரமா, விஷ்ணு இவர்களுக்கெல்லாம் கோபுரத்தின் அடுக்குகள் குறைவாக இருக்கும்.

வழியில் பல ஊர்களையும், கோயில்களையும் பார்த்துக் கொண்டே சென்றோம். நமது ஊரில் ஆற்றங்கரையோரத்தில் சுவாமி தங்குவதற்கு மண்டபங்கள் அமைத்திருக்கிறார்கள் அல்லவா? இம்மாதிரியான மண்டபங்கள் எல்லாம் அவசியம் பார்க்கத் தக்கவை என்று யாத்திரிகர்களுக்குக் கூறுகிறார்கள்.

பாலித்தீவின் முக்கியமான கோயில் பசாக்கியா என்ற இடத்தில் இருக்கிறது. பாலித்தீவில் பெரும் பகுதி மலை நாடு. பசாக்கியா சமுத்திர மட்டத்திலிருந்து சுமார் மூவாயிரம் அடி உயரம். கோயிலுக்குச் செல்ல, விசாலமான படிகள் கட்டியிருக்கிறார்கள். இந்தக் கோயிலில் சித்திர வேலைப்பாடே கிடையாது. கோபுரத்தின் அடுக்கு பதினொன்று. ஆகவே இது சிவபெருமான் திருக்கோயில்.

பாலியிலுள்ள ஒவ்வொருவரும் ஆண்டுக்கு ஒரு முறையாவது பசாக்கியாவுக்கு வருவது வழக்கம்.

அன்று மாலை கிந்தாமணி சேர்ந்தோம். சிந்தாமணி என்ற சொல் கிந்தாமணியாகச் சிதைவுற்று இருக்க வேண்டுமென்று தோன்றுகிறது.

கிந்தாமணி நாலாயிரத்து ஐநூறு அடி உயரத்தில் இருக்கிறது. பாலி ஹோட்டலுக்குச் சொந்தமான கிந்தாமணி ஹோட்டலும், அரசாங்கத்தார் நடத்தும் விருந்தினர் விடுதியும் இங்கே இருக்கின்றன. கம்பளி உடையில்லாமல் இங்கே செல்ல முடியாது. ஹோட்டலில் நல்ல உணவும், குளிர் காய்வதற்கு வேண்டிய வசதிகளும் கிடைக்கும்.



இங்கிருந்தபடியே, அழகான பட்டோர் ஏரியையும், அதன் பின்னே உள்ள பட்டோர் மலையையும் பார்க்கலாம். பட்டோர் என்பது ஐயாயிரம் அடி உயரமுள்ள எரிமலை. 1926-ஆம் ஆண்டில் கடைசியாக அது பொங்கிற்று. அதன் விளைவுகளை இன்னும் பார்க்கலாம்.

பத்தாயிரம் அடி உயரமுள்ள, பாலித்தீவின் உயரமான அகோயெங் என்னும் மலையையும், கிந்தாமணியிலிருந்து பார்க்கலாம்.

கிந்தாமணி ஓய்வுக்கு ஏற்ற இடம். குளிர்ச்சியான சீதோஷ்ண நிலை. இந்தப் பகுதியில் ஏராளமான ஒற்றையடிப் பாதைகள் உண்டு. நடக்க விரும்புபவர்களுக்கு இது ஏற்ற இடம்.

அன்றிரவு கிந்தாமணி ஹோட்டலில் தங்கினோம். மறு நாள் காலையில், அருகில் இருந்த கிராமத்துக்குச் சென்றோம்.

வழியில் ஒரு வீட்டின் முன்புறமுள்ள தோட்டத்தில் பொங்கலிட்டுச் சூரிய தேவனுக்குப் படைத்துக் கொண்டிருந்தார்கள். வீதியிலிருந்தபடியே ஒட்டோவெங்கரும் நானும் இதைப் பார்த்துக்கொண்டு நின்றோம். எனக்கு உள்ளே சென்று பார்க்க ஆசை. இதனை ஒட்டோவெங்கரிடம் கூறினேன். அவர் அந்த வீட்டுக்காரரை அழைத்து நான் இந்தியாவிலிருந்து வந்திருப்பதாகவும், உள்ளே வந்து பார்க்க விரும்புவதாகவும் கூறினார். அந்த வீட்டுக்காரரும் அவர் மனைவியும், கதவைத் திறந்து எங்களை அன்புடனும் மரியாதையுடனும் அழைத்துச் சென்றனர்.

வீட்டின் முன் புறத்தில் இலைகளால் அழகாகத் தோரணம் கட்டியிருந்தார்கள். நன்றாகக் கூட்டி மெழுகிய இடத்தில், கோலமிட்டுப் பானையில் பொங்கலிட்டிருந்தார்

அடுப்புக்கு எதிரே, மூன்று வாழை இலைகளைப் போட்டு அதில் பரிமாறி இருந்தனர். வெள்ளை வெளேரென்ற சாதம், காய்கறி வகைகள், சர்க்கரை, வாழைப்பழம் முதலியவற்றைப் படைத்திருந்தார்கள். சாம்பிராணித் தூபமும் இருந்தது. இலையால் செய்த தொன்னைகளில் பாயசம் வைத்திருந்தார்கள். குடும்பத்தினர் அனைவரும் படைப்புக்கு முன் தண்ணீர் தெளித்து, கீழே விழுந்து வணங்கினர். நானும் அவ்வாறே செய்து, அவர்களைப்போலவே, அங்கிருந்த மலர்களில் ஒன்றை எனது காதில் செருகிக் கொண்டேன். அந்தக் குடும்பத்தார் அனைவருக்கும் இதைப் பார்த்ததும் ஒரே ஆனந்தம்.

அந்தக் குடும்பத்தாரிடம் விடைபெற்றுக் கொண்டு, ஹோட்டலுக்கு வந்து, அன்று பிற்பகலே சிங்கராஜாவை அடைந்தோம்.

சிங்கராஜா, பாலித்தீவின் பழைய தலைநகரம். இன்றுங் கூட பாலியில் இது இரண்டாவது பெரிய நகரம். பாலித்தீவில் பெரிய துறைமுகம் சிங்கராஜாதான்.

ஒட்டோவெங்கருடன் வேலை செய்யும் ஒரு டச்சுக்காரர், அன்று கப்பலில் சிங்கராஜாவுக்கு வந்தார். துறைமுகம் சென்று அவரை அழைத்து வந்தோம். எல்லோரும் பென்ஷன் சிங்கராஜா என்ற விடுதியில் தங்கினோம். இந்த விடுதியை நடத்துகிறவர் ஒரு பாலிக்காரர். இடம் சுத்தமாக இருந்தது. உணவைவிட, உபசாரம் நன்றாக இருந்தது.

சிங்கராஜாவில், கிரிபுத்திரி என்ற வீதியில் உள்ள மாயா என்னும் திரைப்படக் காட்சிசாலை, பஞ்சிம் கிருஷ்ணா என்ற ஒரு க்ஷத்திரியருக்குச் சொந்தம். அப்போது பஞ்சிம்கிருஷ்ணா, வடமொழி பயில திருவனந்தபுரம் சென்றிருக்கிறார் என்று கூறினார்கள்.



மறு நாள் காலை, எல்லோரும் டென்பசாருக்குப் புறப்பட்டோம். வழியில் ஒரு பால் பண்ணைக்குத் தமது கம்பெனி வேலையாகச் செல்ல வேண்டுமென்று ஒட்டோ வெங்கர் கூறினார்.

பெரிய பால்பண்ணை; இதனை நடத்துகிறவர் ஒரு சீனர். இப்பண்ணை அமைந்திருக்கும் இடம் இயற்கை யழகு நிறைந்தது. "இம்மாதிரி நவீன முறையிலும் சுத்தமாகவும் உள்ள நல்ல பண்ணைகள் ஐரோப்பாவிலேயே மிகக் குறைவு" என்று ஒட்டோவெங்கர் பாராட்டினார்.

ஆறாயிரம் அடி உயரமுள்ள மலைகளுக்கிடையே அமைந்திருக்கிறது பிராட்டான் ஏரி. சமுத்திரத்தைப் போல, நீலநிறமான தண்ணீர். இங்குள்ள இந்தோனேஷயக் குடும்பம் ஒன்றில் உணவு தயாரிக்கும்படி கூறினோம். அதுவரையில் ஏரிக்கரையில் நடந்து சென்றோம். சிலர் நீந்தினர். இந்தோனேஷ்யாவின் குடியரசுத் தலைவர் டாக்டர் சுகார்னோ பாலிக்கு வந்தால், இந்த ஏரிக் கரைக்கு வரத் தவறுவதில்லையாம்.

சுமார் இருநூறு மைல் பிரயாணத்துக்குப் பிறகு டென்பசார் திரும்பினோம். பிரயாணம் முடிந்ததே என்று எல்லோருக்கும் வருத்தம். ஒட்டோவெங்கருக்கு நன்றி செலுத்தினேன்.

மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் சிங்கப்பூர் சென்றபொழுது இவரையும் இவருடைய குடும்பத்தினரையும் சந்தித்தேன். அதே டச்சுக் கம்பெனியின் சிங்கப்பூர் கிளைக்கு இவர் பிரதம அதிகாரியாக இருந்தார்.

பாலித்தீவின் வளப்பத்தையும், அதன் மக்களையும் நாம் பார்க்கும் பொழுது, மலையாளம்தான் நமது நினைவுக்கு வரும்.

தென்னை, தேயிலை, காபி, கொக்கோ, நிலக்கடலை, அருமையான பழ வகைகள், நல்ல காய்கறிகள் இவை அனைத்தும் ஏராளமாகப் பாலியில் பயிராகின்றன. நெல் தான் உயிர் நாடி. பார்க்குமிடமெல்லாம் பசுமை. அந்தத் தீவின் வளமும் செழிப்பும் சொல்லில் அடங்கா.

பாலி மக்கள், ஜாவாவில் உள்ளவர்களை விட, நல்ல உடற்கட்டு உடையவர்கள். பாலிப் பெண்கள் அழகும் அடக்கமும் நிறைந்தவர்கள். ஜாவாவில் உள்ள தங்களுடைய சகோதரிகளை விட உயரமானவர்கள். ஜாவானியப் பெண்கள், குழந்தைகளையும் சாமான்களையும் முதுகில் சுமப்பது வழக்கம். ஆனால் பாலிப் பெண்கள் சாமான்களைத் தலைமீது வைத்து, நிமிர்ந்து கம்பீரமாகச் செல்வார்கள். பாலித்தீவில் பெண்கள் தலைப்பாகை கட்டிக் கொள்வதும் உண்டு.

இடுப்புக்கு மேல் உடையணியாத இளம் பெண்களைப் படம் பிடித்து, பத்திரிகைகளில் வெளியிட்டு வந்தனர் மேலை நாட்டினர். அந்த எண்ணத்துடன் யாரேனும் பாலிக்குச் சென்றால், அவர்கள் நிச்சயமாக ஏமாற்றம் அடைவார்கள்.

இயற்கையோடியைந்த வாழ்க்கை நடத்தும் மக்களை இவ்வாறு படம் பிடித்து இழிவாகப் பிரசாரம் செய்வதை இந்தோனேஷ்ய அரசாங்கம் இப்பொழுது தடை செய்துவிட்டது. பாலிப் பெண்களும், இம்மாதிரி பத்திரிகைகளில் படம் வெளியாவதை வெறுக்கின்றனர்.

பாலித்தீவில், இக்காலத்திலும் கிராமத்திலுள்ள பெண்கள் இடுப்புக்கு மேல் ஒரு துண்டு போட்டுக் கொள்வார்கள். வயல்களில் வேலை செய்யும்பொழுது அதையும் அணிவதில்லை. அதிகமான வெயிலும் இதற்கு ஒரு காரணமாகும். ஆனால் தற்பொழுது பாலிப் பெண்கள்



அனைவருமே ரவிக்கை அணிந்து கொள்ளுகிறார்கள். காட்டுப்புறங்களில் வசிக்கும் சிலர், இவ்வாறு அணியாமல் இருக்கலாம். யாத்திரிகர் யாராயினும் இவர்களைப் படம் பிடிப்பது சட்ட விரோதம். இக் குற்றத்தை யாராவது செய்தால், அவர்களுடைய காமிராவையும், பிலிம் சுருளையும் அதிகாரிகள் பறிமுதல் செய்துவிடுவார்கள்.

சங்கீதம் நடனம் என்றால் பாலி மக்களுக்கு உயிர். பாலியில் நடனமாடுவது பருவமடையாத இளம் பெண்களே. சிறு வயதிலிருந்தே இவர்களைப் பழக்குகிறார்கள். பாலி ஹோட்டல் மண்டபத்தில் ஒரு நாட்டியம் நடைபெற்றது. காமெலின் என்ற இன்னிசை வாத்தியத்துடன் சிறுமிகள், தலையில் கிரீடம் அணிந்து, அழகிய பட்டாடைகளையும் ஆபரணங்களையும் பூண்டு நாட்டியம் ஆடினர். நாட்டியம் அனைத்தும் ராமாயணம், பாரதம் ஆகிய புராணக் கதைகளை ஆதாரமாகக் கொண்டவை.

நாட்டியமாடிய குழந்தைகளையும் வாத்தியக் கோஷ்டியாரையும் எங்கேயோ பார்த்திருப்பதாகவும், எனக்குப் பழக்கமுள்ளவர்களாகவும் தோன்றிற்று. ஆம்; வாத்தியக் கோஷ்டியினர் அனைவரும் பகலில் ஹோட்டல் வேலைக்காரர்கள்; இரவில் வாத்தியக் கோஷ்டியினர்! இச் சிறுமிகளின் முகங்களைப் படத்தில் பார்த்திருக்கிறேன்.

சில தினங்களுக்கு முன்தான் அமெரிக்காவிலிருந்து வெளிவந்த 'நாஷனல் ஜியாகிராபிகல்' பத்திரிகையின் பிரதி ஒன்றை மலேயாவில் விலைக்கு வாங்கினேன். இதில் நாற்பது பக்கத்துக்கு மேல் பாலித்தீவைப் பற்றிய படங்கள் வெளியிட்டிருந்தார்கள். இதில் இக் குழந்தைகளின் அழகிய வர்ண நாட்டியப் படங்கள் சில இருந்தன. பாலித் தீவைப் பற்றிய கட்டுரைப் பகுதியை மட்டும், சிறு புத்தகமாக அழகாக பைண்டு செய்து வைத்திருந்தேன்.

இதனை அக்குழந்தைகளின் பெற்றோருக்கு அன்பளிப்பாகக் கொடுத்தேன். இப்படங்களை அவர்கள் பார்த்ததே கிடையாது. அவர்களுக்கு ஒரே ஆனந்தம். இந்த அழகிய வர்ணப் படங்களை அவர்களைவிடப் பிரியமாகப்போற்றி வைத்திருக்கக் கூடியவர்கள், உலகத்தில் வேறு யார் இருக்கிறார்கள்?

அடுத்த நாள் காலையில், டென்பசாருக்கு அருகிலுள்ள சிறு கிராமங்களுக்கும், சமுத்திரக் கரைக்கும் நடந்து சென்றேன். திரும்பும் வழியில் ஒரு கிராமத்தில் கூட்டம் ஒன்றைப் பார்த்தேன். பாலித்தீவில் எங்கேனும் ஒரு கூட்டத்தைப் பார்த்தால், அது அநேகமாக கோழிச் சண்டை விளையாட்டைப் பார்க்கும் கூட்டமாகத் தான் இருக்கும்.

டென்பசாரில் தினந்தோறும் சந்தைநாள்தான். சந்தையில் வித விதமான கடைகள். கடைகளுக்கு, இந்தோனேஷ்யாவிலும் பாலியிலும் டோக்கோ என்பார்கள். டோக்கோ ராமா, டோக்கோ கிருஷ்ணு, டோக்கோ ஞானு போன்ற பெயர்களை பாலியில் பல இடங்களில் காணலாம்.

சந்தைக் கடைகளில் வெற்றிலைப் பெட்டி, வெற்றிலை இடிக்கும் உரல், பாக்கு வெட்டி முதலியன விற்கும் கடைகளுக்குச் சென்றேன். எல்லாம் நவீன முறையிலிருந்தன. ஒன்றிலாவது கலைத்திறன் கிடையாது. அரைகுறையான ஆங்கிலத்தில் ஒருவர், "எந்தமாதிரியான சாமானைத் தேடுகிறீர்கள்?" என்றார். பொருட்காட்சிசாலையில் காணப்படும் வெற்றிலைப் பெட்டி போன்றவைகளைத் தேடுவதாகக் கூறினேன். "அம்மாதிரி கலைத்திறன் உள்ள சாமான்கள் கிராமங்களில் ஏதாவது பழங்காலத்து வீடுகளில் ஒருவேளை கிடைக்கலாம். அவை கடைத்தெருச் சரக்குகள் அல்ல. நேரத்தை வீணாக்காதீர்கள்" என்றார். வெற்றிலை போடும் பழக்கம் பாலித் தீவில் இன்னும் உண்டு.



ஹோட்டலுக்குத் திரும்பியதும் அன்றிரவு, பத்து மைல் தூரத்திலுள்ள கிராமம் ஒன்றில், கோயிலில் நாட்டியம் நடைபெறும் என்று ஒரு விளம்பரப் பலகையில் கண்டேன்; அங்கு சென்ற யாத்திரிகருடன் நானும் சேர்ந்து கொண்டேன்.

இரவு பத்து மணிக்கு அந்தக் கிராமத்துக்குச் சென்றோம். கோயிலுக்குச் சிறிது தூரத்தில் கார்களை நிறுத்தி விட்டோம். என்னைப் பொறுத்த வரை, செருப்புகளையும் காரிலேயே விட்டுவிட்டேன்.

கோயிலுக்கு முன்னே சிறு கொட்டகை அமைத்திருந்தார்கள். எங்கு பார்த்தாலும் தோரணங்கள். சில காந்த விளக்குகள் ஒளி வீசின. கோயில் சிறிதுதான். ஆனாலும் அதற்கு உள் பிராகாரம் உண்டு. உள் பிராகாரத்தில் உள்ள சுவாமிகளுக்கெல்லாம் நன்றாக அலங்காரம் செய்து படைத்திருந்தார்கள். சாம்பிராணி, ஊது பத்தி முதலியவைகளின் வாசனை நிறைந்திருந்தது.

என்னுடன் ஹோட்டலிலிருந்து வந்த பிரயாணிகள் அனைவரும் வெள்ளைக்காரர். அவர்கள் தங்கள் பூட்ஸைக் கழற்ற மனமில்லாமல், வெளியிலேயே நின்றுவிட்டார்கள். நான் மட்டும் கோயிலுக்குள் சென்றேன். உள் பிராகாரத்தில், சுவாமிக்கு அர்ச்சகர் ஆராதனை செய்தபொழுது அங்கு நின்றேன். மற்றவர்களைப் போலவே, ஆண்டவனை நானும் வணங்கினேன். அர்ச்சகர் எனக்குக் கொடுத்த மலர்களை மற்றவர்களைப் போலவே, எனது காதுகளில் செருகிக் கொண்டேன். இதைப் பார்த்த சில இளைஞர்களுக்கு ஒரே ஆச்சரியம். சிறிது நேரத்துக்குள் பலர் என்னைச் சூழ்ந்து கொண்டார்கள். இந்தியாவிலிருந்து வந்திருப்பதாகக் கூறினேன். பண்டித நேரு பாலித்தீவுக்கு விஜயம் செய்தார் என்றும், அவரைக் நாங்கள் நேரில்

பார்த்ததாகவும் சில இளைஞர்கள் அரைகுறையான ஆங்கிலத்தில் பெருமிதத்தோடு கூறினார்கள்.

என்னுடைய காதுத் துவாரத்தை ஒருவர் கவனித்தார். எனது காதுகளில் துவாரங்கள் இருக்கின்றன என்ற செய்தியை மற்றவர்களுக்குக் கூறினார். உடனே சிலர் என்னைப் பார்த்து 'இந்து, இந்து' என்று சொல்ல ஆரம்பித்தனர். நாட்டியம் பார்ப்பதற்காக வந்திருப்பதாகக் கூறினேன். கோயிலின் முன் இருந்த கொட்டகைக்குச் சென்றோம். எல்லோரும் தரையில்தான் உட்கார வேண்டும். ஒருவர் 'குறிச்சி, குறிச்சி' என்றார். சில நிமிஷ நேரத்தில் ஒருவர் பக்கத்து வீட்டிலிருந்து குறிச்சியைத் தூக்கிக்கொண்டு வேகமாக வந்தார். இவ்வளவும் இந்தியாவிலிருந்து வந்த ஓர் இந்துவை உபசரிப்பதற்காக! பாலித்தீவில், காதுத் துவாரத்துக்கு எவ்வளவு மரியாதை பாருங்கள்!

இரவு பன்னிரண்டு மணி வரையில் ஒன்றுமே ஆரம்பமாகவில்லை. சிறுவர்களும் சிறுமிகளும் கொட்டகையில் தூங்கி விழுகின்றனர். எங்கள் மோட்டார் ஓட்டுபவர் ஒரு பாலிக்காரர். அவரிடம் தாமதத்துக்குக் காரணம் என்ன என்று கேட்கும்படி கூறினோம். பக்கத்துக் கிராமங்களில் உள்ள பெரியோர், தங்களின் கோயில் மரியாதைகளுடன் வரவேண்டும் என்றும், குறிப்பிட்ட எல்லா ஊர் பெரியோரும் வந்த பின்னர்தான் நாட்டியம் ஆரம்பமாகுமென்றும், எப்படியும் ஆரம்பிக்க இரவு இரண்டு மணியாகுமென்றும் மோட்டார் ஓட்டுபவர் பதில் கூறினார். கூட வந்தவர்கள் அவசரப்பட்டதால் நாட்டியம் பாராமல் ஏமாற்றத்துடன் திரும்பினேன். பிரயாணத்தில், செலவைக் குறைப்பதற்காகக் கூட்டுச் சேர்வதால், சௌகரியமும் உண்டு; அசௌகரியமும் உண்டு.



பாலித்தீவில் இன்னும் ஒரு நாள்தான் தங்க இருந்ததால், அதற்குள்ளாக நல்ல நடனம் ஒன்றைப் பார்க்க வேண்டும் என்று ஆசை. பாலியில் கலை கலைக்காகவேதான். பெரும்பாலான நடனங்களும் நாட்டியங்களும், ஆண்டவன் சந்நிதானத்தில்தான் நடைபெறும். ஆனால் அமெரிக்க யாத்திரிகர் இந்தப் பாலித்தீவில் நாட்டியம் முதலிய கலைகளை ஒரு விலைப் பொருளாக்கிவிட்டார்கள். அமெரிக்க யாத்திரிகர் வந்த சில நிமிஷங்களிலேயே, பாலி மக்கள் அவர்கள் எதிரே நாட்டியமாட வேண்டும். அதை அமெரிக்கர் படம் பிடிக்க வேண்டும். முடிந்ததும், அன்றே மறு நாளோ பாலியை விட்டுக் கிளம்பி விடுவார்கள். இந்த நாட்டியம் பார்ப்பதற்குப் பணத்தையும் தாராளமாக வாரி இறைப்பார்கள்.

“அமெரிக்க யாத்திரைக் கோஷ்டியினர் வந்திருப்பதை முன்னிட்டு 'கெச் செக்' நரட்டியம் ஏற்பாடாகி இருக்கிறது. கட்டணம் பத்து ரூபாய். மோட்டார் வாடகை வேறு” என்று ஹோட்டலின் விளம்பரப் பலகையில் படித்தேன். உடனே பணம் கொடுத்து எனது பெயரைப் பதிவு செய்து கொண்டேன்.

இரவு எட்டு மணி இருக்கும். சிறிது தூரத்திலுள்ள கிராமத்துக்கு யாத்திரிகர்களுடன் நானும் சென்றேன். ஒரு கோயிலின் முன்புறமுள்ள சதுக்கம். சுமார் அறுபது ஆண்கள் வட்டமாகச் சுற்றி உட்கார்ந்துகொண்டிருந்தனர். மத்தியில் மூன்றடி உயரமுள்ள கல் தூணின் மீது, எண்ணெய் விளக்கு ஒன்று எரிந்தது. நல்ல இருட்டு. எனவே இந்த நடனத்தில் பங்கு கொண்ட அனைவருடைய முகமும் நன்றாகத் தெரியவில்லை.

யாத்திரிகர்கள் எல்லாம், எதிரிலுள்ள மண்டபத்தின் படிகளில் உட்கார்ந்தனர்.

இந்த நடனத்துக்கு 'கெச் செக்' என்று பெயர். இது வானர நாட்டியம். டச்சுக்காரர் இதற்கு 'குரங்கு நாட்டியம்' என்று பெயர் கொடுத்திருக்கிறார்கள்.

முதலில் ஒரே நிசப்தம். நாட்டியத்தில் பங்கு கொண்டவர் எண்ணிக்கை சுமார் அறுபது. அனைவரும், இடுப்புக்குமேல் ஒன்றும் அணியவில்லை. தங்களின் இரு கரங்களையும், தங்களுக்கு இருபுறமும் உள்ளவர்களின் கரங்களோடு பின்னிக் கொண்டு வட்டமாக உட்கார்ந்திருந்தார்கள். இம்மாதிரி ஒன்றின் பின் ஒன்றாக ஐந்து வட்டங்களாக உட்கார்ந்திருந்தார்கள்.

ஆரம்பத்தில், கூட்டத்தின் நடுவே ஒருவர் வந்து மெதுவாக, ஆனால் இனிமையாகப் பாடினார். அது முடிந்ததும் 'கெச் செக்' என்றனர். முதலில் மெதுவாகச் சொன்னார்கள். வரவர அவர்களுடைய குரல் உரத்தது. உணர்ச்சியும் வேகமும் அதிகமாயின. ஆவேசம் வந்தவர்களைப் போலச் சொல்ல ஆரம்பித்தார்கள். இம்மாதிரி பத்து நிமிஷம் சென்றது. ஒருவர் கூட்டத்தில் வந்து, எல்லோரையும் மந்திரசக்தியால் கட்டுப்படுத்துவது போல, திறமையாக நடித்தார். மீண்டும் ஒரே நிசப்தம். எல்லோரும் கைகோர்த்தபடியே மல்லாந்து படுத்தனர். தாமரை மலரின் இதழ்கள் விரிந்ததே போன்றிருந்தது இக்காட்சி.

கூட்டத்தின் நடுவே அழகிய சிறு பெண் வந்து சில நிமிஷம் நடனமாடினாள். பின்னர் ஒருவர் பாடினார். சிறிது நேரத்துக் கெல்லாம் கூட்டத்தின் மத்தியில் ஒருவர் தோன்றி உணர்விழந்து கிடக்கும் மக்களுக்கு, ஒரு மூலிகையைக் கொண்டு வந்து கொடுப்பதுபோல அழகாக நடித்தார். அனைவரும் உணர்வு பெற்று எழுந்தனர். மறுபடியும் பத்து நிமிஷம் 'கெச் செக்' என்றனர். இத்துடன் நாட்டியம் முடிந்தது.



எல்லோரும் ஹோட்டலுக்குத் திரும்பினோம். யாத்திரிகர் கூட்டங் கூட்டமாக உட்கார்ந்துகொண்டு மது வகைகளையும் மற்ற பானங்களையும் அருந்திக்கொண்டே பேசிக்கொண்டிருந்தனர்.

இரவு பன்னிரண்டு மணிக்குப் படுக்கைக்குச் சென்றேன். அப்பொழுது வேலைக்காரர் ஒருவர் டென் பசாரில் அன்றிரவு 'வயாங்' நடப்பதாகக் கூறினார். வயாங் என்பது நிழலாட்டம். இந்தோனேஷ்யர்களுக்கு அதைப் பார்ப்பதில் பேரார்வம். சலிக்காமல் இரவு முழுதும் பார்த்துக்கொண்டே இருப்பார்கள்.

ஹோட்டலிலிருந்து மூன்று பர்லாங் தூரத்திலுள்ள மைதானம் ஒன்றில் இந்த வயாங் நடைபெற்றது. ஐநூறுக்கு மேற்பட்ட மக்கள் மிகவும் அமைதியாகத் தரையில் உட்கார்ந்திருந்தனர்.

வயாங் கதைகள், ராமாயணம் மகாபாரதக் கதைகளே ஆகும். பொம்மையைத் திறம்பட ஆட்டுகிறவரே, அப்பாத்திரங்களுக்கேற்ப வெவ்வேறு குரலில் பேசுவதும் பாடுவதும் மிக நன்றாக இருக்கும். எத்தனை விதமான குரல் ஒரு மனிதருக்கு! அதிலும் எவ்வளவு சாதுரியமாக, சில விநாடிகளுக்குள் தமது குரலை மாற்றிக் கொள்கிறார்! மக்கள் அடிக்கடி சிரிப்பதிலிருந்து, பேசுகிறவருடைய நகைச் சுவையை நாம் அறியலாம்.

சிறிது நேரத்துக்கெல்லாம் வயாங் முடிந்தது. அத்தனை மக்களும், அமைதியாகவும் ஒழுங்காகவும் அந்த இடத்தை விட்டுச் சென்றது, அவர்களுடைய உயர்ந்த பண்பாட்டைக் காட்டியது.

# ஜோக்ஜகர்தா

**பா**லியிலிருந்து ஜாகர்தாவுக்கு விமானத்தில் திரும்பி வந்தேன். ஜாகர்தாவில் யாத்திரிகர்களுக்கு முக்கியமான பிரச்னை தங்கும் இடம்.

இந்த முறை அன்பர் ரங்கநாதனைத் தொந்தரவு செய்ய விரும்பவில்லை. நேராக ராஜாமணி அவர்கள் வீட்டுக்குச் சென்றேன். ராஜாமணி அவர்கள் இந்தியச் செய்தி ஸ்தாபனத்தின் (P. T. I.) பிரதிநிதியாக அப்பொழுது இந்தோனேஷ்யாவில் இருந்தார்.

ராஜாமணி அவர்கள் தமக்குத் தெரிந்த எல்லா ஹோட்டல்களுக்கும் டெலிபோன் செய்தார். ஒரே பதில்தான்; இடமில்லை. ராஜாமணி அவர்களுக்கும் டெலிபோன் செய்து சலிப்பு உண்டாகிவிட்டது. உடனே அவர், "நான் இந்த வீட்டில் தனியேதான் வசிக்கிறேன். என்னுடன் ஒரே ஒரு விருந்தினர் தங்கியிருக்கிறார். அவர் நாளைக் காலையில் போய்விடுவார். நீங்கள் என்னுடனேயே தங்குங்கள். உங்களுக்கு ஹோட்டலில் இடம் தேடுவதைவிட, என்னுடன் தங்கச் சொல்வதுதான் சுலபமானது" என்றார்.

ஜோக்ஜகர்தாவை ஜோக்யகர்தா என்றும், சுருக்கமாக ஜோக்ஜா என்று அழைப்பார்கள். ஜோக்ஜா செல்ல விரும்புவதாக டாக்டர் சுப்பராயனிடம் கூறினேன். உடனே அவர், ஜோக்ஜாவின் மேயருக்கு (நகரசபைத் தலைவர்) அன்புடன் ஓர் அறிமுகக் கடிதம் கொடுத்தார்.

"நானும் உங்களுடன் ஜோக்ஜாவுக்கு வருகிறேன்" என்றார் ரங்கநாதன். அவர் இந்தோனேஷ்யா வந்து ஒரு



மாதம் ஆகிறது. இந்தோனேஷ்ய மொழியில் தமக்குப் போதிய அறிவு இருப்பதாகக் கூறினார். இந்தோனேஷ்ய மொழியில் அவருக்குள்ள அறிவை விட அவருடைய தைரியம்தான் அதிகம். இருவரும் விமான நிலையம் சென்றோம்.

விமானத்தில் பெரும்பாலோர் இந்தோனேஷ்யர். எங்களுக்குச் சிறிது தூரத்தில் வயதான ஓர் இந்தோனேஷ்யர் உட்கார்ந்திருந்தார். அவருடைய முகம் பிரகாசமாக இருந்தது. தாடி வளர்த்திருந்தார். என்னருகிலிருந்த இந்தோனேஷ்யரை, "தாடி வளர்த்திருப்பவர் யார்?" என்றுகேட்டேன். அதற்கு அவர், "அவர் இந்த நாட்டிலுள்ள சிறந்த அறிவாளிகளில் ஒருவர்; ஆனால் கம்யூனிஸ்டு" என்றார்.

விமானம் பாண்டுங் என்ற இடத்தில் அரை மணி நேரம் நின்றது. எல்லோரும் கீழே இறங்கிச் சென்று இளைப்பாறினோம். ஐரோப்பாவிற்கு பாரிஸ் எப்படியோ அப்படி இந்தோனேஷ்யாவிற்கு பாண்டுங். இந் நகரம் கேளிக்கைகளுக்கும், களியாட்டங்களுக்கும், சுவையுள்ள உணவுக்கும் பேர் பெற்றது. அது மட்டுமல்ல; பாண்டுங் சமுத்திர மட்டத்திலிருந்து சுமார் மூவாயிரம் அடி உயரத்திலிருப்பதால், குளிர்ச்சியாக இருக்கும். இந்தோனேஷ்யா போன்ற உஷ்ணப் பிரதேசத்தில் குளிர்ச்சி ஒரு வரப் பிரசாதம்.

பாண்டுங் விமான நிலையத்தில் பலர் இறங்கினர். புதிதாகப் பலர் ஏறினர். தாடி வளர்த்திருந்த இந்தோனேஷ்யர் தற்செயலாக என்னருகில் உட்கார்ந்தார். அன்புடன் புன்னகை செய்தார். இருவரும் ஒருவரை ஒருவர் அறிமுகம் செய்துகொண்டோம். அவருடைய பெயர் காசக்ரோ. இந்தோனேஷ்யாவின் உயர்ந்த பண்பாட்டைக்

குறித்தும், கலைச் செல்வத்தைக் குறித்தும் பெருமையுடன் விளக்கிக் கூறினார். அவருடைய அரசியல் கொள்கை என்னவென்று எனக்குத் தெரியாது. நான் கேட்கவும் இல்லை. "கவிஞர் ரவீந்திரநாத தாகூர் இந்தோனேஷ்யா வந்திருந்த பொழுது இப்பகுதிகளை அவருக்குக் காட்டும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது" என்றார் கா சக்ரோ.

அன்பர் ரங்கநாதனும் நானும், விமான நிலையத்திலிருந்து நேராக 'ஹோட்டல் கருடா'வுக்குச் சென்றோம். ஜோக்ஜாவிலேயே செல்வாக்குள்ளதும் வசதியானதும் இந்த ஹோட்டல்தான்.

உடனே ஜோக்ஜாவின் மேயருக்கு டெலிபோன் செய்தோம். எப்பொழுது வேண்டுமானாலும் வரலாம் என்றார் மேயர். அரை மணி நேரத்தில் வருவதாகக் கூறினோம்.

மேயரைப் பார்க்கப் போகிறோமல்லவா? ஆகையால் எங்களிடமிருந்தவற்றில் நல்ல உடைகளை அணிந்து கொண்டோம்.

புறப்படுமுன் ஹோட்டல் நிர்வாகியிடம் சென்று, "நாங்கள் மேயரைப் பார்க்கச் செல்கிறோம்; சாப்பாட்டுக்குத் திரும்பி வர ஒருவேளை நேரமாகலாம்" என்று கூறினோம்.

அதற்கு அவர், "சாப்பாட்டைப் பற்றிய கவலையே உங்களுக்கு வேண்டாம். நேற்று முதல் இந்த ஹோட்டலில் வேலை நிறுத்தம். யாருக்குமே உணவு கிடையாது. ஹோட்டல் சொந்தக்காரர் நடந்து கொள்வது அக்கிரமம். என்னுடைய அனுதாபம் எல்லாம் வேலை நிறுத்தம் செய்துள்ள ஏழைத் தொழிலாளருடன். அவர்களுடன் சேர்ந்து வேலைநிறுத்தம் செய்ய எனக்குத் தைரியமில்லை. நான் ஒரு கோழை" என்றார்.



"எங்களுடைய அனுதாபமும் தொழிலாளரிடம் தான்; ஆனால் சாப்பாட்டுக்கு என்ன செய்வது?" என்று கேட்டோம். ஜோக்ஜாவில் உள்ள சிறந்த உணவுச்சாலைகளின் பெயர்களை அவர் எங்களுக்குக் கூறினார்.

ஹோட்டலில் உள்ள தொழிலாளர், ஹோட்டலில் இருந்தவாறே வேலைநிறுத்தம் செய்தனர். ஆனால் அனைவரும் மிக அமைதியாக நடந்துகொண்டார்கள். ஒன்றிரண்டு தொழிலாளர்கள் எங்களை அணுகி, தங்களின் குறைகளைக் கூற முயன்றனர். அவர்கள் எப்பொழுதும் புன்முறுவல் பூத்த முகத்துடன், அடக்கமாக நடந்துகொண்டார்கள். அவர்களது குறைகள் சரியா, தவறா என்பது எங்களுக்குத் தெரியாது. ஆனால் வேலை நிறுத்தத்தின்போது அவர்கள் நடந்துகொண்ட முறை பாராட்டத் தக்கதாக இருந்தது.

குறிப்பிட்ட நேரத்தில் நகர சபையை அடைந்தோம். அங்கிருந்த அதிகாரி ஒருவர் எங்களை மேயரின் அறைக்குள் அழைத்துச் சென்றார். கொண்டு வந்த அறிமுகக் கடிதத்தை மேயரிடம் கொடுத்தேன்.

மேயர் ஓர் இளைஞர்; சுதந்திரப் போராட்டத்தில் பங்கு கொண்டவர் என்றும், நல்ல அறிஞர் என்றும் கேள்விப்பட்டேன். அவர் சுத்தமான எளிய உடை அணிந்திருந்தார்; கால் சட்டையும், அரைக்கைச் சட்டையும் தான். ஆனால் கால்சட்டையில் காலணா அளவில் ஒரு கிழிசல் இருந்தது. அதனை அவர் பொருட்படுத்தாமல் இருந்தது தான் எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

இந்தோனேஷ்யருக்கு இயற்கையாக அமைந்துள்ள அன்புடனும் அடக்கத்துடனும் எங்களை அவர் வரவேற்றார். தமது நண்பர் ஒருவரை எங்களுடன் அனுப்பி, நகரத்தையும், பிரபலமான சுல்தான் அரண்மனையையும்

காட்டும்படி ஏற்பாடு செய்தார். அவருடைய காரிலேயே எங்களை அழைத்துச் சென்றனர்.

அரண்மனையை, 'கிராடோன்' என்று சொல்லுவர். அரண்மனையின் உள்ளே சென்று பார்க்க விசேஷ அனுமதி வேண்டும். எனவே, அரண்மனைக் காரியாலயத்துக்குச் சென்று அனுமதிச் சீட்டுப் பெற்றோம்.

நமது நாட்டிலிருந்த மகாராஜாக்களைப் போல அந்த நாட்டில் சுல்தான்கள். ஜோக்ஜாவின் சுல்தான் ஜனநாயக வாதி. இந்தோனேஷ்யாவின் சுதந்திரத்துக்குப் பாடுபட்டவர்களில் ஒருவர். அப்பொழுது அவர் சுதந்திர இந்தோனேஷ்யாவின் மந்திரிகளில் ஒருவராக ஜாகர்தாவிலிருந்தார்.

கலைகளுக்கு இருப்பிடம் ஜோக்ஜா. கலையை வளர்த்தவர்களில் ஜோக்ஜாவின் சுல்தான்கள் குறிப்பிடத்தக்கவர்கள். அரண்மனை பெரிது. மதிற்சுவர்களையும் பல வாயில்களையும் தாண்டி உள்ளே சென்றோம். சுல்தான்களின் கொலு மண்டபம், விருந்தினரை வரவேற்கும் மண்டபம் முதலிய இடங்களைப் பார்த்தோம். இந்த மண்டபத்திலுள்ள மரச் சித்திர வேலைப்பாடு மிக அபூர்வமானது. இந்த மண்டபங்களைச் சுற்றிலும் சோலைகள்.

சங்கீத மண்டபத்துக்குச் சென்றோம். அரண்மனை வித்துவான்கள் பாடினர். சில நடனமாதர் அங்கிருந்தனர். அவர்கள் மேடை மீது ஏறி, வித்துவான்கள் அருகில் சென்றபோது, மரியாதையின் அடையாளமாக முழங்கால்களால் தவழ்ந்து சென்றார்கள் என்றே தோன்றியது.

ஒவ்வொரு ஆண்டிலும் சங்கீத விழாவும் நடனங்களும் நடைபெறும் பொழுது, அரண்மனை வாயிலை அனைவருக்கும் திறந்து விடுவார்களாம். அப்பொழுது பல்லாயிரக் கணக்கான மக்கள், அரண்மனைக்குள் வந்து



மிக அமைதியாக இருப்பார்கள் என்றும், விழா முடிந்ததும் மக்கள் அனைவரும், ஒழுங்காகவும் விரைவாகவும் அகன்று விடுவார்கள் என்றும் ஓர் அன்பர் கூறினார்.

ஜோக்ஜாவின் பெருமைக்கு மற்றொரு காரணம். இங்கேதான் டாக்டர் சுகர்ணோ முதன் முதலாக சுதந்திர இந்தோனேஷ்யக் குடியரசின் தலைவராகப் பிரமாணம் எடுத்துக் கொண்டார். 1946 முதல் 1950 வரை ஜோக்ஜா தான் சுதந்திர இந்தோனேஷ்யாவின் தலைநகர். நாட்டில் நடைபெற்ற சுதந்திரப் போராட்டத்தின் தலைமை ஸ்தானமும் இது தான்.

இந் நகரில், சதுர மைலுக்கு 1200 பேர் விகிதம் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். மாலை நேரத்தில் கடைத் தெரு ஒரு ஜன சமுத்திரமாகவே காட்சியளிக்கும்.

கஜமாதா என்ற பெரிய சர்வகலாசாலை ஜோக்ஜாவை அணி செய்கிறது. இங்கே ஆயிரக் கணக்கான மாணவ மாணவிகள் பல கலைகளும் பயில்கின்றனர்.

இந்தோனேஷ்யாவிலேயே நடனக் கலைக்குப் பேர் பெற்ற சோலோ என்னும் பட்டணம், இந் நகருக்கு அருகே இருக்கிறது.

பிரபலமான உணவுச்சாலை ஒன்றுக்குச் சென்றோம். இந்தோனேஷ்யர் பிரியமாகச் சாப்பிடும் உணவு 'நாஸி கோரெங்.' இது நமது நாட்டுப் 'புலாவ்' மாதிரி இருக்கும். 'காடோ காடோ' என்பது பெரும்பாலும் காய்கறிகளால் ஆன உணவு.

மறு நாள் காலையில், பெரம்பானன், பொரபுதூர் முதலிய இடங்களுக்குச் செல்ல ஏற்பாடு செய்தோம்.

ஹோட்டலை விட்டுப் புறப்படு முன், நல்ல காபி வேண்டும் என்று கூறினேன். வேலை நிறுத்தம் நடந்த

போதிலும், வேலைக்காரர் எங்களுக்கு உதவி செய்ய முன் வந்தனர். ஹோட்டலுக்கு எதிரிலிருந்த ஒரு சிற்றுண்டிச் சாலையில் காபி வாங்கி வரச் சொல்லும்படி அன்பர் ரங்கநாதனிடம் கூறினேன். அவருக்கு எவ்வளவு தூரம் அந் நாட்டு மொழி தெரியும் என்று இப்பொழுது தெரிந்து விடுமல்லவா?

அவர் வேலைக்காரரைக் கூப்பிட்டு, 'காபி குரு' என்று சொல்லி, தமது நெருப்புப் பெட்டியை எடுத்து ஒரு குச்சியைக் கொளுத்தினார்.

எங்களுக்குச் சூடான பால்காபி வேண்டும். அன்பர் ரங்கநாதனுக்குப் பால் காபி என்று தான் சொல்லத் தெரியும். 'சூடு' என்று சொல்லத் தெரியாது; தெளிவாகச் சொல்லாவிட்டால், ஐஸ் போட்ட காபியைக் கொண்டு வந்து விடுவார்கள். எனவே, ரங்கநாதன் காபி வேண்டும் என்றுசொல்லும் பொழுது ஒவ்வொருமுறையும் தீக்குச்சியைக் கொளுத்துவார்.

அவசியத்தை முன்னிட்டு, 'சூடு' என்பதற்கு உள்ள வார்த்தையைக் கற்றுக் கொண்டேன். கஷ்டம் ஒன்றும் இல்லை. 'பனாஸ்' என்றால் சூடு. 'காபி குரு பனாஸ்' என்றால் சூடான பால் காபி.

# கல் சொல்லும் கதை

ஜோக்ஜாவுக்குச் செல்லும் யாத்திரிகர்களில் பெரும்பாலோர், பெரம்பானனுக்கும், பொரபுதூருக்கும் செல்லாமல் இருப்பதில்லை. ஜோக்ஜா நகரிலேயே, யாத்திரிகர்களுக்கு உதவி செய்யும் காரியாலயம் ஒன்றை இந்தோனேஷ்ய அரசாங்கத்தார் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இவர்களின் ஆலோசனையும் உதவியும் பெற்றுச்செல்லுவது தான் சௌகரியமானது. இந்த இடங்களை மோட்டாரில் கூட்டிச்சென்று காண்பிப்பதற்கு, யாத்திரிகர் ஒருவருக்கு கட்டணம் இவ்வளவு என்று நிர்ணயித்திருக்கிறார்கள். வழி காட்டுவதுடன், விளக்கிச் சொல்லுகிறவர் ஒருவரையும் யாத்திரிகரோடு அனுப்புகிறார்கள்.

அன்பர் ரங்கநாதனும் நானும் இந்தக் காரியாலயத்தார் உதவி பெற்றே சென்றோம். அன்று எங்களைத் தவிர யாத்திரிகர் வேறு யாருமில்லை. எங்களுக்கு வழி காட்டியாக வந்தவர், இலங்கையில் பிறந்த சிங்களவர். இந்தோனேஷ்யப் பெண் ஒருத்தியை மணந்துகொண்டு, அந் நாட்டிலேயே தங்கிவிட்டார். நாங்கள் புரிந்துகொள்ளக்கூடிய அளவில், அவர் நன்றாகத் தமிழ் பேசினார்.

ஜோக்ஜாவிலிருந்து பத்து மைல் தூரத்தில் இருக்கிறது பெரம்பானன். இங்கு பல கோயில்கள் இருக்கின்றன. இவைகளுக்கு 'லாரா ஜங்க்ராங் கோயில்கள்' என்று பெயர்.

ஒன்பதாவது நூற்றாண்டின் ஆரம்பம் வரையில், பௌத்த மன்னர்கள் ஜாவாவை ஆட்சி செய்தனர்.

அவர்களுக்குப் பின் வந்த சைவ மன்னரே, இக் கோயில்களைக் கட்டியிருக்க வேண்டுமென்று தெரிகிறது. சைவ மன்னர்களின் வீழ்ச்சிக்குப் பின்னர், இக் கோயில்கள் எல்லாம் பாழடைந்தன.

1885-ஆம் ஆண்டில்தான், இரண்டு டச்சுக்காரர், இந்தக் கோயில்களைப் பற்றி ஆராய்ச்சி செய்து, பாழடைந்த இக் கோயில்களைச் சீர்ப்படுத்திப் புதுப்பிக்க யோசனை கூறினர். 1918-ஆம் ஆண்டுக்குப் பிறகுதான், புதை பொருளாக இருந்து தோண்டியெடுத்த கற்களைக் கொண்டு பிரதான கோயிலை நிர்மாணிக்க ஆரம்பித்தனர். பலநாள் வேலை நடந்து, 1938-ஆம் ஆண்டில் இது பூர்த்தியாயிற்று. இரண்டாவது உலக மகா யுத்தத்திற்குப் பிறகு சுதந்திர இந்தோனேஷ்ய அரசாங்கம், அதிகப் பணச் செலவு செய்து, பழைய முறையில் இந்தக் கோயில்களை நிர்மாணித்தும், பழுது பார்த்தும் வருகின்றது. சரித்திரப் பொருள்களைப் பாதுகாக்கும் எண்ணமும், இந்தியாவின் நல்லுறவைப் பலப்படுத்த வேண்டுமென்ற ஆர்வமுமே இதற்குக் காரணமாகும்.

இந்தக் கோயில், சைவ ஆகமத்தின் பிரகாரம் கட்டப் பெற்றதாகத் தெரிகிறது. ஆராய்ச்சியாளர் கூற்றின்படி இந்தக் கோயிலுக்கு மூன்று பெரிய பிராகாரங்கள் சதுர வடிவில் இருந்தன. முதலாவது பிராகார மதிலின் ஒரு புறம் 1300 அடி. இரண்டாவது மதிலின் ஒரு புறம் 740 அடி. மூன்றாவது மதிலின் ஒரு புறம் 370 அடி.

தற்பொழுது, மூன்றாவது மதிலில் பாதிதான் இருக்கிறது. இரண்டாவது மதிலின் அஸ்திவாரங்களை நாம் இன்னும் பார்க்கலாம். முதலாவது மதில் அடியோடு காணாமற் போய்விட்டது. ஆனால் முதலாவது மதிலின் தெற்குப்புற வாயிலைத் தோண்டி எடுத்திருக்கிறார்கள்.



இவ்வளவு பெரிய இடத்தில் எந்த மாதிரிக் கட்டிடங்கள் இருந்திருக்கும் என்பது ஊகமே யாகும். கோயில் அர்ச்சகர் விடுதிகள், விருந்தினர் விடுதிகள், சைவ ஆகம பாடசாலை, பசு மடம், நந்தவனம், சாதுக்கள் மடம் முதலியன இங்கு இருந்திருக்க வேண்டும். மூன்றாவது மதிலுக்குள் உள்ள பெரிய ஆலயங்களைத் தவிர, வெளிப்புறங்களில் 224 சிறு கோயில்கள் இருந்தன வென்றும், அவை முற்றிலும் அழிந்து விட்டனவென்றும் தெரிகிறது. சைவ சித்தாந்தத்தில் கூறியுள்ளதையொட்டி இந்த 224 சிறு கோயில்கள் கட்டியிருக்கக் கூடும் என்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.

மூன்றாவது மதிலுக்குள் செல்வோம். எல்லா மதில்களுக்கும் நான்கு புறமும் வாயில். ஆனால் கிழக்குப் புறமுள்ளதுதான் பிரதான வாயில். மூன்றாவது மதிலுக்கு உள்புறத்தில் எட்டுக் கோயில்கள் இருக்கின்றன. மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி மூன்று கோயில்கள். அவற்றுக்கு எதிர்ப்புறமாக, கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி மூன்று கோயில்கள். இந்த ஆறு கோயில்களை நோக்கியவாறு வடக்கிலும் தெற்கிலும் ஒவ்வொரு கோயில்.

மேற்கே இருந்து கிழக்கு நோக்கி அமைந்துள்ள மூன்று கோயில்களில், மத்தியில் உள்ளது சிவன் கோயில். இந்தப் பிரதான கோயில், 100 அடி சதுரமும் 157 அடி உயரமும் உள்ளது.

சிவன் கோயிலுக்கு இரு புறத்திலும், பிரமாவுக்கும், விஷ்ணுவுக்கும் கோயில்கள் அமைத்திருக்கிறார்கள். இவை ஒவ்வொன்றும் 66 அடி சதுரமும், 100 அடி உயரமும் உள்ளவை.

சிவன் கோயிலுக்கு எதிரே உள்ள நந்தி எம்பெருமான் கோயில் 50 அடி சதுரமும், 80 அடி உயரமும் உள்ளது.

இதர கோயில்கள் எல்லாம், பெரும்பாலும் 20 அடி சதுரமும், 46 அடி உயரமும் உள்ளவை.

இந்தியாவுக்கு வெளியிலே சிவபெருமானுக்குச் சைவ ஆகமத்தின்படி அமைக்கப் பெற்றுள்ள பெரிய ஆலயம் இதுதான் என்று கூறலாம். இக் கோயில் நான்முக அமைப்பு. நான்கு புறத்திலும் படிகள் உண்டு.

கிழக்குப் புறமுள்ள படிகளின் வழியாக நாம் சென்று வலம் வரவேண்டும். பிராகாரம் முற்றிலும், சுவர்களில் ராமாயணக் காட்சிகளையே காண்கிறோம். ராமனின் இளமைப் பருவ முதல், வானர சேனைகள் இலங்கைக்குப் பாலம் கட்டும் வரையில் உள்ளவையே இந்தக் கோயிலில் உண்டு. இதன் தொடர்ச்சியை அடுத்தாற்போலுள்ள பிரமன் கோயிலில் காண்கிறோம்.

மூலஸ்தானமண்டபத்தின் முன், வாயிற்காப்போரின் இரு சிலைகளைப் பார்க்கிறோம். அவை முறையே மகா காலாவும் நந்தீஸ்வராவும்.

மூலஸ்தானத்திலுள்ள மூர்த்தியின் பெயர் மகாதேவா. இந்த மூர்த்திக்கு நான்கு கை. மூன்று கண். தலையில் உள்ள சடைமுடியில் பிறைச் சந்திரனும் மண்டை ஓடும். ஆக்கல் அழித்தலின் சின்னங்கள். வலது புறத்தில் திரிசூலம்.

விநாயகர், அகஸ்திய முனிவர், துர்க்கை அம்மன் ஆகிய மூவருக்கும், சிவன் கோயிலிலேயே தனித்தனி சந்நிதிகள் உண்டு. இவை மூலஸ்தானத்துக்கு மேற்கிலும், வடக்கிலும் தெற்கிலும் அமைக்கப் பெற்றிருக்கின்றன.

துர்க்கை அம்மன் எட்டுக் கரங்களுடன், மகிஷாசுரனை வதம் செய்யும் தோற்றத்தில் காட்சியளிக்கிறாள்.

துர்க்கை அம்மனைக் குறித்து, இந் நாட்டில் ஒரு புராணக் கதை உண்டு. துர்க்கை அம்மனை 'லாராஜங்க்ரங்'





பெரம்பானன் கோயில் அமைப்புப் படம்

1. பிரமா
2. விஷ்ணு
3. சிவா
4. அகஸ்தியர்
5. கணேசர்
6. துர்க்கை
7. நந்தி

மற்றும் சில சந்நிதிகள்

அதாவது 'மெல்லிடைக் குமரி' (Slender Girl) என்றழைப்பார்கள். இக் கோயில்கள் எல்லாவற்றையும் இந்த 'லாரா ஜங்க்ரங்' என்றே குறிப்பிடுகிறார்கள்.

கதை இதுதான்: லாரா ஜங்ரங்க், ஒரு பெரிய அரக்க மன்னனான ராட்டு பாகாவின் மகள். பாண்டுங் என்ற இளைஞன் லாராவை மணம் செய்து கொள்ள ஆசைப்பட்டான். அதனை மறுப்பதற்கு லாரா அஞ்சினாள். ஆயிரம் சிலைகள் கொண்ட ஒரு கோயிலை, ஒரே இரவில் அவன் நிர்மாணித்தால், அவனை மணம் செய்துகொள்வதாகக் கூறினாள் லாரா. பாண்டுங் சம்மதித்தான். அவனுக்குச் சித்திரக்குள்ளரில் திறமையுள்ள நண்பர்கள் பலர் உண்டு. அவர்கள் உதவியால் அநேகமாக வேலை பூர்த்தியாயிற்று. நிச்சயமாகச் செய்யவே முடியாது என்று நினைத்த ஒரு காரியத்தை, பாண்டுங் பொழுது புலர்வதற்குள் செய்து முடித்து விடுவான் என்று லாராவுக்குத் தெரிந்தபொழுது, அவள் ஆத்திரமடைந்தாள். தனது தந்திரத்தினால், ஆயிரம் சிலைகளில் ஒரு சிலை குறையுமாறு செய்தாள் லாரா. பாண்டுங், இதனைக் கண்டு கோபமடைந்து, தனது மந்திர சக்தியினால், அரசிளங் குமரியான லாராவை ஒரு கல்லாகச் சமைத்து விட்டான். லாராவின் சிலையைச் சேர்த்து மொத்தம் ஆயிரம் சிலைகளாகிவிட்டன. அந்த லாரா இப்பொழுது, கம்பீரமாகக் கோயில்கொண்டிருக்கிறாள்.

துர்க்கை அம்மனுக்கு அபூர்வமான சக்தி இருப்பதாக மக்கள் நம்புகின்றனர். கணவனை விரும்பும் கன்னிப் பெண்களும், குழந்தைகளை விரும்பும் தாய்மார்களும் இங்கே வந்து அம்மனை வழிபடுவார்களாம்.

பிரமாவின் கோயிலில், ராமாயணக் காட்சிகளைத் தொடர்ந்து பார்க்கிறோம். ராம-ராவண யுத்தம் நடைபெறுகிறது. ஆனால் கும்பகர்ணன் இன்னும் உறங்கிக் கொண்டே இருக்கிறான்.



பிரமாவின் சிலையுடன், இன்னும் தாடியும் சடை முடியும் தரித்தவர்களின் இருபத்தேழு உருவங்கள் காணப்படுகின்றன. இந்த இருபத்தெண்மரும் 'வேதத்தின் ஆசிரியர்கள்' என்று கூறப்படுகிறது.

மூலஸ்தானத்திலுள்ள பிரமன் நான்கு தலைகளுடனும் எட்டுக் கைகளுடனும் காட்சியளிக்கிறார்.

சிவன் கோயிலிலும், பிரமா கோயிலிலும் பிராகாரங்களில், ராமாயணக் காட்சிகளைக் கண்டோம். விஷ்ணு கோயிலில் எல்லாம் கிருஷ்ணுயனக் காட்சிகள்—கிருஷ்ண லீலைகள்.

மூல விக்கிரகமான விஷ்ணு மூர்த்தி நான்கு கைகளுடனும், தலையில் கிரீடத்துடனும், கைகளில் சங்கு சக்கரத்துடனும் காட்சியளிக்கிறார்.

நந்தி எம்பெருமான் கோயிலில் பெரிய நந்தியையும், சூரிய சந்திரர்களையும் சிலையில் காண்கிறோம். சூரிய தேவன் ஏழு குதிரைகள் பூட்டிய ரதத்திலும், சந்திரன் பத்துக் குதிரைகள் பூட்டிய ரதத்திலும் சவாரி செய்வதைப் பார்க்கிறோம்.

இன்னும் பல சிறு கோயில்கள். கோயில்களில் உள்ள எல்லா வளைவுகளுக்கும், 'டோரனஸ்' தோரணங்கள் என்று பெயர்.

கோயில்கள் என்றால், இங்கு ஆராதனை ஒன்றும் கிடையாது. இந்தக் கோயில்கள் அனைத்தும், பழைய சரித்திரத்தையும் பண்பாட்டையும் விளக்கும் காட்சிப் பொருள்களே யாகும்!

கலைத் திறமைக்கு உலகப் பிரசித்தி பெற்றவைகளில் ஒன்று பொரபுதூர். பொரபுதூர் ஸ்தூபி, இந்தியாவில் சாஞ்சி என்ற இடத்திலிருக்கும் ஸ்தூபியைப் போன்றது.

பொர என்பது விகாரா என்ற வடமொழியின் திரிபு. விகாரா என்பதற்கு மடம் என்று அர்த்தம். புதூர் இந்தோனேஷ்ய மொழியில் குன்று. எனவே பொர புதூர் குன்றின் மீதுள்ள மடம்.

ஜோக்ஜாவிலிருந்து, பொரபுதூர் முப்பது மைல் தூரந்தான். பிராகா, எலோ எனும் இரு நதிகளும் சேரும் இடத்திற்கு அருகில் இந்த ஸ்தூபி அமைந்திருக்கிறது. பிராகா என்பது பிரயாகை என்ற வார்த்தையின் சிதைவு.

இந்த மடத்தில் உள்ள சில கல்வெட்டுகள் பழைய காலத்து ஜாவா எழுத்தில் இருக்கின்றன. இந்தப் பழைய ஜாவா எழுத்து தென்னிந்தியாவிலிருந்த பல்லவர் காலத்து எழுத்திலிருந்து தோன்றியதாகும். இக் கல்வெட்டுகளின் படி, பொரபுதூர் கி. பி. 760-ஆம் ஆண்டில்—அதாவது சுமார் ஆயிரத்து இருநூறு ஆண்டுகளுக்கு முன் கட்டப் பெற்றது. இதைக் கட்டிய பௌத்த மன்னர் கலேந்திரா என்று தெரிகிறது.

ஜாவாவில் இஸ்லாம் மதம் பரவத் தொடங்கியபோது பொரபுதூரில் உள்ள பௌத்த சந்நியாசிகள் பயந்து, இந்த ஸ்தூபி முழுவதையும் மணலைக் கொட்டி மூடிவிட்டார்கள். அது ஒரு மணல் மேடாகவே பல காலம் இருந்தது. பின்னர், சென்ற நூற்றாண்டில்தான், புதைபொருள் ஆராய்ச்சியாளர் இதனைக் கண்டுபிடித்தனர். இந்த ஸ்தூபி, ஆரம்பத்தில் கட்டியபடியே இருக்கிறதென்றும், ஒன்றும் சேதமடையவில்லையென்றும் தெரிகிறது.



புத்த பகவானின் அஸ்தியைப் புதைத்து, அதன் மீதே இந்த ஸ்தூபியை அமைத்திருப்பதாகக் கூறுகிறார்கள்.

இந்தியாவிலுள்ள சாஞ்சி ஸ்தூபி இரண்டாயிரத்து நூறு ஆண்டுகளுக்கு முன் கட்டப் பெற்றது. பொர புதூருக்கும் சாஞ்சிக்கும் தோற்றத்தில் பெரிய வித்தியாசம் உண்டு. சாஞ்சியைப் போல அல்லாமல், பொர புதூரில் சதுரமாகத் தளங்கள் அமைத்திருக்கிறார்கள்.

பொரபுதூரில் மொத்தம் ஒன்பது அடுக்கு வரிசை கொண்டவை. முதல் ஆறு அடுக்குகள் சதுர வடிவம். கடைசி மூன்றும் வட்ட வடிவம். உச்சியில் தாமரை மலர் குவிந்திருப்பதுபோன்ற ஸ்தூபி.

மேலே வட்டத்தில் உள்ள மூன்று வரிசையிலும் சித்திர வேலைப்பாடே கிடையாது. கலைத் திறமை முழுதும் கீழே உள்ள சதுர வடிவமான அடுக்குகளில்தான்.

வட்டமாக உள்ள மூன்று வரிசைகளில் எல்லாம் ஸ்தூபிகள். மொத்தம் அறுபத்து நான்கு. ஒவ்வொன்றிலும், ஒவ்வொரு புத்தர்பிரான் திருவுருவம்.

பௌத்த மதத்தில் முக்கியமான பிரிவு இரண்டு. ஒன்று ஹீனயானம்; மற்றொன்று மகாயானம். பொரபுதூர் மகாயானப் பிரிவைச் சேர்ந்த ஸ்தூபி.

பொரபுதூரில் உள்ள முக்கியமான ஆறு புத்தர்கள்:

1. அக்ஷோபயா — நிலத்தைத் தொடும் வண்ணமிருக்கும் புத்தர்.
2. ரத்னசாம்பவா— வரமளிக்கும் புத்தர்.
3. அமிதாம்பா — தியான புத்தர்.
4. அமோகசித்தா— அபயமளிக்கும் புத்தர்.
5. வைராச்சன — அறிவு அளிக்கும் புத்தர்.
6. தியான புத்தர்— தர்ம சக்கரம் சுழற்றும் புத்தர்.



பொரபுதூர் ஸ்தூபியின் தோற்றம் (ஆகாய விமானத்திலிருந்து)



இந்தோனேஷ்யாவில் மிகப் பிரபலமான பொதிஸத்வர் அவலோகிதீஸ்வரா. இவருக்கு பொரபுதூருக்கு அருகில், தனியாகவே சிறு கோயில் அமைத்திருக்கின்றனர்.

பொரபுதூர், கலைச் செல்வங்கள் நிரம்பியிருப்பினும், வெளிப்பார்வைக்குக் கவர்ச்சியாக இல்லை என்றும், ஒரு கிண்ணத்தைக் கவிழ்த்து வைத்திருப்பதைப்போல தமக்குத் தோன்றுகிற தென்றும், கவியரசர் ரவீந்திரநாத தாகூர் எழுதியிருக்கிறார்.



பொரபுதூர் ஸ்தூபியின் அமைப்புப் படம்

கிழக்கு வாயில் வழியாக நாம் உள்ளே சென்று வலம்வர வேண்டும். இம்மாதிரி அடுக்கடுக்காக உள்ள

ஒவ்வொரு தளமாக ஏறிச் சுற்றிவர வேண்டும். சதுரமாக உள்ள தளங்கள் அனைத்திலும், பிராகாரச் சுவர்களில், புத்தர்பிரானின் வாழ்க்கை வரலாற்றை நூற்றிருபது காட்சிகளாகக் கல்லில் செதுக்கி இருக்கிறார்கள். இதனைப் பார்த்து ஆனந்திக்கப் பல மணி நேரம் செல்லும்.

புத்தர்பிரானின் அருள் வாழ்க்கையின் காட்சிகளைத் தவிர, இடையிடையே மற்றும் சில காட்சிகள் உண்டு.

அதில் ஒரு காட்சி, சமுத்திரத்தில் கப்பல் மூழ்கி விடுகிறது. சுமார் ஏழு வானரங்கள், ஒரு தோணியில் ஏறிக் கரைக்கு வருகின்றன.

இக் காட்சியில் மட்டும், இந்த வானரங்களுக்குக் குங்குமம் வைத்திருந்தார்கள். இதைப் பற்றிக் கேட்ட பொழுது, எங்களுடன் வந்த சிங்களவர் சொன்னார்: "இந்த வேடிக்கையைப் பாருங்கள். இக் காட்சியில் உள்ள கதை விளங்காத பாமர மக்கள், இங்கு வந்து இச் சிலைகளுக்குக் குங்குமம் இட்டுப் பூஜை செய்கிறார்கள். பெரும்பாலும் குழந்தை இல்லாதவர்கள்தான் இங்கு வந்து பூஜை செய்கிறார்கள்."

மற்றொரு காட்சியில் இருவர் நிற்கிறார்கள். எதிரே ஒரு மான், தனது தலையை இவர்களுக்கு எதிர்ப்புறமாகத் திருப்பிக்கொண்டு நிற்கிறது.

சிங்களவர் கூறிய கதையை ஆவலுடன் கேட்டோம். அந்தக் கதை இதுதான் :

ஒரு காட்டில் ஒரு வழிப்போக்கர் சென்றார். வழி தவறி விட்டது. இருட்டும் சமயம். மனித அரவமே கிடையாது. "பக்கத்து ஊருக்கு வழி காட்டுபவர் யாருமில்லையா?" என்று உரக்கக் கதறினார் வழிப்போக்கர்.



பொரபுதூர் பிராகாரத்திலுள்ள சிற்பங்கள்



பசாக்கியா கோயில்

"வழிப்போக்கரே! நேராகக் கிழக்கே சென்றால் ஓர் ஆறு எதிர்ப்படும். ஆற்றைக் கடந்தால் பெரிய நகரம் ஒன்றுண்டு" என்ற குரல் கேட்டது. திரும்பிப் பார்த்தார். அது ஒரு பொன் மான். பொன் மானை இவர் இதற்கு முன் கண்டதில்லை; பேசக் கேட்டதும் இல்லை.

"பொன் மானே! உன்னுடைய உதவி மிகப் பெரிது. அதற்கு நான் ஏதேனும் கைம்மாறு செய்ய ஆசைப்படுகிறேன்" என்றார் வழிப்போக்கர்.

அதற்கு அந்தப் பொன் மான், "ஐயா, வழிப் போக்கரே! மனிதர்கள் மீது எனக்கு நம்பிக்கையே கிடையாது. நீர் எனக்கு ஒன்றும் பிரதி உபகாரம் செய்ய வேண்டாம். பொன் மான் ஒன்றைப் பார்த்ததாக நீர் வெளியே சொல்லாமலிருந்தால், அதுவே போதும்" என்றது.

வழிப்போக்கர் ஆற்றைக் கடந்து அடுத்த நகரம் சென்றார். இரண்டு நாளாக அவருக்கு அன்ன ஆகாரம் கிடைக்கவில்லை. சோர்ந்து படுத்துவிட்டார்.

அந்த ஊர் அரசி ஒரு பொன் மான் வேண்டுமென்று தமது கணவனிடம் கூறினார். அரசியின் விருப்பத்தை நிறைவேற்றாத அரசனும் உண்டோ?

"பொன் மான் கொண்டு வருபவர்களுக்கு, அல்லது அது இருக்கும் இடத்தைக் காட்டுபவர்களுக்கு ஆயிரம் பொன் பரிசு" என்று அரசன் பறையறைவித்தான்.

இது வழிப்போக்கர் காதில் விழுந்தது. ஆயிரம் பொன்! பட்டினி கிடப்பவருக்கு இவ்வளவு செல்வம் சாமானியமா? பொன் மானைக் கண்டதாக வழிப்போக்கர் அரசனிடம் சென்று கூறினார். அரசன் நம்பவே இல்லை. வழிப்போக்கர் அரசனைக் காட்டுக்கு அழைத்துச் சென்றார்.

பொன் மான் அங்கே தென்பட்டது. அரசனும் வழிப் போக்கரும் அருகில் சென்றார்கள். பொன்மான் அரசன் முகத்தைப் பாராமல், தனது தலையைத் திருப்பி வைத்துக் கொண்டது.

"மானே, உனக்கு நான் என்ன தீங்கு செய்தேன். என் முகத்தைப் பாராமல் நீ திரும்பிக் கொள்ளக் காரணமென்ன?' என்றான் அரசன்.

"அரசே, தங்களைப் பார்க்க வெட்கமில்லை; ஆனால் தங்களுடன் இருக்கிறாரே, வழிப்போக்கர்–சொன்ன சொல்லைக் காப்பாற்றாதவர்–அவரைப் பார்க்கத்தான் வெட்கப் படுகிறேன்" என்றது பொன் மான்.

அரசன், விஷயத்தை விசாரித்துத் தெரிந்துகொண்ட பிறகு பொன் மானை ஒன்றும் செய்யாமல், சுதந்திரமாகத் திரியும்படி விட்டு விட்டான்; வழிப்போக்கருக்குக் கடுமையான தண்டனை விதித்தான்.

பொரபுதூரில் உள்ள கல் சொல்லும் எத்தனையோ கதைகளில் இது ஒன்று!

## சுமத்ரா

ஒரு லட்சத்து எண்பதாயிரம் சதுர மைல் விஸ்தீரணமுள்ள சுமத்ரா, இந்தோனேஷ்யாவிலேயே இரண்டாவது பெரிய தீவு. ஜாவாவைப் போல நான்கு மடங்கு பெரிது; ஆனால், ஜனத்தொகை ஜாவாவில் உள்ளதில் ஐந்தில் ஒரு பங்குதான். அதாவது சுமார் ஒரு கோடி.

சுமத்ராவின் முக்கிய நகரம் மீடான் டில்லி. ஜாகர்தாவிலிருந்து மீடான் டில்லிக்குக் கப்பலில் சென்றால் மூன்று நாளாகும். விமானத்தில் சில மணி நேரந்தான்.

விமானத்தில் பிரயாணம் செய்யும் பொழுது, அழகான டோபா ஏரியைப் பார்க்கலாம். இது மிகப் பெரிய ஏரி. நீளம் மட்டும் ஐம்பது மைல் இருக்கும். இந்த ஏரியின் மத்தியில் இருபத்தைந்து மைல் நீளமுள்ள தீவு ஒன்று இருக்கிறது. இத் தீவிலே மக்கள் வசிக்கிறார்கள்; சிறிய ஊர்கள் பல இருக்கின்றன; அடிக்கடி பெரிய சந்தை கூடுகிறது. இந்த டோபா ஏரிக்கு, சுமத்ராவிலுள்ள தமிழ் மக்கள் அருமையான பெயர் வைத்திருக்கிறார்கள். அது 'நல்ல தண்ணீர்க் கடல்' என்பது.

மீடான் விமான நிலையத்தில் இறங்கியதும் பல இந்திய அன்பர்களைச் சந்தித்தேன். இந்தியாவிலிருந்து யார் சென்றாலும், அவர்களைப் பிரியமாக வரவேற்பார்கள் இங்குள்ள இந்திய மக்கள். தமிழர் சங்கத்தின் தலைவர் கணபதி, அன்பர் சீனிவாசன் முதலிய பலரை அறிமுகம் செய்துகொண்டேன். விமான நிலையத்தில் தற்செயலாக வந்திருந்த 'வாஸ்பேடா' என்னும் இந்தோனேஷ்ய தினப்

பத்திரிகையின் ஆசிரியர் முகமது சையதைச் சந்தித்தேன். இந்திய சகோதரப் பத்திரிகையாளன் என்ற முறையில், அவர் காட்டிய அன்பும் செய்த உதவியும் பெரிது.

சுத்தமான ஊர்களில் ஒன்று மீடான். இது எழுபது ஆண்டுகளுக்கு முன் சிறு கிராமமாக இருந்து, நாளடைவில் வளர்ச்சியடைந்தது. ஊருக்கு மத்தியில் பெரிய மைதானம். இங்கே தினந்தோறும் சந்தை கூடும். இதற்காகவே பெரிய கட்டிடம் ஒன்றைக் கட்டியிருக்கிறார்கள். வீதிகள் விசாலமாக இருக்கின்றன. இவ்வூரில் டில்லி சுல்தான் வசிக்கிறார். அவருடைய அரண்மனை பெரிது. இங்கே உள்ள அழகான மசூதி, இந்தோனேஷ்யாவில் உள்ள பெரிய மசூதிகளில் ஒன்று.

'டில்லி மட்டம்' என்ற குதிரைகளைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கலாம். இந்தக் குதிரைகள் குள்ளமானவை. அதற்காகத்தான் 'மட்டம்' என்றழைத்தார்கள். டில்லி என்பது நமது நாட்டுத் தலைநகரம் டில்லி அல்ல; அது இந்த மீடான் டில்லியையே குறிப்பிடும். இந்த 'டில்லி மட்டக்' குதிரைகள் இங்கே ஏராளம்.

இந் நகரில் இருந்து பதினாறு மைல் தூரத்தில் இருக்கும் பெல்வான் டெலிதான், சுமத்ராவில் பெரிய துறைமுகம். இங்கிருந்து, மலேயாவிலுள்ள பினாங்குத் துறைமுகத்துக்குக் கப்பல் பிரயாணம் ஓர் இரவுதான்.

மீடானிலும், பொதுவாக கிழக்கு சுமத்ராவிலும் அருமையான சாலைகள். பெரும்பாலான மக்கள் பஸ்களில்தான் பிரயாணம் செய்கின்றனர். பஸ் சொந்தக்காரர்களும் டிரைவர்களும் பெரும்பாலும் சீனர்கள்தான். பஸ்கள் எல்லாம் கர்நாடகம். அழகோ, வசதியோ கிடையாது. இவைகளில் பிரயாணம் செய்வதற்குக் கட்டணத்தை விட, பயம்தான் அதிகம்.



108096

ஒரு முறை, அன்பர் சீனிவாசனுடன் அறுபது மைல் தூரத்திலிருந்த ஓர் ஊருக்குப் பஸ்ஸில் பிரயாணம் செய்தேன். சுமத்ரா மலை நாடு. எங்கு பார்த்தாலும் பசுமைதான் தோற்றமளிக்கும். மலைச் சரிவில் வருகிறோம். 'தார்' போட்ட நல்ல சாலை. ஒரு பர்லாங் தூரத்துக்குள்ளாக மூன்று வளைவுகள். அப்பொழுதுதான் மழை பெய்து ஓய்ந்து சாலையெல்லாம் நனைந்திருக்கிறது. எங்கள் பஸ் ஓட்டுபவர், வாயு வேகத்தில் ஓட்டி வருகிறார். எங்கள் பஸ்ஸுக்கு 'பிரேக்' இல்லை என்ற விஷயம் ஓட்டுபவருக்கு மட்டும்தான் தெரியும். அதையும் பொருட்படுத்தாமல் அவர் அதி வேகமாக வந்ததால், சமாளிக்க முடியவில்லை. இரண்டு வளைவுகளை ஒருவாறு சமாளித்த பின், மூன்றாவது வளைவைச் சமாளிப்பதற்குள் வந்தது ஆபத்து. இந்தச் சில விநாடிகளில், பஸ்ஸில் இருந்த பிரயாணிகளான குழந்தைகள், பெண்கள், 'வீர' புருஷர்கள் அனைவரும் அலற ஆரம்பித்துவிட்டனர். என்னையும் அறியாமல் ஆண்டவனைப் பிரார்த்தனை செய்ய நேர்ந்த சந்தர்ப்பங்களில் இதுவும் ஒன்று.

'கடவுளை நம்பினோர் கைவிடப்படார்' அல்லவா? மூன்றாவது வளைவு இருந்த இடம், மலைப் பிரதேசத்திலேயே சமதளமான புல்வெளி. எங்கள் பஸ் தலைகீழாகச் சாயவில்லை. பக்க வசத்தில் படுத்து விட்டது; அவ்வளவுதான். பஸ்ஸில் இருந்த சுமார் இருபது பிரயாணிகளுக்கும் ஓட்டுபவருக்கும் எந்தவிதமான — பலத்த காயங்கள் ஏற்படவில்லை. பிரயாணிகள் அனைவரும் வெளியே வந்துவிட்டனர். கடைசியாக வர வேண்டிய பிரயாணி நான் ஒருவன்தான். ஏற்கெனவே வெளியில் வந்த பிரயாணிகள், பஸ்ஸுக்குள் இருந்த தங்கள் சாமான்களை— செருப்பு குடை பெட்டி போன்றவற்றை — எடுத்துத் தரும்படி கேட்டனர். அவ்வாறே எடுத்துக் கொடுத்தேன்.

V8.1
N55

"நீங்கள் வெளியே வராமல் உள்ளே இருந்து கொண்டு இதை யெல்லாம் செய்கிறீர்களே" என்று அன்புடன் கடிந்துகொண்டார் நண்பர் சீனிவாசன். நமக்கு நிச்சயமாக ஆபத்து இல்லை என்று தெரிந்த பிறகாவது நாம் பிறருக்கு உதவி செய்யலாமல்லவா?

பஸ் சாய்ந்ததும், அருகில் வயலில் வேலை செய்து கொண்டிருந்த மக்கள் எல்லாம் கூடிவிட்டார்கள்.

பத்து நிமிஷங்களில், சாய்ந்த பஸ்ஸைத் தூக்கி நிறுத்தினார்கள். பிரயாணிகள் எல்லாம் ஏறிக் கொண்டார்கள். சில நிமிஷங்களில் பஸ் புறப்பட்டது!

எனக்கு மட்டும் அதே பஸ்ஸில் பிரயாணம் செய்ய விருப்பமில்லை; பயம்தான் காரணம். அன்பர் சீனிவாசனும் நானும், பின்னர் ஒரு வாடகை மோட்டாரில் பிரயாணம் செய்தோம்.

மீடானுக்குத் திரும்பியதும் இந்த விஷயத்தை நண்பர்களிடம் கூறினேன். இதைக் கேட்டு ஒருவராவது ஆச்சரியமோ அல்லது அதிர்ச்சியோ அடையவில்லை. பஸ் விழுந்ததால் உண்டான வருத்தத்தைவிட, இந்த விஷயத்தை யாரும் ஆச்சரியமாகக் கேட்கவில்லையே என்பதுதான் அதிகமான வருத்தத்தைக் கொடுத்தது. பிறகு விசாரித்ததில், சுமத்ராவில் பஸ் விபத்து, அடிக்கடி நேரும் சாதாரண சம்பவம் என்று அறிந்தேன்.

மீடானில் இந்தியப் பிரதிநிதி (கான்சல்) ஒருவர் இருக்கிறார். ஜாகர்தாவிலுள்ள இந்தியப் பிரதிநிதி காரியாலயத்துக்கு உட்பட்டவர் இவர். அப்பொழுது மீடானில் நமது அரசாங்கப் பிரதிநிதியாக இருந்தவர் ஸ்ரீ ஜகத் சிங்.

மீடானில் தங்கியிருந்தபொழுது, புதிதாக நியமிக்கப் பெற்ற, சீன அரசாங்கத்தின் பிரதிநிதி மீடானுக்கு வந்தார். இந்தோனேஷ்யா, கம்யூனிஸ்டு சீனாவை



அங்கீகரித்தது. எனவே சியாங்கே ஷேக்கின் பிரதிநிதி நாட்டை விட்டுப் போய்விட்டார். இப்பொழுது புதிதாக வந்தவர் கம்யூனிஸ்டு சீனாவின் பிரதிநிதி.

இந்தோனேஷ்யாவில், எல்லா நகரங்களிலும் இருப்பது போல, மீடானிலும் ஆயிரக்கணக்கான சீனர் வசிக்கிறார்கள். இவர்களில் பலர் விமான நிலையம் சென்று, சீன அரசாங்கப் பிரதிநிதியை வரவேற்றனர். அன்று அத்தனை சீனர் வீடுகளிலும், வியாபார ஸ்தலங்களிலும், இந்தோனேஷ்யக் கொடியும், கம்யூனிஸ்டு சீனாவின் கொடியும் ஒன்றாகப் பறந்தன. நேற்றுவரை, சியாங்கே ஷேக் கொடியைப் பறக்கவிட்ட சீனர்கள், திடீரென்று எவ்வாறு நூற்றுக் கணக்கான கம்யூனிஸ்டு கொடியைத் தயாரித்தார்கள் என்று ஆச்சரியப்பட்டேன்.

பிறகு விசாரித்ததில், எந்தச் சமயத்தில் எந்தக் கொடியை உபயோகிக்க நேரும் என்று நிச்சயமாகத் தெரியாததால், வெளிநாட்டிலுள்ள பெரும்பாலான சீனர்கள் இரண்டு விதமான சீனக்கொடியையும் எப்பொழுதும் வைத்திருப்பார்கள் என்று தெரிந்தது.

ஒரு முறை, தமிழ் அன்பர் ஒருவருடன் வீதியில் நடந்து சென்றேன். எங்களுக்கு முன்னால் ஒரு சீனர் நடந்து போய்க்கொண்டிருந்தார். என்னுடன் வந்த அன்பர் முன்னால் போய்க்கொண்டிருந்த சீனரைப் பற்றி ஏதோ சொல்லத் தொடங்கினார். அப்பொழுது அவர், 'நமது முன்னால் போகிறானே சடையன்' என்றார். அவர் 'சடையன்' என்று குறிப்பிட்டது அந்தச் சீனரைத்தான். 'சீனன்' என்று சொன்னால், அந்தச் சீனருக்குத் தெரிந்து விடுமல்லவா?

சீனர்கள் ஆண்களும் பெண்களும் சடை பின்னியிருப்பார்கள். இப்பொழுது ஒரு சிலரைத்தான்—வயதான

சீனர்களைத்தான்—இந்த மாதிரி பார்க்கலாம். சடை பின்னிய ஆண்களைப் பார்ப்பது இப்பொழுது அபூர்வம். என்றாலும் ஒரு காலத்தில் சடை பின்னியிருந்ததால், 'சடையன்' என்ற காரணப் பெயர் வந்தது. இந்தக் காரணப் பெயரை இழிவான கருத்தில் தான் பெரும்பாலும் உபயோகித்தார்கள். இதைப் போலவே சீனர்களும் இந்தியர்களுக்கு ஏதாவது ஒரு பெயர் வைத்திருப்பார்கள் அல்லவா?

ஒரு நாள் காலையில் ஆசிரியர் முகமது சையது டெலிபோன் செய்தார். டில்லி சுல்தானுடன் அவர் பேசியதாகவும், அன்று மாலை என்னை அழைத்து வரும்படி சுல்தான் கூறியதாகவும் சொன்னார்.

சுல்தானின் அரண்மனை நமது நாட்டு ராஜாக்களுடைய அரண்மனையைப் போல இருந்தது. சுல்தானுக்கு ஐம்பது வயதுக்கு மேலிருக்கும். நன்றாக ஆங்கிலம் பேசினார். இந்தோனேஷ்ய உடையே அணிந்திருந்தார். என்றாலும் தாம் ஓர் இந்தியன் என்று கூறிக்கொள்வதில் அவருக்குப் பெருமை.

சம்பாஷணையின்போது, "நான் இந்தியன் என்று கூறிக்கொள்ளப் பெருமைப்படுகிறேன். பண்டித நேரு இங்கு வந்தபோதும் அவரிடம் இதைத்தான் கூறினேன். எங்கள் முன்னோர்கள் இந்தியாவில் டில்லியிலிருந்து வந்தவர்கள். அதற்காகத்தான் எங்கள் ஊருக்கும் டில்லி என்று பெயர் வைத்திருக்கிறோம். மீடான் என்றால் மைதானம் என்று அர்த்தம். நாங்கள் இன்று சாப்பிடும் உணவைப் பாருங்கள். எல்லாம் இந்திய உணவு. எங்கள் வீட்டுச் சமையற்காரர் கூட இந்தியர்" என்று சுல்தான் கூறினார்.

முதன் முதலாக முகமது சையது டெலிபோன் செய்த பொழுது, டில்லி சுல்தான் என்னைப் பார்க்க மறுத்து விட்டார். அதற்குக் காரணம் என் பெயர்தான். சுமத்ராவில்



பல செட்டியார்கள் வட்டித் தொழில் செய்கிறார்கள். சுல்தான்கள் செட்டியார்களிடம் பணம் வாங்குவதுண்டு. ஆனால் செட்டியார்களிடம் நேரில் பேச விரும்பமாட்டார்கள். ஒரு செட்டியாருடன் பேசினால், தாம் கடன் வாங்கியிருப்பதாகப் பிறர் கருதி விடுவார்களே என்ற அச்சம்தான் இதற்குக் காரணம். ஆனால் நான் பத்திரிகைத் தொழிலில் ஈடுபட்டவன் என்று தெரிந்த பின்னர் தான், சுல்தான் என்னைப் பார்க்கச் சம்மதித்தாராம். இதனை முகமது சையது கூறினார்.

மீடானில் செட்டியார்கள் மட்டுமல்ல, ஆயிரக் கணக்கான இந்தியர்கள் வசிக்கிறார்கள். பெரும்பாலோர் தமிழர். அடுத்தபடியாக, பஞ்சாபியரும் சிந்திகளும்.

சிந்திகள் வியாபாரிகள். பஞ்சாபிகள் பெரும்பாலும் பால்பண்ணை நடத்துகிறார்கள். தமிழர்களில் பெரும்பாலோர் கூலி வேலை செய்பவர்கள்.

தமிழர்களிலே இரண்டு பிரிவு. சுமத்ராவில் குடியேறிய தமிழர்; சுமத்ராவில் பிறந்த தமிழர். சுமத்ராவில் பிறந்த தமிழ்ப் பெண்கள் இந்தோனேஷ்யர்களைப்போல உடை அணிகின்றனர்.

தமிழ் நாட்டில் உள்ள கோயில்களைப்போல, மீடானிலும் இரண்டு கோயில்கள் இருக்கின்றன. தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் ஐந்து இருக்கின்றன. பஞ்சாபியர் நடத்தும் 'கல்சா' ஆங்கில உயர்தரப் பள்ளி அங்கு பேர் பெற்றது.

சுமத்ரா இந்திய சங்கத்தார் 'ஜனமித்திரன்' என்ற தமிழ்ப் பத்திரிகையை அச்சிட்டு, இலவசமாக வழங்குகிறார்கள்.

புதிதாக வந்துள்ள கட்டுப்பாடுகளினால், இந்தியர்கள் இந்தோனேஷ்யாவில் குடியேற அனுமதிக்கப்படுவதில்லை.

இந்தியரை மட்டுமல்ல, யாரையுமே குடியேறப் பொதுவாக அனுமதிப்பதில்லை. குடியேறுவதற்கு அங்கே இடம் இல்லை.

மீடானிலிருந்து பகல் ஒரு மணிக்கு விமானத்தில் பிரயாணமானேன். விமானப் பிரயாணம் அரை மணி நேரந்தான். சரியாகப் பன்னிரண்டரை மணிக்குப் பினங்கு வந்து சேர்ந்தேன்.

மலேயாவுக்கும் சுமத்ராவுக்கும் இடையே, நேரத்தில் உள்ள வித்தியாசம் ஒரு மணி !

# ஆஸ்திரேலியா

மலேயாவில் இம் முறை இரண்டு வாரம் தங்கினேன். பின்னர் சிங்கப்பூர்த் துறைமுகத்திலிருந்து கார்கன் என்னும் கப்பலில் பிரயாணமானேன்.

சிங்கப்பூரிலிருந்து, ஆஸ்திரேலியாவில் பிரீமாண்டில் துறைமுகம் போய்ச் சேர, பன்னிரண்டு நாள் ஆயிற்று. கப்பல் இந்தோனேஷ்யா வழியாகச் சென்றபோதிலும், நேராக ஆஸ்திரேலியாவுக்குத்தான் சென்றது.

முதன் முதலாக, வடமேற்கு ஆஸ்திரேலியாவிலுள்ள டர்பி என்ற துறைமுகம் சேர்ந்தோம். துறைமுகத்திலிருந்து ஊர் இரண்டு பர்லாங் தூரமிருக்கும். பகல் பன்னிரண்டு மணிக்கு நல்ல வெயிலில் ஊருக்குள் சென்றோம். பிற்பகல் இரண்டு மணிவரை வீதிகளில் ஒருவரையுமே காணவில்லை. பிறகு வீதிகளில் பலரைச் சந்தித்தோம்; சந்தித்த அனைவரும் கப்பலில் கூடவந்த சகோதரப் பிரயாணிகளே !

டர்பி சிறிய ஊர். ஜனத்தொகை எண்ணூறு தான். பகல் நேரமானதால், பலர் வெளியே வேலைக்குச் சென்று விட்டனர். தபால் நிலையத்தில் மட்டும் ஒரே ஒருவர் இருந்தார். இரண்டு சிறு கடைகளில் 'சோடா கலரும்', மதுபான வகைகளும் விற்றனர். மற்றுமொரு கடையில் சாக்லெட், மிட்டாய், சோப்பு பத்திரிகை முதலிய சில்லரைச் சாமான்கள் விற்றனர்.

டர்பியில், திறந்த வெளியில் திரைப்படக் காட்சி. உட்காருவதற்கு படிப்படியாக ஆசனங்கள் (Gallery)






அமைத்திருக்கிறார்கள். வாரத்திற்கு இரண்டு முறை படம் காண்பிப்பார்கள். ஆண்டில் எட்டு மாதம் தான் இந்தக் காட்சி நடைபெறும்.

அன்றிரவு முழுதும், எங்கள் கப்பலில் ஏராளமான மாடுகளை ஏற்றினர். இவைகளை ஆஸ்திரேலியாவின் மற்ற பகுதிகளுக்கும், வெளி நாடுகளுக்கும் ஏற்றிச் செல்கின்றனர். கப்பலிலிருந்த பிரயாணிகளின் எண்ணிக்கையை விட மாடுகளின் எண்ணிக்கை அதிகமாயிற்று.

மறு நாள் மேற்கு ஆஸ்திரேலியாவிலுள்ள ஒரு சிறு துறைமுகம் சேர்ந்தோம். அந்தத் துறைமுகத்தில், கடல் ஆழமில்லை. எனவே கரையிலிருந்து கடலுக்குள்ளாக சுமார் நான்கு பர்லாங் நீளத்துக்கு ஒரு பாலம் அமைத்திருக்கிறார்கள். தண்ணீர்ப் பெருக்கின்போது கப்பல் பாலத்துக்கு வரும். கப்பலைப் பாலத்தில் அணைத்துக் கட்டி விடுகிறார்கள். கப்பல் வந்த சில மணி நேரத்துக்கெல்லாம் தண்ணீர் வடிவு ஏற்படுகிறது. அப்பொழுது கப்பலைச் சுற்றித் தண்ணீரே கிடையாது. எல்லாம் வடிந்துவிடுகிறது. கப்பலுக்கு ஆதரவு, அதனைப் பாலத்தோடு இணைத்து கட்டியிருப்பதுதான். பிரயாணிகளில் பலர் பாலத்தின் வழியே சென்று, கீழே இறங்கிக் கப்பலைச் சுற்றிவந்தனர். சிலர் புகைப் படம் பிடித்தனர். எங்கள் கப்பலை நாங்களே சுற்றி வந்தது, எங்களுக்கே விநோதமாக இருந்தது. சில மணி நேரத்தில் தண்ணீர்ப் பெருக்கு வந்ததும், எங்கள் கப்பல் மிதக்க ஆரம்பித்தது. உடனே பிரயாணமானோம்.

அடுத்த துறைமுகம் பிரீமாண்டில். பிரயாணிகள் எல்லோரும் இறங்க வேண்டிய துறைமுகம் இதுதான்.

எங்களை முதன் முதல் வரவேற்றது குடியேற்றப் பதிவு அதிகாரிகள். அவர்கள் ஒரு தாளைக் கொடுத்து அதைப் பூர்த்தி செய்யச் சொன்னார்கள்.

அந்தத் தாளில் பல கேள்விகள் அச்சிடப் பெற்றிருந்தன. அவற்றில் முக்கியமானவை "உங்களுடைய இரத்தம் எந்த இனத்தைச் சேர்ந்தது? அதாவது ஐரோப்பியர், நீக்ரோ, மங்கோலியர், ஆசியர், அதிலேயே போலினேஷ்யர், மலேனேஷ்யர், மைக்ரோனேஷ்யர் முதலிய பல இனங்களில், உங்கள் இரத்தம் எந்த எந்த இனத்தில் நூற்றுக்கு எத்தனை விகிதம்? அம்மாதிரி உங்கள் தந்தையார் இரத்தம் நூற்றுக்கு எத்தனை விகிதம்? உங்கள் தாயார் இரத்தம் நூற்றுக்கு எத்தனை விகிதம்? உங்கள் தாத்தா, பாட்டியார் இரத்தம் நூற்றுக்கு எத்தனை விகிதம்?"

அச்சிட்டிருந்த இக் கேள்விகளுக்கு நாம் கொடுக்கும் கணக்கைக் கொண்டு, நம்முடைய இரத்தத்தில் எந்த இனம் அதிகமாய் இருக்கிறது என்று கண்டு பிடிப்பார்களாம். நம்முடைய இரத்தம் நூற்றுக்கு ஐம்பத்தொரு விகிதத்துக்குமேல் ஐரோப்பிய இரத்தமாக இருந்தால்தான் அந்த நாட்டில் குடியேற அனுமதிப்பார்களாம். யாத்திரிகர்களாகச் செல்லுகிறவர்கள் கூட இந்தத் தாளைப் பூர்த்தி செய்யவேண்டும்.

இந்த மனிதத் தன்மையற்ற கேள்விகளுக்குப் பதில் எழுத மறுத்து, 'இந்தியன்' என்று மட்டும் எழுதினேன். குடியேற்றப் பதிவு அதிகாரிக்குத் திருப்தியில்லை. வேண்டா வெறுப்பாகவே, என்னை இறங்குவதற்கு அனுமதித்தார்.

பிரீமாண்டில் நல்ல துறைமுகம். இங்கிருந்து இருபது மைல் தூரத்திலிருக்கிறது பர்த் என்னும் நகரம்.

அருமையான பஸ்ஸில் பர்த் நகரம் சென்றோம். நல்ல ஹோட்டல்கள் பல இருக்கின்றன.

ஆஸ்திரேலிய நாணயம் பவுன்; ஆனால் பிரிட்டிஷ் ஸ்டர்லிங் பவுனைவிட மதிப்புக் குறைவு. ஸ்டர்லிங் பவுன் பதின்மூன்று ரூபாய் சொச்சம். ஆஸ்திரேலியப் பவுன் பத்து ரூபாய் சொச்சம்தான்.



ஆஸ்திரேலியாவின் விஸ்திரணம் சுமார் முப்பது லட்சம் சதுர மைல். இதில் மூன்றில் ஒரு பகுதி ஜனங்கள் வாழ்வதற்குத் தகுதியற்றது. பிறிதொரு பகுதி வளமற்றது. எஞ்சியுள்ள பகுதியிலேயே மக்கள் வாழ்கின்றனர். ஆஸ்திரேலியா கண்டத்தின் ஜனத்தொகை சுமார் எழுபத்தைந்து லட்சம். அதாவது கல்கத்தா நகரத்து ஜனத்தொகையைப்போல சுமார் ஒன்றரை மடங்கு!

ஆஸ்திரேலியாவின் பூர்வீகக் குடிகள் நாளாவட்டத்தில் குறைந்துவருகின்றனர். வெள்ளைக்காரர்கள் முதன் முதல் ஆஸ்திரேலியாவில் குடியேறியபொழுது, அதாவது 1778-ஆம் ஆண்டில் சுமார் மூன்று லட்சம் பூர்வீகக் குடிகள் இருந்தார்கள். அவர்கள் குடியேறிய காலத்தில் பூர்வீகக் குடிகளை மிகவும் கொடுமையாக நடத்தியதாக ஆஸ்திரேலியர்களே ஒப்புக்கொள்கின்றனர்.

பூர்வீகக் குடிகள் நல்ல பண்பாடு உடையவர்கள். புதிய நாகரிகத்துக்குப் புறம்பானவர்கள். ஓர் இடத்தில் தங்காமல் ஊர் ஊராகச் சுற்றுவார்கள். தற்பொழுது இவர்களை ஒவ்வொரு பகுதியாக ஒன்று சேர்த்து ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். இதற்கு 'ரிசர்வேஷன்' என்று பெயர். இந்த இடங்களுக்குச் சம்பந்தப்பட்ட அரசாங்க அதிகாரி தவிர வேறு யாரும் செல்லக் கூடாது. பூர்வீகக் குடிகளுக்கு எந்த வேலையும் கொடுப்பதில்லை. சிலருக்கு மட்டும் ஆடு மாடுகளைப் பாதுகாக்கும் வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த வேலையிலும் அவர்கள் திறமையாக இருக்கிறார்கள். இந்தப் பூர்வீகக் குடிகளில் இரண்டு சிறந்த ஓவியர்கள் இருக்கின்றனர். இவர்கள் பெயர் நமாட்ஜீரா, பரேரொவுல்ட்ஜா.

இந்தப் பழமையான குடிகளைப் 'பாதுகாத்து ரட்சிப்பதற்காக', அரசாங்கத்தில் தனி இலாகா இருக்கிறது. இந்தப் பாதுகாப்பின் பயனாக, ஆரம்பத்தில் மூன்று லட்சம் எண்ணிக்கையினராக இருந்த பூர்வீகக் குடிகள், தற்பொழுது எழுபத்திரண்டாயிரம் பேராகியிருக்கிறார்கள்! இந்தப் புள்ளி விவரத்தை ஆஸ்திரேலிய அரசாங்கத்தாரே வெளியிட்டிருக்கிறார்கள்.

ஆஸ்திரேலியாவின் முக்கியமான பட்டணங்கள்—சிட்னி, மெல்பர்ன், அடிலேடு, பர்த், பிரிஸ்பேன் என்பவை. ஆனால் கான்பெரா என்ற சிறிய நகரம்தான் ஆஸ்திரேலியாவின் தலை நகரம்.

பர்த் நகரிலிருந்து சிட்னி நகருக்கு—அதாவது ஒரு கோடியிலிருந்து, மறு கோடிக்கு கிழக்கு மேற்காகச் சென்றால் சுமார் இரண்டாயிரத்து எழுநூறு மைல் தூரம். இதற்கு ரயில்பாதை அமைத்திருக்கிறார்கள்.

பிரிஸ்பேன் நகரம் செல்வதானால் இன்னும் அறுநூறு மைல் அதிகமாக ரயிலில் பிரயாணம் செய்ய வேண்டும்.

ஆஸ்திரேலியாவில், கிழக்கு மணி நேரத்திட்டம்தான் (Eastern Standard Time) பிரதானமானது. பர்த், மத்தியப் பிரதேசம், அடிலேடு முதலிய இடங்களில் மணி வித்தியாசப்படும். உதாரணமாக, கிழக்கு மணி நேரத் திட்டத்தின்படி மணி ஆறு என்று வைத்துக்கொள்வோம். அதே சமயத்தில் பர்த் மணி நான்கு; மத்தியப் பிரதேச மணி நாலே முக்கால்; அடிலேடு மணி ஐந்தரை. ஆஸ்திரேலியாவில் ரயில் பிரயாணத்தின்போது இந்த மணி நேரங்களை அனுசரிக்க வேண்டும்.

பர்த் நகரிலிருந்து சிட்னிக்கு ரயிலில் செல்ல மூன்று பகலும் மூன்று இரவும் ஆகும். நான்கு இடங்களில் ரயில் மாற வேண்டும்.



பர்த்திலிருந்து முந்நூற்று எண்பது மைல் தூரத்தில் இருக்கிறது கால்கூர்லி என்ற ஊர். இங்கே தங்கச் சுரங்கம் ஒன்றிருக்கிறது. இந்த ஊரில் இறங்கி டிரான்ஸ்–ஆஸ்திரேலியன் ரயிலுக்கு மாற வேண்டும். பர்த்திலிருந்து வந்த ரயிலை விட, இந்த ரயில் எவ்வளவோ வசதியானது.

கால்கூர்லியிலிருந்து போர்ட் பிரிரீ சந்திப்பு வரை ஒரே ரயில். இதன் தூரம் ஆயிரத்து நூற்றெட்டு மைல். இந்தப் பிரயாணத்தில் எல்லாப் பிரயாணிகளுக்கும் தினந்தோறும் நான்கு வேளை சாப்பாடு கொடுக்கிறார்கள். நாம் பிரயாணச் சீட்டுக்காகக் கொடுக்கும் பணத்தில், சாப்பாட்டின் விலையும் சேர்ந்திருக்கிறது.

கால்கூர்லியிலிருந்து போர்ட் பிரிரீவரையில் தண்ணீர்க் கஷ்டம் அதிகம். எந்த விதமான ஆறும் கிடையாது. கிணற்றுத் தண்ணீரும், குழாய்த் தண்ணீரும்தான். ரயில் என்ஜின்களுக்குத் தண்ணீர் வேண்டுமல்லவா? இந்தக் கிணற்று அல்லது குழாய்த் தண்ணீரை வடிகட்டி, தொட்டிகளில் வைத்திருக்கிறார்கள். ரயில், தண்ணீருக்காக வழியில் பல ரயில் நிலையங்களில் நிற்கும். இவற்றில் பெரும்பாலானவை ஜனங்களே இல்லாத பிரதேசத்திலுள்ளவை. எனவே ரயில் சிப்பந்திகள்தான் இருப்பார்கள். இவர்களுக்கு வேண்டிய ரொட்டி, மாமிசம், சர்க்கரை, தேயிலை முதலிய பண்டங்களை வாரத்துக்கு இரண்டு முறை இதற்காகவே செல்லும் ரயிலில் கொண்டு வந்து கொடுப்பார்கள். இதற்கு 'தேயிலை–சர்க்கரை ரயில்' என்று பெயர்.

நல் ஆர்பர் என்ற சமவெளிப் பிரதேசம் இந்தப் பாதையில்தான் இருக்கிறது. பூர்விகக் குடிகளது மொழியில் நல்-இல்லை, ஆர்பர்-மரம்—அதாவது மரமில்லாத பிரதேசம் என்று அர்த்தம். ஒரு காலத்தில் இந்தப்

பிரதேசம், சமுத்திரத்துக்கு அடியிலிருந்திருக்க வேண்டும் (Sea bed). இங்குள்ள சுண்ணாம்புக் கற்கள் ஒரு காலத்தில் தண்ணீருக்குள் இருந்திருக்க வேண்டும். பத்தாயிரம் சதுரமைலுள்ள இந்தப் பிரதேசத்தின் வழியாக ரயில் நானூறு மைல் செல்கிறது. இதில் முந்நூறு மைல் ரயில் பாதை நேராக எவ்வித வளைவுமில்லாமல் இருக்கிறது. உலகத்திலேயே வளைவில்லாத நீளமான ரயில் பாதை இதுதான் என்று சொல்லுகிறார்கள்.

இந்த நல் ஆர்பர் பிரதேசத்தைக் கடந்த பிறகு, பெரிய செம்மறியாட்டுப் பகுதிக்கு வருகிறோம். இந்தப் பகுதியில் ஆண்டுக்கு ஏழு அங்குல மழை பெய்கிறது. எனவே இதனைப் பாலைவனம் என்று கூற முடியாது. இப் பகுதியில் பத்து லட்சம் ஆடுகளுக்கு மேல் இருக்கின்றன. ஆஸ்திரேலியாவில் ஆடுகளின் தொகை பத்துக் கோடி இருக்கும். அவைகளிலிருந்து எடுக்கும் கம்பளியை விற்பதன் மூலம் ஆண்டுக்குச் சுமார் நூற்றைம்பது கோடி ரூபாய் வருமானம் கிடைக்கிறது.

ரயில் பிரயாணம் சௌகரியமாக இருந்தது. ஒரு நல்ல ஹோட்டலைப்போல அவ்வளவு வசதியும் உண்டு. ரயில்வே வேலைக்காரர்களும், சகோதரப் பிரயாணிகளும் மரியாதையாகவும் அன்பாகவும் நடந்துகொண்டார்கள். இந்தப் பிரயாணத்தில் கண்ட காட்சிகள் கவர்ச்சியாக இல்லை. மற்ற நாடுகளில் காண்பதைப் போன்ற இயற்கை வனப்பே இங்கில்லை. ஒன்றிரண்டு இடங்களில், நாடோடிகளாகத் திரியும் ஒரு சில பூர்வீகக் குடிகள், ரயிலுக்கு வந்து பிரயாணிகளிடம் கையால் செய்த சிறு மரப் பொருள்களை விற்றனர்.

அடிலேடு நகரத்தில் மறுபடியும் ரயில் மாற வேண்டும். இது நல்ல ஊர். இங்கேயுள்ள சர்வகலாசாலையும்,



சிறப்பாக, புத்தகசாலையும் பார்க்க வேண்டியவைகளில் குறிப்பிடத் தக்கவை.

அடிலேடிலிருந்து ஓர் இரவு பிரயாணம் செய்தால் மெல்பர்னை அடைவோம். ஆஸ்திரேலியாவிலுள்ள பெரிய நகரங்களில் இது ஒன்று. சில நாள் இங்கு தங்கியிருந்தேன்.

நல்ல திரைப்படக் காட்சிசாலைகள் பல இங்கே இருக்கின்றன. ஒரு நாள் செய்திப் படம் பார்க்கச் சென்றேன். கிரிக்கெட் விளையாட்டைப் பற்றிய ஓர் அமெரிக்கப் படமும் காட்டினர். அமெரிக்கரில் பலருக்குக் கிரிக்கெட் என்றால் என்னவென்று தெரியாது. பலர் கிரிக்கெட் பார்த்ததே இல்லை. இந்தப் படம் அமெரிக்கர்களுக்காகத் தயாரிக்கப்பட்டதாகையால், படத்தில் கிரிக்கெட் விளையாட்டைப் பற்றிய விஷயங்களை—எத்தனை பேர், எப்படி எப்படி ஆடுவது, ஆடும் முறையும் சட்ட திட்டங்களும் என்னவென்று விவரமாக விளக்கிக் கூறியபோது, காட்சிசாலையில் இருந்த அத்தனை பேரும் சிரித்தனர். காரணம் கிரிக்கெட் ஆஸ்திரேலியாவின் தேசீய விளையாட்டு. உலகப் பிரசித்தி பெற்ற கிரிக்கெட் விளையாட்டுக்காரரான பிராட்மன் ஓர் ஆஸ்திரேலியர்.

ஞாயிற்றுக் கிழமை விடுமுறை நாளாதலால் எல்லா திரைப்படக் காட்சிசாலைகளும் மூடப் பெற்றிருக்கும். ஆனால் ஞாயிற்றுக் கிழமை காலையில் ஒரு சில காட்சிசாலைகளில் மிகப் பழைய படங்களைக் காட்டுவார்கள். இதற்குக் கட்டணம் கிடையாது. ஆனால் அவரவர் விருப்பப்படி ஆறு பென்ஸ் அல்லது ஒரு ஷில்லிங் வெள்ளிக் காசை வாயிலிலுள்ள பெட்டியில் போட்டால் போதும். இதற்கு 'சில்வர் கலெக்ஷன்' என்று பெயர். இப்படி கிடைக்கும் தொகை தர்ம காரியங்களுக்காகப் பயன்படுமாம்.

பொதுவாக ஆங்கிலேயர் உணவு சுவையற்றது. எவ்வளவு நல்ல பண்டங்களைக் கொடுத்தாலும் அவைகளை ருசியே இல்லாமல் சமைப்பதில் ஆங்கிலேயர்களுக்கு இணை ஆங்கிலேயர்களே. இந்த ஆஸ்திரேலியர்கள் எல்லாவற்றையும் போல, சமையலிலும் ஆங்கிலேயரைப் பின் பற்றுகின்றனர். எனவே ஆஸ்திரேலியாவில் பாலும் தேனும் ஓடினாலும் உணவில் சுவையில்லை.

இத்தாலியர், கிரேக்கர், சீனர் ஆகியோர் நடத்தும் உணவுச்சாலைகளில் எப்பொழுதும் கூட்டம் அதிகமாய் இருக்கும்.

ஆஸ்திரேலியா முழுதும் கட்டாயக் கல்வி அமுலிலுள்ளது. ஆறு முதல் பதினைன்கு வயது வரை ஆரம்பக் கல்வி. அதற்குமேல் படிப்பும், கைத்தொழில் கல்வியும், அரசாங்கப் பள்ளிக்கூடங்களில் இலவசமாகக் கற்பிக்கிறார்கள். கல்லூரிப் படிப்புக்கு அரசாங்கத்தாரிடமிருந்து உபகாரச் சம்பளம் கிடைப்பது சுலபம்.

மேற்கு ஆஸ்திரேலியாவில் ஆரம்பக் கல்வி முதல் சர்வகலாசாலைப் படிப்பு வரை அந்த மாகாணத்தைச் சேர்ந்த எல்லா மாணவருக்கும் இலவசம்.

மெல்பர்னில் ஒரு சர்வகலாசாலை இருக்கிறது. இந்திய மாணவ மாணவிகள் பலர் இங்கும், மற்றும் ஆஸ்திரேலியாவிலுள்ள பல சர்வகலாசாலைகளிலும் படிக்கிறார்கள். இந்த இந்தியர்களில், இந்தியாவிலிருந்து நேரே வந்தவர் ஓரிருவர்தான். பிஜியில் இருந்து வந்த இந்திய மாணவரொருவரைச் சந்தித்தேன். மற்ற மாணவர்கள் எல்லாம், மலேயா நாட்டில் வசிக்கும் இந்தியர், யாழ்ப்பாணத்தார் ஆகியோர் பிள்ளைகள். சீனர்கள் சிலரும் படிக்கிறார்கள். இவர்களில் பெரும்பாலோர் மலேயாவில் வசிக்கும் சீனர்களின் பிள்ளைகளே. ஆசிய மாணவர்களைப்



பொதுவாக நன்றாக நடத்துகின்றனர். ஐரோப்பியரல்லாதார் இந் நாட்டில் குடியேறாததால் இங்கு நிற வேற்றுமை கிடையாது.

இந் நாட்டின் ஜனத்தொகை குறைவானதால், வேலை செய்ய ஆள் தேவையிருக்கிறது. எனவே கோடைக் கால விடுமுறைகளில் பல ஆசிய மாணவர்கள் விவசாயப் பண்ணைகளில் வேலை செய்வார்கள். வாரம் எண்பது முதல் நூறு ரூபாய் வரை இவர்கள் சம்பாதிப்பது உண்டு.

ஆஸ்திரேலியாவின் பிரதானத் தொழில் விவசாயம் தான். சுமார் ஒன்றரை கோடி ஏகர் நிலத்தில் மூன்று கோடி 'புஷல்' கோதுமையும் அறுபது ஆயிரம் டன் நெல்லும் விளைகிறது. ஆப்பிள், திராட்சை முதலிய பழங்களும் ஏராளம். பல தொழிற்சாலைகளும் ஆஸ்திரேலியாவில் உண்டு.

அடுத்தது சிட்னி நகரம். இது பெரிய துறைமுகமும் கூட. சிட்னி என்றதும் அந்த ஊர்ப் பாலத்தைப் பற்றிக் கூறாமல் இருக்க முடியாது. அந்த ஊருக்குப் பெருமையளிப்பது அந்தப் பாலம் ஒன்றுதான்.

சுமார் பத்துக் கோடி ரூபாய் செலவில் 1932-ல் கட்டப் பெற்ற இந்தப் பாலம், உலகத்திலேயே சிறந்த பாலங்களில் ஒன்று. இந்தப் பாலத்தின் ஆயிரத்து அறுநூற்றைம்பது அடியுள்ள ஒரே வளைவு உலகத்திலேயே பெரிது. பாலத்தின் நீளம் இரண்டே முக்கால் மைல். அகலம் நூற்றறுபது அடி. இந்தப் பாலத்தில் ரயில், டிராம், மோட்டார் முதலியவை ஒரே சமயத்தில் செல்லலாம். நடை பாதையும் உண்டு. பாலத்துக்குக் கீழே பெரிய கப்பல்கள் செல்லும். மொத்தம் ஐம்பதாயிரம் டன் எஃகு செலவாயிற்றாம் இந்தப் பாலம் கட்டுவதற்கு.

சிட்னித் துறைமுகத்தில் நடமாட்டமும் சந்தடியும் இருக்கும். இங்கு ஜனநெருக்கம் மட்டும் அதிகம் அல்ல; புகையும் அழுக்கும் கூட அதிகம்.



சிட்னித் துறைமுகப் பாலம்

ஏராளமான ஹோட்டல்கள் உண்டு. இரட்சண்ய சேவா சங்கத்தாரால் (Salvation Army) நடத்தப்பெறும் 'பீப்பிள்ஸ் பாலஸ்' என்னும் ஹோட்டல் இங்கே இருக்கிறது. ஏழைகளும் சாதாரண மக்களும் இங்கே தங்குவார்கள். வாடகை மலிவு. குடிப்பவர்களுக்கு இங்கே இடம் கிடையாது.



ஆஸ்திரேலியாவில் ஏராளமான பத்திரிகைகள் வெளியாகின்றன. 'ட்ரூத்' என்ற பத்திரிகை பிரபலமானது. பிரிட்டனிலும் அமெரிக்காவிலும் வெளியாகும் புத்தகங்களே அதிகமாக விற்பனையாகின்றன. சமையல் முறையைப் பற்றி ஆங்கிலத்தில் ஒரு புத்தகம் வெளியாயிற்று. அதை மிகப் பிரபலமாக விளம்பரப்படுத்தினார்கள். அதன் சாரம்:

"இங்கிலாந்தில் வெளியிட்ட புத்தகத்தின் ஆஸ்திரேலியப் பதிப்பு அல்ல. ஆஸ்திரேலியாவிலேயே சுயமாக எழுதி வெளியிடப்பெற்றது."

இதிலிருந்து ஆஸ்திரேலியாவின் புத்தக வளர்ச்சியை ஓரளவு தெரிந்து கொள்ளலாம்.

நடனம், நாட்டியம், சங்கீதம், ஓவியம், முதலிய கலைகளில் ஆஸ்திரேலியா சிறிது சிறிதாக முன்னேறி வருகிறது.

ஆஸ்திரேலியாவில் ஜனநெருக்கம் சதுரமைலுக்குச் சுமார் மூன்று பேர்தான். இங்கிலாந்தில் சதுர மைலுக்கு ஐந்நூற்று முப்பத்து மூன்று பேர். அமெரிக்காவில்கூட சதுரமைலுக்கு நாற்பத்தொன்பது பேர்.

எவ்வளவுதான் மலையும், வளமில்லாத பகுதியும் இருந்த போதிலும், ஆஸ்திரேலியாவில் குறைந்தது இரண்டு கோடி மக்கள் சௌகரியமாக வசிக்கலாமென்று அந்த நாட்டு அரசாங்கத்தாரே ஒப்புக்கொள்கின்றனர். ஆனால் யார் குடியேறுவது?

ஐரோப்பியரைத் தவிர வேறு எவரையும் குடியேற ஆஸ்திரேலியாவில் அனுமதிப்பதில்லை. 'வெள்ளை ஆஸ்திரேலியா' (White Australia) என்று இந்த நாட்டுக்கு ஒரு பெயர் உண்டு.

தங்கள் குடியேற்றக் கொள்கையை ஆஸ்திரேலிய அரசாங்கத்தார் பின்வருமாறு விளக்குகின்றனர்:

"ஆஸ்திரேலியாவின் குடியேற்றச் சட்டங்கள் இன வேற்றுமையை ஆதாரமாகக் கொண்டவையல்ல. 'வெள்ளை ஆஸ்திரேலியா' என்பது ஒரு வழக்கச் சொல்லே தவிர, நாட்டின் சட்டத்திலோ, அல்லது அரசாங்க தஸ்தாவேஜுகளிலோ பிரயோகிப்பதில்லை.

"மற்ற சுதந்திர நாடுகளைப்போலவே ஆஸ்திரேலியாவுக்குத் தங்கள் நாட்டுக்குள் யார் யாரை வர அனுமதிக்கலாமென்று முடிவு செய்ய உரிமை உண்டு. ஆஸ்திரேலியாவின் வாழ்க்கைத் தரம் உலகத்தில் மிகச் சிறந்தவைகளில் ஒன்று. இத்தகைய வாழ்க்கைத்தரம் குறையாமலிருக்க வேண்டுமென்ற ஆவல் மிகுதியால், இந்த வாழ்க்கைத் தரத்தை யாராவது குறைக்கக் கூடும் என்று கருதினால், அப்படிப்பட்டவர்களை அனுமதிப்பதில்லை. ஆரம்ப காலத்தில் தங்கச் சுரங்கங்களுக்கும், கரும்புத் தோட்டங்களுக்கும் குறைந்த கூலியில் தொழிலாளரைச் சேர்க்க முயன்றதை முன்னிட்டு, ஆஸ்திரேலியாவின் குடியேற்றச் சட்டங்கள் பொருளாதாரத்தையே அடிப்படையாகக் கொண்டு, மற்ற காரணங்களோடு பூகோள அமைப்பையும் கருத்தில் கொண்டு இயற்றப் பெற்றதால், இவை ஐரோப்பியரைவிட ஆசிய மக்களுக்கே மிகவும் பாதகமாய் இருக்கின்றன.

"என்றபோதிலும், ஐரோப்பியரல்லாதவர்களுக்கு விரோதமாக எவ்விதத் தடையும் இல்லை. உண்மையில் எத்தனையோ ஐரோப்பியரல்லாதவர்கள்—வியாபாரிகளும் மாணவர்களும், விஞ்ஞானிகளும், விளையாட்டுக்காரர்களும் எவ்விதத் தடையுமின்றி இந் நாட்டுக்கு வந்து செல்கின்றனர்."



அரசாங்கத்தாரின் இந்தக் கூற்று உண்மையல்ல.

முதலாவதாக :—

"'வெள்ளை ஆஸ்திரேலியா' என்பது ஒரு வழக்கச் சொல்லே தவிர நாட்டின் சட்டங்களிலோ அல்லது அரசாங்க தஸ்தாவேஜுகளிலோ பிரயோகிப்பதில்லை." என்று ஆஸ்திரேலிய அரசாங்கத்தார் தங்கள் வெளியீட்டில் கூறுகிறார்கள்.

ஆம், 'வெள்ளை ஆஸ்திரேலியா' என்பதை நடைமுறையில், அதாவது செயலளவில்தான் காட்டுகிறார்கள்.

இரண்டாவதாக :—

அமெரிக்காவும் கானடாவும் சுதந்திர நாடுகள். அவர்களுடைய வாழ்க்கைத்தரம் ஆஸ்திரேலியாவுக்குச் சமானமானது மட்டுமல்ல; அதைவிட உயர்ந்தது. அப்படியிருந்தும் அமெரிக்காவும் கானடாவும், மற்ற ஐரோப்பிய நாட்டினரைப்போலவே ஆசிய நாட்டினரும் ஒவ்வோர் ஆண்டும் இத்தனை பேர் தங்கள் நாட்டில் குடியேறலாமென்று வரையறுத்திருக்கிறார்கள். ஆஸ்திரேலியாவைப் போலவே கானடாவில் ஜன நெருக்கம் சதுர மைலுக்கு மூன்று பேர். பல ஆண்டுகளாக ஆசிய மக்கள் கானடாவிலும் அமெரிக்காவிலும் குடியேறி வந்திருக்கின்றனர்; குடியேறி வருகின்றனர். அதனால் அந்த நாடுகளில் வாழ்க்கைத் தரம் சிறிதும் குறைந்ததாகத் தெரியவில்லை.

மூன்றாவதாக :—

ஐரோப்பியர்கள்தான் வாழ்க்கைத் தரத்தில் உயர்ந்தவர்கள் என்றும், ஆசிய மக்கள் அனைவரும் தாழ்ந்தவர்கள் என்றும் கருதுவது சரியல்ல.

இந்தியாவில் நான்கு ஆண்டுகள் பிரயாணம் செய்த ஆங்கிலேயரை — இவர் ஐரோப்பாவிலும் பல முறை

பிரயாணம் செய்திருக்கிறார்—"ஐரோப்பியர் வாழ்க்கைத் தரத்துக்கு ஒப்ப இந்தியர்களில் நூற்றுக்கு எத்தனைபேர் வாழ்க்கைத் தரமுடையவர்கள்" என்று கேட்டேன்.

அவர் சிறிது யோசித்து, "அது ஐரோப்பாவில் எந்தத் தேசமென்பதைப் பொறுத்தது. இத்தாலியின் தெற்குப் பகுதியில் உள்ளவர்கள் வாழ்க்கைத் தரம் சாதாரண இந்தியரைப் போலத்தான். மற்ற சில நாடுகளைப் பார்த்தால், இந்தியர்களில் நூற்றுக்கு இருபது அல்லது இருபத்தைந்து பேராவது அத்தகைய ஐரோப்பிய வாழ்க்கைத் தரமுடையவர்கள் என்று சொல்லலாம்" என்றார்.

அமெரிக்கருடைய வாழ்க்கைத் தரத்தைவிட, நல்ல வாழ்க்கைத் தரமுடைய இந்தியர்கள் சிலர் இருக்கின்றனர். மலேயாவிலுள்ள சில சீனர்கள் வாழ்க்கைத்தரமும், யுத்தத்துக்கு முன் ஜப்பானில் சிலருடைய வாழ்க்கைத் தரமும், எந்த விதத்திலும் ஆஸ்திரேலிய வாழ்க்கைத் தரத்துக்குக் குறைந்ததல்ல. ஆசியாவிலும் பல நாடுகளில் நல்ல வாழ்க்கைத்தர முடையவர்கள் உண்டு. ஆனால் அவர்கள் எண்ணிக்கை குறைவு.

எத்தகைய வாழ்க்கைத் தரமிருந்தாலும், ஆசிய மக்களை ஆஸ்திரேலியாவில் குடியேற அனுமதிக்கவில்லை என்பதும், அனுமதிப்பதில்லை என்பதும் உண்மை.

நான்காவதாக:

"பூகோள அமைப்பையும் கருத்தில்கொண்டு" என்று கூறப்படுகிறது. இது தெளிவாக இல்லை. ஆஸ்திரேலியர் எப்பொழுதும் ஜப்பானியரைக் கண்டு அஞ்சுவதால், ஒருவேளை அவர்களைத்தான் குறிப்பிடுகிறார்களோ என்னவோ!

பூகோள அமைப்புப்படி ஆஸ்திரேலியா ஆசிய வட்டாரத்திலிருக்கிறது. பக்கத்து வீட்டுக்காரர்களான



ஆசிய மக்களிடம் வேற்றுமைகாட்டி, ஒதுங்கி வாழ முற்படுவது புத்திசாலித்தனமல்ல. ஆஸ்திரேலியா தன்னுடைய பாதுகாப்புக்குப் பிரிட்டனை நம்பியிருந்தது. இப்பொழுது அதில் நம்பிக்கையில்லாததால், அமெரிக்காவை நம்பி நியூஸிலந்தைக் கூட்டாகச் சேர்த்துக்கொண்டு மகாநாடு ஒன்று கூட்டி, ஒப்பந்தம் (ANZUS) செய்துகொண்டிருக்கிறது. இந்த மகாநாட்டுக்குப் பிரிட்டனைப் பார்வையாளராகக்கூட அனுமதிக்கவில்லை.

"ஜப்பான் ஆக்கிரமித்தது தவறு. ஆனால் ஜப்பானியர் சிங்கப்பூர் வந்ததற்குப் பதிலாக ஆஸ்திரேலியா சென்றிருந்தால், 'வெள்ளை ஆஸ்திரேலியா' என்ற அநீதி மறைந்து பழங் கதையாகி யிருக்கும்" என்று ஓர் ஆசியர் கூறினார்.

பக்கத்து நாட்டிலுள்ள இந்தோனேஷியாவில் ஜன நெருக்கம் சதுரமைலுக்கு எழுநூற்று முப்பத்தேழு பேர். ஜப்பானிலும் ஜனநெருக்கம் அதிகரிக்கிறது. இரண்டாவது யுத்தத்தின் பயனாக, ஜப்பான் தான் குடியேறிய பல நாடுகளையும் தீவுகளையும் இழந்துவிட்டது. ஆஸ்திரேலியாவில் ஜப்பானியர் குடியேற விரும்பினால் என்ன ஆகும்?

ஆஸ்திரேலியா அமெரிக்காவிடம் முறையிட்டால் என்ன பயன் உண்டாகும்? அமெரிக்கர்கள் ஜப்பானியர்களைச் சீனக் கம்யூனிஸ்டுகளுக்கு விரோதமாக, உபயோகிக்கவே விரும்புவார்கள். அமெரிக்கர்களுக்கு இந்த நேரத்தில், பத்துக் கோடி ஜப்பானியர்களும் அவர்களுடைய உதவியும் பெரிதா, அல்லது தங்கள் தேசத்தைக்கூட பாதுகாத்துக்கொள்ளப் போதிய சக்தியில்லாத எழுபத்தைந்து லட்சம் ஆஸ்திரேலியர்கள் பெரிதா?

எந்த விதத்திலும் ஆஸ்திரேலியா ஆசிய வட்டாரத்திலுள்ள நாடு. எனவே, 'பூகோள அமைப்பின்' படியும், அதன் குடியேற்றச் சட்டங்கள் சரியல்ல.

ஐந்தாவதாக :—

"என்றபோதிலும், ஐரோப்பியரல்லாதவர்களுக்கு விரோதமாக எவ்விதத் தடையும் இல்லை. உண்மையில் எத்தனையோ ஐரோப்பியரல்லாதவர்கள்—வியாபாரிகளும், மாணவர்களும், விஞ்ஞானிகளும், விளையாட்டுக்காரர் களும் எவ்விதத் தடையுமின்றி இந் நாட்டுக்கு வந்து செல்கின்றனர்."

ஐரோப்பியரல்லாதவர்கள் எவ்விதத் தடையுமின்றி வந்து செல்கின்றனரே தவிர, குடியேற வில்லை.

ஆறாவதாக :—

ஆஸ்திரேலியாவில் தங்கியிருந்தபொழுது ஆயிரத்து எண்ணூறு ஐரோப்பியர்கள் தனிக் கப்பலில் ஆஸ்திரேலியாவுக்கு வந்தார்கள். ஊர் பார்ப்பதற்காக அல்ல; குடியேறுவதற்காக! இவர்கள் அனைவரும் இத்தாலியரும், ஜெர்மானியாரும், கிழக்கு ஐரோப்பிய அகதிகளும்.

யுத்தத்தின்போது இத்தாலியும் ஜெர்மனியும் விரோத நாடுகள். இந்தியாவும் சீனாவும் நேச நாடுகளுடன் சேர்ந்து போராடின. குடியேறும் சந்தர்ப்பம் வரும்பொழுது ஆஸ்திரேலியர்கள், பழைய விரோதிகளான ஐரோப்பியர்களை விரும்புகிறார்களே தவிர, எப்பொழுதும் நண்பர்களாயிருக்கும் கறுப்பு—மஞ்சள் நிறத்தவர்களை விரும்பவில்லை.

அன்றியும் ஐரோப்பாவிலிருந்து வரும் அகதிகள் வாழ்க்கைத் தரம் மிகவும் பரிதாபமானது.

கடைசியாக :—

வாழ்க்கைத் தரத்தைக்கொண்டுதான் ஒருவர் அனுமதிக்கப்படுவதென்றால், ஒவ்வொருவரும் அவர் முன்னோரும் எந்த எந்த இனத்தில் எத்தனை சதவிகித ரத்தம் உடையவர்கள் என்று கேட்க வேண்டிய அவசியமென்ன?



எனவே, ஆஸ்திரேலியக் குடியேற்றச் சட்டம் இன வேற்றுமை ஒன்றையே அடிப்படையாகக்கொண்டு செய்யப்பட்டது. இதுதான் உண்மை. வாழ்க்கைத் தரத்தை அடிப்படையாகக் கொண்டு செய்யப்பட்டதாகக் கூறுவது முற்றிலும் தவறு.

தங்களுடைய தவறான கொள்கையை நியாயமென்று ஆஸ்திரேலிய மக்கள் எவ்வளவுதான் வாதித்தாலும் இன்றைய உலகம் அதனை ஏற்காது.

ஆஸ்திரேலிய வியாபாரி ஒருவர், "மூன்றாவது உலக யுத்தம் வரும் என்று நினைக்கிறீர்களா?" என்று கேட்டார்.

"ஆம்" என்றேன்.

"எப்பொழுது? எங்கே?" என்றார்.

"எப்பொழுது என்பது சொல்ல முடியாது. ஆனால் எங்கே என்று சொல்வது சுலபம். உங்களுடைய குடியேற்றச் சட்டத்தை மாற்றுவரையில், இங்கேதான் வரும்" என்றேன்.

ஆஸ்திரேலியக் குடியேற்றச் சட்டம், இன்றைய உலகப் போக்கில் மிகவும் அபாயமானது.



## பிஜித்தீவு

ஆஸ்திரேலியாவிலுள்ள சிட்னித் துறைமுகத்திலிருந்து பிஜித்தீவு சுமார் இரண்டாயிரம் மைல். சிட்னியிலிருந்து கப்பலில் சென்ருல் ஒரு வாரமாகும். சிட்னியில் துறைமுகத் தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்திருந்தபடியால், ஒரு கப்பலும் செல்லவில்லை. வேலை நிறுத்தம் பல மாதம் நீடிக்குமென்றும் கூறிஞர்கள்.

எனவே, சிட்னியிலிருந்து பிஜித் தலைநகரான சூவாவுக்கு, 'குவாண்டாஸ்' என்ற கம்பெனியார் நடத்தும் கடல் விமானத்தில் சென்றேன். இது ஆகாய விமானந்தான். ஆனல், பூமியிலிருந்து புறப்படுவதற்குப் பதிலாக, இது நீரிலிருந்து புறப்படும்; நீரிலேயே வந்து இறங்கும்.

சிட்னித் துறைமுகத்திலிருந்து இரவு பத்து மணிக்கு விமானம் புறப்பட்டது. இந்த விமானம் இரண்டு மாடியுள்ளது. மிகவும் சௌகரியமானது. குடிவகை எல்லாம் விமானத்திலேயே விற்பனை செய்கிருர்கள். சிலர் கூடிப் பேசுவதற்கும், சீட்டாடுவதற்கும் வசதிகள் இருந்தன. ஆனல் விமானத்தின் வேகம் மணிக்கு நூற்றுஎழுபது மைல்தான்.

மறு நாள் காலை ஏழு மணிக்குப் பசிபிக் சமுத்திரத்தில் நியூகலிடோனியாத் தீவிலுள்ள நொவ்மியா என்ற துறைமுகத்தைச் சேர்ந்தோம். விமானத்திலிருந்து எங்களை அழைத்துச் செல்ல வந்த படகில் ஏறி, கரை சேர்ந்தோம். இந்தத் தீவு பிரெஞ்சுக்காரர் வசமிருக்கிறது.

நொவ்மியாவில் கிராண்ட் பசிபிக் ஹோட்டலில் எங்களை இறக்கினார்கள். காலை ஆகாரம் சாப்பிட்டுவிட்டு அந்தச் சிறிய அழகான ஊரைச் சுற்றிப் பார்த்தோம். இந்த நாட்டில் பிரெஞ்சுக்காரர், நீக்ரோ, போலினேஷ்யர் முதலிய பலவிதமான மக்கள் வாழ்கின்றனர். ஆயிரக் கணக்கான இந்தோனேஷ்யர் இந்நாட்டில் குடியேறியுள்ளனர். இவர்களில் பெரும்பாலோர் தொழிலாளர்களே.

நொவ்மியாவிலிருந்து காலை பத்து மணிக்குப் புறப்பட்டு மாலை நான்கு மணிக்கு சூவா துறைமுகம் வந்து சேர்ந்தோம். விமானம் கடலில் இறங்கியதும், துறைமுகத்திலுள்ள பாலத்தில் வந்து அணைந்தது. பிறகு வழக்கமான சடங்குகள்: முதலில் சுகாதார அதிகாரி, பிறகு குடியேற்றப் பதிவு அதிகாரி, கடைசியாக சுங்க அதிகாரி.

பிஜித்தீவு பிரிட்டிஷார் வசம் இருக்கிறது. அந்நியர் பிஜிக்கு யாத்திரிகர்களாக வருவதற்குத் தடை ஒன்றும் கிடையாது. யாத்திரிகர்கள் பொதுவாக அதிக நாள் தங்குவதில்லை. என்றாலும் பிஜித்தீவில் நான்கு மாதம் வரை தங்க அனுமதிக்கிறார்கள். யாத்திரிகர்கள் முன்னதாகவே தாங்கள் திரும்பிச் செல்வதற்குப் பிரயாணச் சீட்டு வாங்கி வரவேண்டும், அல்லது ஐம்பது பவுன் ஈடுதொகை கட்டவேண்டும். பிஜித்தீவில் தங்குகிறவரையில் செலவுக்குப் போதுமான தொகை இருக்க வேண்டும். ஏற்கெனவே எனது வருகையைக் குறித்து நண்பர்கள் குடியேற்றப் பதிவு அதிகாரிகளுக்குத் தெரிவித்திருந்தபடியால், எவ்வித சிரமமும் இல்லாமல் இருந்தது.

சடங்குகள் முடிந்து வெளியே வந்ததும், என்னை அழைத்துப் போக வந்த நண்பரைத் தேடினேன். அவர் பெயர் தெரியுமே தவிர, அவரை நேரில் பார்த்ததில்லை. ஏராளமான இந்தியர் அங்கு வந்திருந்தனர்.



சுவாமி ருத்ரானந்தா



சுவா நகரில் ஒரு பிரதான வீதி



சுமார் ஐம்பது வயதுள்ள ஓர் அன்பர் எனக்கு நமஸ்காரம் செய்து, "பிரயாணம் சௌகரியமாய் இருந்ததா? நான் தான் கோபாலன்" என்றார்.

அவரைப் பார்த்ததும் எனக்குப் பெரிதும் மகிழ்ச்சி உண்டாயிற்று. அவருடைய இரண்டாவது குமாரன் ஆனந்தன், எனது சாமான்களை எல்லாம் ஒழுங்காக மோட்டாரில் வைத்துவிட்டு, எங்களை அழைத்துச் செல்வதற்குத் தயாராக இருந்தான். சுவாவின் பிரதான வீதியான 'வைமானு ரோடி'லுள்ள 'விஜய விலாஸ்' என்ற மாளிகைக்குச் சென்றோம்.

டாக்டர் சம்பக முகுந்தன் கோபாலன், மலபாரில் கண்ணனூரைச் சேர்ந்தவர், சென்னையில் மருத்துவ பரீட்சையில் தேறினர். இருபத்திரண்டு ஆண்டுகளுக்கு முன், பிஜித்தீவுக்கு அரசாங்க வைத்தியசாலையில் வேலை செய்வதற்கு வந்தார். பின்னர் சொந்தமாக வைத்தியத் தொழில் நடத்துகிறார். பிஜித்தீவிலுள்ள முக்கியமானவர்களில் டாக்டர் கோபாலன் ஒருவர்.

மலேயாவில் தங்கியிருந்த பொழுது, பிஜியில் வெளியாகும் பத்திரிகை ஒன்றைப் பார்த்தேன். அதில் டாக்டர் சி. எம். கோபாலன், நகரசபை அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார் என்ற செய்தியைப் படித்ததும், பிஜித்தீவுக்கு வர எண்ணியிருப்பதாகவும், அங்கு அவரைச் சந்திக்க விரும்புவதாகவும் எழுதியிருந்தேன். சில நாள் சென்ற பின், டாக்டர் கோபாலனிடமிருந்து பதில் கிடைத்தது. தம்மால் இயன்ற எல்லாவித உதவிகளையும் மகிழ்வுடன் செய்வதாகவும், பிஜியில் தம்முடைய வீட்டிலேயே நான் தங்கவேண்டுமென்றும் எழுதியிருந்தார். எனக்கு அவருடைய அறிமுகம் ஏற்பட்ட வரலாறு இதுதான்.

வெளியூர் சென்றிருந்த அவர் மனைவி, மாலை ஏழு மணிக்கு வீடு திரும்பினார். மிக அன்புடன் என்னை வரவேற்றார். இவருக்குத் தமிழ் தெரியாது. ஆஸ்திரேலியாவில் பிறந்த சிங்களவர் இவர்.

"இப்பொழுது தான் நந்தியிலிருந்து வருகிறேன். அங்கே சங்கத்தின் வெள்ளி விழா நடந்து கொண்டிருக்கிறது. இன்னும் சில நிகழ்ச்சிகள் பாக்கியுள்ளன. சுவாமிஜி மோட்டாரில்தான் நான் இங்கு வந்தேன். இதே மோட்டாரில் தங்களை உடனே அழைத்து வரும்படி, சுவாமிஜி இரண்டு அன்பர்களை அனுப்பியிருக்கிறார். அவர்கள் இன்றிரவு தங்கள் நண்பர் ஒருவர் வீட்டில் தங்கிய பின்னர், நாளைக் காலை இங்கு வருவார்கள். நீங்கள் புறப்படத் தயாராக இருக்கவேண்டும்."

இவ்வாறு கூறி அந்த அம்மையார் ஒரு கடிதத்தை என்னிடம் கொடுத்தார். அது தமிழ்க் கடிதம். சுவாமி ருத்ராநந்தர் கைப்பட எழுதப்பெற்றிருந்தது. அழையாத விருந்தினராகச் சென்ற எனக்கு அன்புடன் வரவேற்புக் கூறி, வெள்ளிவிழாவில் உடனே வந்து கலந்து கொள்ளும்படி அவர் எழுதியிருந்தார்.

ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தைச் சேர்ந்த சுவாமி ருத்ராநந்தர் பிஜித்தீவில் தொண்டாற்றி வரும் பெரியார். பிஜியிலுள்ள மக்கள் இவரை அன்புடனும் மரியாதையுடனும் 'சுவாமிஜி' என்று அழைக்கின்றனர்.

மறுநாள் காலை பதினொரு மணி இருக்கலாம். டாக்டர் கோபாலன் வீட்டின் எதிரே சிறிய மோட்டார் வந்து நின்றது. அது பழைய காலத்து ஓப்பல் மோட்டார். அன்பர் பழனியப்பனும் அவர் மைத்துனர் ராமசாமியும் உள்ளே வந்து தங்களை அறிமுகப் படுத்திக்



கொண்டு எனது சாமான்களை எடுத்து மோட்டாரில் வைத்தார்கள்.

பழனியப்பன் ஒரு விவசாயி. நடுத்தர வயதுள்ளவர். பிஜியில் பிறந்த இந்தியர்களின் முதலாவது தலைமுறையைச் சேர்ந்தவர். தமிழ் நன்றாக எழுதப்படிக்கத் தெரியும். ராமசாமியும் படித்தவர். அவருடைய சகோதரர் இங்கிலாந்தில் சட்டப் படிப்புப் படித்துக் கொண்டிருந்தார். பழனியப்பனும் ராமசாமியும் சங்கத்து அங்கத்தினர்கள். சுவாமிஜியிடம் பக்தியுள்ளவர்கள்.

சூவாவிலிருந்து நந்தி நூற்றுமுப்பத்து மூன்று மைல். பாதிக்கு மேல் மலைப்பாதை. முப்பது மைல் தூரம் வந்ததும் நாபுவா என்ற ஊரை அடைந்தோம். அங்கு சிறு பண்ணைக்குச் சென்றோம். வயதான ஒருவர், நல்ல தமிழ் பேசி அன்புடன் வரவேற்றார். இவர் பெயர் முகமதுசலீம் பக்ஷ். டாக்டர் கோபாலன் வந்த சமயத்தில் இவர், பிஜித் தீவுக்கு அரசாங்கத்தில் வேலை செய்வதற்காக வந்தவர். இப்பொழுது ஓய்வு பெற்றுச் சிறு பண்ணை வைத்து நடத்துகிறார். சென்னை ஷாபி முகமதுக்கு இவர் சொந்தக்காரர். பக்ஷ் தம்பதிகள் நல்ல உபசாரம் செய்து உணவளித்தனர்.

"இரண்டு தினங்களுக்கு முன் தான் நந்தியிலிருந்து வந்தேன். சங்கம் நல்ல வேலை செய்கிறது. அதில் ஜாதி மத வித்தியாசமில்லை. சில வருஷங்களுக்கு முன் என்னைத் தலைவராகத் தேர்ந்தெடுத்தார்கள். நந்திக்குச் சென்று பாருங்கள்; அது ஒரு சிறிய 'மெட்ராஸ்' மாதிரி இருக்கும்" என்றார் பக்ஷ்.

நந்தியை நோக்கி மீண்டும் பிரயாணமானோம். அற்புதமான காட்சிகள்; எங்கு பார்த்தாலும் பசுமை. அடர்ந்த மரங்கள். சுமார் எண்பது மைல் பிரயாணம் செய்தோம். இதுவரை ஒரு கரும்புத் தோட்டத்தைக் கூடப் பார்க்க

வில்லை. பாரதியார் பாடிய, 'கரும்புத் தோட்டத்திலே' என்ற பாடல் நினைவுக்கு வந்தது. பிஜித்தீவு முழுதும் ஒரே கரும்புத் தோட்டமாக இருக்குமென்று எண்ணினேன். "இன்னும் சிறிது தூரம் சென்றால் கரும்புத் தோட்டத்தைத் தவிர வேறு ஒன்றையுமே பார்க்க மாட்டீர்கள்" என்றார் பழனியப்பன்.

சிங்கடோகா என்ற ஊருக்கு வந்தோம். இருட்டிவிட்டது. நந்தி இன்னும் நாற்பது மைல். ஓர் இந்திய உணவுச்சாலையில் சாப்பிட்டோம். சாப்பாடு சுமாராகத்தான் இருந்தது. சாப்பிட்டுக் கொண்டிருந்த பொழுது, அங்கிருந்த வேலைக்காரர், "இன்னும் கொஞ்சம் சாதம் வேண்டுமா?" என்று கேட்டார். இதைக் கேட்டதும் நான் திடுக்கிட்டேன். இந்தியாவை விட்டு நான் புறப்படுவதற்கு முன் சுமார் ஆறு ஆண்டுகள்வரை இந்தியாவில் எந்த உணவுச்சாலையிலும் யாரும் என்னை இந்தக் கேள்வி கேட்டதில்லை!

இரவு எட்டு மணிக்கு நந்தியை அடைந்தோம். அன்றைய விழா நிகழ்ச்சிகள் முடியப்போகும் சமயம். உடற் பயிற்சி செய்து காண்பித்தவருக்கு டாக்டர் முகர்ஜி ஒரு சிறு உரை நிகழ்த்தி, பதக்கம் ஒன்றைப் பரிசளித்தார். நடுத்தர வயதும், மிகவும் சுறுசுறுப்புமுள்ள ஒருவர் விரைந்து என்னை வரவேற்று, "எனது பெயர் சுப்பா ரெட்டி. இங்குள்ள விவேகாநந்தா ஹைஸ்கூலின் தலைமை ஆசிரியன்" என்றார். கூட்டத்தின் மத்தியிலிருந்த சுவாமிஜி உற்சாகத்தோடும் மகிழ்ச்சியோடும் வரவேற்றார்.

சிறிது நேரத்தில் அன்றைய நிகழ்ச்சிகள் முடிந்தன. சுவாமிஜியுடன் உணவருந்தச் சென்றேன். இந்தியாவிலிருந்து நான் வந்திருப்பதாக அறிந்த பலர், உடனே என்னிடம் வந்து கேள்விமேல் கேள்வி கேட்க ஆரம்பித்தனர்.



அந்தக் கூட்டத்தில் செட்டியார் என்ற பெயருடைய சில தமிழர்கள் என்னிடம் சொந்தம் கொண்டாடக் கூடிய அளவுக்கு வந்துவிட்டனர். செட்டியார் என்ற பெயரொன்றே அவர்களுக்குப் போதும். ஆனால் எனக்கு நந்தியிலுள்ள எல்லோரும் 'செட்டியார்'களாகவே தென்பட்டார்கள்; அதாவது அங்குள்ள அனைவரும் உறவினர்களாகவே தோன்றினார்கள்.

டாக்டர் முகர்ஜி வங்காளத்தைச் சேர்ந்தவர். வைத்தியத் துறையைப் போலவே இலக்கியத் துறையிலும் தேர்ச்சி பெற்றவர். ஜெர்மனியில் கொஞ்ச நாள் படித்தவர். அந்த நாட்டில் பட்டத்தோடு மனைவியையும் சம்பாதித்துக் கொண்டார். நந்தியிலே ஒரு பகுதியில் பெரிய மேட்டின் மீது வசிக்கிறார். இந்தத் தம்பதிகள் பிஜிக்கு வந்து பல ஆண்டுகளாயின. வீட்டிலேயே ஒரு 'டென்னிஸ்' விளையாடும் இடம் அமைத்திருக்கிறார்கள். பிஜியிலேயே எனக்குத் தெரிந்தவரை நல்ல காபி தயாரிப்பது முகர்ஜியின் மனைவிதான். அந்தக் காபி சாப்பிடுவதற்காக அவர் வீட்டுக்குக் குன்றின்மேல் ஏறுவதுபோல நடந்து செல்லும் சிரமத்தை ஒருபொழுதும் நான் பொருட்படுத்தியதே இல்லை.

அம்பாலால் தயாபாய் படேல் அடுத்தபடியாக அறிமுகமானார். பெயரைப் பார்த்தாலேயே இவர் குஜராத்தி என்பது தெரியும். ஆனால் வியாபாரியல்ல. அந்தத் தீவிலேயே மிகப் பிரபலமான வழக்கறிஞர். கூர்ந்த புத்தியும், தைரியமும், உயர்ந்த நகைச்சுவையும் உடையவர். சங்கத்துக்கு கௌரவ நிர்வாகி. சுவாமிஜிக்கு வலது கை என்று இவரைக் கூறலாம்.

"வெள்ளி விழா ஆனதால் ஆசிரமத்தில் தங்கப் போதிய வசதி இருக்காது. எனவே படேல் வீட்டிலேயே

நீங்கள் தங்க ஏற்பாடு செய்திருக்கிறது'' என்றார் சுவாமிஜி.

நந்தியிலிருந்து இரண்டு மைல் தூரத்தில் வசிக்கிறார் படேல். அழகிய தோட்டத்தின் நடுவே சிறிய மாளிகை. சொந்தமாகவே மின்சார வசதிகள் செய்திருக்கிறார். பிரயாண அலுப்பால் நன்றாகத் தூங்கினேன்.

மறுநாள் அதிகாலையில் எழுந்து ஸ்நானம் செய்து விட்டு, எனது அறைக்குள் வந்தேன். ஒரு முரட்டு பிஜியர் என்னிடம் வந்து, "செட்டியாரே, உங்கள் துணியெல்லாம் கொடுங்கள் துவைப்பதற்கு'' என்றார். அவர் தமிழில் பேசியதை என்னால் நம்ப முடியவே இல்லை. ஆச்சரியத்தோடு அவரைப் பார்த்தேன்.

உடனே அவர், "என் பெயர் ஜ்வேலி. நான் இங்கே மோட்டார் ஓட்டுகிறேன். எனக்குத் தமிழ் நல்லாப் பேசத் தெரியும்'' என்றார். அவர் இனிமையாகத் தமிழ்ப் பேசியதன் காரணத்தை அறிந்தபொழுது என் ஆச்சரியம் குறைந்தது. ஏனெனில் அவர் மனைவி ஒரு தமிழ்ப் பெண்!

படேலுக்கு அப்பொழுது இரண்டு குழந்தைகள். அவருடைய மனைவி விருந்தோம்பலில் சிறந்தவர். காலை ஆகாரத்துக்குப் பின் படேல், "வெள்ளி விழாவில் இன்று காலை முக்கிய நிகழ்ச்சிகள் இல்லை. இந்திய நண்பர் ஒருவர் புதிதாகத் தங்கச் சுரங்கம் ஒன்று கண்டுபிடித்து வேலை செய்கிறார். அங்கு சென்று பிற்பகலில் திரும்பலாம். பிறகு விழாவில் கலந்து கொள்ளலாம். உங்களுக்கும் ஊர் பார்த்த மாதிரி இருக்கும். சுவாமிஜிக்கு டெலிபோன் செய்து விஷயத்தைச் சொல்லுகிறேன்'' என்றார்.

ஜீப் மோட்டாரில் படேல் குடும்பத்தினரும் இன்னும் இரண்டொருவரும் புறப்பட்டோம். ஓட்டியது ஜ்வேலிதான். சுமார் பதினைந்து மைல் சாலையில் சென்ற பிறகு, ஜ்வேலி ஜீப்பைக் குறுக்கே ஓட்டினார். நல்ல பாதை கிடையாது. வெறும் வண்டித்தடம்தான். பிறகு அதுவும் கிடையாது. திக்கு நோக்கி, காட்டிலும் மேட்டிலும் பிரயாணம் செய்தோம். சிறு ஓடைகளைக் கடந்தோம். வர வர மலைப்பிரதேசம் அதிகமாயிற்று. ஒரு மலையைத் தாண்டியதும் "அப்பா தாண்டிவிட்டோம்'' என்று பெருமூச்சு விட்டேன். அதற்குள் படேல், "இனிமேல்தான் நாம் பெரிய மலையைத் தாண்டவேண்டும். அதுதான் அபாயமானது'' என்றார்.



"தெரியாமல் இந்தப் பிரயாணத்தில் ஏன் வந்து சிக்கிக் கொண்டோம்'' என்று எனக்கு வருத்தம். பெண்களும் குழந்தைகளும் தைரியமாக இருந்ததால், எனது பயத்தை வெளியே காட்டிக்கொள்ள வெட்கமாய் இருந்தது. சுமத்ராவில் பிரயாணம் செய்தபொழுது பஸ் உருண்டதால் உண்டான அதிர்ச்சி இன்னும் என்னைவிட்டுப் போகவில்லை. நாங்கள் செல்லுகிற தங்கச் சுரங்கச் சொந்தக்காரருக்குச் சாமான்களை ஏற்றிச் செல்லும் லாரி ஒன்றிருக்கிறது. அது மலையிலிருந்து கீழே இறங்கி வருமானால், அந்த லாரியும் எங்கள் ஜீப்பும் செங்குத்தான இடத்தில் சந்திக்க நேர்ந்தால் ஒரே ஆபத்துதான். ஏதேனும் ஆபத்து நேரிட்டால் உயிர் தப்புவது கடினம். எனவே தைரியமாய் இருப்பதாகப் பாவனை செய்துகொண்டு, இனிமேல் எந்தக் காரணத்தைக் கொண்டும் இந்தச் சுரங்கத்துக்கு வருவதில்லை என்ற பிரதிக்ஞையுடன் ஆண்டவனைப் பிரார்த்தித்துக் கொண்டிருந்தேன்.

ஒருவாறு சுரங்கத்தை அடைந்தோம். இரண்டு இந்திய சகோதரர்கள் எவ்வாறு கஷ்டப்பட்டு இதனை நடத்துகிறார்கள் என்பது மிகவும் ஆச்சரியமானது.

சுரங்கத்தைச் சுற்றிக் காண்பித்து, தங்கம் எடுக்கும் விதத்தையும் விளக்கிச் சொன்னார்கள்.

ஆனால் எனது எண்ணமெல்லாம், "எவ்வாறு பத்திரமாக நந்தி போய்ச் சேர்வோம்" என்பதுதான்.

திரும்பும்பொழுது மழை தூற ஆரம்பித்தது. ஓர் இடத்தில் இறங்கும்பொழுது நன்றாக வழுக்கிவிட்டது. ஜீப்பில் இருந்த அனைவரும் திகிலடைந்தனர். சிலர் வாய்விட்டுக் கதறினர். ஆண்டவன் அருளால் தப்பினோம். ஊருக்குள் வரும்பொழுது நல்ல மழை. ஜீப்பில் பிரயாணம் செய்ததால் ஆடைகள் எல்லாம் முற்றிலும் நனைந்து விட்டன. கனத்த மழையின் காரணமாக, வெள்ளி விழாவின் அன்றைய நிகழ்ச்சிகள் ரத்து செய்யப் பெற்றன.

எனவே, படேல் வீட்டில் தங்கி, அவருடைய அருமையான புத்தகசாலையில் இருந்த பிஜியைப் பற்றிய புத்தகங்கள் சிலவற்றைப் புரட்டிப் பார்த்தேன்.

* * * *

பிஜித்தீவுகள் என்று நாம் அழைப்பது சுமார் முந்நூறு தீவுகள் கொண்டவை. இவற்றில் பெரும்பாலான தீவுகளில் மனித சஞ்சாரமே கிடையாது. சில தீவுகள் ஆடு மாடு மேய்வதற்கு மட்டும்தான் பயன்படுகின்றன. ஒரு சில தீவுகளிலேயே மக்கள் வசிக்கின்றனர். இவைகளில் பெரிய தீவு விட்டிலேவு. இந்தத் தீவைச் சுற்றி வந்தால் முந்நூற்று இருபத்திரண்டு மைல் தூரம் ஆகும். பிஜியின் ஜனத்தொகையில் பாதிக்கு மேல் இங்கேதான் வசிக்கிறார்கள். பிஜித்தீவின் தலைநகரான சூவா பட்டணம் இத் தீவிலிருக்கிறது.

இதற்கு அடுத்த பெரிய தீவு லம்பாசா. இன்னும் தவியோணி, கோரோ, யாலாவா, ஓவாலாவ் போன்ற



பல தீவுகள் இருக்கின்றன. எல்லாத் தீவுகளுக்கும் கப்பல் போக்குவரத்து உண்டு. முக்கியமான தீவுகளுக்கிடையே விமானப் போக்குவரத்து இருக்கிறது.

பிஜியின் விஸ்தீரணம் ஏழாயிரம் சதுரமைல். ஜனத்தொகை சுமார் மூன்று லட்சம். இதில் ஒன்றரை லட்சம் இந்தியர். பிஜியர் எனப்படும் கைவித்திகள் ஒரு லட்சத்து முப்பதாயிரம். ஐரோப்பியர் எண்ணாயிரம். ஐரோப்பியருக்கும் பிஜியருக்கும் பிறந்தவர்கள் ஏழாயிரம். சீனர் மூவாயிரத்து ஐந்நூறு. மற்றும் பக்கத்துத் தீவுகளிலிருந்து வந்து குடியேறியவர்கள் மிகச் சொற்பமாக இருக்கின்றனர்.

இந்தியரின் ஜனத்தொகையில் பெரும் பகுதி பீகார், ஐக்கிய மாகாணம், பாஞ்சாலம் முதலிய இடங்களிலிருந்து குடியேறியவர்களும், அவர்களின் சந்ததியாரும் ஆவர். அது தவிர நூற்றுக்கணக்கான குஜராத்திகள் பிஜித்தீவில் வியாபாரம் செய்கின்றனர். தென்னிந்தியாவிலிருந்து குடியேறியவர்களும் அவர்களின் சந்ததியாரும் சுமார் முப்பதாயிரம் பேர். தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் முதலியவை இவர்களின் தாய்மொழி. சிலருக்குத்தான் இந்தத் தாய்மொழி எழுதப் படிக்கத் தெரியும். பலருக்குப் பேசத் தெரியும். ஆனால் எல்லோருக்கும் ஹிந்தி தெரியும். தென்னிந்தியரில் தமிழரின் எண்ணிக்கை மிக அதிகம். சாது குப்புசாமியும் அவர் நண்பர்களும் சேர்ந்து 'தென் இந்திய சன்மார்க்க ஐக்கிய சங்க'த்தை ஆரம்பித்தார்கள். அதன் வெள்ளிவிழாதான் இப்பொழுது நடப்பது.

மறுநாள் விழாவுக்குச் சென்றேன். இப்பொழுதும் சங்கத் தலைவர் சாது குப்புசாமிதான். இவர் உண்மையிலேயே சாது. சாது சாமி என்று எல்லோரும் பிரியமாக அழைப்பார்கள். இவர் பிரமச்சாரி; இனிய சுபாவம்

படைத்தவர். எளிய தோற்றமுடையவர். பெரிய படிப்பாளி அல்ல; ஆனால் நிறைந்த பண்பாடு உடையவர். காலில் செருப்பு அணியமாட்டார். பிஜித்தீவில் இவர் செல்லாத இடமே இல்லை. இவருக்கு வயது எழுபதுக்கு மேலிருக்கும். தமது வரலாற்றை யாரிடமும் அவர் கூறுவதில்லை. திருவல்லிக்கேணி கடற்கரையில் புத்தகங்கள் சுமந்து விற்றுக் கொண்டிருந்ததாகக் கேள்வி. கங்காணியின் வலையில் சிக்கி இந்த நாட்டுக்கு ஒப்பந்தக் கூலியாக வந்தவர். தமது புனிதமான வாழ்க்கையினால் பிறரின் மதிப்பைப் பெற்றவர்.

விழாவில் காலையில் கூட்டம் அதிகம் இல்லை. மாலையில் பக்கத்து ஊர்களிலிருந்து திரளாக மக்கள் வந்தனர். விழாவின் ஓர் அம்சம் திருவிழாக் கடைகள். மாணவ மாணவிகள் இந்தக் கடைகளை நடத்தினர். இதனால் கிடைக்கும் வருமானம் சங்கத்தைச் சேரும்.

அன்றைய நிகழ்ச்சியில் முக்கியமானது மாதர் மகாநாடு. பல பெண்கள் பங்கெடுத்துக் கொண்டார்கள்.

அன்றிரவு நந்தி சுப்பிரமணிய சுவாமி கோயிலில் விழாவை முன்னிட்டு ரத உற்சவம். காலையிலிருந்தே சில பக்தர்கள் கோயிலுக்குச் சென்று, சுத்தம் செய்து, கோலமிட்டு, தோரணங்கள் கட்டி, மற்றும் பல ஏற்பாடுகளைச் செய்தனர். இரவு சுவாமியை நன்கு அலங்கரித்து, காந்த விளக்கு, தீவர்த்திகள், ஆலவட்டம் புடை சூழ மேள வாத்தியங்களுடன் மாடவீதியில்—நந்தியில் ஒரே ஒரு வீதிதான்—எழுந்தருளச் செய்தனர். வழி நெடுக தேங்காய் உடைத்துத் தீபாராதனை நடந்தது. தமிழ்நாட்டுக் கிராமம் ஒன்றில் நடைபெறும் உற்சவம் போலவே இருந்தது. தாய் நாட்டைவிட்டுப் பத்தாயிரம் மைல் தூரத்துக்கப்பால் இம்மாதிரிக் காட்சியைக் காண எவ்வளவு மகிழ்ச்சி உண்டாகும்!



மறுநாள் விழாவில் பல முக்கிய அம்சங்கள். பிற்பகலில் கைவித்தி நாட்டியம் நடைபெற்றது. ஆண்களும் பெண்களும் மலர்ந்த முகத்துடன் உற்சாகமாக ஆடிய இந்த நடனம் மிகவும் நன்றாக இருந்தது. "கைவித்திக் கூத்து நன்றாக இருக்கிறதா?" என்று ஒருவர் பின்னாலிருந்து தமிழில் கேட்டார். திரும்பிப் பார்த்தேன். வேறு யாருமில்லை, மோட்டார் ஓட்டும் ஜ்வேலிதான்!

மாலையில் சங்கீதக் கச்சேரி. ஆம், இந்தியாவிலிருந்து வந்த 'சங்கீத வித்துவான்' ஒருவர் கர்நாடக சங்கீதம் பாடினார். இந்தச் சங்கீத வித்துவான் இந்தியாவில் ஒரு பாட்டு வாத்தியாராம். கச்சேரிகள் செய்து பொருள் சேர்த்து வந்தார். வெளிநாட்டிலுள்ள இந்தியருக்குத் திரைப்பட சங்கீதம்தான் தெரியும்; அதுதான் பிடிக்கும். இவருடைய கச்சேரிக்குக் கட்டணச் சீட்டு விற்பது சிரமமாகிவிட்டது. "கூட்டமில்லாவிட்டால் பாடமாட்டேன்" என்கிறார் இந்தச் சங்கீத வித்துவான். "இனாமாகக் கூப்பிட்டாலும் வரமாட்டோம்" என்கிறார்கள் பொது மக்கள். இருந்தாலும் கச்சேரி ஒருவாறு முடிந்தது.

அன்றிரவு கோவலன் நாடகம். ஆம், பிஜித்தீவில் தமிழில் கோவலன் நாடகம்! அதில் நடித்தவர்களில் மாதவி வேடம் பூண்ட ஒருவர் மட்டும்தான் இந்தியாவுக்கு வந்து நாடகங்கள் பார்த்திருக்கிறார். மற்றவர்கள் இந்தியாவுக்கு வந்ததே கிடையாது. தமிழ் நாடகங்கள் பார்த்ததும் கிடையாது. இசைத்தட்டுக்களில் கோவலன் நாடகத் தொகுப்பு வருகிறதல்லவா? இதை ஆதாரமாகக்கொண்டுதான் நடத்தினார்கள். இதையெல்லாம் கவனிக்கும் பொழுது நாடகம் முதல் தரம் என்று கூறலாம்.

நாடகம் முடிந்ததும் பக்கத்திலிருந்த ஒருவரை, "நாடகம் எப்படி இருந்தது" என்றேன்,

"ஏக்தம் நல்லாயிருந்தது" என்றார்.

நமது நாட்டில் ஆங்கிலத்தையும் தமிழையும் நாம் கலந்து பேசுவது போல, அங்கே ஹிந்தியையும் தமிழையும் கலந்து பேசுகிறார்கள்.

விழாவின் கடைசி நாள். எனவே கூட்டமும் அதிகம். தமிழில் ஐந்து நிமிஷம் பேசும்படி சுவாமிஜி கூறினார். அதோடு, நிதானமாகப் பேசும்படியும் சொன்னார்.

சுருக்கமாகப் பேசினேன். நன்றியைத் தெரிவித்து விட்டு, சில பிரயாண அனுபவங்களைக் கூறினேன். மக்கள் ஹாஸ்யத்தை உணர்ந்து சிரிப்பார்கள் என்று கருதினேன். ஒரே நிசப்தம்.

பிறகு சுவாமிஜி எனது பிரசங்கத்தை ஹிந்தியில் மொழி பெயர்த்துக் கூறினார். ஒரே சிரிப்பு. மக்களுக்கு எனது மொழி புரியவில்லையே தவிர, ஹாஸ்யம் நன்றாகப் புரிகிறது என்று தெரிந்து கொண்டேன்.

பிஜிக்கு வருமுன் தமிழ் நாட்டின் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களை, பிஜித் தமிழருக்கு ஒரு வாழ்த்து அனுப்பும்படி வேண்டினேன். நோயையும் பொருட்படுத்தாது, படுத்த படுக்கையிலிருந்தே அன்புடன் வாழ்த்துக்கவி எழுதியனுப்பினார்கள். மலேயாவில் கோலாலம்பூரிலுள்ள 'தமிழ் நேசன்' காரியாலத்தார் அக் கவிகளை அச்சிட்டு உதவினார்கள். சுவாமிஜி அவற்றைப் பாடி சிறிது விளக்கிக் கூறினார். வாழ்த்துக்கவி :

வெண்பா

தென்றுடு விட்டேகி தீவாந் தரத்தையெல்லாம்
பொன்னுடாய் மாற்றிப் புரந்திடுவோர்—என்நாளும்
ஓங்கும் அறிவால் உழைப்பால் பெரும்புகழைத்
தாங்கும் தமிழரே தாம்.



வேறு

பொங்கு கடல் கடந்து—சென்றிப்
 பூவுல கத்தினிலே
எங்கெங்கு வாழ்ந்தாலும்—தமிழர்
 ஏக குலத்தவராம்.
கோடரி மண்வெட்டி—கலப்பை
 கூந்தாலி ஏந்துவோரே
நாடெல்லாம் ஆளுகின்ற—உண்மை
 நாயக ராவாரையா
பாழ் நிலத்தையெல்லாம்—திருத்திப்
 பயன்படுத்தி மக்கள்
வாழ் நிலமாகத்—தமிழர்
 மாற்றின தாரறியார்?
இலங்கை சிங்கபுரம்—பிஜி முதல்
 இன்னும் பலவான
தலங்களின் செல்வம்—தமிழர்
 தந்த செல்வமன்றோ?
நாச அணுக்குண்டால்—நமக்கு
 நன்மை ஏற்படுமோ?
நேசமாய் நிதமும்—அஹிம்சை
 நெறியைப் போற்றுவமே
காந்தி மகான் சொன்ன—வழியைக்
 கடைப்பிடிக்கு மந்த
மாந்தரே உலகில்—நல்ல
 வாழ்வு பெறுவரையா!

வெண்பா

ஆதி பகவன் அறவாழி அந்தணன்
யாதும் உவமையிலான் இன்னருளால்—பூதலத்தில்
சிந்தைக் கினியபிஜித் தீவில் தமிழ்மக்கள்
சந்ததம் வாழ்க தழைத்து.

வெள்ளி விழா முடிந்த மறுநாள் நந்திக் கிராமத்தில் கூட்டமே இல்லை. நந்தி நகர்ப்புறத்தைச் சார்ந்து அமைந்துள்ளது. நமக்குக் கிராமம் போலத் தோன்றுகிறது. நந்தியின் ஜனத்தொகை எண்ணூறு தான். ஆனால் அந்த ஊரில் உள்ள வசதிகள்:

விவேகாநந்தா உயர்தரப் பள்ளி
சங்கம் மத்தியதரப் பள்ளி
ஆண்டுரூஸ் ஞாபகார்த்த ஆரம்பப்பள்ளி
மாணவர் மாணவியர் விடுதிகள்
பெரிய அச்சுக்கூடம்
இரண்டு வாரப் பத்திரிகைகள்
ஆசிரமம், புத்தகசாலை
திரைப்படக் காட்சிசாலை
வைத்தியசாலை, மருந்துக்கடை
ஐரோப்பிய முறையிலுள்ள நந்தி ஹோட்டல்
இந்தியர்—சீனர் உணவுச் சாலைகள்
ரயில் நிற்குமிடம்
பஸ், வாடகை மோட்டார்கள் நிற்குமிடங்கள்
பெட்ரோல் விற்பனை செய்யுமிடம்
தபால் நிலையம்
டெலிபோன் காரியாலயம்
நீதி மன்றம்
இரண்டு வழக்கறிஞர்
போலீஸ் சாவடி
மின்சார நிலையம்
சுப்பிரமணியசுவாமி கோயில்
மாதா கோயில்
காய்கறிச் சந்தை, ஜவுளி, பலசரக்குக் கடைகள்
இரண்டு புகைப்பட ஸ்டுடியோக்கள்
நாகரிகமான மதுபானக் கடை



நந்திக்கு இரண்டு மைல் தூரத்தில் பெரிய சர்வதேச விமான நிலையம். தினந்தோறும் அமெரிக்கா, கானடா ஆஸ்திரேலியா நியூஸிலந்து முதலிய நாடுகளிலிருந்து விமானங்கள் வந்து கொண்டே இருக்கும். இரண்டாயிரம் மைல் தூரத்திலுள்ள ஆஸ்திரேலியாவில் வெளியாகும் பத்திரிகை எட்டு மணி நேரத்தில் பிஜித்தீவில் கிடைக்கும். அமெரிக்கப் பத்திரிகைகளும் உடனுக்குடன் கிடைக்கும். உள் நாட்டு விமானப் போக்குவரத்தைப் பிஜியன் ஏர்வேய்ஸ் கம்பெனியார் நடத்துகின்றனர். பதினைந்து நாளைக்கு ஒரு முறை ஆஸ்திரேலியாவிலிருந்து, டோங்கா சமோவா, தஹித்தி முதலிய தீவுகளுக்குச் செல்லும் விமானங்கள் நந்தி வழியாகத்தான் போகும். நந்தி விமான நிலையத்தில் பல நாட்டு விமானங்கள் வந்து செல்லுவதால், பல நாட்டு மக்கள் இங்கே வேலை செய்கின்றனர். இதே தனி ஊர் மாதிரி. எல்லா சௌகரியங்களும் இங்கே உண்டு.

இந்தியர் இந் நாட்டில் குடியேறியபொழுது இங்கு விமான வசதி கிடையாது. ஏன், சாலை வசதிகூடக் கிடையாது. சுவாவிலிருந்து லட்டோக்காவுக்குக் கப்பலில் வந்து, அங்கிருந்து நந்திக்கு வரவேண்டும்.

முதன்முதல் இந்தியர் பிஜித்தீவுக்கு வந்தது 1879-ஆம் ஆண்டு மே மாதம் பதினைந்தாம் தேதி. முதலில் வந்த இந்தியர் தொகை நானூற்று அறுபத்து மூன்று. இவர்கள் வந்த கப்பல் பெயர் லியோனிடாஸ். இந்தக் கப்பலில் போதுமான வசதிகள் இல்லாததாலும், நீண்ட காலப் பிரயாணத்தாலும் பலர் நோய்வாய்ப் பட்டனர். அந்தக் காலத்தில் பிஜித்தீவில் ஆயிரத்து ஐந்நூறு ஐரோப்பியர்களே இருந்தனர். அப்பொழுது பஞ்சைத்தான் அதிகமாகப் பயிரிட்டனர். பஞ்சு விலை குறைந்ததால் பொருளாதார மந்தம் ஏற்பட்டது. பிஜியர்களின் ஜனத்தொகையில் மூன்றில் ஒரு பங்கினர் கொள்ளை நோயால்

இறந்து விட்டனர். அதற்கு முன்னரும் தோட்டங்களில் வேலை செய்தோர் சுமார் எண்ணூறு பேர். இவர்கள் சரியாக வேலைக்குச் செல்லுவதுமில்லை; வேலையைச் சரியாகச் செய்வதுமில்லை.

பக்கத்திலுள்ள சாலமன், நியூ ஹெர்பிடீஸ் முதலிய தீவுகளிலிருந்து சுமார் ஆருயிரத்து நூறு பேரைத் தோட்ட வேலைக்காகக் கூட்டி வந்தார்கள். அவர்களும் திருப்தியாக வேலை செய்யவில்லை. எனவே தோட்டக்காரத் துரைகள் இந்தியாவிலிருந்து கூலிகளை வரவழைக்க ஆரம்பித்தனர்.

உலகத்திலேயே அதிகமாக சர்க்கரை உற்பத்தி செய்யும் நாடுகளில், கியூபா நாட்டுக்கு அடுத்தபடியானது இந்தியா. ஐக்கிய மாகாணத்திலும் பீகாரிலும் கரும்புப் பயிர் அதிகம். ஆகையால் இந்த மாகாணங்களிலிருந்தே பெரும்பாலான மக்கள், பிஜித்தீவுக்குக் கரும்புத் தோட்ட வேலை செய்யச் சென்றனர்.

கரும்புப் பயிர்த் தொழில் தெரிந்தவர்களையே ஆரம்பத்தில் அழைத்துச் சென்றனர். பின்னர் தொழிலாளரின் தேவை அதிகமாக, உடல் வலிமை யுள்ள யாரை வேண்டுமானாலும் அழைத்துச் சென்றனர். இதற்காகவே இந்தியாவின் பல நகரங்களில் விடுதிகளை ஏற்படுத்தி, கங்காணிகள் மூலம் பாமர ஜனங்களை ஆசை காட்டி, ஏமாற்றி அழைத்துச் சென்றனர். இந்தக் கூலிகளைப் பிடித்துக் கப்பலில் பிஜிக்குக் கொண்டு போய்ச் சேர்க்க ஆள் ஒன்றுக்கு இருபத்தேழு பவுன், அதாவது சுமார் முந்நூற்று முப்பது ரூபாய் செலவாயிற்று. தினந்தோறும் கூலி ஒரு ஷில்லிங் (பத்தணு). பிஜிப் பவுனுக்குப் பன்னிரண்டு ரூபாய் சொச்சம்.

1879-ஆம் ஆண்டிலிருந்து 1916-ஆம் ஆண்டுக்குள்ளாக எண்பத்தேழு கப்பல்கள் இந்தியாவிலிருந்து கூலிகளை ஏற்றிச் சென்றன. 1916-ஆம் ஆண்டில் பிஜியிலிருந்த இந்தியக் கூலிகளின் எண்ணிக்கை 60,553.



1911 முதல் 1916-க்குள் பிஜிக்கு வந்த இந்தியக் கூலிகள் 16,615. இவர்களில் 10,017 பேர் கொடுமை தாங்க முடியாமல் இந்தியாவுக்குத் திரும்பிவிட்டனர்.

ஒப்பந்தக் கூலி முறை மிகவும் கேவலமானது. சிறிதும் மனிதத் தன்மையற்றது. இந்த முறையில் பிஜிக்கு வரும்



இந்தியாவிலிருந்து ஒப்பந்தக் கூலிகளாகச் சென்றவர்கள்

ஓர் இந்தியன் ஐந்து ஆண்டுகள் அடிமையைப்போல வேலை செய்ய வேண்டும். எந்த எஜமானரிடம் அனுப்பப்படுகிருனே அவரிடம்தான் வேலை செய்ய வேண்டும். 'இந்த எஜமானரிடம்தான் வேலை செய்வேன்' என்று சொல்லவோ அல்லது எஜமானரை மாற்றிக்கொள்ளவோ இவனுக்கு உரிமை கிடையாது. இந்த விதிகளை இவன் மீறி நடந்தால் கருணையற்ற கடுமையான தண்டனை.

இவனை மனிதனாக நடத்தவில்லை. இவனை வியாபாரச் சரக்காகவே (Human freight) கருதினர். ஏனென்றால் இந்தச் 'சரக்கை'க் கொண்டுவரும் செலவைத் தோட்டக்காரத் துரைகள் ஏற்றுக்கொண்டார்கள்.

கப்பல்களிலே இவர்களைப் பண்டங்களைப்போலவே ஏற்றிச் சென்றனர். சில சமயங்களில் குறிப்பிட்ட இடம் போய்ச்சேர இரண்டு மாதம்கூடச் செல்லும். பலருக்கு எந்த நாட்டுக்குப் போகிறோம் என்பதே தெரியாது. சரியான சாப்பாடு கிடையாது. ஆரம்பத்தில் வைத்திய வசதியே கிடையாது. நோய்வாய்ப்பட்டு மாண்டவர் எவ்வளவோ பேர்! துன்பம் தாங்க முடியாமல் கடலில் குதித்து இறந்தவர் எத்தனையோ பேர்! பிற்காலத்தில் கப்பலில் சிறிதளவு வைத்திய வசதி செய்தனர். வைத்தியரிடம் ஓர் இந்தியர் சென்று வயிற்றுவலி என்று அழுததற்கு, வைத்தியர் மொழியைப் புரிந்துகொள்ளாமல் இந்தியரின் பல்லைப் பிடுங்கிவிட்டாராம்!

கூலிகளாகச் சென்றவர் பெரும்பாலும் ஆண்கள். ஆரம்பத்தில் நூற்றுக்கு மூன்று பேர்தான் பெண்கள். பின்னர் பெண்கள் தொகை நூற்றுக்கு இருபது வீதம் உயர்ந்தது. இப்பொழுதும்கூட பிஜியிலுள்ள இந்தியர்களில் ஆண்களின் எண்ணிக்கையை விடப் பெண்களின் எண்ணிக்கை குறைவு. அடுத்த தலைமுறைக்குள் சம எண்ணிக்கையாக வரலாம்.

கூலிகள் எவ்வளவு நேரம்தான் வேலை செய்வது என்பதில்லை. சூரிய உதயம் முதல், அஸ்தமனம் வரை வேலை செய்ய வேண்டும். இவர்களைக் கட்டி மேய்த்து, சில சமயங்களில் அடித்து வேலை வாங்குவதும் ஓர் இந்தியர்தான். அவருக்குச் சர்தார் என்று பெயர். காலையில் ஆறு மணிக்கு வேலைக்குப் போக வேண்டுமாகையால், காலை



நான்கு மணிக்கே எழுந்து, காலைக்கடன்களை முடித்து, பின்னர் சமையல் செய்து சாப்பிட்டு, பகலுக்கு வேண்டிய உணவையும் கையில் எடுத்துக்கொண்டு செல்லவேண்டும். இரவில் வீடு திரும்பியதும், பழங் கஞ்சியையோ அல்லது சமைத்தோ சாப்பிடவேண்டும்.

இவர்கள் தங்கிய இடத்துக்கு 'லைன்' என்று பெயர். 1892 ஆம் ஆண்டுச் சட்டப்படி, இந்த லைன்கள் இரண்டு வரிசையாக அமைக்கப்பட்டன. இவை மரக் கட்டிடம். ஒவ்வொரு வரிசைக்கும் பதினாறு அறை. ஜன்னலே கிடையாது. ஒவ்வோர் அறைக்கும் இடையிலுள்ள சுவர் மிக இலேசானது. ஓர் அறையில் பேசுவது மறு அறையில் நன்றாகக் கேட்கும். மேலே கூரைக்குத் தகரம். ஒவ்வோர் அறையிலும், ஒரு குடும்பத்தார் அல்லது கல்யாணமாகாத பல ஆண்கள் 'மிருகங்களை'ப்போல அடைபட்டுக் கிடந்தனர். சுகாதார வசதிகள் மோசம். ஐந்து ஆண்களுக்கு ஒரு பெண் வீதம்தான் இருந்தனர். இதனால் ஒழுக்கமும் பாதிக்கப்பெற்றது. இந்தியக் கிராம வாழ்க்கையில் இவர்களிடமிருந்த ஒழுங்கும், கட்டுப்பாடும், மேன்மையும் மறைந்தன. படிப்பு வாசனையே கிடையாது. குற்றங்கள் அதிகரிக்கவே கொலைகளும் அதிகமாயின. இந்த ஒப்பந்தக் கூலி முறை, பண வருவாயைத் தவிர வேறு எந்த விதத்திலும் இவர்களுக்குச் சாதகமாய் இல்லை.

சிறிய குற்றங்களுக்கும் கடுமையான தண்டனை விதிக்கும் சட்டம் 1912-ல் ரத்தாயிற்று.

1913-ல் இந்திய அரசாங்கம் ஜே. மக்நீல் என்ற ஆங்கிலேயரையும், ஐக்கிய மாகாணத்தைச் சேர்ந்த சமன்லால் என்பவரையும் நிலைமையை அறிந்து வர பிஜிக்கு அனுப்பியது. இவர்கள் தங்களுடைய அறிக்கையில், ஒப்பந்தக் கூலி முறையால் உண்டாகும் தீமைகளைக் காட்டிலும்,

அதனால் ஏற்படும் நன்மைகள் அதிகமானவை என்றும், அதிக வைத்திய வசதியும், ஒப்பந்தம் முடிந்த கூலிகளுக்கு நில வசதியும் வேண்டுமென்றும் சிபாரிசு செய்தனர்.

ஆனால் ஆஸ்திரேலியப் பெண்கள் சங்கங்களின் சார்பில் பிஜித்தீவுக்குச் சென்று நிலையை உணர்ந்த பிளோரன்ஸ் ஜி. கிரன்ஹாம் என்னும் அம்மையார், தம்முடைய அறிக்கையில் பின்வரும் சிபாரிசுகளைச் செய்தார்:

1. எல்லா ஒப்பந்தக் கூலி முறையையும் ரத்து செய்வது.
2. ஆண்களின் எண்ணிக்கைக்குத் தக்க அளவு பெண்களின் எண்ணிக்கையைக் கூடிய விரைவில் அதிகப்படுத்துவது.
3. கூலி லைன்களில், குடும்பங்கள் வசிக்கக் கூடாது.
4. கல்வி, வைத்திய வசதிகளை உடனே செய்தல்.
5. இந்து கல்யாணங்களைச் சட்டபூர்வமாக்குதல்.

தீனபந்து, C. F. ஆண்டிரூஸும், ரெவரெண்ட் W. W. பியர்சனும் பிஜிக்குப் பல முறை சென்றனர். 1916 ஆம் ஆண்டில் அவர்களுடைய முதல் அறிக்கை வெளிவந்தது.

வெளிநாடுகளில் உள்ள இந்தியர்களின் நலனுக்காகத் தீனபந்து செய்த அரிய சேவைகளை நாம் என்றும் மறக்க முடியாது. நிறத்திமிரும் ஏகாதிபத்தியமும் உச்ச நிலையிலிருந்த அந்தக் காலத்தில், தீனபந்து பிஜிக்குச் சென்று, இந்தியக் கூலி லைனில் அவர்களைப்போல உடை உடுத்தி அவர்களுடன் வசித்தார். அதனால்தான் அவர்களுடைய கஷ்டங்களை உணர்ந்தார். அப்பொழுது பிஜி அரசாங்கத்திலிருந்த சில ஆங்கிலேய அதிகாரிகள், தீனபந்துவை 'வெள்ளைக் கூலி' என்று ஏளனம் செய்தார்களாம்.



தீனபந்து இந்தியர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பதைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள, பிஜியிலுள்ள வெள்ளைக்காரப் பாதிரிகள் முயன்றனர். ஆனால் அவர்கள் வெற்றிபெறவில்லை. தீனபந்து கல்கத்தாவிலுள்ள பேலூர் ராமகிருஷ்ண மடத்துக்கு வந்து, அந்த ஸ்தாபனத்தைச் சேர்ந்த சந்நியாசி ஒருவரை பிஜிக்கு அனுப்பும்படி கேட்டுக்கொண்டாராம்.

தீனபந்து அறிக்கையில் வேண்டுமென்றே ஆசை வார்த்தை சொல்லிக் குறைந்த கூலிக்கு ஆட்களைச் சேர்ப்பதையும், கட்டாயப் படுத்தி ஆள் சேர்க்கும் எந்த முறையையும் வன்மையாகக் கண்டித்தார். விலைவாசிகள் ஏறும் பொழுது நாளொன்றுக்குப் பத்தணாக் கூலி மிகவும் குறைவு என்றும், ஒப்பந்தக் கூலி முறையால் ஒழுக்கக் குறைவு, கொலை, தற்கொலை முதலியன அதிகமாகிறதென்றும், ஒப்பந்தக் கூலிகளாக வந்திருப்போரின் மரணவிகிதம், சுதந்தரமாக வந்திருப்பவர்களின் மரண விகிதத்தைவிட இரு மடங்கு அதிகமென்றும் கூறினார்.

இந்தியாவில் பல இடங்களில் மக்கள் கூடி, அடிமைத் தனமான இந்த ஒப்பந்த முறையை ரத்து செய்யவேண்டுமென்று தீர்மானம் செய்தார்கள். அப்பொழுது வைசிராயாக இருந்த லார்டு ஹார்டிஞ்சும் இதனை ஆதரிக்கவே, 1917 டிசம்பரில் இந்த ஒப்பந்தக் கூலி முறை ஒழிந்தது.

ஆரம்பத்தில் பிஜியில் பல வெள்ளைக்காரக் கம்பெனிகள் கரும்பு பயிரிட்டு, ஆலைகள் நடத்தினர். தற்பொழுது ஒரே ஒரு கம்பெனிதான் இருக்கிறது. அதன் பெயர் குடியேற்ற நாட்டு சர்க்கரை சுத்திகரிப்பு ஸ்தாபனம் (Colonial Sugar Refinery). இதனைச் சுருக்கமாக 'C. S. R.' என்பார்கள். இதனை நாம் கம்பெனி என்றே அழைப்போம்.

கம்பெனிக்கு ஏராளமான நிலமும், பல ஆலைகளும் இருக்கின்றன. ஒப்பந்தக் கூலி முறை ரத்தானபொழுது, இந்திய விவசாயிகளுக்கு நிலத்தைக் குத்தகைக்கு விட்டனர். நபர் ஒன்றுக்குப் பத்து ஏகர் நிலம் விகிதம் பத்து ஆண்டு களுக்குக் குத்தகைக்கு விட்டனர். ஆண்டுக்கு ஓர் ஏகருக்கு ஐந்து ரூபாய் முதல் இருபது ரூபாய் வரை குத்தகை. ஒன்பது ஏகரில் கட்டாயம் கரும்பு நட்டாக வேண்டும். இந்தக் கரும்பைக் கம்பெனிக்குத்தான் விற்க வேண்டும்.



இந்தியக் குடும்பம்—நான்கு தலைமுறை

அவர்கள் தருகிற விலையைத்தான் வாங்கிக்கொள்ள வேண்டும். மீதி ஓர் ஏகரில் சொந்தமாக வீடு கட்டிக் கொள்ளலாம். தங்கள் உணவுக்கு வேண்டிய நெல், காய் கறிகள் பயிரிடலாம். குத்தகைக் காலம் முடிந்ததும் மறுபடியும் குத்தகையைப் புதுப்பிப்பது கம்பெனியாரின் விருப்பத்தைப் பொறுத்தது.



பிஜியிலுள்ள இந்தியர்களுக்கு முக்கியமானது நிலப் பிரச்னைதான். அத்தீவில் விளைநிலம் சுமார் மூன்றரை லட்சம் ஏகர். அங்கே நிலமுள்ளவர்கள் பிஜியர், அரசாங் கத்தார், கம்பெனியார், தனிப்பட்ட சில வெள்ளைக்காரர்.

பிஜியர்களுக்குத் தனிப்பட்ட சொத்துரிமை கிடை யாது. நிலம் அனைவருக்கும் சொந்தம். இவர்கள் நிலங்களை விற்க முடியாது. விற்றாலும் சட்டப்படி செல்லாது. இவர்கள் சோம்பேறிகளாய் இருப்பதால் அரசாங்கத்தார் சுதேசி நில பரிபாலனக் கழகம் (Native Land Trust Board) என்று ஒன்றை ஏற்படுத்தி, அதன் மூலம் நிலங்களை இந்தியருக்குக் குத்தகைக்கு விடுகிறார்கள். இதில் கிடைக்கும் வருமானத்தில் கால் பங்கு தங்கள் மேற் பார்வைக்காக எடுத்துக்கொண்டு, மீதித் தொகையைச் சொந்தக்காரர்களுக்குப் பிரித்துக் கொடுக்கிறார்கள் என்று தெரிகிறது.

அரசாங்கத்தாருக்குச் சொந்தமான நிலம் முழுவதை யும் குத்தகைக்குத்தான் கொடுக்கலாம். கம்பெனியார், தங்கள் நிலங்களை விற்பதில்லை.

தனிப்பட்ட சில வெள்ளைக்காரர் நிலம் வைத்திருக் கின்றனர். இந்த நிலத்தில் ஒரு பகுதிதான் விளையக் கூடியது. பெரும்பகுதி பண்படாதவை.

யுத்தத்துக்குப் பிறகு இந்தியரில் சிலர், வெள்ளைக்கார ரிடமிருந்து மிக அதிகமான விலை கொடுத்து நிலம் வாங்கி யிருக்கின்றனர். இந்தியரிடம் தற்பொழுது இருபது ஆயிரம் ஏகர் நிலமாவது இருக்கலாம். இந்தியர்கள் நிலம் வாங்குவதற்கு எந்த விதமான தடையும் இல்லை. ஆனால் வாங்குவதற்கு நிலம்தான் இல்லை.

பிஜியர்கள் எனப்படும் கைவித்திகள், இந்தத்தீவின் பூர்வீகக் குடிகள் அல்ல. இவர்களும் இந் நாட்டில்

குடியேறியவர்களே. இவர்களுடைய முழு வரலாறு சரியாகத் தெரியவில்லை. கறுப்பு நிறம், உறுதியான உடல், தலையில் அடர்ந்த மயிர் உள்ளவர்கள் கைவித்திகள்.



கைவித்திகள்

இவர்கள் ஆப்பிரிக்காவிலிருந்து பல நூற்றுண்டுகளுக்கு முன், பிழைப்புக்காக வெளி நாடுகளுக்குப் படகில் சென்றவர்கள் என்றும், சிறிது காலம் கிழக்கிந்தியத் தீவுகளில் – அதாவது இந்தோனேஷ்யாவில் – தங்கிய பின்னர், இந்தத் தீவுகளுக்கு வந்தனர் என்றும் கூறப்படுகிறது.

கைவித்திகள் பேசும் மொழிக்கு எழுத்துக்கள் கிடையாது. ஆங்கில எழுத்தைக்கொண்டே இந்த மொழி இப்போது வளர்ச்சியடைகிறது. உதாரணமாக எண்ணிக்கையை எடுத்துக் கொள்வோம்:



எந்துவா — ஒன்று
எருவா — இரண்டு
எத்தோல் — மூன்று
எவா — நான்கு
எலீமா — ஐந்து

ஆனால் சாதாரண ஜனங்கள் பேசும்பொழுது எந்துவா என்று சொல்லமாட்டார்கள். எ. என்பது அடைமொழி என்பதால் அதை நீக்கி,

துவா
ருவா
தோல்
வா
லீமா

என்று தான் சொல்லுவார்கள்.

இந்தோனேஷ்ய மொழியில் துவா என்றால் இரண்டு. கைவித்தி மொழியில் துவா என்றால் ஒன்று.

இந்தோனேஷ்ய மொழியில் லீமா என்றால் ஐந்து. கைவித்தி மொழியிலும் லீமா என்பது ஐந்து.

இந்தோனேஷ்ய மொழியில் 'ராட்டு' என்றால் தலைவர். கைவித்தி மொழியிலும் தலைவரை 'ராட்டு' என்று தான் அழைக்கின்றனர்.

எனவே இவர்கள் மொழிக்கும் இந்தோனேஷ்ய மொழிக்கும் தொடர்பு இருப்பது புலப்படுகிறது.

ஓர் இந்திய நண்பர் ஏற்பாட்டின்படி, கைவித்தி ஒருவர் வீட்டுக்கு விருந்தினனகச் சென்றேன். அவர் வீடு, சுமார் முப்பது அடி நீளமும் இருபது அடி அகலமும் உள்ள ஒரே அறைதான். வீட்டுக்கருகே சமையல் செய்வதற்காகச் சிறு குடிசை. தட்டியாலோ அல்லது

மரத்தாலோ, வீட்டிற்குள்ளேயே தடுத்து, தனிமையாக இருக்க வசதி செய்து கொள்வார்கள். கட்டில் ஒன்று தான் அந்த வீட்டில் காணப்பட்டது. மெல்லிய துணிகளால் உள்ளே அலங்கரித்திருந்தனர். இது துணி அல்ல—பழைய காலத்து மரவுரி. அங்கு மாட்டி வைத்திருந்த சில 'ஹாலிவுட்' நடிகர் நடிகைகளின் படங்கள் அந்த இடத்துக்குப் பொருத்தமில்லாமல் காணப்பட்டன.

தரை முழுவதையும் பாயால் மூடியிருந்தனர். பாய்க்குக் கீழே, வைக்கோல் புல் போன்றவைகளைப் பரப்பியிருந்தனர். பாயின் மேல் உட்கார்ந்தால், பட்டு மெத்தையிலிருப்பதுபோல மிகவும் மிருதுவாக இருக்கும்.

விருந்தினருக்கென்று தட்டுக்களில் சாப்பாடு பரிமாறினர். 'கசாவா, டாரோ' என்ற பல கிழங்கு வகைகளை வேக வைத்துச் சாப்பிடுவார்கள். நல்ல தண்ணீரில் பிடித்த மீன் அவர்களுக்கு மிகவும் பிரியம். சாப்பாடு புது மாதிரியாக இருந்தாலும், அருவருப்பில்லாமல் பிரியமாகச் சாப்பிட்டேன். விருந்தினரை உபசரிப்பதற்குப் பக்கத்து வீட்டுக்காரர்கள் எல்லாம் வந்து கூடிவிட்டார்கள்.

உட்காருவதற்குத் தடுக்குப் பாய் போட்டனர். சாப்பிடும்பொழுது, அந்த வீட்டுக்காரர் பக்கத்தில் உட்கார்ந்து உரையாடினர். பெண்கள் சுமார் பத்தடி தூரத்தில் ஒதுங்கி உட்கார்ந்திருந்தனர். பரிமாறும்பொழுது, அவர்கள் நடந்து வருவதில்லை. மிகவும் பணிவோடு முழங்கால்களால் நகர்ந்து வருவார்கள்.

இந்தோனேஷியாவிலிருந்து அங்கு சென்ற எனக்கு, இந்தக் காட்சி, 'இது இந்தோனேஷியாவா அல்லது பிஜித் தீவா?' என்ற ஐயத்தை உண்டாக்கிற்று. இந்த



விஷயத்தில், இந்தோனேஷ்யப் பெண்களைப் போலவே கைவித்திப் பெண்களும் நடந்து கொண்டார்கள்.

எனவே இவர்களுக்கும், இந்தோனேஷ்யர்களுக்கும் தொடர்பு இருந்தது உறுதியாயிற்று.

கைவித்தி மொழி கஷ்டமானதல்ல. வந்தனம் என்பதற்கு "பினுக்கா" என்பார்கள். "பினுக்கா வக்கா லேவு" என்றால் மிகவும் வந்தனம் என்று அர்த்தம்.

முதன் முதலில் சந்திக்கும்பொழுது, "பூலா, பூலா" என்பார்கள், நாம் நமஸ்காரம் என்று சொல்லுவது போல.

கைவித்திகள் அநேக நாட்டுப் பாட்டுக்களைப் பாடுவார்கள். அதில் எல்லோருக்கும் தெரிந்த பிரபலமான பாட்டுக்களில் ஒன்று இது:

லாய் தேய் டாலோ கோ தமாகூ
லாகி கோலி கோலி கோ தினகூ
ஔ காடே கி சீரியா
ஔ காடே கி சீரியா
ஊது மாய் நா சித்திமா கி மேலி
வோச மாய் நா வேலெச வேலொ
தவுரி ஔ நா காய் வலாகி
ஔ சா வேசு இ நா டாவி
ஔ சா டாவா இ நா டாகா
சா பி நோ கூ டாகி
ஔ சா காவ் தீனு கா கி யாலி
சா யா காகூ டினு கா கோ மாஸி

* * * *

எனது அப்பா, கிழங்கு நடுகிறார்;
எனது அம்மா, கடலில் மீன் பிடிக்கிறாள்.
சீரியாவைக் காண அலைகிறேன்;
சீரியாவைக் காண அலைகிறேன்.
அதோ, மெயில் கப்பல் இங்கு வருகிறது!

கலங்கிய தண்ணீரில் வெண்மை தெரிகிறது.
அந்தோ, அவர்கள் கையில் பிடிபட்டேன்!
கனத்த கயிற்றால் கட்டி விட்டனர்!
என்னைச் சாமானைப் போல மூலையில் தள்ளினர்!
கதறியும் கண்ணீர் விட்டும் என்ன பயன்?
எங்கே போகிறேன் என்று எனக்கே தெரியாது.
என் மக்களே, போய்வருகிறேன்! நான் தான் மாஸி.

கைவித்தி நாட்டுப் பாட்டின் உச்சரிப்பு சரிதானா என்பது எனக்குத் தெரியாது. இந்தியர் ஒருவர் இந்தக் கைவித்திப் பாடல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். கைவித்தி மொழியில் அவருக்கு எவ்வளவு பாண்டித்தியம் என்பதும் எனக்குத் தெரியாது. அவருடைய ஆங்கில மொழி பெயர்ப்பை ஆதாரமாகக் கொண்டே, தமிழில் மொழி பெயர்த்திருக்கிறேன். எனவே இது மொழி பெயர்ப்பின் மொழிபெயர்ப்பு.

இந்தக் கைவித்திகளுக்கு ஒரு பெரிய ராஜா இருந்தார். அவர் பெயர் தாக்கொம்பாவ். அவருக்குக் கீழே பல தலைவர்கள் இருந்தனர். இந்தத் தலைவர்களுக்கு 'ராட்டு' என்று பெயர். ராட்டு என்பது ராஜா என்ற பட்டம் போல.

ஆரம்பத்தில் வழக்கம் போல இந்த நாட்டுக்கு வெள்ளைக்காரப் பாதிரிகள் வந்தனர். விருந்தினரை உபசரிப்பதில் கைவித்திகள் சிறந்தவர். மிக நல்ல முறையில் உபசரித்தனர். இந்தப் பாதிரிகள் ஒவ்வொரு ராட்டு வீட்டுக்கும் செல்வார்கள். ஒரு ராட்டு வீட்டில் ஒரு பாதிரியார் தங்கியிருந்தார். அவர் ஒரு சீப்பு வைத்திருந்தார். அந்தக் காலத்தில் அந்த ராட்டுக்கு இந்தச் சீப்பு ஓர் அதிசயப் பொருளாய் இருந்தது. பாதிரியைக் கேட்காமல் இந்தச் சீப்பை எடுத்து ராட்டு உபயோகித்தாராம். பாதிரிக்குக் கோபம் வந்து விட்டது. ராட்டுவைக் கடிந்து கொண்டு,



அவமரியாதையாகப் பேசிவிட்டாராம். ராட்டு, தமது வீட்டுக்கு வந்த விருந்தினர் என்ற முறையில், பாதிரியை ஒன்றும் செய்யாமல் விட்டு விட்டார். ஆனால், இந்தப் பாதிரி அடுத்தபடியாகச் செல்லத் திட்டமிட்டிருந்த ராட்டுவுக்கு இச் செய்தியைச் சொல்லி அனுப்பினார்.

பாதிரி திட்டப்படி அடுத்த ராட்டு வீட்டுக்குச் சென்றார். அவ்வளவுதான்; அந்தப் பாதிரியார் திரும்பவே யில்லையாம்! கைவித்திகள் நரமாமிசம் சாப்பிடுகிறவர்கள் என்றும், பாதிரியைக் கொன்று சாப்பிட்டு விட்டதாகவும் மற்ற பாதிரிகள் கூறினர். ஆனால், பாதிரி என்னவானார் என்பது ஆண்டவனுக்குத்தான் தெரியும்!

இந்தப் பாதிரிகள் தவிர, துணிச்சல் உள்ள வெள்ளைக்காரர் சிலரும் இத் தீவுக்குச் சென்றனர். இவர்கள் இந்த ராட்டுக்களிடம் சென்று, முகம் பார்க்கும் கண்ணாடி, சோப்பு போன்ற பொருள்களைப் பரிசாகக் கொடுப்பார்களாம். இந்த ராட்டுக்கள், இத்தகைய பொருள்களை முன்னர் பார்த்தது கிடையாது. இந்த அற்பப் பொருள்களிலே இவர்களுக்கு ஆசை. இந்தப் பரிசளிப்புக்கு நன்றி செலுத்துவதற்காக, இந்த வெள்ளைக்காரரைக் கூப்பிட்டு, "நீங்கள் நிற்கும் இடத்திலிருந்து நீங்கள் பார்க்கும் தூரம் வரையில் உள்ள எல்லா நிலமும் உங்களுக்கு இனாம்" என்று சொல்லிக் கொடுப்பார்களாம். இம்மாதிரிதான் பல வெள்ளைக்காரர்கள் அந்தக் காலத்தில் 'பூதானம்' பெற்றதாகத் தெரிகிறது!

1874 ஆம் ஆண்டு அக்டோபர் 10 ஆம் தேதி எல்லா ராட்டுக்களும் சேர்ந்து, மாட்சிமை தங்கிய விக்டோரியா மகாராணிக்குத் தங்கள் தீவுகளை ஆட்சி செய்யும்படி விண்ணப்பம் செய்து கொண்டார்களாம். பின்னர் மகாராணியார் கருணையோடு இவர்களை எல்லாம் தமது

பிரஜைகளாக்கிக்கொண்டாராம். பிரிட்டிஷ் ஆட்சிக்குத் தங்கள் தீவுகளை ஒப்படைத்த இந்த நாளைக் கைவித்திகள் ஆண்டுதோறும் உற்சாகமாகக் கொண்டாடுகின்றனர்!

பிஜியில் பிரபலமான மதுபானம் 'நங்கோனு'. இது ஒருவகை மரத்திலிருந்து செய்யப்படுவது. மரப்பட்டையிலிருந்தோ அல்லது அதனைத் தூளாக்கியோ அதன் சாற்றை வடிப்பார்கள். இது பார்வைக்குச் சோப்பு கலந்த அழுக்குத் தண்ணீர் மாதிரி இருக்கும். கைவித்திகள் மட்டுமல்ல, வெள்ளைக்காரரும் இந்தியரும் கூட இதனைப் பிரியமாகக் குடிக்கிறார்கள்.

அந்தக் காலத்தில் ஏதேனும் மிக முக்கியமாகப் பெற வேண்டுமானால், இந்தக் கைவித்திகள் 'தாம்புவா' வையும் நங்கோனுவையும் காணிக்கையாக எடுத்துச் சென்று, தங்கள் ராட்டு முன்னிலையில் வைத்துத் தங்கள் கோரிக்கைகளைச் சொல்லுவார்களாம். 'தாம்புவா' என்பது திமிங்கிலத்தின் பல். இது கிடைப்பது மிக அரிது. அந்தக் காலத்தில் பணத்தை விட இந்தத் தாம்புவாவுக்குத் தான் மதிப்பு. இம்மாதிரி யாரேனும் தாம்புவாவும் நங்கோனுவும் கொண்டு சென்றால், அவர்கள் வேண்டு கோளை ராட்டுக்கள் நிறைவேற்றித்தான் ஆகவேண்டுமாம்.

பாரிஸ்டர் அம்பாலால் படேல் வீட்டிலே இரண்டு தாம்புவாக்கள் சுவற்றில் மாட்டப் பெற்றிருந்தன. இவை எப்படிக் கிடைத்தன என்று கேட்டபொழுது, அவர் சொன்னார்: "இரண்டு கைவித்திகள் ஒரு கொலை வழக்கில் அகப்பட்டுக் கொண்டனர். வழக்கறிஞருக்குக் கொடுக்கப் பணமில்லை. என்னிடம் வந்து இந்தத் தாம்புவாக்களைப் பழைய காலத்து முறைப்படி கொடுத்தனர். அவர்கள் ஏழைகள் ஆனதால், வழக்கில் வாதாடினேன். வழக்கு வெற்றி பெற்று அவர்கள் விடுதலையடைந்தனர்."



இனிய சுபாவமுடைய படேல், இவ்வாறு இந்தக் கைவித்திகளின் அன்புக்கும் நன்றிக்கும் பாத்திரமானார்.

ஒரு கைவித்தி தமக்கு ஏதேனும் ஒரு பொருள் தேவையிருந்தால், மற்றொரு கைவித்தியிடம் சென்று "கீரே கீரே" என்பாராம். அப்படிச் சொன்னால் தமக்கு ஒரு பொருள் வேண்டும் என்று அர்த்தமாம். இந்தக் கைவித்தி கேட்கும் பொருள் எதுவாயிருப்பினும், அது தம்மிடமிருக்குமானால், மற்றொரு கைவித்தி அதை உடனே கொடுத்து விடவேண்டும். கைவித்திகளுக்குப் பொருள் மீது பற்று கிடையாது. ஏனென்றால், யார் வேண்டுமானாலும், எப்பொழுது வேண்டுமானாலும், எதை வேண்டுமானாலும், "கீரே கீரே" என்று சொல்லிப் பெற்றுக் கொண்டு போய்விடலாம் அல்லவா? ஆனால், இந்தப் பழைய கால வழக்கம் தற்பொழுது நடைமுறையில் இல்லை.

கைவித்திகளை ஏனைய சமூகத்தினரிடமிருந்து பிரித்து வைத்திருக்கிறார்கள். சமூக வாழ்க்கையில் மட்டு மல்ல; அரசியலிலும் அப்படித்தான். பிரித்தே ஆளுகின்றனர்.

மற்ற சமூகத்தினர் வசிக்குமிடத்திலிருந்து குறைந்தது ஒரு மைல் தூரத்தில் இந்தக் கைவித்திகளின் கிராமம் இருக்கவேண்டும். இந்தக் கிராமங்களுக்குக் 'கோரோ' என்று பெயர். பெரும்பாலான கோரோக்கள், சமுத்திரக் கரை ஓரங்களில் அமைக்கப் பெற்றுள்ளன. சில கோரோக்கள் சிறு குன்றுகளின் உச்சியிலே இருக்கும்.

ஒவ்வொரு கோரோவிலும் சுமார் இருபது வீடுகள் இருக்கும். இந்த வீட்டுக்குக் கைவித்தி மொழியில் 'புர்ரே' என்று பெயர். இவை மரத்தாலும், மூங்கிலாலும், ஓலைகளாலும் ஆனவை. ஒவ்வொரு கோரோவிலும் ஒரு மாதா கோயிலும், ஒரு பள்ளிக்கூடமும், விருந்தினர் தங்குவதற்காக ஒரு பொது வீடும், தலைவருக்கான வீடு ஒன்றும்

இருக்கும். இயற்கையின் அழகை அனுபவிப்பதற்கு இந்தக் கோரோக்கள் ஏற்ற இடங்கள். வீடுகளையும், கிராமத்தையும் மிகவும் சுத்தமாக வைத்திருக்கிறார்கள். குளிப்பதற்கும், குடிப்பதற்கும் கிணறு அல்லது குழாய் அமைத்திருக்கிறார்கள்.

இயற்கை வளம் நிறைந்திருப்பதன் காரணமாகக் கைவித்திகள் மிகவும் சோம்பேறிகளாயிருக்கின்றனர். அவர்களுடைய உணவு கிழங்கு வகைகள். அவை சுலபமாய் விளையும். ஆண்களுடைய, உடை, முழங்கால் அளவுக்கு கெட்டியான துணியை வேஷ்டியைப் போலச் சுற்றிக் கட்டிக் கொள்வதுதான். ஆனால் கால் சட்டை மாதிரி, அதன் இரண்டு பக்கத்திலும் இரு பைகள் இருக்கும். மேலே ஒரு சட்டை அல்லது பகட்டான ஜப்பான் பட்டு அரைக்கைச் சட்டை. பெண்கள் ஐரோப்பிய உடை தரிப்பார்கள். ஆனால் ஆண்களும் பெண்களும் பெரும் பாலோர் காலில் ஒன்றும் அணிவதில்லை. ஏராளமாகக் கிடைக்கும் அழகான பூக்களில் ஒன்றைப் பெண்கள் தலையில் அணிந்து கொள்வார்கள்.

பிஜித்தீவில் குதிரைகள் நிறைய இருக்கின்றன. ஐந்து வயதுள்ள கைவித்திப் பையன் கூட திறமையாகக் குதிரைச் சவாரி செய்வான். இந்தியக் குழந்தைகளும் இம்மாதிரி சவாரி செய்வதைப் பார்த்திருக்கிறேன்.

கோரோவில் ஆண்டுக்கு ஒரு முறை தலைவரைத் தேர்ந்தெடுப்பார்கள். தலைவருடைய வேலை, மற்றவர் களிடம் வேலை வாங்குவது. இது சிரமமான வேலைதான். ஒவ்வொரு நாள் இரவிலும் சங்கு ஊதி, மறு நாள் யார் யார் என்னென்ன வேலை செய்ய வேண்டுமென்பதைச் சொல்லுவார்கள். தோட்டம், வீடு, வாசல் முழுதும் எல்லோருக்கும் பொது. கல்வி இலவசம்.



சீக்கிய போலீசும், கைவித்தி சார்ஜெண்டும்



கைவித்தியின் வீடு (பிஜி)

நில பரிபாலனக் கழகம் நிர்வகிக்கும் பெரு நிலங்கள் தவிர, சிறிய தோட்டம், நிலங்களையெல்லாம் கோரோத் தலைவரே கவனித்து வந்தார். நிலங்களில் கிடைக்கும் வருமானம் முழுவதும் வீதாசாரப்படி அனைவருக்கும் பகிர்ந்து கொடுக்கப்படும்.

கைவித்திகள் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ள வேண்டும். ஒரு கைவித்தி வீடு கட்டினால், மற்ற கைவித்திகள் அனைவரும் வந்து இலவசமாக வேலை செய்ய வேண்டும். வீடு கட்டிக்கொள்ளும் கைவித்தி வேலை செய்ய வருகிறவர்களுக்கு விருந்து அளிக்க வேண்டும். சில சமயங்களில் கூலி கொடுத்து வீடு கட்டுவதால் உண்டாகும் செலவைவிட, விருந்தளித்து வீடு கட்டுவதால் உண்டாகும் செலவு அதிகமாகும்.

ஒரு காலத்தில் எளிய வாழ்க்கை வாழ்ந்த கைவித்திகள், தற்பொழுது 'நாகரிக'மாகிக்கொண்டு வருகின்றனர். கைவித்திப் பெண்கள் நவீன உடைகளுக்கும், முகப் பூச்சுக்கள், வாசனைத் திரவியம், திரைப்படம் முதலியவைகளுக்குமாகச் செலவிடும் தொகை வர வர அதிகமாகி வருகிறது.

"கைவித்திகள் ஏன் சோம்பேறிகளாய் இருக்கிறீர்கள்?" என்று கேட்டபொழுது, ஒரு கைவித்தி, "நாங்கள் சுதந்திர முள்ளவர்கள். விரும்பியபொழுது எழுந்திருப்போம். வேண்டும்பொழுது சாப்பிடுவோம். இஷ்டப்பட்டால் வேலை செய்வோம். உங்களைப்போல நாங்கள் கடிகாரத்தின் அடிமைகள் அல்ல. இத்தனை மணிக்கு எழுந்திருக்க வேண்டும், இத்தனை மணிக்குச் சாப்பிட வேண்டும், இத்தனை மணிக்கு வேலைக்குப் போக வேண்டுமென்று வாழ்க்கை முழுதும் அவதிப்படுகிறீர்கள். என்ன பரிதாபம்!" என்று சொன்னாராம்.

ஒரு நாள் சுவாமிஜியுடன், சாது சாமியும் நானும் சுவாவிலிருந்து நந்திக்கு வந்துகொண்டிருந்தோம். சிங்கடோகாவுக்குச் சுமார் இருபது மைல் தூரத்துக்கு முன் எங்கள் மோட்டார் கெட்டுவிட்டது. இருட்டும் சமயம். பழுதுபார்ப்பவரைக் கூப்பிட, சிங்கடோகாதான் செல்ல வேண்டும். அந்த வழியாகச் செல்லும் கடைசி பஸ்ஸும் போய்விட்டது. நல்ல வேளையாக எங்களுக்குத் தெரிந்த 'லாரி' ஒன்று அந்த வழியாகச் சென்றது. எங்களுடன் இருந்த சாது சாமியை அந்த லாரியில் சிங்கடோகாவுக்கு அனுப்பி, மோட்டார் பழுதுபார்ப்பவரை அனுப்பும்படி கூறினோம்.

நாங்கள் இருந்த இடத்திலிருந்து ஒரு பர்லாங் தூரத்தில் ஒரு கோரோ இருந்தது. பழுதுபார்ப்பவர் எப்பொழுது வருவார் என்று தெரியாது. அதுவரையில் பொழுது போக வேண்டுமே என்று நாங்கள் சிறிது உலாவினோம். பிறகு, இருட்டு அதிகரிக்கவே மோட்டாரில் ஏறி உட்கார்ந்திருந்தோம்.

சில கைவித்திப் பிள்ளைகள் மோட்டாரைச் சுற்றி நின்று வேடிக்கை பார்த்தனர். கோரோவிலுள்ள பள்ளி ஆசிரியர் ஒருவர் அவ் வழியாகச் சென்றார். எங்களைப் பார்த்தபொழுது நின்று, சிறிது நேரம் எங்களுடன் பேசிக்கொண்டிருந்தார். பிறகு கோரோத் தலைவரிடம் சென்று நாங்கள் வந்திருப்பதைத் தெரிவித்தார்.

இரவு எட்டு மணி இருக்கும். கோரோத் தலைவர் எங்களிடம் வந்து, தமது வீட்டில் உணவு உட்கொள்ளுமாறு வேண்டினார். சுவாமிஜி, "தேத்தண்ணீர் மட்டும் போதும்" என்றார்.

வீட்டுக்குச் சென்றோம். வீடு பெரிய அறை அல்லது கூடம்போல இருந்தது. மூன்று புறம் வாயில்கள். ஒரு



மூலையில் சமையல் நடந்தது. ஒரே ஓர் எண்ணெய் விளக்குத்தான். தலைவரின் குடும்பத்தார் தவிர இன்னும் இரண்டொருவர் அங்கே இருந்தனர்.

கைவித்திகள் சுவாமிஜியைச் சுலபமாக அடையாளம் தெரிந்து கொண்டனர். சுவாமிஜியின் ஆதரவில் வெளியாகும் 'பசிபிக் ரெவ்யூ' என்ற ஆங்கில வாரப் பத்திரிகையில் சரிபாதி பகுதி கைவித்தி மொழியில் வெளியாகிறது. அதற்கு 'ராட்டூ பசிபிக்கா' என்று பெயர். இப் பத்திரிகை கைவித்திகளிடையே அதிகமாகப் பரவி வருகிறது. எனவே, இவர்கள் சுவாமிஜியிடம் மிகுந்த அன்பு காட்டினர்.

ரொட்டியும் தேத்தண்ணீரும் கொடுத்தனர். பல விஷயங்களைப் பற்றி, சுவாமிஜி இவர்களிடம் பேசிக்கொண்டிருந்தார்.

மணி ஒன்பதாயிற்று. வாரத்துக்கொரு நாள் கோரோவில் அனைவரும் ஒன்றுகூடிப் பேசுவது என்றும், அன்றைய தினம் வாரக் கூட்ட நாள் என்றும், நாங்கள் அங்கு தங்கியிருப்பதில் எவ்வித இடைஞ்சலும் இல்லை என்றும் சுவாமிஜியிடம் தலைவர் கூறினர். சுவாமிஜியும் நானும் ஒரு புறத்தில் ஒதுங்கி உட்கார்ந்திருந்தோம்.

தலைவர் வீட்டின் நடுவே உட்கார்ந்திருந்தார். ஒரு குறிப்புப் புத்தகமும் பென்சிலும் அருகில் இருந்தன. ஒவ்வொரு வாயில் வழியாகவும் ஒவ்வொருவராக சுமார் இருபது பேர் வந்தனர். பெண்கள் ஒரு புறமும் ஆண்கள் ஒரு புறமும் அமர்ந்தனர்.

கூட்டத்திலிருந்தோரில் சிலர் சுவற்றின்மீது சாய்ந்திருந்தனர். சிலர் காலை நீட்டி உட்கார்ந்திருந்தனர். போதுமான வெளிச்சமின்மையால் பலருடைய முகம் சரியாகத் தெரியவில்லை.

கூட்டத்தின் நடவடிக்கைகள் அனைத்தும் கைவித்தி மொழியில்தான் நடைபெற்றன. ஒவ்வொருவராகத்தான் பேசினர். பலர் ஒரே சமயத்தில் பேசவில்லை. ஒருவர் பேசும்போது அத்தனை பேரும் அமைதியாக இருந்தார்கள். யாரும் குறுக்கிட்டுப் பேசுவதில்லை. கூட்டத்தில் அடிக்கடி சிரிப்பொலி கேட்கும். சில சமயங்களில் வாய் விட்டுச் சிரிப்பார்கள். இதனால் கூட்ட நடவடிக்கைகளில் அதிக மான நகைச் சுவை இருந்தது என்று தெரியவந்தது.

பெண்களும் ஆண்களைப்போல சரிநிகர் சமானமாக இந்த நடவடிக்கைகளில் கலந்து கொண்டார்கள்.

மணி பத்தாயிற்று. வெளியில் மோட்டார் சப்தம் கேட்டது. மோட்டார் பழுதுபார்ப்பவர் வந்துவிட்டார். கூட்ட நடவடிக்கை முடியவில்லையென்றாலும் நாங்கள் விடைபெற்றுக் கொண்டு வெளியே வந்தோம். சிறிது நேரத்தில் மோட்டார் பழுதுபார்த்தாகிவிட்டது. உடனே நாங்கள் புறப்பட்டோம்.

போகும் வழியில் சுவாமிஜி, "நான் இங்கு வந்து இத்தனை ஆண்டுகள் ஆயின. இப்பொழுதுதான் முதன் முறையாக அவர்களுடைய சமூகக் கூட்டத்தில் கலந்து கொண்டேன். சொந்தக் குடும்ப விஷயங்களையும் கொரோ விஷயங்களையும் அவர்கள் பகிரங்கமாகப் பேசி முடிவுக்கு வருவதும் அவர்களுடைய நகைச் சுவையும் உயர்ந்த முறையிலிருக்கின்றன" என்று கூறினார்.

இவர்களைத்தான் நரமாமிசப் பட்சணிகள் என்று வெள்ளைக்காரப் பாதிரிகள் எழுதி வைத்திருக்கின்றனர்!

ஒப்பந்தக் கூலி முறை ரத்தான பிறகும், இந்தியரின் நிலை உயரவில்லை. நிலத்தைக் கம்பெனியிடமிருந்து குத்தகைக்கு எடுத்துக்கொண்டாலும், கம்பெனியார் இவர்களை



அடிமைகளைப்போலவே நடத்தினர். கம்பெனியார் இட்டது தான் சட்டம். "அவர்கள் விருப்பப்படி நடக்காமல் போனால், குத்தகைக் காலம் முடிந்ததும் மறுபடியும் குத்தகையைப் புதுப்பிக்க மாட்டார்களே' என்ற பயம் விவசாயிகளுக்கு.

இதுமட்டுமல்ல; பெரும்பாலான இந்தியர்களுக்குக் கல்வியறிவு மிகக் குறைவு. இல்லை என்றே கூறிவிடலாம். அரசாங்கத்தார் எவ்விதக் கல்வி வசதியும் இவர்களுக்குச் செய்யவில்லை. ஒப்பந்தக் கூலிகளாக வந்தவர்களில் ஒரு சிலரே படித்தவர் — அதுவும் திண்ணைப் பள்ளிப்படிப்புத் தான். லைன்களில் இருந்த காலத்தில் அவர்களில் சிலர் சிறு பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக்கொடுத்தனர். ஒப்பந்தக் கூலி முறைக்குப் பிறகு, தங்களுக்குக் குத்தகைக்குக் கொடுத்த பத்து ஏகர் நிலத்தில் விவசாயிகள் வீடு கட்டிக்கொண்டு சென்றதால், அவர்களுடைய பிள்ளைகள் படிப்பது இன்னும் சிரமமாயிற்று.

ஒப்பந்தக் கூலி முறை இருந்த காலத்திலேயே இந்தியாவிலிருந்து சிலர் சொந்தச் செலவில் சென்று தோட்டத் தொழிலாளரிடம் வியாபாரம் செய்து பெரும் பொருளீட்டினர். இந்த ஒப்பந்தக் கூலி முறையில் இருந்து விடுதலை பெற்ற சில தொழிலாளரும் வியாபாரத்தில் ஈடுபட்டனர்.

இந்தியாவிலிருந்து வந்த வியாபாரிகளில் பெரும்பாலானவர் குஜராத்திகள். பஞ்சாபிகளும் தென்னிந்தியர் சிலரும் வியாபாரம் செய்கின்றனர். குஜராத்திகள் பல ஆண்டுகளுக்கொரு முறை இந்தியா சென்று திரும்புகின்றனர். சீன வியாபாரிகள் சிலர் இருக்கின்றனர் எனினும், இவர்கள் காட்டுப்புறங்களிலே கைவித்திகளிடம் தான் வியாபாரம் செய்கின்றனர்.

பத்துப் பதினைந்து குடும்பங்கள் இருக்குமிடங்களில் ஒரு வியாபாரியைக் காணலாம். பெரும்பாலான விவசாயிகளுக்குக் கரும்புவெட்டுக்குப் பிறகுதான் கையில் பணமிருக்கும். இவர்கள் பக்கத்திலுள்ள கடைக்கு வந்து சாமான்கள், முக்கியமாக கோதுமை, நவதானியம் மற்றும் உணவுப் பொருள்கள் வாங்குவார்கள். துணி மணி, மண்ணெண்ணெய் முதலிய பொருள்களையும், ஆடம்பரப் பொருள் ஏதேனும் இருந்தால் அவைகளையும் வாங்குவார்கள். எல்லாவற்றுக்கும் வியாபாரி கணக்கு எழுதி வைத்துக் கொள்ள வேண்டும். கையில் பணம் கொடுத்துச் சாமான் வாங்கினால்தானே பணத்தின் அருமை தெரியும்? கடனுக்கு வாங்குவதால் தேவையானவற்றையும் தேவையில்லாதவற்றையும் விவசாயிகள் வாங்குவார்கள். இந்த விவசாயிகளுக்குப் படிப்பு இல்லாததால், கடைக்காரர் கணக்கு என்ன எழுதினாலும் தெரியாது. பொதுவாக, கடைக்காரர்கள் நாணயமாக நடந்துகொள்வதில்லை என்றும், சிலர் சாமான் விலையை அதிகமாக எழுதுவதோடு மட்டுமல்லாமல், அதிகமாகச் சாமான் கொடுத்ததாகவும் கணக்கு எழுதுவார்கள் என்றும் கேள்விப் பட்டேன். கரும்பு வெட்டிப் பணம் வந்ததும், இந்தக் கடைக்காரர்கள் 'கம்பெனியாரிடம் சென்று, இந்த விவசாயிகளுக்குக் கிடைக்கவேண்டிய தொகையில் தங்கள் கடன் தொகையை முதலில் வசூல் செய்துவிடுவார்கள்.

இந்த நிலைமையில் சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன் பிஜித்தீவுக்கு ஓர் இந்தியர் வந்தார். அவருடைய உண்மையான பெயர் யாருக்கும் தெரியாது. அவரை வசிஷ்ட முனி என்று எல்லோரும் அழைத்தார்கள். அவர் உணர்ச்சி மிக்கப் பேசினார். காலால் நடந்து, தீவு முழுவதும் சென்று பிரசாரம் செய்தார். அவர் பிரசங்கத்தைக் கேட்க மக்கள் நாள் கணக்கிலும் நடந்து வருவார்களாம்,



இந்தியத் தொழிலாளரை உற்சாகப்படுத்தி, அவர்களுக்குள் ஓரளவு ஒற்றுமையை உண்டாக்கி, அவர்களுடைய சொந்த உழைப்பாலேயே இரண்டு ஆரம்பப் பள்ளிகளைக் கட்டச் செய்தார் வசிஷ்ட முனி. அவரைப் பற்றிய விவரங்கள் முழுதும் தெரியவில்லையானாலும், அவர் விவசாயிகளிடையே பெரும் விழிப்பை உண்டாக்கினார் என்று தெரிகிறது. சிறிது நாளில் விவசாயிகள் உரிமைக்காகத் தோட்டங்களில் வேலை நிறுத்தம் செய்தனர். வேலை நிறுத்தம் ஆறு மாதம் தொடர்ந்து நடைபெற்றது. வேலை நிறுத்தத்துக்கு அவர்தான் காரணமென்று அரசாங்கத்தார் வசிஷ்ட முனியை நாடு கடத்தினர். இப்பொழுது அவர் எங்கிருக்கிறார் என்று யாருக்கும் தெரியாது.

பின்னர், சுவாமி மனோகரானந்தர் என்பவர் பிஜிக்கு வந்து தேசீயப் பள்ளியொன்று ஏற்படுத்த எல்லாச் சமூகத்தாரிடமும் பெரும் பொருள் திரட்டினார். பள்ளிக் கட்டிடம் கட்டி முடிந்ததும் கட்டிடத்துக்கு ஆர்ய சமாஜப் பள்ளி என்று பெயரிட்டார். இது பெரிய கிளர்ச்சியை உண்டாக்கிற்று. இப்பள்ளிக்கு நிதி உதவிய முஸ்லிம்களும், ஆர்ய சமாஜத்தைச் சேராத இந்துக்களும் இதனை எதிர்த்தனர். அதன் பயனாகத் தோன்றியவைகளில் ஒன்று, தென் இந்திய சன்மார்க்க ஐக்கிய சங்கம்.

இந்தச் சங்கத்தைத் தோற்றுவிப்பதற்குக் காரணமாக இருந்தவர்கள் சாது குப்புசாமி, எம். என். நாயுடு முதலிய பலர். நாயுடு பிரபலமான வியாபாரி. ஆரம்பத்தில் நந்தியில் சொந்தக் கட்டிடம் கட்டி, வாசகசாலை நிறுவினார். ஏராளமான புத்தகங்களும் தருவித்தார். ஆனால் படிப்பதற்கு ஆளில்லை.

எனவே சங்கத்தினர், ஆரம்பப் பள்ளிகளைத் தொடங்க முன்வந்தனர். பிஜியில் கட்டாயக் கல்வி

கிடையாது. கைவித்திகளுக்கு அவர்களுடைய கோரோக்களில் அரசாங்கத்தார் பள்ளிகளைக் கட்டி இலவசக் கல்வி போதிக்கிறார்கள். இந்தியர்களுக்கென அரசாங்கத்தார் பள்ளிகளை நடத்தினாலும், அவை மிகச் சொற்பம்.



சங்கப் பள்ளிகளில் ஒன்று

பிஜித்தீவில் பயிற்சி பெற்ற ஆசிரியர் அனைவரும் அரசாங்க ஊழியர்களே. அரசாங்கக் காரியாலயங்களிலுள்ள சிறிய பணியாளர் நீங்கலாக, மற்ற எல்லோருடைய நியமனமும், மாறுதலும் அரசாங்கக் 'கெஜட்டில்' வெளியாகும்.

அரசாங்க அனுமதியின்றி யாரும் பள்ளிகளை நடத்தக் கூடாது. பயிற்சி பெற்ற ஆசிரியர் அனைவரும் அரசாங்க ஊழியர்களாகையால், எந்தெந்த ஆசிரியரை எந்தெந்தப் பள்ளிக்கு அனுப்புவதென்பதைக் கல்வி இலாகாதான்



முடிவு செய்யும். ஆசிரியர்களின் சம்பளத்தை அரசாங்கத்தாரே கொடுப்பார்கள். தனிப்பட்ட நிர்வாகப் பள்ளிகள் மட்டும் ஆசிரியர் சம்பளத்தில் பாதியை அரசாங்கத்துக்குச் செலுத்த வேண்டும்.

கைவித்திப் பள்ளிகளில் ஆங்கிலமும் கைவித்தியும் கற்பிக்கிறார்கள். இந்தியப் பள்ளிகளில் ஆங்கிலமும் ஹிந்தியும் கற்பிக்கிறார்கள்.

சங்கத்தார் தற்பொழுது நடத்தும் ஆரம்பப் பள்ளிகள் பதினான்கு. அத் தீவின் பள்ளிப் பிள்ளைகளில் பத்தில் ஒரு பங்கு, சங்கத்துப் பள்ளிகளில்தான் படிக்கிறார்கள்.



சங்கப் பள்ளிச் சிறுவர்

இந்தப் பள்ளிகளில் ஆங்கிலமும் ஹிந்தியும் போதிப்பதோடு, தமிழ், தெலுங்கு, குஜராத்தி ஆகியவற்றில் எது

தங்கள் தாய்மொழியோ அதனையும் மாணவர் பயில ஏற்பாடு செய்திருக்கின்றனர்.

குடியேறிய இந்தியரில் பெரும்பாலோர் ஹிந்தி பேசுவோராயிருந்ததால், அவர்களுடைய ஆதிக்கமே அதிகமாக இருந்தது. யாராவது தமிழ் அல்லது தெலுங்கில் பேசினால், இவர்கள் கேலி செய்வார்கள். இதற்குப் பயந்து பலர் தாய்மொழியில் பேசாதிருந்தனர்.

இவ்வித மொழி வேற்றுமை ஒருபுறமிருக்க, சங்கத்து அங்கத்தினர்களிடையே ஒற்றுமையின்மையால் சச்சரவுகளும் பிளவுகளும் தோன்றின.

இந் நிலையில்தான், 1937-ல் ஸ்ரீராமகிருஷ்ண மடத்தைச் சேர்ந்த சுவாமி அவினாசாநந்தா சங்கத்தார் வேண்டுகோளுக்கிணங்கி, பிஜிக்கு வந்தார்.

சுவாமி அவினாசாநந்தா தமிழ் நாட்டவர். பல மொழிகளில் புலமை உடையவர். சுவாமி அவினாசாநந்தா, தென்னிந்தியரிடையே மலிந்திருந்த பூசல்களையும், பொறாமைகளையும், அறியாமையையும் அழித்து, அவர்களுக்குத் தன்னம்பிக்கையை ஊட்டி, சங்கத்துக்குத் திட்டமான கொள்கைகளை வகுத்து, சட்டங்களை எழுதிச் சங்கத்தை முறையாகப் பதிவு செய்தார். இந்த அரும்பணியைச் சொற்ப காலத்திற்குள் செய்து முடித்த சுவாமி அவினாசாநந்தர், உடல் நலக் குறைவால் தாய் நாடு திரும்பினார்.

ஆரம்பித்த வேலைகளைத் தொடர்ந்து நடத்தும் பொருட்டு 1939-ல் சுவாமி அவினாசாநந்தர், சுவாமி ருத்ராநந்தரை பிஜிக்கு அனுப்பினார். அதுமுதல் சுவாமிஜி இந்திய மக்களுக்குச் சிறந்த தொண்டு செய்துவருகிறார்.

சுவாமிஜி பிஜிக்கு வந்த பின்னர், சங்கத்து வேலைகள் சுறுசுறுப்பாக நடந்தன. பள்ளி நிர்வாகங்களனைத்தும் செம்மையுற்றன. கிராமங்களில் வாரந்தோறும் தாய்மொழியில் பஜனைக்கு ஏற்பாடு செய்தார். அச்சக வசதியில்லாததால், சுவாமிஜி 'தீனபந்து' என்ற கையெழுத்துப் பத்திரிகையைப் பல மொழிகளில் நடத்தினார். பின்னர் இப் பத்திரிகையைக் கையால் எழுதி, சிறிய கருவியின் உதவிகொண்டு பல பிரதிகள் தயாரித்து விநியோகித்தார்.



எல்லா வகையிலும் மக்களின் நன்மதிப்பைப் பெற்ற சுவாமிஜி மக்களுடைய ஆன்மீக வளர்ச்சிக்கு மட்டுமின்றி, லோகாயதத் துறையில் முன்னேறுவதற்கும் யோசனைகள் சொல்லி உதவி செய்தார். பிஜித்தீவில் இந்தியர்கள் குடியிருக்க வேண்டுமானால், சொந்தமாக நிலம் இருக்க வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தினார். இதன் காரணமாகவே பல இந்தியர்கள் நிலம் வாங்கினர்.

யுத்த காலத்தில் இந்திய விவசாயிகளுக்குப் பெருந் துன்பம் நேர்ந்தபொழுது தைரியமாகத் தலைமை தாங்கி, முன்னணியில் நின்று, பல கஷ்டங்களை மகிழ்ச்சியுடன் அனுபவித்தார் சுவாமிஜி.

பிஜித்தீவில் கம்பெனியாருடைய செல்வாக்கு மிக அதிகம். இவர்கள் இஷ்டப்படி என்ன வேண்டுமானாலும் செய்யலாம். கம்பெனிப் பிரதான நிர்வாகியின் வருமானம், பிஜித்தீவின் கவர்னரின் வருமானத்தை விட அதிகம். கம்பெனி நிர்வாகியை அனுசரித்தே கவர்னர் நடப்பது வழக்கம். தம்முடைய நடைமுறைகளுக்குக் கவர்னர் விரோதமாக இருப்பதாகத் தோன்றினால், இந்த நிர்வாகி இங்கிலாந்துக்குத் தகவல் தெரிவித்துவிடுவார். இந்தக் கம்பெனியின் பங்குதாரர்கள் அரசியல் செல்வாக்கு உள்ளவர்கள். எனவே, இங்கிலாந்திலிருந்து கவர்னருக்குக் கம்பெனியின் நிர்வாகியோடு 'இணங்கி' ஆட்சி நடத்தும்படி உத்தரவு வந்துவிடுமாம்.

கம்பெனியாரும், இங்கிலாந்திலுள்ள உணவு மந்திரி காரியாலயத்தாரும் கலந்து பேசி யுத்த காலத்தில் சர்க்கரையின் விலையை நிர்ணயித்தனர். யுத்த காலத்தில் விலைவாசிகள் விஷம்போல ஏறின. ஆனால் கரும்பின் விலை மட்டும் உயரவே இல்லை. ஒரு டன் விறகின் விலையைவிட, ஒரு டன் கரும்பின் விலை குறைந்து விட்டது.

கரும்புத் தோட்ட விவசாயிகள் அனைவரும் இந்தியரே. இவர்களிடையே மூன்று விவசாயிகள் சங்கங்கள். ஒன்றுகூட உருப்படியான வேலை செய்யவில்லை. இந்த விவசாயிகள் சங்க நிர்வாகிகள் பெரும்பாலும் யோக்கியதையும் நாணயமும் இல்லாதவர்கள். சந்தாத் தொகையை வசூலித்து, கணக்கு ஒன்றும் வைக்காமல் தாங்களே எடுத்துக் கொண்டனர் சிலர். கம்பெனியாரிடமே மாதக் கணக்கில் 'சம்பளம்' பெற்றுக்கொண்டு, கம்பெனிக்குச் சாதகமாக நடந்துகொண்டனர் சிலர். கம்பெனியார் இந்தச் சங்கங்களுக்கிடையே போட்டியை உண்டாக்கி, அதனைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டனர்.

யுத்த காலத்தில், விவசாயிகளுக்கு மலிவான விலைக்கு கோதுமை முதலிய பொருள்களை விற்க, கம்பெனியாரும் அரசாங்கத்தாரும் முன்வந்தனர். ஆனால் இவைகளை விநியோகிக்கும் பொறுப்பு செல்வாக்குள்ள விவசாயிகள் சங்க நிர்வாகிகளிடம் ஒப்படைக்கப் பெற்றது. இவர்கள் ஒரு கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்தி, அதன் மூலம் இப்பொருள்களை விநியோகம் செய்தனர். பெரும்பாலும் 'கள்ளச் சந்தை' விலைக்கே விற்று, சரியான கணக்கும் வைக்காமல், லட்சக் கணக்கான பணத்தை எடுத்துக் கொண்டார்கள். ஒவ்வொரு சங்க நிர்வாகியும் பணக்காரனாகி விட்டார். விவசாயிகள் தங்கள் குறைகளை எடுத்துக் கூறி, கம்பெனியாரிடம் போராடும்படி சங்க நிர்வாகிகளை



வற்புறுத்தினர். ஆனால் சங்க நிர்வாகிகளுக்குக் கம்பெனியாரை எதிர்த்துக் கொள்ளத் தைரியமில்லை. எதிர்த்தால், தங்கள் மூலம் உணவுப் பொருள் விநியோகிப்பதை நிறுத்தி விடக் கூடும் என்று பயந்தார்கள்.

இவ்வாறு விவசாயிகள் சங்க நிர்வாகிகள் வாயடைத்துப் போகவே, கம்பெனியாரின் அட்டகாசம் அதிகரித்தது. புதிய வழக்கங்களை ஏற்படுத்தி, விவசாயிகளுக்குக் கொடுக்கும் பணத்தில் ஒரு பகுதியைப் பிடித்துக்கொண்டார்கள். விவசாயிகள் சங்க நிர்வாகிகளைக் கூட்டம் கூட்டி, யுத்த நிதிக்கு ஒவ்வொரு விவசாயியும் டன் ஒன்றுக்கு இவ்வளவு தொகை கொடுக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்தினார்கள். பயமுறுத்தலின் பேரில் விவசாயிகள் சங்க நிர்வாகிகள் ஒப்புக்கொண்டனர். இவ்வாறு, விவசாயிகள் சங்கங்களே விவசாயிகளுக்கு விரோதமாயின! வேலியே பயிரை மேய்ந்தது!

விவசாயிகளில் சிலர் அரசாங்கத்தாரிடம் முறையிட்டார்கள். எப்படியாவது யுத்தத்தில் வெற்றிகாண வேண்டும் என்பது ஒன்றையே லட்சியமாகக் கருதிய பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு, விவசாயிகளின் இந்தக் குறைகள் எல்லாம் அலட்சியமாகத் தோன்றின. அரசாங்கத்தாரிடம் செய்த முறையீடு எல்லாம் 'செவிடன் காதில் ஊதிய சங்குபோல்' ஆயின.

விவசாயிகளின் வருமானம் சாப்பாட்டுக்குக்கூடப் போதவில்லை. கம்பெனியாரோ கண்மூடித்தனமாய் நடந்தனர். அரசாங்கமோ செவிசாய்க்கவில்லை. தங்கள் சங்கத் தலைவர்களோ வஞ்சகம் செய்தனர். சாமான் வாங்கிய கடனைக் கொடுக்கும்படி கடைக்காரர்கள் நெருக்கினார்கள்.

இந்நிலையில் விவசாயிகள், கஷ்டம் தாங்க முடியாமல், சுவாமிஜியிடம் வந்து முறையிட்டனர். சுவாமிஜியும்

அம்பாலால் படேலும் சேர்ந்து யோசித்தனர். படேல் அப்பொழுது கவர்னருடைய நிர்வாக சபையில் அங்கத்தினராக இருந்தார்.

கம்பெனியாரை எதிர்த்து வேலே நிறுத்தம் செய்து, ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடங்கினுல், சகிக்க முடியாத கஷ்டங்கள் வருமென்றும், கடைசிவரை உறுதியாக அஹிம்சா முறையைக் கைக்கொள்ள வேண்டுமென்றும், இதற்கு எத்தனை பேர் தயாராக இருப்பார்கள் என்று தெரிந்த பின்னர்தான் மேற்கொண்டு காரியத்தை நடத்தலாமென்றும் சுவாமிஜியும் படேலும் கூறினர்.

உற்சாகமுள்ள விவசாயிகளில் சிலர், கிராமம் கிராமமாக அலேந்து, விவரங்களை விளக்கிக் கூறி, விருப்பமானவர்களைக் கையெழுத்திடக் கேட்டனர். நூற்றுக்கு எண்பது பேர் கையெழுத்திட்டனர். இருந்தாலும், சுவாமிஜிக்கும் படேலுக்கும் இந்த எண்ணிக்கையில் நம்பிக்கையில்லை. "உற்சாகத்தால் இவ்வாறு சொல்லுகிறுர்கள். கடைசிவரை உறுதியுடன் இருக்கமாட்டார்கள்" என்று சொல்லி, மறுபடியும் விவசாயிகளிடம் சென்று, வேலே நிறுத்தத்துக்குச் சாதகமாக இருப்போர் எத்தனை பேர் என்று கணக்கெடுத்தனர். இந்த முறை நூற்றுக்கு எண்பது இல்லாவிட்டாலும், நூற்றுக்கு அறுபதுக்குக் குறையாமல் ஆதரவு இருந்தது.

புதிதாக விவசாயிகள் மகாசங்கம் தோன்றிற்று. சுவாமிஜியும் படேலும்தான் இதற்கு ஆலோசகர்கள். இந்தச் சங்கம் உருவாகாமல் இருக்க கம்பெனியும் மற்ற விவசாயிகள் சங்கங்களும் முயன்றன. மற்ற சங்கங்களில் அங்கத்தினராக இருந்த பலர், அவைகளிலிருந்து விலகி மகாசங்கத்தில் சேர்ந்தனர்.



மகாசங்கம், மற்ற எல்லாச் சங்கங்களையும் 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' என்று கூறி ஒன்ருக இணைந்து ஒத்துழைப்பதற்கு அழைத்தது. மற்ற சங்கங்கள் ஒத்துழைக்க மறுத்துவிட்டன.

மகாசங்கத்தின் சார்பாக, கம்பெனியாரிடம் சென்று படேல் விவாதித்தார். அவர்கள் செவிசாய்க்கவில்லே. அரசாங்கத்தாரிடம் முறையிட்டார். இந்த விஷயம் கம்பெனிக்கும் இங்கிலாந்திலுள்ள உணவு மந்திரி காரியாலயத்துக்கும் சம்பந்தப்பட்டதென்றும், கம்பெனியிடம்தான் இதற்குப் பரிகாரம் காண வேண்டுமென்றும் அரசாங்கம் கண்டிப்பாகக் கூறிவிட்டது.

கம்பெனியாரிடம் சென்ருல், அவர்கள் உணவு மந்திரி காரியாலயத்துக்கும் தங்களுக்கும் ஒப்பந்தம் இருப்பதாகவும், உணவு மந்திரி காரியாலயம் சர்க்கரைக்குக் கொடுக்கும் விலேயை அதிகரித்தால், தாங்களும் அதற்கேற்ற அளவில் அதிக விலே தருவதாகவும், எனவே அரசாங்கத்தார் மூலமாக, உணவு மந்திரி காரியாலயத்தாரிடம் முறையிடும்படியும் கூறினுர்கள்.

கம்பெனியார் அரசாங்கத்தாரிடம் போகச் சொன்ஞர்கள். அரசாங்கத்தார் கம்பெனியாரிடம் போகச் சொன்ஞர்கள். இதற்கிடையில் இந்திய விவசாயிகள் எண்ணற்ற துன்பங்களை அனுபவித்து வந்தார்கள்.

வேறு வழியில்லாததால் வேலே நிறுத்தம் செய்வது என்று தீர்மானித்தது மகாசங்கம்.

சுவாமிஜியும் படேலும் வியாபாரிகளைக் கூட்டி, இந்தப் போராட்டம் உரிமையையும் சுயமரியாதையையும் காப்பாற்றிக் கொள்வதற்கான போராட்டம் என்றும், விவசாயிகளைப் பூரணமாக ஆதரிக்க வேண்டுமென்றும் கூறினர். இந்தப் போராட்டம் முடியும்வரையில் விவசாயிகள்

தங்களுக்குத் தர வேண்டிய பாக்கியைக் கேட்பதில்லை யென்றும், இந்தக் காலத்துக்கு எவ்வித வட்டியும் வசூலிப்பதில்லை யென்றும் வியாபாரிகள் பெருந்தன்மை யான முடிவுக்கு வந்தார்கள்.

கரும்புத் தோட்டம் முழுவதிலும் வேலை நிறுத்தம்! ஒத்துழையாமை! நியாயத்துக்காகப் போர்! இந்தத் தருணத்தில், மகாசங்கம் கவர்னருக்கு ஒரு பகிரங்கக் கடிதம் எழுதியது. அதை ஆயிரக் கணக்கில் அச்சிட்டு விநியோகித்தனர். இந்தப் போராட்டத்தின் தன்மையை நன்கு விளக்கிற்று அந்தக் கடிதம்.

அப்பொழுது அமெரிக்க ராணுவத்தினர் பிஜிக்கு வந்து ராணுவ தளம் ஒன்று ஏற்படுத்தினர். விவசாயிகள் போராட்டத்தில் அவர்கள் அனுதாபம் காட்டினர். வாயளவில் மட்டுமல்ல; செய்கையிலும். ஆங்காங்குள்ள இந்திய விவசாயக் குடும்பங்களைத் தங்களுடைய ஆடைகளைச் சலவை செய்து தரும்படி கூறி, அதற்காகத் தாராளமாக அமெரிக்க நாணயமான டாலர்களை வழங்கினர். சில விவசாயிகள் பழைய குடிசைத் தொழில்களைச் செய்து ஒருவாறு பிழைத்தனர்.

பணக்கஷ்டம் ஏற்பட்டிருக்குமானால், விவசாயிகளில் சிலர் உறுதி இழந்து வேலைக்குத் திரும்பியிருப்பார்கள். மற்ற விவசாயிகள் சங்க நிர்வாகிகளும், விவசாயிகளை வேலை நிறுத்தம் செய்யவேண்டாமென்று மறைமுகமாகத் தூண்டினர். படித்த இந்தியர் சிலர்; அரசாங்க வலையில் அகப்பட்டு பெரிய உத்தியோகங்களில் அமர்ந்து இந்த வேலை நிறுத்தத்தைக் கெடுக்கும் துரோகச் செய்கையில் ஈடுபட்டனர். தெய்வாதீனத்தாலேயே இந்த அமெரிக்கர்களின் உதவி தருணத்தில் கிடைத்தது. விவசாயிகளின் உறுதி தளரவில்லை. வேலை நிறுத்தம் தொடர்ந்து நடந்தது.



சில மாதங்களில் கரும்பு வெட்ட வேண்டிய காலம் வந்துவிட்டது. கரும்பு வெட்டுக்கு இடையூறு செய்தால், அது யுத்த முயற்சிக்குத் தடை செய்வதாகும். எனவே மகா சங்கம் கவர்னருக்கு ஒரு கடிதம் எழுதியது. அதன் சாரம்:

1. யுத்த முயற்சிக்கு எவ்வித இடையூறும் செய்ய விரும்பவில்லை.

2. அரசாங்கம் ஆள் வைத்து, கரும்புகளை வெட்டிக் கொள்ளலாம்.

3. அரசாங்கத்தார் தரும் எந்த விலையையும் பெற்றுக் கொள்வோம்.

4. ஆனால், எந்தக் காரணத்தைக் கொண்டும், கம்பெனியாருக்குக் கேவலமான விலைக்குக் கரும்பை விற்க மாட்டோம்.

யுத்த முயற்சிக்குத் தடை செய்யவில்லை யென்பதையும், கொள்கைக்காகவும் நியாயத்துக்காகவும் போராடுகிறதென்னையும் பகிரங்கமாகக் கூறிவிட்டது மகா சங்கம்.

போராட்டம் தொடர்ந்து நடந்தது. சுவாமிஜியையும் படேலையும் நந்தியை விட்டு, ஐந்து மைல் சுற்றளவுக்கு மேல் வெளியில் எங்கும் செல்லக் கூடாது என்று அரசாங்கம் தடை விதித்துவிட்டது. சுவாமிஜியும் படேலும் வெளியில் செல்ல முடியவில்லை. ஆனால் விவசாயிகள் பலரும் நந்திக்கு வந்தனர்.

சுவாமிஜிமீதும் படேல்மீதும் அரசாங்கம் வழக்குத் தொடர்ந்தது. அரசாங்கத்தின் இம்மாதிரியான செய்கைகளால் மக்களுடைய ஆத்திரம் அதிகரித்தது.

கம்பெனியாருக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. கவர்னருக்கும் படேலுக்கும் கடிதப் போக்கு

வரத்து ஆரம்பமாயிற்று. சூவாவிலிருந்து கவர்னருடைய கடிதத்தை நந்திக்கு விசேஷ விமானம் கொண்டு வந்தது. இதே விமானம் படேலின் பதிலைக் கவர்னருக்கு எடுத்துச் சென்றது.

கவர்னர் தமது நிர்வாக சபை அங்கத்தினர்களில் ஒருவரான லாலா ராட்டூ சுக்குணு என்பவரை படேலிடம் அனுப்பினர். சுக்குணு ஒரு கைவித்தி. கண்ணியமானவர். இங்கிலாந்தில் டாக்டர் சுப்பராயனுடன் ஒன்ருகக் கல்வி பயின்றவராம். அவரும் படேலும் ஒருவித சமரச உடன்பாட்டுக்கு வந்தனர். ஆனுல் ஒரு கைவித்தி சமரச முயற்சியில் வெற்றிபெறுவதைப் பிரிட்டிஷ் கவர்னர் எவ்வாறு அனுமதிப்பார்? சமரசம் முறிந்தது.

அரசாங்கம் அடக்குமுறையைத் தொடங்கியது. கம்பெனியார், போலீசார் உதவிகொண்டும், இந்தியர்களிலே கருங்காலிகளாக உள்ளவர்களின் உதவிகொண்டும், விவசாயிகளைக் கேளாமலேயே அவர்களுடைய கரும்புப் பயிரை வெட்டி ஆலைக்கு எடுத்துச் செல்ல முயன்றனர்.

நந்தியில் விவசாயிகள் ஒன்று கூடினர். சுவாமிஜியும் படேலும் கூட்டத்தில் இருந்தனர். விவசாயிகள் ஏகமனதாகத் தீர்மானம் செய்தார்கள். அவ்வளவுதான்; அன்றிரவு பிஜித்தீவு முழுமையும் பல கரும்புத் தோட்டங்கள் தீப்பற்றி எரிந்தன. 'இதுதான் லங்காதகனம்' என்ருர்கள் பலர்.

ஆம், விவசாயிகள் தங்கள் சொந்தப் பயிருக்குத் தங்கள் கையாலேயே தீயிட்டனர்!

இதைக் கவர்னரால் நம்ப முடியவில்லை. முக்கியமான அதிகாரியை உடனே அனுப்பினுர். ஒரு கரும்புத் தோட்டம் தீப்பற்றி எரிவதைக் கண்ட அதிகாரி, அங்கிருந்தவரைப் பார்த்து, "யார் இதற்குத் தீயிட்டார்?" என்ருராம்.



அந்த விவசாயி, "இந்தப் பயிர் எனக்குச் சொந்தம்; நான் தான் தீயிட்டேன்" என்று கூறி, தோட்டத்தின் மறு புறத்திலும் அதிகாரியின் எதிரிலேயே தீயிட்டாராம்.

சத்தியத்துக்காகப் போராடிய விவசாயிகள் பிறருக்குத் துன்பம் விளைவிக்கவில்லை. பிறர் சொத்தை நாசம் செய்யவில்லை. துன்பத்தையும், நஷ்டத்தையும் தாங்களே ஏற்றுக் கொண்டனர்.

அரசாங்கம் கலங்கியது! விவசாயிகளின் குறைகளை விசாரிக்க அரசாங்கக் கமிஷன் ஒன்று நியமிக்கப்பெற்றது. கரும்பு விலை நாளாவட்டத்தில் ஏறிற்று.

போராட்டத்தில் ஈடுபட்டோர் அனுபவித்த கஷ்டங்களும், அடைந்த நஷ்டங்களும் எண்ணிலடங்காதவை. ஆனுல் இந்த வெற்றி பெரிய தார்மிக வெற்றி! கம்பெனியாரின் ஆதிக்கம் பெரிதும் குறைந்தது. விவசாயிகள், இழந்துபோன தங்கள் உரிமையையும் சுயமரியாதையையும் மீண்டும் பெற்றனர்.

யுத்தகாலமானதால், இப்போராட்டச் செய்தி வெளியுலகுக்கு அப்பொழுது தெரியவில்லை.

சுவாமிஜியும் படேலும் முன்னின்று வெற்றியுடன் நடத்திய இந்தச் சத்தியப் போராட்டத்தை பிஜியிலுள்ள இந்தியர் ஒருபொழுதும் மறக்க மாட்டார்கள்.

பிஜியில் கரும்புப் பயிர் முக்கியமாயினும், அது ஒன்றையே அவர்கள் நம்பி வாழவில்லை. கரும்பின் விலை வீழ்ந்தால் என்ன ஆகும்? ஒரே விளைபொருளை நம்பி வாழ்வது எப்பொழுதும் ஆபத்தானது. எனவே, தென்னை, நெல், வாழை முதலியன பயிரிடுகிருர்கள். தென்னந் தோட்டங்களில் இந்தியர்களும் கைவித்திகளும் வேலை செய்கிருர்கள்.

தவியோனி என்ற தீவு முழுவதும் தென்னந் தோட்டம். நான்கு பெரிய தோட்ட முதலாளிகள் இங்குள்ளனர். மூவர் வெள்ளைக்காரர்; ஒருவர் இந்தியர். இந்தத் தீவில்தான் பூமத்திய ரேகை செல்லுகிறது.

இந்தத் தீவில் சிற்றுண்டிச்சாலை, திரைப்படக் காட்சிசாலை, கடைத் தெரு ஒன்றும் கிடையாது. தொழிலாளருக்கு நல்ல சம்பளம். செலவு செய்வதற்கு வகையில்லாதால், நன்றாகக் குடித்து விட்டுச் சூதாடுவார்கள்.

விட்டிலேவுத்தீவில் நாபுவா என்ற இடத்தில் நெல் பயிரிடுகிறார்கள். எல்லோரும் இந்திய விவசாயிகள். ஒவ்வொருவருக்கும் சொந்தமாகச் சொற்ப நிலம் உண்டு. பூமி செழிப்பாக இருப்பதால் நன்றாக விளைகிறது. சில ஆண்டுகளுக்கு முன், இந்தியாவில் பஞ்சம் ஏற்பட்டபொழுது, இங்குள்ள விவசாயிகள் தாய்நாட்டுக்கு இலவசமாக அரிசி அனுப்பி உதவினர். நாபுவா ஆற்றங்கரையில் அமைந்துள்ளது.

ஆஸ்திரேலியாவும், நியூஸிலந்தும் வாழைப் பழத்துக்கு பிஜித்தீவைத்தான் நம்பியிருக்கின்றன. இந்த நாடுகளுக்கு வாழைப் பழத்தை ஏற்றிச் செல்லத் தனிக் கப்பல்களே இருக்கின்றன.

அன்னாசிப் பழமும் நிறைய விளைகிறது. பிஜியிலிருந்து ஏற்றுமதி யாகும் பொருள்களில் இதுவும் ஒன்று.

பிஜியில் ஏராளமான மாமரங்கள். சில இடங்களில் சாலைகளின் இருபுறங்களிலும் காணலாம். சில வகைப் பழங்கள்தான் சுவையாகவும் நன்றாகவும் இருக்கும். மற்றவை சுவை குறைந்தவை; நார் அதிகம். மாம்பழக் காலத்தில் லட்சக் கணக்கான மாங்காயைப் பார்க்கலாம். யார் வேண்டுமானாலும் வீதிகளிலுள்ள மரங்களில் காய்த்துத் தொங்கும் மாங்காய்களைச் சாப்பிடலாம். சில



சமயங்களில் சாலைகளில் ஏராளமான மாங்காய் கிடக்கும் அவைகளின்மீதுதான் மோட்டார் செல்லவேண்டும்.

விட்டிலேவுத்தீவில் நல்ல தங்கச் சுரங்கம் இருக்கிறது ஓர் ஆண்டுக்கு ஒரு கோடியே எழுபது லட்சம் ரூபாய் பெறமான லட்சத்து மூவாயிரம் அவுன்ஸ் தங்கம் எடுக்கிறார்கள் இந்தியருக்குப் பெயரளவில் தங்கச் சுரங்கம் ஒன்றிருக்கிறதே தவிர அதில் அதிக வருமானமில்லை. வெள்ளைக்காரரின் தங்கச் சுரங்கத்தில் வேலை செய்வது முழுதும் கைவித்திகள். இந்தியர்களைச் சுரங்க வேலைக்குச் சேர்ப்பதில்லை.

இந்தத் தீவின் வியாபாரம் முழுதும் வெள்ளைக்காரர் கையில். ஆஸ்திரேலியா, நியூஸிலந்து நாடுகளிலுள்ள பெரிய பாங்குகள் இங்கே கிளைகளை ஏற்படுத்தி இருக்கின்றன. அமெரிக்கச் சரக்குகள் இங்கு இறக்குமதியாவதில்லை. வியாபாரம் வெள்ளைக்காரரின் ஏகபோக உரிமையாக இருப்பதால், அவர்கள் வைத்ததுதான் விலை. இந்த மொத்த வியாபாரிகளிடமிருந்து இந்தியரும் சீனரும் வாங்கிச் சில்லரையில் விற்கிறார்கள்.

பிஜித்தீவில் பஸ் சொந்தக்காரர்களும் ஓட்டுபவர்களும் இந்தியர்களே. வாடகை மோட்டார்களும் இந்தியர் வசமே இருக்கின்றன.

பிஜித்தீவில் சுமார் பத்துத் திரைப்படக் காட்சிசாலைகள் இருக்கின்றன. அதில் ஒன்று தவிர மீதியெல்லாம் இந்தியருக்குச் சொந்தம். இந்தியருக்குச் சொந்தமான எல்லாக் காட்சிசாலைகளிலும் வாரத்துக்கு ஒரு முறை அல்லது இரு முறை ஹிந்திப் படங்கள் காட்டுகின்றனர். சிறு ஊர்களில் உள்ள காட்சிசாலைகளில் வாரத்துக்கு மூன்று அல்லது நான்கு நாள்தான் படம் காண்பிப்பார்கள்,

'ராம் ராஜ்யா' என்ற ஹிந்திப் படத்துக்கு, பிஜியில் இருபதாயிரம் பவுன், அதாவது இரண்டு லட்சத்து நாற்பதாயிரம் ரூபாய் வருமானம் கிடைத்தது என்று கேள்விப்பட்டேன். ஹிந்திப் படங்களை இந்தியர் மட்டுமல்ல, கைவித்திகளும் பெரிதும் ரசிக்கின்றனர். ஹிந்திப் படங்களில் உள்ள பாட்டுக்களும், நடனங்களும் கைவித்திகளுக்கு மிகவும் பிரியம்.

தமிழ்ப் படம் மிக அபூர்வம். இரண்டு ஆண்டுகளுக்கு முன் ஒரு தமிழ்ப் படம் காட்டியதாக ஒருவர் எழுதியிருந்தார். அந்தப் படத்தின் பெயர் 'விசித்திர வனிதா.'

பிஜியில் சிறிய வானொலி நிலையம் ஒன்று இருக்கிறது. வியாபார விளம்பரங்களின் வருமானத்தைக் கொண்டு இதை நடத்துகிறார்கள். தீவிலுள்ள மக்களின் க்ஷேம லாபங்களை யெல்லாம் வானொலியில் கேட்கலாம். வியாபார விளம்பரங்களுடன், காணமற் போனவரைத் தேடுதல், தூரத் தீவிலுள்ள உறவினருக்குச் செய்தி கூறுதல் முதலிய யாவும் விளம்பரமாக ஏற்றுக் கொள்ளப் படுகின்றன. ஒரு வியாபாரச் சாமானைப் பற்றிய விளம்பரத்தை வானொலி நிலையத்தில் யாரும் வாசிப்பதில்லை. இவை யெல்லாம் வெளிநாடுகளில் ஒலிப்பதிவாகி, இங்கு அனுப்பப் பெற்று, ஒலிபரப்பப் பெறுகின்றன. உள்ளூர்ச் செய்திகள், சிறு உலகச் செய்திகள், ஆங்கில, ஹிந்தி இசைத் தட்டுக்கள் முதலியன கொண்டதுதான் நிகழ்ச்சி.

பிஜித்தீவின் தலைநகரம் சூவா. இது அழகான பட்டினம். ஜனத் தொகை பதினேழாயிரம்தான். தென் பசிபிக் பகுதிகளிலேயே இதுதான் பெரிய பட்டினம். இது நல்ல துறைமுகம். கானடா, நியூஸிலந்து, ஆஸ்திரேலியா முதலிய இடங்களிலிருந்து வரும் கப்பல்கள் இங்கே தங்கிச் செல்லும். அண்டையிலுள்ள தீவுகளுக்குப் பல சிறு கப்பல்கள் இங்கிருந்து செல்லுகின்றன.



கவர்னர் வசிப்பது இங்கே தான். புதிதாகக் கட்டப் பெற்ற அரசாங்கக் காரியாலயம், சட்டசபை, பெரிய வைத்தியசாலை, நீதி மன்றம், தலைமைத் தபால் நிலையம், கடல் தந்தி நிலையம், பெரிய புத்தகசாலை, மத்திய சிறைச்சாலை, பெரிய வியாபார நிலையங்கள் எல்லாம் இங்கே இருக்கின்றன.

நல்ல ஹோட்டல்கள் பல இங்குள்ளன. முக்கியமானது கிராண்ட் பசிபிக் ஹோட்டல். ஹோட்டல்கள் அனைத்தும் வெள்ளைக்காரருக்குச் சொந்தம். வேலை செய்வோர் இந்தியர். வெள்ளைக்காரர் உணவுச்சாலைகளும், சீனர் உணவுச்சாலைகளும் இருக்கின்றன. இந்தியர் உணவுச்சாலைகள் மூன்று அல்லது நான்கு இருக்கலாம். இந்திய உணவுச்சாலைகளில் உணவின் தரமும் சுகாதாரமும் போதிய அளவு திருப்தியாக இல்லை.

பிஜித்தீவில் ஆங்கிலத்தில் வெளியாகும் ஒரே தினப் பத்திரிகையான 'பிஜி டைம்ஸ் அண்டு ஹெரால்டு' இங்கிருந்துதான் வெளியாகிறது. வெள்ளைக்காரருக்குச் சொந்தமான இப்பத்திரிகை, நம் நாட்டுத் தினப்பத்திரிகை அளவில் பாதிதான் இருக்கும். ஆறு அல்லது எட்டுப் பக்கந்தான். பெரும்பாலும் விளம்பரமே அதிகம். உள்ளூர் வெள்ளைக்காரர்களின் குடும்பச் செய்திகளே பிரதானமாக வெளிவரும். உலகச் செய்திகள் மிகக் குறைவு. இதில் வரும் செய்திகளை இரண்டு நிமிஷத்தில் படித்துவிடலாம். அச்சீடு கவர்ச்சியாக இல்லை. இது பழைய காலத்துப் பத்திரிகை. ஆரம்ப முதல் இன்று வரை அப் பத்திரிகைக்கு ஒரே உறுதியான கொள்கை, இந்தியர் நலனுக்கு எப்பொழுதும் விரோதமாய் எழுதுவது.

இவர்களே 'ஷாந்தி தூத்' என்ற ஹிந்தி வாரப்பத்திரிகையை வெளியிடுகின்றனர். ஆர்ய சமாஜத்தினர், 'பிஜி சமாசார்' என்ற வாரப்பத்திரிகையை ஹிந்தியிலும் ஆங்கிலத்திலும் வெளியிடுகின்றனர். இதன் ஆசிரியரும் போஷகருமான விஷ்ணுதேவ் என்பவர், இத் தீவிலுள்ள முக்கியமான அரசியல்வாதி. 'துஸிங்கா' என்பது கைவித்தி மொழியில் கைவித்திகளால் வெளியிடப் பெறும் வாரப்பத்திரிகை. 'நா மாடா' என்பது கைவித்திகளுக்காக அரசாங்கம் வெளியிடும் மாதப் பத்திரிகை. விவசாய இலாகா மூன்று மாதத்துக் கொருமுறை பத்திரிகை வெளியிடுகிறது. அனைத்தும் சூவாவிலிருந்து வெளிவருபவை.

நிறவேற்றுமை பெரும்பாலும் இல்லையென்று சொல்லலாம். வெள்ளைக்காரர் தொகை மிகக் குறைவு. இந்தியரின் உதவியின்றி எதையும் செம்மையாகச் செய்யமுடியாது. இந்தியரும் நல்ல முறையில் முன்னேறி வருகின்றனர். என்றாலும் தலைநகரான சூவாவில் நிறவேற்றுமையை ஓரளவு காண்கிறோம்.

வெள்ளைக்காரக் குழந்தைகளுக்குத் தனிப் பள்ளிக்கூடம். சிறைச்சாலையில் கைதிகளில் வெள்ளைக்காரரையும் மற்றவரையும் தனியாகப் பிரித்து வைக்கின்றனர். விமானப் பிரயாணிகளின் பெயர்கள் பத்திரிகையில் பிரசுரமாகும். இது அகர வரிசையில் அல்ல. வெள்ளைக்காரர் பெயர் முதலில்; இந்தியர் சீனருடைய பெயர் கடைசியில். 19-10-51 'பிஜி டைம்ஸ்' பத்திரிகையில் பின்வரும் விளம்பரம் காணப்பட்டது: "வரிகொடுப்போர் சங்கம் அமைக்கப் பெறும். இது வெள்ளைக்காரருக்கு மட்டுந்தான்"

இன்றைய உலகப் போக்கில் இந்த மனப்பான்மையெல்லாம் விரைவில் மாறிவிடும் என்பதில் ஐயமில்லை.



சூவா நகரில் இந்திய அரசாங்கப் பிரதிநிதி காரியாலயம் ஒன்று இருக்கிறது.

சூவாவில் ஆண்டு தோறும் முக்கியமான நிகழ்ச்சிகளில் ஒன்று மாரியம்மன் தீமிதி உற்சவம். இத்திருவிழாவுக்கு எல்லா மக்களும் வேடிக்கை பார்க்க வருவார்கள். ஆண்டு தோறும், கவர்னர் இதற்கு வருவது வழக்கம்.

தென்னிந்தியர்கள் காளியம்மன், மாரியம்மன் முதலிய கிராமத் தெய்வங்களை வழிபடுகின்றனர். இம் மாதிரியான கோயில்கள் முப்பதுக்கு மேல் இருக்கும். காவடி எடுத்தல்



ஊதுவாய் மாரியம்மன் கோயில்

கரகம் ஆடுதல், அலகு குத்திக் கொள்ளுதல், தீமிதித்தல் முதலிய சடங்குகளைச் செய்து வருகின்றனர்.

நந்திக்கு அருகே, ஊதுவாய் என்னுமிடத்தில் நடைபெற்ற மாரியம்மன் கோயில் திருவிழாவுக்குச் சென்றேன். அருகிலுள்ள குடியிருப்புக்களில் வசிக்கும் மக்கள்.

ஆண், பெண், குழந்தைகள் அனைவரும்—நல்ல உடையணிந்து காலையிலிருந்தே கோயிலுக்கு வரத் தொடங்கினார்கள். இவர்களில் மிகப் பெரும்பாலோர் தமிழர்.

அம்மனுக்குப் பூஜை எல்லாம் சிறப்பாக நடைபெற்றன. கோயில் மணி அடிக்கடி ஒலித்தது. இரண்டு



ஊதுவாயில் பறையறைவித்தல்

பேர் பறையறைவித்தனர். வந்தவாசியைச் சேர்ந்த ரத்தினம் செட்டியார் தேவாரம், திருவாசகம், வேதாந்தப் பாடல்கள் முதலியவற்றையும், இன்னும் தமக்குத் தெரிந்த



எல்லாத் தமிழ்ப் பாடல்களையும் பக்தி சிரத்தையுடன் அம்மன் சந்நிதியில் நின்று நெடுநேரம் பாடினார். காவடி, கரகம் எடுப்பதாகப் பிரார்த்தனை செய்து கொண்ட பக்தர்கள் அனைவரும் அன்று முழுவதும் உபவாச மிருந்தனர்.

மாலை ஐந்து மணிக்கு மேல், சில இளைஞர்கள் அருகிலுள்ள கடலுக்குச் சென்று ஸ்நானம் செய்து, கரகங்களை தலை மீது எடுத்து வந்து, மாரியம்மன் கோயிலுக்கு முன்னே தீ மிதித்தனர்.



ஊதுவாயில் கரகமெடுத்தல்

இத் திருவிழாவில் நூற்றுக் கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். அன்றிரவு தமிழில் தெருக்கூத்து ஒன்றும் நடைபெற்றது. தங்கள் முன்னோரிடமிருந்து இக்கலையைக் கற்றுக்கொண்ட இளைஞர்கள் நன்றாகப் பாடி, ஆடினார்கள்,

ஒரு விநாயகர் கோயிலும், ஒரு சுப்பிரமணிய சுவாமி கோயிலும், இரண்டு மூன்று பெருமாள் கோயில்களும் இந்தத் தீவில் இருக்கின்றன. சைவ வைஷ்ணவச் சண்டைகள் இங்கு கிடையாது. சுப்பிரமணிய சுவாமி கோயிலில் துளசி தீர்த்தம் வழங்குகிறார்கள். பெருமாள் கோயிலில் விபூதிப் பிரசாதம் கொடுக்கிறார்கள்.



ஊதுவாய்த் தீமிதி உற்சவத்தில் இந்தியப் பெண்கள்

சீக்கியர், தங்கள் வழிபாட்டுக்காக, குருத்துவாராக்கள் கட்டியிருக்கின்றனர்.

இந்திய முஸ்லிம்கள் சிலர் இருக்கின்றனர். இவர்கள் மசூதிகள் கட்டிக் கொண்டிருக்கின்றனர். முஸ்லிம்களில் சிலர் தங்களை, பாக்கிஸ்தானிகள் என்று கூறிக் கொண்ட போதிலும், கூடியவரை இந்துக்களுடன் சுமுகமாகவே வாழ்க்கை நடத்துகின்றனர்.

சீனர்கள் தொகை மிகக் குறைவு. இவர்களில் பலர் கிறிஸ்தவர்.



பிஜித்தீவில் கைவித்திகளும் வெள்ளைக்காரர்களும் கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவர்கள். இந்தியர்களில் மிகச் சிலரே கிறிஸ்தவ சமயத்தில் சேர்ந்திருக்கின்றனர். கிறிஸ்தவ சமயத்தினரிலேயே பல வித பிரிவினர் உண்டு. அவர்களில் ஐந்தாறு விதமான பிரிவினர் பிஜியில் இருக்கின்றனர். ஒவ்வொரு பிரிவினரும், தங்கள் பிரிவைப் பலப்படுத்தவும், ஆள் சேர்க்கவும் பகீரதப் பிரயத்தனங்கள் செய்து வருகின்றனர். சூவாவில் நகர மண்டபத்தை வாரக்கணக்கில் வாடகைக்கு எடுத்துக் கொண்டு, வெளியூர்களிலிருந்து தங்கள் பிரிவைச் சேர்ந்த சமயப் பிரசங்கிகளை வரவழைத்துப் பிரசங்கம் செய்விப்பார்கள். பிரசங்கத்துக்கு ஆள் திரட்ட பிரமாதமாகப் பத்திரிகைகளிலும் இதர வகைகளிலும் விளம்பரம் செய்வார்கள்.

கிறிஸ்தவர்களுக்குப் பெருநாள் கிறிஸ்துமஸ். இந்துக்களுக்கும் கிறிஸ்துமஸ்தான் 'படாதின்'—அதாவது பெருநாள். இந்துக்கள் மத விஷயத்தில் அந்தப் பெருநாளைக் கொண்டாடுவதில்லை. ஆனால் அந்தச் சமயத்தில் நடக்கும் குடியிலும் கேளிக்கைகளிலும் இந்துக்கள் பூரண பங்கு கொள்கின்றனர்.

இந்தியர்களுக்கு ஒரே ஓர் உயர்தரப்பள்ளிதான் இருந்தது. இது பாதிரிகள் நடத்தியது. இந்துக்கள் கிறிஸ்தவர்களாக மதம் மாறினால்தான், இந்தப் பள்ளியில் உயர்தரப் படிப்புக்குச் சேர்த்துக் கொள்வார்கள். சில இந்துக்கள் கிறிஸ்தவர்களாகி, படிப்பு முடிந்ததும் மீண்டும் இந்துக்களாயினர்.

இந்தக் குறையை நீக்குவதற்காக விவேகாநந்த உயர்தரப்பள்ளியை சுவாமிஜி ஆரம்பித்தார். அரசாங்கத்தார் எவ்விதப் பொருளுதவியும் செய்ய மறுத்துவிட்டார்கள். பள்ளிக்கு வெறும் அனுமதி பெறுவதே அரிதாகிவிட்டது.

பின்னர், பிஜியின் கவர்னரே இப்பள்ளியின் புதுக் கட்டிடத்துக்கு அஸ்திவாரக்கல் நாட்டினார். இந்தியாவிலிருந்து தேர்ச்சி பெற்ற ஆசிரியர் இருவர் இந்தப் பள்ளியில் பணியாற்றுகின்றனர். ஜாதி மத பேதமில்லாமல் பிள்ளைகள் இங்கே படிக்கின்றனர். சுவா நகரத்திலும் இந்திய சமூகத்தினர் ஓர் உயர்தரப்பள்ளி நடத்தி வருகின்றனர்.

பிஜியில் பெரிய நகரங்கள் மிகச் சிலவே. சுவாவுக்கு அடுத்தது லட்டோக்கா. இது ஒரு துறைமுகம். கம்பெனியாரின் தலைமைக் காரியாலயமும், பெரிய ஆலையும் இங்கே தான் இருகின்றன. பா, நந்தி, சிங்கடோகா, நாபுவா, நவ்சோரி, ராக்கி ராக்கி முதலியவற்றைப் பெரிய நகரங்கள் என்று சொல்லலாம். ராக்கி ராக்கியைப் போல, சில வற்றின் பேர் வேடிக்கையாக இருக்கும். உதாரணமாக டாங்கி டாங்கி, சாபு சாபு, லோமோ லோமோ, மாலா மாலா முதலியன சில ஊர்களின் பெயர்கள்.

சிங்கடோகாவிலிருந்து ராக்கி ராக்கி வரையில், சுமார் நூற்று முப்பது மைல் நீளமுள்ள மிகச் சிறிய ரயில் தடம் ஒன்றைக் கம்பெனியார் அமைத்திருக்கிறார்கள். கரும்புத் தோட்டங்களில் கரும்பு வெட்டியதும் அவைகளைத் தங்களுடைய பல ஆலைகளுக்குக் கொண்டு போய்ச் சேர்ப்பதற்காகவே இதனை அமைத்திருக்கிறார்கள். தோட்டங்களின் வழியாகவே செல்லுகிறது இந்தத் தடம். கம்பெனித் தோட்டங்களைச் சேர்ந்த குத்தகைக்காரர்களும், வேலைக்காரர்களும், அவர்கள் குடும்பத்தினரும் இந்தத் தடத்தில் செல்லும் ரயில்களில் இலவசமாகப் பிரயாணம் செய்வார்கள்.

பொதுஜனங்களின் உபயோகத்துக்காக இந்த ரயில்களை வாரம் இரு முறை ஓட்டுகிறார்கள். பகல் நேரத்தில்



மட்டுந்தான் இந்த ரயில் ஓடும். ரயிலை ஓட்டுவதற்கு ஒருவர், அவருக்கு உதவிக்கு ஒருவர் ஆக இருவர்தான் ரயில் சிப்பந்திகள். தண்ணீர்த் தொட்டி இருக்குமிடத்தில் ஒரு சிப்பந்தி இருப்பார். இந்த ரயில்களுக்குக் காப்பாளரே (Guard) இல்லை. அது மட்டுமல்ல, ரயில் நிலையம், கை காட்டி மரம், பச்சைக் கொடி முதலியன ஒன்றுமே கிடையாது.

ரயில் முழுவதும் ஒரே வகுப்பு. ஆடு, கோழி, முதலிய பிராணிகளையும், பிரயாணிகள் தங்களுடன் ரயிலில் கொண்டு செல்லலாம். ரயில் நிற்குமிடங்களில் சிலர், பானங்கள் விற்பது போன்ற சில்லரை வியாபாரம் செய்வார்கள். இந்த ரயிலின் வேகம் உத்தேசமாக மணிக்குப் பத்து மைல். வழியில் எந்த இடத்தில் யார் கையைக் காட்டினாலும், ரயிலை நிறுத்திப் பிரயாணிகளை ஏற்றிக் கொள்வார்கள். இந்த ரயிலில் பிரயாணம் செய்யக் கட்டணம் எதுவுமில்லை; பொறுமைதான் வேண்டும்.

இந்த ரயிலில் கட்டணம் பெற்று, பொது மக்களை ஏற்றிச் சென்றால் லாபமாக இருக்கும் என்று கம்பெனியார் கருதினார்களாம். அவ்வாறு செய்வதென்றால், இதற்காக ரயில் சட்டம் தனியாக இயற்ற வேண்டும் என்றும், சட்டத்தில் காணும் பாதுகாப்புக்களையும் சௌகரியங்களையும் கம்பெனியார் பிரயாணிகளுக்குச் செய்து கொடுக்க வேண்டுமென்றும் அரசாங்கத்தார் கூறினார்களாம். அரசாங்கத்தார் கூறுகிறபடி ரயில் நடத்தினால் தங்களுக்கு நஷ்டம் உண்டாகும் என்று கம்பெனியாருக்குத் தெரிந்தது. எனவே, பொதுமக்கள் இந்த ரயிலை, குறிப்பிட்ட நாட்களில் இலவசமாக உபயோகிக்கலாம் என்று கூறிவிட்டனர். சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு, ரயிலை நடத்தி நஷ்டம் அடைவதைக் காட்டிலும், இலவச ரயில் நடத்துவதாகக் கூறிப் பெருமை கொள்ளலாம் அல்லவா?

சாம்பேத்தோ என்னுமிடத்தில் வெந்நீர் ஊற்று ஒன்றிருக்கிறது. இது அருகிலுள்ள சிறு ஓடையில் கலக்கும் போது, குளிப்பதற்கு ஏற்ற சூடாக இருக்கும். இந்த மாதிரி இடங்களைச் செப்பனிட்டு நல்ல முறையில் வைக்கவில்லை.

இந்தியர் வசிக்குமிடத்தைக் கிராமம் என்று சொல்லுவதைவிட, குடியிருப்பு என்று கூறுவதுதான் பொருந்தும். தங்களுடைய நிலத்தில் ஒவ்வொரு குடும்பத்தாரும் வீடு கட்டிக்கொண்டு வசிக்கின்றனர். குடும்பம் பெருத்துவிட்டால், அதற்குத் தக்கபடி வீடுகள் அதிகமாகும். சௌகரியமாய் உள்ள விவசாயிகள், தங்கள் வீட்டிலேயே ரேடியோ, காய்கறி வகைகளையும் பானங்களையும் குளிர்ச்சியாக வைத்திருக்கும் இயந்திரப்பெட்டி (Frigidaire) முதலியன வைத்திருக்கிறார்கள். சொந்த மோட்டாரும், உழுவதற்கு இயந்திரக் கலப்பைகளும் (Tractor) சிலர் வைத்திருக்கிறார்கள். ஆனால் வீட்டை மட்டும் உறுதியாகவும் ஸ்திரமாகவும் கட்டுவதில்லை. இதற்குக் காரணம், குத்தகைக் காலம் முடிந்ததும், கம்பெனியார் அந்த இடத்தைவிட்டுப் போகும்படி சொன்னால் என்ன செய்வது என்ற பயந்தான்.

சாதாரண வீடுகளும்கூட முந்நூறு பவுனுக்கு— அதாவது மூவாயிரத்து அறுநூறு ரூபாய்க்குக் குறைந்து கட்ட முடியாது. பிஜியில் மலஜல சுத்தி செய்யும் இடங்களையெல்லாம் குழிதோண்டிக் கட்டுவார்கள். பத்து அல்லது பன்னிரண்டு அடி ஆழத்தில் குழிதோண்டி அதனைச் சுற்றிலும் மரத்தட்டிகளை வைத்துவிடுவார்கள். இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, இதை மூடிவிட்டு, பத்தடி தூரத்தில் வேறு குழி தோண்டி, இந்த மரத் தட்டிகளை அப்படியே நகர்த்தி வைத்துவிடுவார்கள். இவை வீடுகளுக்கு இருபதடி



தூரத்தில் இருக்கும். பொதுவாக, பிஜியிலுள்ள இந்தியர் கண்ட இடங்களில் மலஜலம் கழிப்பதில்லை.

பாடுபடும் விவசாயிக்குக் கரும்புத் தோட்டத்தில் ஆண்டுக்கு எழுநூறு பவுன் வருமானம் கிடைக்கும். முதல் நானூறு பவுனுக்கு வருமானவரி கிடையாது. ஒவ்வொரு குழந்தைக்கும் ஐம்பது பவுன் வீதம் கழிவு உண்டு. பிஜியில் வருமானவரி செலுத்தும் விவசாயிகள் மிக மிகக் குறைவு.

ஓர் இந்தியக் குடும்பத்துக்கு ஆறு பிள்ளைகள் சாதாரணம். பத்து அல்லது பன்னிரண்டு பிள்ளைகள் உள்ள குடும்பங்களும் உண்டு. 'பிறப்பு விகிதம் இம்மாதிரியே இருந்தால், 1980-ஆம் ஆண்டில் பிஜியின் ஜனத்தொகையில் நூற்றுக்கு எண்பது பேர் இந்தியர்களாக இருப்பார்கள்' என்று ஓர் அமெரிக்கர் எழுதியிருக்கிறார். மற்றுமோர் அமெரிக்கர் பிஜியைப் பற்றி எழுதிய புத்தகத்துக்கு, 'பசிபிக் சமுத்திரத்தில் சிறிய இந்தியா' என்று பெயரிட்டுள்ளார்.

ஓர் இந்தியருக்குப் பத்துப் பிள்ளைகள். இது போதாது என்று ஒரு குழந்தையை எடுத்து வளர்த்தாராம். இதைப் பற்றிக் கேட்டபொழுது, "பத்துக் குழந்தைகளுக்குச் சோறு போடும்பொழுது பதினொருவது குழந்தைக்கும் சோறு போடுவது கஷ்டமல்ல." என்று கூறினாராம். பிள்ளைப் பேற்றிலும், குழந்தை வளர்ப்பதிலும், பிஜி இந்தியருக்குள்ள பாசத்தை இது விளக்குகிறதல்லவா? எனினும், இங்குள்ள இந்தியரில் சிலர், "இந்தியாவில் மக்கள் கர்ப்பத்தடை முறையை ஏற்க வேண்டும்." என்று உபதேசிப்பதையும் கேட்டிருக்கிறேன்.

பிஜியில் பல இடங்களுக்குச் சென்று, பல அன்பர்களுடன் தங்கினேன். தமிழிலே பற்றுடையவர்களில்

அப்பாசாமிப் பிள்ளையும் ஒருவர். இவர் அத்தீவில் ஒரு சிறந்த கோழிப் பண்ணை வைத்திருக்கிறார்.

பிரபல விவசாயியான முனிசாமி ரெட்டியார் இரு முறை இந்தியாவுக்கு வந்திருக்கிறார். அவர் இந்தியாவில் பார்க்காத தமிழ்ப் படமே இராது என்று கூறிவிடலாம். தமிழ் நாடகங்கள் என்றால் இவருக்கு உயிர்.

ஸ்ரீரங்கத்தைச் சேர்ந்த கிருஷ்ண ஐயர் நல்ல சுபாவமுள்ளவர். கிருஷ்ண ஐயர் ஆசிரமத்தில் சமையல் செய்து சுவாமிஜிக்கும் அங்கு வரும் விருந்தினர்களுக்கும் அன்புடன் பரிமாறுவார். அவர் தயாரிப்பது சாம்பாரா அல்லது ரசமா என்பது அவருக்கே தெரியாது. சுவாமிஜி அவரைப் பார்த்து, "கிருஷ்ண ஐயர், இது சாம்பாரா?" என்றால், "ஆம்" என்பார். உடனே வேறு ஒருவர், "இது ரசமா?" என்று கேட்டால், அதற்கும், "ஆம்" என்றுதான் கிருஷ்ண ஐயர் சிரித்துக்கொண்டே பதில் சொல்லுவார். ஆனால் சமையலில் இவருக்குள்ள திறமையைக் காட்டிலும், மிருதங்கம் வாசிப்பதில் உள்ள திறமைதான் அதிகம். கடைசிவரை ஒரே மாதிரியாக மிருதங்கம் வாசிப்பார். ஆரம்பித்து வாசிக்கத் தெரியுமே தவிர அதை முடிப்பது எப்படி என்று இவருக்குத் தெரியாது. இது ஒன்றுதான் கஷ்டம். இவருக்கு நல்ல கிராக்கி. பல இடங்களுக்கும் அழைத்துச் செல்வார்கள். பிஜியிலேயே—ஏன் தென் பசிபிக் தீவுகளிலேயே-இவர்தான் சிறந்த மிருதங்க வித்துவான் என்று கூறுவது மிகையாகாது.

கவிஞர் ஒருவரையும் சந்தித்தேன். அவர் பெயர் சுப்பராய வாத்தியார். கங்காணிகள் வசம் அகப்பட்டு, வரும் வழியில் கடலில் இருமுறை குதித்தும் உயிர் தப்பி, தோட்டங்களில் அனுபவித்த துன்பங்களின் உருக்கமான வரலாற்றை அவரே எளிமையாகக் கவி பாடியிருக்கிறார்.



பிஜியிலுள்ள பிரபலமானவர்களில் பாரிஸ்டர் சிவ்பாய் படேல் ஒருவர். அவர் இந்த நாட்டுக்கு வந்து பல ஆண்டுகள் ஆயின. நல்ல அறிஞர். லட்டோக்காவில் அவருடன் சில நாள் தங்கினேன். அவருடைய புத்தகசாலை



சுப்பராய வாத்தியார்

அற்புதமானது. யார் கேட்டாலும் புத்தகங்களை இரவல் கொடுப்பார். பலர் திருப்பித் தருவதில்லை. சிலர் இரவல் வாங்கிய புத்தகத்தில் தங்கள் பெயரையே எழுதிக் கொள்வார்கள். ஒரு முறை சிவ்பாய் படேல், நகரத்துக்குச் சென்றபொழுது, பழைய புத்தகங்களை விற்பனை செய்வதைப் பார்த்தார். ஐந்தாறு புத்தகங்களை ஒவ்வொரு கட்டாகக் கட்டி, மேலே காகிதம் போட்டுச் சுற்றி,

ஒவ்வொரு கட்டு இன்ன விலை என்று குறித்திருந்தார்கள். உள்ளே என்ன புத்தகம் இருக்கும் என்று தெரியாது. சிவ்பாய் மூன்று புத்தகக் கட்டுகளை விலை கொடுத்து வாங்கி, வீட்டுக்குச் சென்று பிரித்துப் பார்த்தாராம். பாதிக்குமேல் அவருடைய புத்தகங்கள்! அவரிடம் புத்தகம் இரவல் வாங்கியவர்கள், அதனைத் திருப்பிக் கொடுக்காமல், பழைய புத்தக வியாபாரிக்கு விற்றுவிட்டார்கள். "என் புத்தகங்களை நானே விலை கொடுத்து வாங்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது." என்றார் சிவ்பாய்.

பஞ்சாபி வியாபாரி ஒருவர் வீட்டில் ஒரு முறை தங்கினேன். அன்புடன் உபசரித்தார். அவருக்கு வயது வந்த பையன் ஒருவன் உண்டு. அந்தப் பையன் வெளியே சென்றிருந்த சமயம் பார்த்து, அவர் என்னிடம் வந்து, "ஓர் உபகாரம் செய்ய வேண்டும்." என்றார்.

"என்ன?" என்று கேட்டேன்.

"எனது பையனுக்குத் தாங்கள் புத்தி சொல்ல வேண்டும். பெரியோர்களை மதித்து, தகப்பனாரின் வார்த்தைகளைத் தட்டாமல் நடக்கும்படி சொல்ல வேண்டும்." என்றார்.

"தாங்கள் இந்தியாவிலிருந்து புறப்படும்பொழுது, தங்கள் தகப்பனாரின் அனுமதி பெற்று வந்தீர்களா? உண்மையைச் சொல்லுங்கள்." என்று சிரித்துக் கொண்டே கேட்டேன்.

"சொல்லாமல் ஓடிவந்துவிட்டேன்." என்றார்.

"நீங்கள் உங்கள் தகப்பனாருக்குக் கீழ்ப்படியாமல் நடந்திருக்கும்பொழுது, உங்கள் பையன் மட்டும், உங்களுக்குக் கீழ்ப்படிய வேண்டுமென்று எதிர்பார்ப்பது நியாயமா?" என்றேன் வேடிக்கையாக.



அவர் பதில் சொல்லாமல் சிரித்துக்கொண்டே போய் விட்டார்.

பிஜித்தீவில் மட்டும் மூவாயிரம் மைலுக்கு மேல் மோட்டாரில் பிரயாணம் செய்திருக்கிறேன். பெரும் பாலும் சுவாமிஜியுடன்தான். ஒரு முறை சுவாமிஜி தாவுவா என்ற ஊரில் ராம் நாயுடு என்பவர் வீட்டுக்கு அழைத்துச் சென்றார். இவர் அரிசி யந்திரசாலை வைத்திருக் கிறார். கரும்புப் பயிரும் உண்டு. இவர் வீட்டில்தான் எங்களுக்குச் சாப்பாடு.

தாம் திருவண்ணாமலையை அடுத்த ராஜபாளையம் என்ற ஊரைச் சேர்ந்தவர் என்றும், ராமராஜு என்ற தம் பெயரை, ராம் நாயுடு என்று இங்கு மாற்றிவைத்துக் கொண்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

என்னைப் பற்றி விசாரித்தார். நான் சொல்லிக் கொண் டிருக்கும்பொழுதே, அவர் கண்களிலிருந்து தாரை தாரை யாகக் கண்ணீர் வடிந்தது. தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்து விட்டார். பின்னர் சுவாமிஜி கேட்டபொழுது, திருவண்ணா மலையில் அவர் எனது பெரிய தகப்பனாரிடம் சமையல் வேலை செய்து வந்ததாகவும், எனது தகப்பனாரையும் அவருக் குத் தெரியுமென்றும், நான் சிறு குழந்தையாக இருந்த பொழுது என்னை எடுத்துச் சீராட்டி இருப்பதாகவும், ஒரு நாள் எங்கள் பெரிய தகப்பனார் கோபத்தில் அவரை அடித்ததாகவும், இலை வாங்குவதாகச் சொல்லி வெளியே வந்த அவர், திரும்பிச் செல்ல மனமில்லாமல், சங்காணிக ளிடம் அகப்பட்டு, பிஜிக்கு வந்து சேர்ந்தாகவும் கூறினார்.

எனது குடும்பத்தில் எல்லோருடைய பெயரும் அவ ருக்குத் தெரிந்திருந்தது. அவருடைய சகோதரர்களில் சிலரையும் எனக்குத் தெரியும். எனது பெரிய தகப்பனா ருக்குக் கோபம் வந்தது நல்லதாயிற்று. இல்லையானால்,

பாவம் ராமராஜு தமது வாழ்க்கை முழுவதும் சமையற் காரராகவே இருந்திருக்கக் கூடும்!

பிஜித்தீவுக்கு வந்து ஐந்தரை மாதங்களாயின. பெரும் பாலும் சுவாமிஜியுடன்தான் தங்கியிருந்தேன். சுவாமிஜி



சாது சாமி

தமிழ் இலக்கியத்தில் ஆர்வமுள்ளவர். கணக்கில் நிபுணர். சங்கீதத்தில் நல்ல ஞானமுண்டு. இங்கிலாந்தில் நடை பெற்ற சர்க்கரைத் தொழில் மகாநாட்டிற்கு மகா சங்கத்தின் பிரதிநிதியாகச் சென்றுர். உலகத்தின் பல



பகுதிகளில் சுற்றுப்பிரயாணம் செய்திருக்கிறுர். எதையும் உறுதியுடன் செய்யும் பேராற்றல் படைத்தவர். எல்லோ ரையும் சமமாக நடத்தும் பெரியார்.

சுவாமிஜியும் அவரது பக்தர்களும் காட்டிய அன்பை யும் செய்த பேருதவியையும் ஒருபொழுதும் மறக்க முடியாது.

சூவாவில் கப்பலேற வேண்டும். நந்தியிலிருந்து சுவாமிஜி சூவாவுக்கு என்னை அழைத்துச் சென்றுர். புறப்படுவதற்கு முன், மோட்டாரில் ஏறி உட்கார்ந்ததும், வயது முதிர்ந்த சாது சாமி என் அருகில் வந்து, கண்களில் நீர் ததும்ப, கூப்பிய கைகளுடன், "நாங்கள் தெரிந்தோ தெரியாமலோ, குற்றங்குறைகள் செய்திருந்தால் தயவு செய்து மன்னிக்க வேண்டும்." என்று தழுதழுத்த குரலில் கூறிஞர். எனது உடம்பு சிலிர்த்தது. பேச நா எழவில்லை. 'கண்ணற்ற' இத் தீவினிலும், இந்தியாவின் உன்னதப் பண்பாட்டை நினைவூட்டி நின்றுர் சாது சாமி.

சூவா துறைமுகத்தில் கப்பல் ஏறினேன். இரவு ஒன்பது மணி. நல்ல நிலவு. குளிர்ந்த காற்று வீசியது. குடும்பத்துடன் சில அன்பர்கள் வழியனுப்ப வந்திருந்தனர்.

டாக்டர் கோபாலன் உள்ளமுருக விடை கொடுத்தார்.

சுவாமிஜி அன்புடன் ஆசீர்வதித்தார்.

இவ்வளவு அன்பும் ஆசியும் கிடைத்தது ஆண்டவன் அருளாலே!

# கானடா

பிஜித்தீவின் தலைநகரான சூவாவிலிருந்து ஔரங்கி என்ற கப்பலில் கானடாவுக்குப் புறப்பட்டேன்.

ஔரங்கி பழைய கப்பல். சுமார் பதினெட்டாயிரம் டன் எடையுள்ளது. இந்தக் கப்பல் ஆண்டுக்கு ஐந்து முறை கானடாவிலிருந்து ஆஸ்திரேலியா சென்று, பிறகு கானடாவுக்குத் திரும்பும்.

கானடாவுக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் மத்தியில் இருக்கிறது பிஜித்தீவு. இடையிலிருக்கும் பிஜித்தீவிலிருந்து கானடாவுக்கோ அல்லது ஆஸ்திரேலியாவுக்கோ கப்பலில் இடம் கிடைப்பது மிகவும் கஷ்டம். ஆஸ்திரேலியாவிலுள்ள கப்பல் கம்பெனிக்கு எழுதிக் கேட்டபொழுது பதினெட்டு மாதம் வரையில் கப்பலில் இடமில்லை என்று சொல்லிவிட்டார்கள். தற்செயலாக, மூன்றாவது வகுப்புப் பிரயாணி ஒருவர் கடைசி நேரத்தில் தமது பிரயாணத்தை ரத்து செய்ததால், எனக்கு இடம் கிடைத்தது.

கப்பலில் இருந்த அத்தனை பிரயாணிகளும் வெள்ளைக்காரர்கள். நான் ஒருவன்தான் இந்தியன்.

மூன்றாவது வகுப்பில் இருந்த பெரும்பாலான பிரயாணிகள் ஆஸ்திரேலியாவிலிருந்து, கானடாவுக்கும் அமெரிக்காவுக்கும் குடியேறச் செல்கிறார்கள். இவர்கள் கிழக்கு ஐரோப்பாவிலிருந்து ஆஸ்திரேலியாவில் குடியேறிய அகதிகள். ஒன்று அல்லது இரண்டு ஆண்டு ஆஸ்திரேலியாவில் வேலை செய்து, கப்பல் பிரயாணத்துக்கு



வேண்டிய பணம் சேர்த்த பின்னர் கானடா, அமெரிக்காவை நோக்கிப் புறப்படுகின்றனர். "ஆஸ்திரேலியாவில் வாழ்க்கை பிடிக்கவில்லை. அந்த நாட்டில் பண்பாடு மிகக் குறைவு." என்றார் இவர்களில் ஒருவர்.

இவர்கள் எல்லோருமே ருஷ்யாவைப் பலமாகத் தாக்கிப் பேசினர். கம்யூனிஸத்துக்கு விரோதமாக எவ்வளவுக்கு எவ்வளவு உரக்கப் பேசுகிறார்களோ, அவ்வளவுக்கு அவ்வளவு அமெரிக்காவில் அதிகச் சலுகை கிடைக்கும் என்பது இவர்களுக்குத் தெரியும்.

எட்டாவது நாள் காலையில் கப்பல் ஹாவாய்த் தீவின் தலைநகரான ஹொனலுலுவை அடைந்தது.

பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகு ஹொனலுலுவைக் கண்டது மகிழ்ச்சியைக் கொடுத்தது. எவ்வளவு மாறுதல்! ஹொனலுலுவின் பழைய அழகும், அமைதியும் மறைந்து வருவதாகத் தோன்றியது. சுறுசுறுப்பான அமெரிக்க நகரமாக ஹொனலுலு மாறிவிட்டது என்றுதான் கூற வேண்டும். ஹாவாயர்களின் பாட்டு, நடனம் முதலியன எல்லாம் முற்றிலும் வியாபார முறையில் வந்துவிட்டன.

கப்பல் பத்து மணி நேரம் நின்றது. பின்னர் கானடாவை நோக்கிப் பயணமானோம்.

கப்பலில் எனக்கு ஒரு தந்தி கிடைத்தது. "தங்குவதற்கு இடம் ஏற்பாடு செய்திருக்கிறேன். கப்பலடியில் சந்திக்கிறேன்." என்பது தந்திச் செய்தி. இதனை அனுப்பியவர் கானடாவில் வான்கூவர் நகரத்திலுள்ள தமிழர் மூர்த்தி.

பிஜித்தீவில் தங்கியிருந்தபொழுது, அங்கிருக்கும் உத்தமர்களில் ஒருவரான குப்புசாமி சாது அவர்களிடம் கானடா செல்லும் விஷயமாகப் பேசிக்கொண்டிருந்தேன்.

அப்பொழுது அவர், கானடாவில் உள்ள மூர்த்திக்குக் கடிதம் எழுதுவதாகக் கூறினர். ஆனல் மூர்த்தியிட மிருந்து இத்தகைய அன்பை எதிர்பார்க்கவில்லே.

கப்பல் வான்கூவரை அடைந்தது. மூர்த்தி கப்பலடிக்கு வந்திருந்தார். வெளிநாடுகளில் இந்தியர்களை அடையாளம் கண்டுபிடிப்பது சுலபம் அல்லவா? அந்நிய நாட்டினர்ப் பதிவு வேலைகள் முடிந்ததும், என்னை நேராக வான்கூவரி லுள்ள சீக்கியர் கோயிலுக்கு அழைத்துச் சென்றார். அங்கு விருந்தினர் தங்குவதற்காக அமைக்கப் பெற்றிருக் கும் அறைகளில் ஒன்றை, நான் தங்குவதற்காக மூர்த்தி ஏற்பாடு செய்திருந்தார்.

கானடா தேசம், அமெரிக்க ஐக்கிய நாடுகளை விட நிலப்பரப்பில் பெரிது. கானடாவில், கிழக்கு மேற்காக ஒரு கோடியிலிருந்து மறு கோடிக்குச் செல்ல சுமார் நாலாயிரம் மைல் பிரயாணம் செய்ய வேண்டும். இதற்கு இரண்டு ரயில் பாதைகள் உண்டு. ஒன்று அரசாங்கத்தார் நடத்தும் கானடியன் நேஷனல் ரயில்வே. மற்றென்று தனிப்பட்ட கம்பெனியைச் சேர்ந்த கானடியன் பசிபிக் ரயில்வே.

கானடாவின் ஜனத்தொகை சுமார் ஒன்றரைக் கோடி. ஐந்து மாகாணங்களாகப் பிரித்திருக்கிறார்கள் இந்த நாட்டை. மேற்குக் கரையிலுள்ள மாகாணத்துக்குப் பிரிட்டிஷ் கொலம்பியா என்று பெயர். பெரும்பாலான இந்தியர்கள் இந்த மாகாணத்தில்தான் வசிக்கிறார்கள். இந்த மாகாணத்தின் தலைநகரம் விக்டோரியா என்பது. பெரிய பட்டினம் வான்கூவர். இங்கே இருபத்தேழு நாடு களைச் சேர்ந்த மக்கள் குடியேறியிருக்கிறார்கள்.

சீனுவில் ஹாங்காங் நகரத்துக்குச் சென்ற சீக்கியர் களில் சிலர் முதன் முதலாக 1904-ஆம் ஆண்டு கானடா வில் குடியேறினர். 1910-ஆம் ஆண்டில் இங்கு வசித்த



இந்தியர்களின் தொகை ஐயாயிரத்து ஐந்நூறு. ஆனல் இன்று சுமார் இரண்டாயிரம் பேர்தான் இருக்கிறார்கள்.

1909-ஆம் ஆண்டு புதிய குடியேற்றச் சட்டம் வந்தது. அதுமுதல் இந்தியர்களைக் கானடாவில் குடியேற அனுமதிப் பதில்லே. ஆனல், அந்தக் குடியேற்றச் சட்டம் தனிக் கப்பல் களில் வருகிறவர்களைத் தடை செய்யவில்லை. யாரும் இம் மாதிரி வரமாட்டார்கள் என்பது அவர்கள் கருத்து. அந்தச் சட்டத்திலுள்ள இந்த ஷரத்தைப் பயன்படுத்திக்கொண்டு 1914-ஆம் ஆண்டு நூற்றுக்கணக்கான இந்தியர்கள் 'காமகாட்டா மாரு' என்ற ஜப்பானியக் கப்பலைத் தனியாக வாடகைக்கு அமர்த்திக்கொண்டு கானடா வந்தனர். அந்தக் கப்பலை அதிகாரிகள் துறைமுகத்துக்குள் வர விடாமல் சில காலம் நிறுத்தி, துன்புறுத்தி திருப்பி அனுப்பி விட்டனர். அதில் உயிர்ச் சேதமடைந்த இந்தியர் பலர்.

இந்தியா சுதந்திரமடைந்த பின்னர், மற்ற நாட்டின ரைப் போலவே இந்தியர்களும் குடியேற அனுமதிக்கப் படுகிறார்கள். இந்தியர்களின் விகிதாசாரம் ஆண்டுக்கு நூறு பேர்தான். ஏற்கெனவே கானடாவில் குடியேறி யுள்ள இந்தியர்களின் நெருங்கிய உறவினர்கள் புதிதாகக் குடியேறச் சலுகை காட்டப்பெறுகிறது.

இன்று கானடாவிலுள்ள இந்தியர்களில் ஒரு சிலர் தவிர அனைவரும் பஞ்சாபியர்—அதிலும் சீக்கியர். பெரும் பாலோர் மர ஆலைத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். சிலர் விவசாயம் செய்கிறார்கள். இந்தியப் பெண்கள் சுமார் முந்நூறுபேர் இருக்கலாம். சில இந்தியர் கானடா நாட்டுப் பெண்களை மணந்துள்ளனர். சிலர் கானடாவிலேயே பிறந்து வளர்ந்த இந்தியப் பெண்களை மணந்திருக் கின்றனர். விமானத்தில் தாய்நாடு சென்று, மணமுடித்து,

ஒரு வாரத்திற்குள் மனைவியையும் விமானத்தில் உட
னழைத்து வரும் இந்தியரும் உண்டு.

முதன் முதலாகக் குடியேறிய இந்தியர் பலருக்கு
ஆங்கிலம் எழுதப் படிக்கத் தெரியாது. அரை
குறையாகப் பேசத் தெரியும். பஞ்சாபியரில் சிலர்தான்
தாடியும் மீசையும் தலைமுடியும் வளர்த்திருக்கின்றனர்.
பெரும்பாலோர் தாடி மீசை வைத்துக்கொள்வதில்லை.
காலத்துக்கேற்ப தலைமுடி வெட்டிக்கொள்கின்றனர்.
முதன் முதலாகக் குடியேறிய ஒரு சீக்கியர், ஒரு மர
ஆலையில் வேலை செய்த இந்தியத் தொழிலாளரிடம்
சமையல் வேலை செய்துவந்தார். அவர் வேலை செய்து வந்த
ஆலையை, 1930-ல் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார
நெருக்கடியின் காரணமாக மூடவேண்டிய நிலைமை ஏற்பட்
டது. அப்பொழுது இந்தச் சமையற்காரரும், அதே ஆலை
யில் குமஸ்தாவாக இருந்த மற்றொரு சீக்கியரும் சேர்ந்து,
மற்றும் பல இந்தியத் தொழிலாளரையும் கூட்டாகச்
சேர்த்துக்கொண்டு, அதே மர ஆலையைக் குத்தகைக்கு
எடுத்து நடத்தினார்களாம். உழைப்பாலும், யுத்தத்தால்
ஏற்பட்ட லாபத்தாலும் கிடைத்த பெருந் தொகையைக்
கொண்டு, அந்த ஆலையையே விலைக்கு வாங்கிக்கொண்டார்
களாம். அதோடு மற்றும் பல ஆலைகளையும் விலைக்கு
வாங்கினார்களாம்.

லாபம் அதிகமாகக் கிடைக்கவே, இந்தச் சமையற்
காரரும் குமஸ்தாவும் ஒன்று சேர்ந்து, கூட்டாகச் சேர்ந்த
எல்லா இந்தியர்களின் பங்கையும் வாங்கிக்கொண்டு அவர்
களை விலக்கிவிட்டார்களாம். கடைசியாக இந்தச் சமையற்
காரரும் குமஸ்தாவுமே பிரிந்துபோக வேண்டிய அளவுக்கு
லாபம் பெருத்துவிட்டது. பிரிந்ததன் பயன், இரண்டு
இந்தியக் கோடீஸ்வரர்கள்!



குமஸ்தாக் கோடீஸ்வரர் தமது லாபத்தை எல்லாம்
இந்தியாவுக்கு அனுப்பி சொத்து வாங்குகிறார் என்று
கேள்வியுற்றேன். அதனால் கானடா நாட்டு மக்களுக்கு
அவரைப் பிடிக்கவில்லையாம்.

சமையற்காரக் கோடீஸ்வரர் தமது லாபத்தில் பெரும்
பகுதியை, பிரிட்டிஷ் கொலம்பியாவில் எல்லா சமூகத்தின
ருக்கும் பயன் படும்படியாக வைத்தியசாலை நிறுவுதல்
போன்ற தர்மங்களுக்கு வாரி வழங்குகிறார். கானடா மக்கள்
அவரைப் போற்றுகிறார்கள். அவர் ஆலை இருக்குமிடத்
துக்கு பால்டி என்று பெயர். தபால் நிலையத்தின் பெயரும்
பால்டி. பாஞ்சாலத்தில் இந்தச் சமையற்காரக் கோடீஸ்
வரர் பிறந்த கிராமத்தின் பெயர் பால்டி!

சிறு மர ஆலைகள் வைத்திருக்கும் இந்தியர் சுமார்
இருபது பேர் இருக்கலாம்.

மர ஆலைகளில் ஒப்பந்தம் பேசிக்கொண்டு சொந்த
மாக லாரிகள் வைத்து ஓட்டி நல்ல பொருள் சம்பாதிக்கும்
இந்தியர்களும், மரத்தூளை வியாபாரம் செய்து பொரு
ளீட்டும் இந்தியர்களும் உண்டு.

சுமார் நானூறு இந்தியர்கள் நாட்டின் பல இடங்
களிலுள்ள மர ஆலைகளில் தொழிலாளராக வேலை செய்
கின்றனர். மர ஆலைகள் ஆண்டு முழுதும் வேலை செய்ய
இயலாததால், இவர்களுக்கு ஆண்டு முழுதும் இந்த வேலை
கிடைக்காது.

இந்தத் தொழிலாளருக்கு மணி ஒன்றுக்குக் கூலி சுமார்
ஒன்றரை டாலர்—எட்டு மணி நேர வேலைக்கு தினந்தோறும்
பன்னிரண்டு டாலர். வாரத்துக்கு ஐந்து நாள் வேலை.
அதிக நேரமோ அல்லது விடுமுறை நாளிலோ வேலை
செய்தால் சம்பளம் கூடுதலாகக் கிடைக்கும். ஒரு டாலரின்
மதிப்பு சுமார் ஐந்து ரூபாய்.

இந்த ஆலைகள் ஒரே இடத்தில் வேலை செய்யமாட்டா. எங்கெங்கு மரம் கிடைக்கிறதோ—எங்கெங்கு மரங்களைத் தண்ணீர் மார்க்கமாகக் கொண்டுவர வசதி உண்டோ, அந்த மாதிரி இடங்களுக்கு, மர ஆலைகளையே நகர்த்திச் செல்வார்கள். இதற்கு முகாம் (Camp) என்று பெயர்.

ஒவ்வொரு முகாமிலும் நாற்பது முதல் நூறு வரை இந்தியர்கள் ஒன்றாகச் சேர்ந்திருப்பார்கள். இவர்கள் வசிப்பதற்கு நல்ல மர வீடு கட்டி, அதில் கட்டில், மெத்தை, மேஜை முதலிய வசதிகளுடன் ஒவ்வொரு அறை கொடுத்திருந்தார்கள். பனிக்காலத்தில் குளிர் அதிகமாய் இருக்குமாதலால், கட்டிடம் முழுதும் மின்சார மூலம் போதுமான வெப்பம் பரவச் செய்வார்கள். ஸ்நானத்துக்கும் மற்றும் எல்லா சௌகரியங்களுக்கும் நல்ல ஏற்பாடுகள் செய்யப் பெற்றிருந்தன. இதற்குத் தொழிலாளர் கொடுக்கவேண்டிய வாடகை மாதம் ஒன்றுக்கு இரண்டு டாலர்தான்!

இந்தியர்களைப் போலவே, கானடாவில் உள்ள வெள்ளைக்காரரில் சிலரும் இந்த மர ஆலைகளில் வேலை செய்கிறார்கள். அவர்களுக்குத் தனி விடுதி. இந்தியத் தொழிலாளர்களுக்கும், வெள்ளைக்காரத் தொழிலாளர்களுக்கும் எந்த விதமான வித்தியாசமும் கிடையாது. சாப்பாட்டு வித்தியாசத்தினாலேயே தனியாகப் பிரித்திருக்கிறார்கள்.

இந்தியர்கள் சாப்பிடுவது இந்தியச் சாப்பாடுதான். அவர்கள் விடுதியிலேயே பெரிய சமையலறையும் சாப்பிடும் இடமும் உண்டு. இரண்டு அல்லது மூன்று இந்தியர்களைச் சமையற்காரராக வைத்திருக்கின்றனர். மற்ற தொழிலாளர் பெறும் ஊதியத்தைப் போலவேதான் இந்தச் சமையற்காரர்களுக்கும். சாமான்களை மொத்தமாக வாங்குவதால் மலிவான விலைக்குக் கிடைக்கிறது. மொத்தச் செலவை ஈவு செய்துகொள்கிறார்கள். இந்த மாதிரியான விடுதியில்,



ஓர் இந்தியத் தொழிலாளருக்குச் சாப்பாட்டுக்காக மாதம் வரும் ஈவுத் தொகை சுமார் நாற்பத்தைந்து டாலர்தான்!

இது தவிர, பாலுக்கும், மதுபான வகைகளுக்கும், உடைக்கும் ஆகும் செலவு வேறு. சில தொழிலாளர்கள் சொந்த உபயோகத்துக்கு மோட்டார் வைத்திருக்கின்றனர். ஒரு முறை ஓர் இந்தியத் தொழிலாளர், தமது வீட்டுக்கு அழைத்துச் செல்வதற்காக அருகிலுள்ள ரயில் நிலையத்துக்கு வந்து என்னைச் சந்தித்தார். பின்னர் மோட்டாருக்கு அழைத்துச் சென்றார். அவருடைய மோட்டார், கானடாவிலேயே மிக விலையுயர்ந்த மோட்டார்களில் ஒன்றான காடிலாக்!

வான்கூவரிலும், விக்டோரியாவிலும் பெரிய குருத்துவாராக்கள் இருக்கின்றன. குருத்துவாரா என்பது சீக்கியர் கோயில்.

குருநானக் சீக்கியர்களின் மதகுரு. நானக்கின் பிறந்த நாளும், குரு கோவிந்தர் போன்ற சீக்கிய சமூகத்துப் பெரியார்களின் பிறந்த நாட்களும் விமரிசையாகக் கொண்டாடப் பெறும். வான்கூவரிலும் விக்டோரியாவிலும் கொண்டாடப் பெறும் இத் திருநாட்களுக்குப் பிரிட்டிஷ் கொலம்பியாவின் எல்லாப் பகுதிகளிலுள்ள சீக்கியரும் வருவார்கள். அவர்கள் எல்லோருக்கும் கோயிலில் இலவசச் சாப்பாடு. இந்தச் சாப்பாடு ஒவ்வொரு ஆண்டிலும் ஒவ்வொருவர் உபயம்.

சீக்கியர் கோயிலில் விக்கிரகம் கிடையாது. அவர்களுடைய கிரந்தத்தை-அதாவது அவர்களுடைய வேதப் புத்தகத்தை—பட்டாடையால் மூடி, அலங்கரித்த மேடைமீது வைத்திருப்பார்கள். கிரந்தத்தை வாசிப்பவருக்குக் கிரந்தி என்று பெயர். அநேகமாக இவரை இந்தியாவிலிருந்து வரவழைப்பார்கள். தினந்தோறும் கிரந்தம் படிப்பது இவர்

வேலை. வாரந்தோறும் விடுமுறை நாளில், இவர் கோயிலில் வகுப்பு நடத்துவார். சிறு குழந்தைகள் வகுப்புக்குச் செல்வார்கள். அவர்களுக்குத் தாய்மொழி கற்பிப்பார். தாய்மொழியில் பக்திப் பாடல்களையும் பயிற்றுவிப்பார்.



வான்கூவரிலுள்ள குருத்துவாரா

இம்மாதிரி பாடுவதில் தேர்ச்சியுற்ற சிறுவர் சிறுமியர், திருநாட்களில் கூட்டம் கூடும்பொழுது, இசை பாடி பெற்றோர்களையும் மற்றவர்களையும் மகிழ்விப்பார்கள்.

விருந்தினர்கள் தங்குவதற்காக இந்தக் குருத்துவாராக் களில் சில அறைகள் இருக்கின்றன. நல்ல சமையலறை ஒன்றும் இருக்கிறது. கோயிலின் ஒரு பகுதியில் அவர்கள்



சங்கத்தின் (Khalsa Diwan Society) காரியாலயம் இருக்கிறது.

வான்கூவரிலுள்ள இந்தச் சங்கம் 1909-ல், குருத்து வாரா கட்டப் பெற்ற ஆண்டிலேயே ஆரம்பிக்கப்பெற்றது. இதற்கு ஐந்து கிளைகள் இருக்கின்றன. கானடாவில் பெரும்பாலான இந்தியர்களைக்கொண்ட சங்கம் இது ஒன்றுதான்.

திருநாட்களிலே கோயிலில் எல்லோரும் ஒன்றுகூடி கிரந்தம் படிக்கக் கேட்பார்கள். கிரந்திக்கு அன்றுதான் பெருநாள். பக்கத்து ஊரிலுள்ள குருத்துவாராக் கிரந்தி களும் அன்று வருவார்கள். காலை முழுதும் இந்தக் கிரந்தி கள் படிப்பார்கள். பிறகு மணிக்கணக்காக வியாக்கியானம் செய்வார்கள்.

சாப்பாட்டுக்குப் பிறகு, சமூகத் தலைவர்கள் பிரசங்கம் செய்வார்கள். அப்பொழுது பார்த்தால் ஒவ்வொருவருமே நமக்குத் தலைவராகத் தோன்றும். சீக்கியர்களில் பல கட்சிகள் உண்டு. அவற்றில் முக்கியமானவை இரண்டு. ஒன்று கோயிலில் அதிகாரத்திலிருக்கும் கட்சி; மற்றொன்று அதற்கு எதிர்க்கட்சி.

பிரசங்கங்கள் காரசாரமாயிருக்கும். கூட்டத்தில் ஆண்கள் ஒருபுறமும், பெண்கள் ஒருபுறமும் அமர்ந் திருப்பார்கள். பெண்கள் இந்தப் பிரசங்கங்களில் சிறிதும் சிரத்தை காட்டாமல், மற்றப் பெண்களுடன் ஊர் விஷயங் களைப் பற்றிப் பேசிக்கொண்டிருப்பார்கள்.

தலைவர்களின் பிரசங்கங்கள் சில சமயங்களில் மணிக் கணக்காக நடைபெறும். எவ்வளவுக் கெவ்வளவு உரக்கப் பேசுகிறார்களோ, அவ்வளவுக்கவ்வளவு ஆதரவு அதிக மாகக் கிடைக்கும். எந்த விஷயத்தையும் ஓட்டுக்கு

விடுவதில்லை. எந்தக் கட்சியினருக்குப் பலமான ஆரவாரம் கிடைக்கிறதோ அதைக் கொண்டுதான் அடுத்த ஆண்டுக்குத் தலைவரைத் தேர்ந்தெடுப்பார்கள். உடனே தலைவர் தமது நிர்வாக சபை அங்கத்தினர்களின் பெயர்களை அறிவிப்பார். பிறகு எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து கிரந்தத்தைத் தொழுது வழிபடுவார்கள்.



சீக்கியப் பெண்டிர் ரொட்டி தயாரித்தல்

கோயிலின் நடைமுறைச் செலவுக்காக ஒவ்வொருவரும் ஒன்றேகால் டாலர் பணம் கொடுப்பது வழக்கம்.



பணம் கொடுத்தவர்களின் பெயர்களை எல்லாம் காரியதரிசி படித்து முடிக்க, சில சமயங்களில் அரை மணி நேரம் ஆகலாம்.

இந்தத் திருநாளில் நடைபெறும் கூட்டங்களை, ஒவ்வொரு ஆண்டும் வான்கூவர் நகரத்துப் பத்திரிகைகள் படம் பிடித்துப் பிரசுரிப்பது வழக்கம்.

பிரிட்டிஷ் கொலம்பியாவில் ஒரு சிறிய ஊரில் இந்தியர் ஒருவர் மேயராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றிருக்கிறார். இதே இந்தியர், பிரிட்டிஷ் கொலம்பியா பார்லிமெண்டுக்குத் தொழிற் கட்சியின் சார்பில் போட்டியிடப் போவதாகக் கேள்விப்பட்டேன்.

கானடா இந்தியா சங்கத்தின் தலைவர் கர்தார் சிங். இவர் சிறந்த பண்பாடு உடையவர். இந்தியாவிலேயே பொதுப் பணியில் ஈடுபட்டிருந்தார். கானடா இந்தியர்களின் முன்னேற்றத்துக்காகப் பாடுபடுகிறவர்களில் முதன்மையானவர். பல ஆண்டுகள் 'இந்தியாவும் கானடாவும்' என்ற பத்திரிகையை வெளியிட்டுவந்தார். அப்பத்திரிகை ஒரு பகுதி ஆங்கிலத்திலும் ஒரு பகுதி பஞ்சாபியிலும் வெளிவந்தது.

கான்டாவில் பிறந்த இந்தியர்கள், அநேகமாக எல்லோருமே படித்தவர்கள். இரண்டு இந்தியப் பெண்கள் வைத்தியக் கல்வி பயின்று வந்தனர்.

கானடாவில் வசிக்கும் இந்தியர்களில் மூர்த்தி ஒருவர் தான் தமிழர். அவரை 1951-ஆம் ஆண்டின் இறுதியில் நான் சந்தித்தபொழுது அவருக்கு வயது இருபத்தொன்பது. அவர் அங்கு வந்து ஐந்து ஆண்டுகளாயின.

மூர்த்தியின் முழுப்பெயர் ஆதிமூல மூர்த்தி முதலியார். இவர் தமிழ் நாட்டில் கோயமுத்தூர் நகரத்துக்கு

அருகிலுள்ள சிறு கிராமத்தில் பிறந்தவர். இவர் இரண்டு வயதுக் குழந்தையாக இருந்தபொழுதே, இவருடைய பெற்றோர் பிஜித்தீவுக்குச் சென்று குடியேறினர்.

மூர்த்தியின் பெற்றோர் சாதாரண நிலையிலுள்ள விவசாயிகள். கஷ்டப்பட்டு மூர்த்தியைப் படிக்க வைத்தனர். பிஜித்தீவில் உயர்தரக் கல்வி வசதி கிடையாது.

பிஜித்தீவுக்கும் கானடாவுக்கும் உள்ள தூரம் சுமார் நாலாயிரத்து ஐந்நூறு மைல். பிஜித்தீவிலிருந்து அடிக்கடி கப்பல்கள் கானடாவுக்குச் சாமான் ஏற்றிச் செல்லும். இவை சில பிரயாணிகளையும் ஏற்றிச் செல்லும்.

இம்மாதிரி, கார்ப்பெண்டர் என்ற ஆங்கிலக் கம்பெனியாருக்குச் சொந்தமான லான்சிங் (Lansing) என்ற கப்பலில் ஒரு வேலைக்காரனாக 1946-ஆம் ஆண்டில் மூர்த்தி கானடாவுக்குச் சென்றார். கானடா சேர்ந்ததும், கப்பல் கம்பெனியார் இந்தக் கப்பலைச் சீன அரசாங்கத்துக்கு விற்றுவிட்டார்கள்.

மறுபடியும் கப்பல் வசதி ஏற்பாடு செய்யும்வரையில் இந்தக் கப்பலில் வேலை செய்தவர்கள் எல்லோரும், கப்பல் கம்பெனியார் செலவிலேயே வான்கூவரில் தங்கினர். கப்பல் வேலைக்காரரில் பெரும்பாலோர் இந்தியர். இவர்களைக் கப்பல் கம்பெனியார் சரிவர நடத்தவில்லை என்று, இந்த இந்தியர்களின் சார்பாக மூர்த்தி கப்பல் கம்பெனியார் மீது ஒரு வழக்கு தொடர்ந்தார். வருமானமில்லாமலும், காலவரையறையில்லாமலும் காத்திருக்கும் கப்பல் வேலைக்காரருக்குப் போதிய நஷ்ட ஈடு கொடுக்கவேண்டும் என்று மூர்த்தி வாதாடினார். இவருடைய நியாயமான கோரிக்கைகளுக்குச் செவி சாய்ப்பதற்குப் பதிலாக, மூர்த்தியை எப்படியாவது பிஜிக்கு அழைத்துச் சென்று, அங்கு தங்களுடைய செல்வாக்கால் மூர்த்தியை அடியோடு



நசுக்கி விடவேண்டுமென்று கப்பல் கம்பெனியார் நினைத்தார்களாம்.

மூர்த்திக்கு உடற்பயிற்சியிலும், கனத்த இரும்பை மேலே தூக்கி உயர்த்துவதிலும் (Weight Lifting) ஆர்வமுண்டு. பிஜியில் இருந்தபொழுதே இவருக்கு இதில் சிறிது பயிற்சியும் உண்டு. எனவே, வான்கூவர் நகரத்திலுள்ள பிரபலமான 'வெஸ்டர்ன் ஜிம்னேசியம்' என்ற உடற்பயிற்சி நிலையத்தில் சேர்ந்து, கானடாவில் மாணவனாக ஆறு மாதம் தங்குவதற்கு அந்நியர்ப் பதிவு அதிகாரிகளிடம் விஸா பெற்றார்.

இந்த விஸா இவருக்குக் கிடைத்தபடியால், கப்பல் கம்பெனியார் இவருக்கு எந்தவிதமான இடையூறும் செய்யமுடியாமற் போயிற்று.

முதல் ஆறு மாத காலம் முடிந்தது. இரண்டாவது ஆறு மாதம் தங்க விஸா பெற்றார். மூன்றாவது ஆறு மாதத்துக்கு விஸாவை நீடிக்கும்படி கேட்டபொழுது அந்நியர்ப் பதிவு அதிகாரிகள் மறுத்து விட்டனர். அது மட்டுமல்ல; நாட்டை விட்டு உடனே வெளியேறும்படியும் உத்தரவிட்டனர்.

கானடாவில் தங்கிய ஓர் ஆண்டுக்குள் மூர்த்தியின் புகழ் பரவிற்று. முந்நூறு பவுண்டு எடையை உயரத் தூக்கி நிறுத்தி, பிரிட்டிஷ் கொலம்பியாவின் கனமான எடை தூக்கும் வீரன் (Light Heavy Weight Champion Of British Columbia) என்னும் பட்டத்தைப் பெற்றார். இந்தப் பட்டத்தைத் தொடர்ந்து ஐந்து ஆண்டுகளாக வகித்துவந்தார்.

மூர்த்தியின் புகழ் அதிகமானதுபோலவே, அவருடைய கஷ்டமும் அதிகமாயிற்று. கானடாவிலுள்ள

இந்தியத் தலைவர்களும், பிற சமூகத்துத் தலைவர்களும், அந்நியர்ப் பதிவு அதிகாரிகளிடம் எவ்வளவோ சொல்லியும் கூட, அவர்கள் தங்கள் பிடிவாதத்தை விடவில்லை. மூர்த்தி நாட்டை விட்டு வெளியேறாமல், இவ்வாறு முயற்சி செய்தது அதிகாரிகளுக்கு ஆத்திரத்தை உண்டாக்கியது. எனவே மூர்த்தியின்மீது நாடு கடத்தும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

நிலைமை வர வர நெருக்கடியாயிற்று. மூர்த்தி, பெரிய விளையாட்டு மேடைகளில் கனமான இரும்பைத் தூக்கி, பதக்கங்களும் கோப்பைகளும் பெறும்பொழுது மக்கள் சந்தோஷ ஆரவாரம் செய்வர். அப்பொழுது அந்த விளையாட்டு நிர்வாகி பொதுமக்களைப் பார்த்து, "இந்த அருமையான இளைஞர் மூர்த்தியின் மீது நமது அரசாங்கம் நாடு கடத்தும் உத்தரவு பிறப்பித்திருக்கிறது. இந்த இளைஞர் நமது நகரத்துப் பிரஜையாக இருக்கவேண்டுமென்று விரும்புகிறீர்களா, அல்லது இவரை நாடுகடத்த வேண்டுமென்று விரும்புகிறீர்களா?" என்று கேட்பார். மக்கள் அனைவரும், "மூர்த்தி நமது நகரத்துப் பிரஜையாக இருக்க வேண்டும்." என்று ஒரேமுகமாகக் கூறுவார்களாம். அந்தச் சமயத்தில் மூர்த்தியின்மீது உள்ள நாடு கடத்தும் உத்தரவை ரத்து செய்யவேண்டுமென்று, மாகாண அரசாங்கத்துக்கும், கவர்னர் ஜெனரலுக்கும் எழுதப் பெறும் விண்ணப்பங்களில் கையெழுத்து வாங்குவார்களாம். பல ஆயிரக் கணக்கான மக்கள் இம் மாதிரி கையெழுத்துச் செய்தார்கள் என்று சில அன்பர்கள் மூலம் கேள்வியுற்றேன்.

வான்கூவர் நகரத்தில் ஒருவர்—அதிலும் ஆசிய நாட்டைச் சேர்ந்த ஒருவர்—தங்கள் ஊர்ப் பிரஜையாக இருக்க வேண்டுமென்று, ஆயிரக்கணக்கான மக்கள் கையெழுத்



திட்டு விண்ணப்பம் அனுப்பியது இதுவே முதன் முறை என்றும் கூறினார்கள்.

மக்களின் உணர்ச்சியை அரசாங்கம் மதித்தது. கவர்னர் ஜெனரல் தமது கவுன்சில் அங்கத்தினர்களுடன் யோசனை செய்து, மூர்த்தியின் மீது இருந்த நாடு கடத்தும் உத்தரவை ரத்து செய்து விட்டார்! மூர்த்தி இப்பொழுது கானடா தேசத்தின் பிரஜை!

உடற் பயிற்சியும், கனம் தூக்குவதும் மூர்த்திக்கு ஒரு பொழுது போக்கே தவிர, பிழைப்பு அல்ல. ஒரு சிறு தொழிற்சாலையில் உதவி மேஸ்திரியாக (Foreman) மூர்த்தி வேலை செய்கிறார். மணிக்கு ஒன்றே கால் டாலர் சம்பளம். தினமொன்றுக்குப் பத்து டாலர்—சுமார் ஐம்பது ரூபாய் சம்பாதிக்கிறார். விடுமுறை நாளில் வேலை செய்தால் இரட்டிப்புச் சம்பளம். இவர் மோட்டார் வைத்திருக்கிறார் என்று சொல்லவேண்டியதில்லை. என்னை வரவேற்க வந்த தினத்தில் அவர் வேலைக்குச் செல்லவில்லை. முன் பின் தெரியாத ஒருவனை வரவேற்று உதவி செய்வதற்காக அவர் தமது ஒரு நாள் வருமானத்தைத் தியாகம் செய்தார்.

கானடாவில் தங்கிய மூன்று மாதமும், மூர்த்தி காட்டிய அன்புக்கு எல்லையே இல்லை. சில முறை வெளியூர் செல்ல நேர்ந்தபொழுது, அடிக்கடி நூற்றுக் கணக்கான மைல் தூரத்தில் இருக்கும் எனக்கு டெலிபோன் செய்து, எனது நலனைக் குறித்து விசாரிப்பார்.

பல முறை, அவரே சமையல் செய்து எனக்குச் சாப்பாடு போட்டிருக்கிறார். ஒரு முறை அவர் வீட்டுக்குச் சென்றபொழுது, நகரத்தில் தலைமுடி வெட்டிக் கொள்ள ஒன்றரை டாலர் செலவாகிறது என்ற விஷயத்தைக் குறித்துப் பேசினோம். அப்பொழுது அவர் என்னை ஒரு நாற்காலியில் உட்கார வைத்து, வெள்ளைத் துணியால்

எனது உடம்பைப் போர்த்தி, கால் மணி நேரத்தில் முடி வெட்டி விட்டார். அங்கே, நண்பர்கள் ஒருவருக்கொருவர் இம்மாதிரி செய்து கொள்வது வழக்கமாம். எனது நன்றியைத் தெரிவிக்க, நானும் அவருக்கு முடி வெட்ட விரும்பினேன். அவர் அன்புடன் மறுத்துவிட்டார். எனது 'திறமை'யில் கொஞ்சம்கூட நம்பிக்கையில்லாதவர்களில் மூர்த்தியும் ஒருவர்.

மூர்த்திக்கு இந்திய சங்கீதத்தில் ஞானமும் பயிற்சியும் உண்டு. வான்கூவரில் மக்கள் சங்கம் (Folk Society) என்ற பிரபலமான கலைவளர்ச்சிச் சங்கத்தில் மூர்த்தி நிர்வாக சபை அங்கத்தினர். பண்டித ஜவாஹர்லால் நேரு வான்கூவர் சென்றபொழுது அமைக்கப் பெற்ற வரவேற்புக் குழுவில் மூர்த்தியும் ஓர் அங்கத்தினர்.

மூர்த்தியின் தமிழ் அகராதியில் பத்து வார்த்தைகளுக்கு மேலிராது. ஆனால் தமிழைக் கரைகண்ட புலவர்களின் தமிழ் அபிமானத்துக்கு மூர்த்தியின் தமிழ் அபிமானம் குறைந்ததல்ல. அந் நாட்டுக்குச் செல்லும் தமிழன்பர்களை உபசரிப்பதில் மூர்த்திக்குத் தனி ஆர்வம்.

பிஜித்தீவை அவர் மறக்கவில்லை. பெரும் புயல் அடித்து, ஆயிரக்கணக்கான மக்கள், வீடு, வாசல், ஆடைகளையெல்லாம் இழந்துத் தவித்தபொழுது, மூர்த்தி கானடாவிலிருந்து ஏராளமான துணிமணிகளைப் பிஜித்தீவுக்கு விமான மூலம் அனுப்பினார்.

மூர்த்தியின் முழுப் பெயர் ஆதிமூலமூர்த்தி யல்லவா? மூர்த்திக்கு நெருங்கிய நண்பர்கள் இவரை ஆதி என்று பிரியமாக அழைப்பார்கள். ஆதியின் காதலி அரா என்னும் அம்மையார். இவர் எஸ்தோனியா தேசத்தைச் சேர்ந்தவர். எஸ்தோனியா தேசம், ஐரோப்பாவிலுள்ள



ருஷ்ய நாடுகளில் ஒன்று. யுத்தத்தால் ஏற்பட்ட மாறுதல்களால், இவர் ஓர் அகதியாக கானடாவுக்கு வந்தார். செஞ்சிலுவைச் சங்கத்தில் மருத்துவத் தாதியாக (Nurse) வேலை செய்கிறார். ஆதியும் அராவும் இப்பொழுது மணமாகி இல்லற வாழ்க்கை நடத்தி வருகின்றனர்.

அமெரிக்காவுக்குச் சென்ற பின்னர், வான்கூவர் நகரத்தின் முன்னாள் மேயரான டாக்டர் டெல்போர்டு தம்பதிகளுக்கு அவர்களுடைய அன்புக்கும் உபசாரத்துக்கும் நன்றி செலுத்திக் கடிதம் எழுதினேன். அதற்கு அவர்கள் எழுதிய பதிலில், ஆதியையும் அராவையும் பற்றி ஒரே ஒரு வாக்கியம் எழுதியிருந்தார்கள். அது, இதுதான்:-

"ஆதியும் அராவும் எங்கள் நகரத்துப் பிரஜைகளாக இருப்பதில், நாங்கள் பெருமையும் மகிழ்ச்சியும் கொள்ளுகிறோம்."

பொதுவாக, கானடாவிலுள்ள இந்தியர்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்தது. சில இந்தியர் வீடுகளுக்குச் சென்றிருக்கிறேன். கானடாவிலுள்ள வெள்ளைக்காரர்களுடைய நாகரிகமான புதிய வீடுகளுக்கும் இவர்களுடைய வீடுகளுக்கும் வித்தியாசமே இராது.

ஆண்களும் பெண்களும் மேனாட்டு உடையே அணிகின்றனர். ஆனால் கோயில்களுக்கும் விசேஷங்களுக்கும் செல்லும்பொழுது இந்தியப் பெண்கள் மேனாட்டு உடையணிந்து ஒரு பட்டுத் தாவணியைத் தலையிலும் உடம்பிலும் போர்த்திக் கொள்கின்றனர்.

எத்தனை தலைமுறையானாலும், சாப்பாடு மட்டும் இந்தியச் சாப்பாடுதான். நல்ல ரொட்டி, மாமிசம், காய்கறி, தயிர்—எல்லாம் அசல் பஞ்சாபி உணவு. ஒரு முறை வான்கூவரிலுள்ள ஓர் இந்தியத் தலைவர் விருந்துக்கழைத்

தார். வேறு சிலரையும் அழைத்திருந்தார். மேஜையைச் சுற்றி அமர்ந்தோம். அருமையான பஞ்சாபி ரொட்டிகள் அடுக்கடுக்காக ஒரு தட்டில் மேஜையின் மத்தியில் வைக்கப் பெற்றிருந்தன. ஒவ்வொருவருக்கும் எதிரே நாலைந்து சிறு கிண்ணங்களில், பருப்பு, தயிர்வடை, காய்கறி முதலியவை வைக்கப் பெற்றிருந்தன. ரொட்டியை எடுத்து வைத்துச் சாப்பிட தட்டு கிடையாது. எப்படிச் சாப்பிட ஆரம்பிப்பது என்று மற்றவர்களையே பார்த்துக்கொண்டிருந்தேன். எல்லோரும் ஆளுக்கொரு ரொட்டியை எடுத்து இடதுகையில் வைத்துக்கொண்டு—அது கனமான பெரிய ரொட்டி—வலது கையால் அந்த ரொட்டியைச் சிறிது சிறிதாகப் பிய்த்துத் தங்களுக்கு விருப்பமான காய்கறிகளோடு சாப்பிட்டார்கள். நானும் அவர்களைப் போலவே சாப்பிட்டேன்.

சீக்கியர்களின் விருந்தோம்பல் பெரிதும் பாராட்டத் தக்கது. இந்தியாவிலிருந்து வருபவர்கள் எந்த மதத்தைச் சேர்ந்தவரானாலும் அன்புடன் வரவேற்று மிகச் சிறந்த முறையில் உபசரிப்பார்கள்.

கானடாவிலுள்ள இந்தியர்கள் இறந்தவர்களைப் புதைப்பதில்லை. எரித்துவிடுவார்கள். நமது நாட்டைப் போல் மயானத்தில் எரிப்பதில்லை. பெரிய எஃகுத் தொட்டியில் சவத்தை வைத்து மின்சாரத்தால் எரித்துவிடுவார்கள். இப்பொழுது கானடாவில் வெள்ளைக்காரர் சிலரும் பிரேதங்களை எரிக்க ஆரம்பித்திருக்கின்றனர். பிரேதத்தை எரிப்பதற்காக வான்கூவரில் ஒரு கம்பெனி இருக்கிறது. அவர்களுக்கு இப்பொழுது நல்ல வியாபாரம். இந்தியர்களிடம் மற்றவர்களைக் காட்டிலும் குறைவான தொகை வசூலிக்கிறார்கள். இதைப் பற்றி ஓர் இந்தியர் அந்தக் கம்பெனி நிர்வாகியைக் கேட்டபொழுது, "நீங்கள்தான் எங்களுக்கு வெகு நாளைய வாடிக்கைக்காரர்கள். எனவே



உங்களுக்குச் சலுகை காட்டுவது எங்கள் கடமையல்லவா?" என்றாராம்.

விக்டோரியா நகரம் தனித் தீவில் இருக்கிறது. அதற்கு வான்கூவர்த்தீவு என்று பெயர். இது பெரிய தீவு. வான்கூவரிலிருந்து இத் தீவில் நநாய்மோ என்ற ஊருக்குக் கப்பலில் சென்றேன். நான்கு மணி நேரப் பிரயாணம். மிகக் கவர்ச்சியான புதிய கப்பல். கப்பலின் மத்தியிலுள்ள உணவுச்சாலையில் இரண்டு பிரிவுகள். ஒன்றில், அங்குள்ள சிப்பந்தியிடம் பணத்தைக் கொடுத்து, நமக்குத் தேவையான உணவை வாங்கிச் சாப்பிட வேண்டும். மறு பிரிவில் சிப்பந்திகளே நமக்குப் பரிமாறுவார்கள்.

நநாய்மோவிலிருந்து போர்ட் ஆல்பர்னி, கௌச்சிகன், ஊபா, டங்கன் முதலிய இடங்களுக்குச் சென்றேன். இங் கெல்லாம் இந்தியர்கள் வசிக்கிறார்கள். இவர்கள் வேலை செய்யும் பல மர ஆலைகள் அவசியம் பார்க்கவேண்டியவை. பெரிய பெரிய மரங்களை ஆற்றில் கொண்டுவந்து, யந்திரங் களின் உதவியால் அவைகளைச் சிறு துண்டுகளாக அறுப்ப தைப் பார்க்கும்பொழுது பிரமிப்பாக இருக்கும். பெரும் பாலான வேலைகளைச் செய்வது யந்திரங்களே ஆகும். ஆட்கள் குறைவு. ஆட்கள் குறைவாக இருந்தாலும் அவர் கள் நல்ல தேகபலமுள்ளவர்களாக இருக்க வேண்டும். எவ்வளவு நல்ல சம்பளமோ அதற்கேற்ற கடுமையான வேலை. இந்த மர ஆலைகளில் இந்தியத் தொழிலாளரை விரும்பிச் சேர்க்கின்றனர்.

நல்ல குளிர் காலத்தில் இப் பகுதிகளில் பிரயாணம் செய்தேன். அசாத்தியமான பனி. இந்தப் பனி பெய்தால் மழையைப்போல பெய்யும். எல்லாம் பஞ்சு போன்ற பனி; தூய வெள்ளை நிறம். வீடு, வாசல், சாலை எல்லாம் பனி மயமாகிவிடும்.

பனி பெய்யும் சமாசாரங்களையும், சாலைகளின் நிலைமையையும், மோட்டார் ஓட்டுபவர்களுக்கு அவசியமான செய்திகளையும் ரேடியோ மூலம் தெரிவிப்பார்கள். அநேகமாக எல்லா மோட்டார்களிலும் ரேடியோ அமைத்திருப்பதால் மோட்டார் ஓட்டுபவர்கள், தாங்கள் பிரயாணம் செய்துகொண்டிருக்கும்போதே எல்லா விஷயங்களையும் தெரிந்து கொள்ளலாம்.

பனி பெய்து நின்ற சிறிது நேரத்துக்கெல்லாம் இதற்கென உள்ள இயந்திர சாதனங்கள் சாலைகளில் சென்று, அங்குள்ள பனியைச் சாலையின் இரு மருங்கிலும் ஒதுக்கிக் குவித்து விடுகின்றன. சாலை சுத்தமாகிறது, மறு பனி பெய்கிற வரையில். இம்மாதிரி குவிக்கப் பெற்ற பனிக் குவியல்கள் சில சமயம் ஆறடி உயரம்கூட இருப்பதுண்டு.

அப்பொழுதுதான் பெய்த பனி, சாலைகளில் மணலைப் போல இருக்கும். இதனால் நடப்பவர்களுக்கோ, மோட்டாருக்கோ அதிகமான ஆபத்தில்லை. ஆனால் பனி அதிகமாக உறைந்து, கெட்டியாகிவிட்டால், பளிங்குக் கண்ணாடி போல ஆகி வழுக்கிவிடும். இம்மாதிரியான நிலைமையைச் சமாளிப்பதற்காக, மோட்டாரின் நான்கு டயர்களுக்கும் சங்கிலி உறையை மாட்டிவிடுவார்கள். இது இரும்பினால் செய்யப்பெற்று மத்தியில் சிறிது இடம் விட்டு, குறுக்கிலும் நெடுக்கிலுமாகப் பின்னப்பட்டிருக்கும். இந்தச் சங்கிலி உறைகள் டயரின் ஆயுளைக் குறைக்கும். மனிதர் தங்கள் ஆயுளைக் குறித்து நினைக்கும்பொழுது டயரின் ஆயுளைப் பற்றிக் கவலைப்படமாட்டார்களல்லவா?

குளிர் என்றால் அசாத்தியக் குளிர். அதிலும் பனி பெய்தால் சொல்ல வேண்டாம். எல்லாம் கம்பளிச் சட்டைகள்தான். நடந்தால் 'பூட்ஸ்' நனைந்துவிடும்.



பூட்ஸுக்கு மேல் ஒரு ரப்பர் உறை போட்டுக்கொள்வார்கள். கைவிரல்களைப் பாதுகாக்க, தோலால் செய்யப்பட்ட கையுறையை அணிந்துகொள்வார்கள்.

'ஓவர் கோட்' என்ற பெரிய கம்பளிச் சட்டை அணியாமல் வெளியே செல்ல இயலாது. இது மிகவும் கனமாக இருக்கும். ஒரு முறை வெளியில் பனி உறைந்த வீதியில் நடந்து செல்லும்போது, எனது இருகைகளையும், இவ்விதச் சட்டையின் இருபுறமுமுள்ள பைகளுக்கு உள்ளே திணித்துக்கொண்டு, கம்பீரமாகவும் அலட்சியமாகவும் நடந்தேன். அப்பொழுது கூடவந்த நண்பர், "இம்மாதிரி செல்வது மிக ஆபத்தானது." என்று எச்சரித்தார். "ஒரு வேளை வழுக்கி விழுந்துவிட்டால், உங்களுடைய தலை, மூக்கு, முகம் முதலியவை பனிக்குள் புதைந்து அதனால் அபாயம் ஏற்படும். கைகளைச் சட்டைப்பைக்குள் திணித்துக் கொண்டால், இம்மாதிரியான ஆபத்துக்களிலிருந்து உங்களைக் காப்பாற்றிக்கொள்ள உங்களுக்கே வழியில்லாமல் போய்விடும். சிலர் இம்மாதிரி ஆபத்துக்குள்ளாகி உருண்டு பள்ளங்களில் விழுந்து கிடந்து, உதவிக்கு ஆளில்லாமல், உயிரிழந்திருக்கிறார்கள்." என்றார். இந்த விஷயத்தைக் கேட்ட பிறகு, குளிரையும் பொருட்படுத்தாமல், எனது இரண்டு கைகளில் ஏதாவது ஒரு கையை வெளியில் வைத்துக்கொண்டு நடந்து சென்றேன்.

இந்தக் குளிர் காலத்துக்கு ரயில் பிரயாணம் சௌகரியமாய் இருக்கும். டங்கன் என்ற ஊரிலிருந்து விக்டோரியா நகரத்துக்கு ரயிலில் சென்றேன். கானடாவில் சொந்த மோட்டார்களில் பிரயாணம் செய்வோர் அதிகம். இந்தமாதிரி சிறு தூரங்களுக்குப் பஸ்ஸில் பிரயாணம் செய்வதையே பலர் விரும்புவர். பஸ் வசதி அதிகமாக இருக்கிறது. அந்த ஊருக்கு வந்த ரயிலைக்கூட போது

மான பிரயாணிகள் இல்லாததால் நிறுத்திவிட முயன்றனர். ஆனால் சாமான்கள் அனுப்புவதற்குச் சௌகரியமாக இருக்குமென்று கருதி, ஒரு நாளைக்கு ஒரே ரயில் வர ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதே ரயில் திரும்பிச் செல்லும்.

ரயில் வருவதற்குச் சிறிது நேரத்துக்கு முன் ரயில் நிலையத்துக்குச் சென்றேன். ரயிலில் செல்வதற்காக வயது முதிர்ந்த அம்மையார் ஒருவர் காத்திருந்தார். பிரயாணி அவர் ஒருவர்தான். அங்கிருந்த குமஸ்தாவிடம் சென்று விக்டோரியாவுக்குப் பிரயாணச் சீட்டுக் கொடுக்கும்படி பணம் கொடுத்தேன். அவர் பிரயாணச் சீட்டையும் மீதிச் சில்லரையையும் என்னிடம் கொடுத்து, எழுந்து நின்று, "உங்களுக்கு மிக்க வந்தனம்." என்றார். ரயிலில் பிரயாணச் சீட்டு வாங்கியதற்காக எனக்கு இதுவரை யாரும் வந்தனம் செலுத்தியதே கிடையாது.

விக்டோரியா அழகான நகரம். மிகப் பெரிய எம்பிரஸ் ஹோட்டல் கானடியன் பசிபிக் ரயில்வே கம்பெனியாரால் நடத்தப் பெறுகிறது. இவர்களுக்கு ரயில் மட்டுமல்ல; பெரிய கப்பல்கள், ஆகாய விமானங்கள் எல்லாம் இருக்கின்றன. கானடாவில் அநேக வியாபாரங்களும், சுரங்கங்களும் இவர்களுக்குச் சொந்தம். கானடாவிலேயே மிகப் பெரிய வியாபார ஸ்தாபனம் இதுதான். உள்ளூர் மணிக்கும் ரயில்வே மணிக்கும் வித்தியாசமுண்டு.

விக்டோரியா நகரத்து உணவுச்சாலைகளில் டெலிவிஷன் பார்த்தேன். கானடா முழுவதிலுமே டெலிவிஷன் கிடையாது. "எப்படி டெலிவிஷன் காட்டுகிறீர்கள்?" என்று கேட்டேன். விக்டோரியாவிலிருந்து சிறிது தூரத்திலிருக்கும் அமெரிக்காவைச் சேர்ந்த சியாட்டல் நகரத்தில் உள்ள டெலிவிஷன் நிலையத்தின் நிகழ்ச்சியே விக்டோரியாவில் காட்டப் பெறுகிறது!



வான்கூவர் நகரத்துக்குத் திரும்பியபொழுது கிறிஸ்து
மஸ் சமயம். நகரெங்கும் ஒரே உற்சாகம். வியாபார
நிலையங்களில் நுழைவதற்குக்கூட முடியாதபடி அவ்வளவு
கூட்டம். ஊர் முழுதுமே திரண்டு சாமான் வாங்க
வந்தால் என்ன ஆகும்?

அநேகம் தாய்மார்கள் தங்கள் குழந்தைகளைக் கூட்டிக்
கொண்டு சாமான் வாங்கச் செல்வார்கள். பெரிய வியாபார
நிலையங்களில் கடைசி மாடிக்கு அடுத்த மாடியைக் குழந்தை
களுக்காகவே ஒதுக்கியிருக்கிறார்கள். பல தாதிமார்கள்
அங்கு வேலை செய்கிறார்கள். பெற்றோர்கள் குழந்தைகளை
இந்தத் தாதிகளிடம் கொடுத்ததும், அவர்கள் தாய்மாரிடம்
ஒரு சீட்டைக் கொடுத்து, அதே இலக்கமிட்ட மற்றொரு
சீட்டைக் குழந்தையின் கழுத்தில் கட்டிவிடுவார்கள்.

அந்த இடத்தை அற்புதமாக அலங்கரித்திருப்பார்கள்.
எங்கு பார்த்தாலும் விளையாட்டுச் சாமான்கள். மின்
சாரத்தால் இயங்கும் மோட்டார், குதிரை போன்றவை
களில் குழந்தைகளை வைத்துப் பிடித்துக் கொள்வார்கள்.
அவை சுற்றும் போதோ அல்லது ஓடும் போதோ
குழந்தைகள் மகிழ்வார்கள். நூற்றுக்கணக்கான குழந்
தைகள் மகிழ்ச்சியோடு விளையாடுவதைப் பார்க்க ஆனந்த
மாக இருக்கும். குழந்தைகளின் கள்ளமற்ற சிரிப்பின்
ஒலியும், மின்சாரத்தால் இயங்கும் பல பொருள்களின்
ஓசையும், தாதிகள் காட்டும் அன்பும் எல்லாம் சேர்ந்து,
பார்ப்பதற்குக் குழந்தைகளின் சுவர்க்கமாகத் தோன்றும்.
குழந்தைகளின் தொந்தரவு இல்லாமல் தாய்மார்கள் மணிக்
கணக்காகக் கடைகளில் சாமான்கள் வாங்கிய பின்னர்,
இங்கு வந்து தங்களுடைய குழந்தைகளை அழைத்துச்
செல்வார்கள். பொதுவாக கானடா நாட்டினர் குழந்தை
களைத் தெய்வமாகப் போற்றுகிறார்கள் என்று கூறலாம்.

வான்கூவர் ஹோட்டல் என்பது தான் அந்த நகரிலேயே மிகப் பெரிய ஹோட்டல். ஒரு முறை பிங் கிராஸ்பி என்ற பிரபலமான ஹாலிவுட் நடிகர் தமது மோட்டாரில் வந்து இறங்கி ஹோட்டலுக்குச் சென்று, "இடமிருக்கிறதா?" என்று கேட்டார். அவர், அமெரிக்காவில் பண்ணைகளில் மாடுமேய்க்கிறவர்கள் அணியும் ஆடையை அணிந்திருந்தார். இந்த ஆடையைப் பார்த்ததும், ஹோட்டல் நிர்வாகி இவருக்கு ஹோட்டலில் இடம் இல்லை என்று சொல்லிவிட்டார். பாவம், சாமான்களை எல்லாம் நடைபாதையில் வைத்துவிட்டு நின்றுகொண்டிருந்தார். இந்தச் செய்தி யாரோ ஒரு பத்திரிகைக்காரருக்கு எட்டியது. உடனே அவர் அங்கு வந்து அந்த நிலைமையைப் படம் பிடித்துப் பத்திரிகையில் பிரசுரித்துவிட்டார்.

அந்த ஆண்டில் நடந்த முக்கியமான நிகழ்ச்சிகளில் அதுவும் ஒன்று என்று அந்தப் படத்தை ஆண்டு இறுதியில் மறுபடியும் பத்திரிகையில் பிரசுரித்திருந்தார்கள்.

வான்கூவரில் மூன்று தினசரிப் பத்திரிகைகள். அதில் பெரிதும் பேர் பெற்றது 'வான்கூவர் சன்' என்னும் பத்திரிகை. இது பொது மக்களால், பொது மக்கள் நன்மைக்காக நடத்தப் பெறுவது. எந்தக் கட்சியையும் சார்ந்தது அல்ல. அவர்கள் எழுதும் தலையங்கத்துக்கு யாரேனும் மறுப்பு எழுதினல், அந்த மறுப்பையும் மறுநாள் பத்திரிகையில், தலையங்கத்துக்குப் பக்கத்தில் முக்கியமான இடத்தில் பிரசுரிப்பார்கள். கானடாவின் சிறந்த எழுத்தாளர்களில் ஒருவரான எல்மோர் பில்பாட் என்பவர் அப் பத்திரிகையில் தினந்தோறும் எழுதி வருகிறார். நகரத்து மக்களின் சுதந்திரத்தையும் உரிமையையும் உண்மையாகப் பாதுகாப்பதில் சிறந்து விளங்குவது இந்தப் பத்திரிகை என்று கேள்விப்பட்டேன்.



வான்கூவரிலுள்ள சீக்கிய குருத்துவாரா



ஸ்டீவ் ரீவ்ஸ் என்ற பிரபல அமெரிக்க உடற்பயிற்சி வீரர், ஆதிமூலமூர்த்தியைப் பாராட்டுகிறார்



கானடாவில் வழங்கும் நாணயம் டாலர். இது அமெரிக்க டாலரைப் போன்றது. ஆனால் பொதுவாக மதிப்பில் அமெரிக்க டாலரை விட இது சிறிது குறைவு.

ஒரு டாலர் என்பது நூறு காசுகள் (Cents) கொண்டது. அந்தக் காலத்தில் ஒரு கானடா டாலரின் மதிப்பு அமெரிக்க நாணயத்தில் தொண்ணூற்று ஐந்து காசு, அதாவது கானடா டாலரைவிட அமெரிக்க டாலரின் மதிப்பு சுமார் ஐந்து காசு அதிகம்.

வான்கூவரிலிருந்து அமெரிக்காவின் எல்லையில் சியாட்டல் என்ற பெரிய நகரம் இருக்கிறது. கானடா நாட்டினர் பலர் அடிக்கடி இங்கு செல்வது வழக்கம். அமெரிக்காவில் நாற்பத்தெட்டு மணி நேரம் தங்கினால் சுமார் இருநூறு டாலர் பெறுமான அமெரிக்கச் சாமான் களைத் தீர்வையில்லாமல் கானடாவுக்குள் கொண்டு வரலாம். அமெரிக்காவில் சில சாமான்களின் விலை கானடாவிலுள்ளதைவிட மலிவு. இதன் காரணமாக வாரக் கடைசியில் நூற்றுக்கணக்கான கானடா நாட்டு மக்கள் சியாட்டல் நகரத்துக்குச் சென்று வருவார்கள்.

சியாட்டல் நகரத்து ஹோட்டல்காரர்கள் வான்கூவர் பத்திரிகைகளில், தங்கள் ஹோட்டல்களிலுள்ள அறையில் தங்குவதற்குத் தினமொன்றுக்கு இரண்டு டாலர் வாடகை என்றும், கானடாவிலிருந்து வருகிறவர்கள் வாடகைக்காக அமெரிக்க டாலருக்குப் பதிலாக கானடா டாலர் கொடுக்கலாமென்றும் விளம்பரம் செய்வார்கள். இது ஒரு சலுகை.

ஆனால் சிறிது காலத்தில் நிலைமை மாறிவிட்டது. கானடா டாலரும் அமெரிக்க டாலரும் ஒரே மதிப்புக்கு வந்து விட்டன. அது மட்டுமல்ல; கானடா டாலரின் மதிப்பு அமெரிக்க டாலரைவிட உயர்ந்து விட்டது. ஓர் அமெரிக்க

டாலருக்குக் கானடா டாலரில் தொண்ணூற்று ஐந்து காசுதான் கிடைக்கும். அதாவது அமெரிக்க டாலரை விட கானடா டாலரின் மதிப்பு சுமார் ஐந்து காசு அதிகம்.

சர்வ வல்லமையுள்ள அமெரிக்க டாலரின் மதிப்பை விட, கானடா டாலரின் மதிப்பு உயர்ந்தது கானடா நாட்டு மக்கள் பலருக்குத் திருப்தி. ஆனால் கானடா டாலரின் மதிப்பு உயர்ந்ததற்குக் காரணம், அமெரிக்கர்கள் தங்கள் பணத்தை ஏராளமாகக் கொண்டுவந்து கானடாவின் தொழிலைப் பெருக்கியதேயாகும்!

ஆறாம் ஜார்ஜ் மன்னர் காலமான சமயத்தில் ஒரு கானடா நாட்டுப் பெண், சியாட்டல் நகரத்து உணவுச் சாலை ஒன்றில் கானடா டாலர் நோட்டு ஒன்றை மாற்ற விரும்பினாள். அப்பொழுது உணவுச்சாலையில் வேலை செய்த அமெரிக்கப் பெண், "இந்த நோட்டுச் செல்லாது" என்றாள்.

கானடா நாட்டுப் பெண்ணுக்கு ஒன்றும் புரியவே இல்லை. "ஏன்?" என்று கேட்டாள்.

கானடா டாலர் நோட்டிலுள்ள ஆறாம் ஜார்ஜ் மன்னரின் உருவத்தைக் காட்டி, "இந்த மனிதர் இறந்து விட்டதாகப் பத்திரிகையில் படித்தேன். ஆகையால் இந்த நோட்டுச் செல்லாது" என்றாளாம் அமெரிக்கப் பெண்.

"அப்படிப் பார்த்தால் அமெரிக்க நோட்டு ஒன்று கூடச் செல்லாது. எல்லாம் காலஞ் சென்ற அமெரிக்க ஜனாதிபதிகளின் படங்களைத் தாங்கியுள்ளன!" என்றார் ஒரு கானடா நாட்டினர்.

பால் ராப்சன் பிரபலமான அமெரிக்க நீக்ரோ பாடகர். அவரை அமெரிக்க அரசாங்கம் கம்யூனிஸ்டு என்று கருதுகிறது. அவர் தொழிலாளர் இயக்கங்களில்



அனுதாபமுள்ளவர். வான்கூவர் நகரில் நடைபெற இருந்த ஒரு பொதுக் கூட்டத்தில் அவர் பேசுவதாக அறிவிக்கப் பட்டிருந்தது. அவர் அமெரிக்காவைவிட்டு வெளியேறக் கூடாதென்று அமெரிக்க அரசாங்கம் தடை விதித்தது. கானடாவுக்குள் அவரை அனுமதிப்பதில்லை என்று கானடா அரசாங்கம் தீர்மானித்தது. கானடாவில் மக்கள் செய்த கிளர்ச்சியின் பயனாக கானடா அரசாங்கம் பால் ராப்சன் மீதுள்ள தடையை நீக்கிற்று. ஆனால் அமெரிக்க அரசாங்கம் மட்டும் தனது தடையை நீக்கவில்லை.

பால் ராப்சன் சியாட்டல் நகரத்துக்கு வந்தார். அவர் எல்லையைக் கடந்தால் கைது செய்துவிடுவார்கள். எனவே ஆயிரக்கணக்கான வான்கூவர் நகர மக்கள் சியாட்டல் நகரத்துக்குச் சென்று பால் ராப்சன் பிரசங்கத்தைக் கேட்டார்கள்.

கானடாவில் நிறவேற்றுமை மிகக் குறைவு. அமெரிக்க இந்தியர்களைப்போல கானடாவிலும் சிலர் உண்டு. அவர்கள் தொகை மிகக் குறைவு. கானடாவில் வசிக்கும் நீக்ரோக்கள் மிகச் சிலரே.

"பிரிட்டிஷார், அமெரிக்காவுக்குத் தாங்கள் செலுத்த வேண்டிய கடனுக்குப் பதிலாக கானடாவை அமெரிக்காவுக்குக் கொடுத்துவிட வேண்டும்" என்று ஓர் அமெரிக்க சட்டசபை அங்கத்தினர் பத்திரிகைகளில் எழுதினார். அமெரிக்கர்களை எதிர்த்து கானடாவில் சிலர் பேசினர். ஆனால் சில கானடா நாட்டினர் அமெரிக்காவுடன் கானடா சேர்ந்து ஒரே தேசமாகிவிடவேண்டும் என்று விரும்புகிறார்கள்.

கானடா மக்களுக்குப் பிரிட்டிஷார் மீதுள்ள பற்று மிகக் குறைவு. இதுவரை ஆங்கிலேயரைத்தான் கானடாவின் கவர்னர் ஜெனரலாக நியமித்து வந்தார்கள். கானடா

நாட்டினர் ஒருவரைத்தான் இனிமேல் கானடாவின் கவர்னர் ஜெனரலாக நியமிக்க வேண்டுமென்று கிளர்ச்சி செய்ததன் பயனாக வின்சன்ட் மாஸி என்ற கானடா நாட்டினர் இப்பொழுது கவர்னர் ஜெனரலாக இருக்கிறார்.

இந்தியாவில் ஒரு காலத்தில் வைசிராயாக இருந்த லார்டு வெல்லிங்டன் கானடாவில் கவர்னர் ஜெனரலாக இருந்தார். டொராண்டோ என்ற பட்டணத்துக்குக் குறிப்பிட்ட நாளில் வருவதாக அவர் அறிவித்திருந்தார். அப்பொழுதுதான் முதன் முதலாக அவர் டொராண்டோ வுக்கு கவர்னர் ஜெனரல் என்ற முறையில் வருவதால் அவருக்கு வரவேற்பு ஏற்பாடு செய்ய விரும்பினார் டொராண்டோ நகரத்து மேயர். ஆனால் அதே நாளில் அதே நேரத்தில், டொராண்டோவில் பிறந்த ஒரு பிரபல ஹாலிவுட் நடிகை தமது பிறந்த ஊருக்கு வருவதாக இருந்தது. எனவே டொராண்டோ மேயர், தங்கள் ஊரில் பிறந்த ஹாலிவுட் நடிகை அதே நேரத்தில் வருவதால், நகரவாசிகளும் தாமும் நடிகையை வரவேற்கச் செல்வதாக வும், எனவே கவர்னர் ஜெனரல் தாம் வரும் நேரத்தை மாற்றிக்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

லார்டு வெல்லிங்டன் உறுதியாக இருப்பதில் பேர் போனவர். தாம் வரும் நேரத்தை எக்காரணத்தைக் கொண்டும் மாற்ற முடியாது என்று உறுதியாகத் தெரிவித்துவிட்டார்.

டொராண்டோ நகரத்து மேயரும் உறுதியாகவே இருந்தார். மேயரும் நகரவாசிகளும் டொராண்டோவில் பிறந்த ஹாலிவுட் நடிகையைச் சிறப்பாக வரவேற்றனர்.

வான்கூவர் நகரத்தில் ஒரு நாள் பாங்கு மணியார்டர் ஒன்று வாங்கியனுப்ப விரும்பினேன். அன்று காலை



பத்திரிகையைப் பார்த்தும் "ஆரும் ஜார்ஜ் மன்னர் காலமானார்" என்றிருந்தது. அன்று பாங்கு மூடப்படும் என்று நினைத்தேன்.

எனினும் பாங்குக்குச் சென்றேன். பாங்கு திறந் திருந்தது. பாங்கு மணியார்டர் வாங்கித் தபால் நிலையத் துக்குச் சென்று அதனை அனுப்பினேன்.

அமெரிக்கா செல்வதற்காக விஸா பெறுவதற்கு அமெரிக்க ஸ்தானிகர் காரியாலயம் சென்றேன்.

மன்னர்பிரான் காலமானதற்காக வான்கூவரிலேயே மூடப்பெற்றிருந்தது அமெரிக்க ஸ்தானிகர் காரியாலயம் ஒன்றுதான்!

கானடா நாட்டினர் வெகு காலம்வரை பிரிட்டிஷா ரைப் போல இடது பக்கம்தான் மோட்டாரை ஓட்டுவது வழக்கம். அமெரிக்கர்கள் வலது பக்கமாக ஓட்டுவார்கள். ஆயிரக்கணக்கான அமெரிக்க யாத்திரிகர் கானடாவுக்கு மோட்டாரில் பிரயாணம் செய்வது வழக்கம். அவர்களுக்கு இடது பக்கம் ஓட்டிப் பழக்கமில்லையாதலால் பல விபத் துக்கள் ஏற்பட்டன. எனவே அமெரிக்காவைப்போலவே கானடாவிலும் வலது பக்கமாகவே ஓட்டுகிறார்கள்.

ஒரு முறை வான்கூவர் நகரத்தில் பஸ் நிற்குமிடம் ஒன்றில் காத்துக்கொண்டிருந்தேன். எந்தத் திசையில் செல்ல வேண்டுமோ அதற்கு எதிர்ப்புறமான திசையி லேயே பஸ்கள் ஓடிக்கொண்டிருந்தன. சிறிது நேரத்துக் குப் பிறகுதான், வலது பக்கமாக ஓட்டுகிறார்கள் என்று தெரிந்தது.

வான்கூவர் நகரத்தில் ஒரு நாள் பஸ்ஸில் சென்று கொண்டிருந்தேன். அந்த ஊர் பஸ்களுக்குப் பிரயாணச் சீட்டுத் தருபவர் கிடையாது. ஓட்டுபவர்தான் அந்த

வேலையையும் செய்ய வேண்டும். நகரத்து மத்தியில் பஸ் வந்தபொழுது, ஓட்டுபவரிடம் குறிப்பிட்ட தெரு எங்கே இருக்கிறது என்று கேட்டேன்.

சிறிது தூரம் பிரயாணம் செய்த பின்னர், ஒரு பஸ் நிறுத்துமிடம் வந்ததும், பஸ்ஸை நிறுத்தி, அதிலிருந்த பிரயாணிகளிடம் அனுமதி பெற்றுக்கொண்டு, என்னுடன் கீழே இறங்கி, குறுக்கே ஒரு வீதியைக் கடந்து சென்று, நான் செல்ல வேண்டிய தெருவைக் காண்பித்தார் இந்த மோட்டார் ஓட்டுபவர்.

அதே வான்கூவர் நகரத்தில், கப்பல் கம்பெனி ஒன்றுக்குச் சென்றிருந்தேன். எந்தெந்த ஊர்களுக்குக் கப்பல் விவரம் விசாரித்தேனோ, அந்தந்த ஊர்களுக்குச் செல்லும் கப்பல்களுக்கு அவர்கள் பிரதிநிதிகள் அல்ல வென்றும், வேறொரு கம்பெனியார் அதற்குப் பிரதிநிதிகள் என்றும் கூறிய அந்த நிர்வாகி, அதே வீதியில் சிறிது தூரத்திலிருந்த வேறொரு கம்பெனிக்கு அழைத்துச் சென்றார்!

அதே வான்கூவர் நகரத்தில்—புத்தாண்டுப் பிறப்புக்கு மூன்று நான்கு தினங்கள் முன்னதாக என்று நினைக்கிறேன்—பிரதான கடைவீதியில் சென்றுகொண்டிருந்தேன். என்னிடமிருந்த பூட்ஸ் போட்டுக்கொள்ள உதவும் கருவி (Shoe Horn) ஒடிந்துவிட்டது. புதிதாக ஒன்று வாங்க விரும்பினேன்.

கடைவீதியில் பிரபலமான பூட்ஸ் கடை. நல்ல வியாபாரம். அங்கு பூட்ஸ் விற்பனை செய்துகொண்டிருந்த ஒரு வேலைக்காரரைப் பார்த்து, "ஷூ ஹார்ன் இருக்கிறதா?" என்று கேட்டேன்.

அவர் சிரித்துக்கொண்டே, "எவ்வளவு வேண்டும்? ஒரு டஜனா? இரண்டு டஜனா?" என்று கேட்டார்.



"ஒன்று போதும். எனது சொந்த உபயோகத்துக்குத் தான்" என்றேன்.

உடனே அவர் பூமிக்குக் கீழேயுள்ள பகுதிக்கு இறங்கிச் சென்றார். சிறிது நேரத்துக்கெல்லாம் என்னிடம் வந்து, விலையுயர்ந்த அழகான கருவி ஒன்றைக் கொடுத்தார்.

கடையில் பூட்ஸ் வியாபாரம் பெரிது. ஆனால் அவர்கள் இந்தக் கருவி விற்பதில்லை. தங்களிடம் பூட்ஸ் வாங்க வருபவர்களுக்கு, பூட்ஸை அணிவித்துக் காட்டுவதற்கான தங்கள் சொந்த உபயோகத்துக்கு வைத்திருந்தவற்றில் ஒன்றை அவர் எனக்குக் கொண்டுவந்து கொடுத்தார்.

"இதற்கு என்ன விலை?" என்று கேட்டேன்.

அவர் சுற்று முற்றும் பார்த்தார். புன்முறுவலுடன், எனது கைகளில் அந்தக் கருவியை வைத்து அழுத்தி, மெதுவாக "புது ஆண்டில் உங்களுக்கு எல்லா நன்மைகளும் உண்டாகட்டும்" என்று சொல்லி விட்டுப் போய்விட்டார்.

இத்தகைய அன்பையும் பரிசையும் எதிர்பார்க்கவே இல்லை!

U8·1 N55
108096